SL.
Vm 21, NOS
Nt 12-13
162014

# நல்லாசிரியன்

1916௵ ஜூன்௴ முதல் 1917௵ மே௴ வரையி

12413 1916-18.

## பன்னிரண்டாம் சம்புடம்

பத்திராதிபர் — கா. நமச்சிவாய முதலியார்

வெளியிடுவோர்

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1917

விலை ஒரு ரூபாய்

PRINTED AT
THE CAXTON PRESS
MADRAS.

162014
600 008.

# CONTENTS

## பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | அன்பு | 253 |
| 2. | இயனிஜேப்பள்ளி | 147, 178 |
| 3. | இயற்கைப்பொருள் ஆராய்ச்சி | 57, 86 |
| 4. | ஈ | 14 |
| 5. | ஈகை | 212 |
| 6. | உபாத்தியாயரின் குணங்கள் | 226 |
| 7. | எழுதுகோல் | 33 |
| 8. | ஓர் இளம் நியாயவாதி | 131 |
| 9. | கதை சொல்லல் | 68, 103, 143, 152, 174, 197, 224, 259, 283 |
| 10. | கல்வியும் செல்வமும் | 42 |
| 11. | கானமுனி | 106, 137 |
| 12. | கிண்டர் கார்ட்டன் | 76 |
| 13. | கிண்டர் கார்ட்டன் வகுப்புகளில் சங்கீத போதனை | 83 |
| 14. | கிராம பொதுஜனக் கூட்டம் | 54 |
| 15. | கிரம சிக்ஷை | 191, 202 |
| 16. | கிண்டர்கார்ட்டன் போதனை | 200 |
| 17. | குணவான் தன் குற்ற முணர்வான் | 229 |
| 18. | கைத்தொழில் | 238 |
| 19. | கொளிஞ்சி விதை சேகரிக்கும் விதமும், அதை விதைக்கு முன் செய்யவேண்டிய பக்குவமும் | 208 |
| 20. | சந்திரன் பூமியைச் சுற்றி வருதல் | 162 |
| 21. | சப்பாத்துக்கள்ளி அல்லது நாகதாளியின் சில உபயோகங்கள் | 186 |
| 22. | சில கிராமாந்தரப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் இடையூறுகள் | 141 |
| 23. | சுதேச பாலர்களின் வித்தியாப்பியாசம் — II | 7 |
| 24. | சூடு பெருகச் செய்யும் குளிர்ச்சி இறுகச் செய்யும் | 17 |
| 25. | சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை | 71 |

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 26. | பாலவட்டாய ஓர் உபாத்தியாயர் ... ... ... | 3 |
| 27. | தற்கால யுத்த விஷயமான சம்பாஷணை ... ... | ...21, 34 |
| 28 | தந்தையின் அன்பும் பிள்ளையின் கடமையும் ... ... | 248 |
| 29. | தமிழ் மொழி ... ... ... ... | 250 |
| 30. | தாவரத்திற்கு உயிர் உண்டு ... ... ... ... | 64 |
| 31. | நன்னடத்தை ... ... ... ... ... | 66 |
| 32. | நல்லுரை ... ... ... ... ... ... | 30 |
| 33. | நமது பன்னிரண்டாம் வருஷம் ... ... ... | 1 |
| 34. | நன்றே ... ... ... ... ... ... | 130 |
| 35. | நாஞ்ஜனங்களின் நடவடிக்கை ... ... ... ... | 204 |
| 36. | படிப்பின் பயன் ... ... ... ... | 158, 183 |
| 37. | பருவங்கள் ... ... ... ... ... | 60 |
| 38. | பஞ்சாங்கம் ... ... ... ... ... | 109 |
| 39. | பாடசாலை மியூஸியம்... ... ... ... ... | 244 |
| 40. | பாடசாலைத் தோட்டம் ... ... ... ... | 167 |
| 41. | பிராணி சாஸ்திரம் | 25, 49, 73, 97, 121, 145, 169, 193, 217, 241, 269 |
| 42. | பொருட் பாடம் — நாயினம் ... ... ... ... | 165 |
| 43. | பொருட் பாடங்கள் — ஆகாயம்... ... ... | 263, 279 |
| 44. | பொருட் பாடம் — தண்ணீர் ... ... ... ... | 91 |
| 45. | மதுபான விலக்கு ... ... ... | 126, 154, 171, 219, 273 |
| 46. | மதுபானத்தின் கொடுமை ... ... ... ... | 118 |
| 47. | மாதிரிப்பாடம் ... ... ... ... ... | 115 |
| 48. | யுத்தகாலத்தில் உபாத்தியாயர் கடமை ... ... ... | 265 |
| 49. | யூனியன் ஜாக் ... ... ... ... ... | 11 |
| 50. | வாழ்த்துப் பாட்டு ... ... ... ... ... | 163 |
| 51. | வாழ்த்துக் கவி ... ... ... ... ... | 235 |
| 52. | வாசனைத் திரவியங்கள் ... ... ... ... | 46 |
| 53. | லால்குடி வித்யா காட்சிசாலை ... ... ... ... | 37 |


THE REGISTRAR OF ... 6 - AUG 1917

# நல்லாசிரியன்


உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1917ஞ ஜூன் மீ | மாதம் 1


## ZOOLOGY

### பிராணி சாஸ்திரம்

(முன் தொடர்ச்சி — வயது-12-பக்கம் 227.)

### தண்ணீர்த் தாழி

தண்ணீர்த் தாழியில் நீர்ப்பூண்டு வைத்து வளர்க்க வேண்டும் என்பதற்குக் காரணத்தை மேலே கூறினோம். அதை நீங்கள் கவனிக்கும்போது ஒரு சந்தேகம் உங்கள் மனத்தில் உண்டாகலாம். அதென்ன? கிணற்றிலுள்ள மீன் செடி கொடிகள் இல்லாமலே வாழ்ந்திருக்கின்றனவே, நீர்த் தாழியிலும் என் அப்படியே வாழ்ந்திருக்கக் கூடாது என்று நினைக்கலாமன்றோ? கிணற்றில் அதிக ஊற்று ஜலம் இருக்கிறது. அந்த ஜலத்தில்

காற்றுமோதி வீசுவதனால் பிராணவாயு ஜலத்தோடு கலக்கிறது. தண்ணீரின்மேல் காற்று வீசுவதனால் அலை உண்டாகிறது. தண்ணீர் அலையும்போது பிராணவாயு தண்ணீரில் நன்றாய்க் கலக்கிறது. அதனால் பெரிய நீர்நிலைகளில் உள்ள மீன்களுக்கு நீர்ப் பூண்டின் உதவி வேண்டியதில்லை. நீர்த் தாழி சிறியதா யிருப்பதனாலும் அதில் காற்று நன்றாய் வீசுவதற்கு அனுகூலம் ஏற்படாமையினாலும் மேற்கூறியவாறு நீர்ப் பூண்டுகளை வைத்து உதவி புரிய நேரிடுகின்றது. அன்றியும் ஏரி குளம் முதலிய பெரிய நீர்நிலைகளில் உள்ள கொடிப்பாசி தாமரை நாணல் முதலிய நீர்ப் பூண்டுகள் இவ்வாறே, மச்சம் முதலிய ஜல ஜந்துக்களுக்கு உதவி செய்து தாமும் அவற்றால் உதவி பெறுகின்றன.

நீர்த் தாழியில் உள்ள ஜலத்தை அப்போதைக் கப்போது மாற்றி, புதிய ஜலம் விடவேண்டும். இல்லாவிட்டால் தண்ணீர் கெட்டுவிடும். அப்போது அதிலுள்ள பிராணிகள் நாசமடையும். தாழியிலிருந்து தண்ணீரை அகற்றும் போதும், புதிய நீரைத் தாழியில் விடும்போதும் அதிக ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும்.

நீர்த் தாழியிலிருந்து தண்ணீரை எடுக்கும் போது, சிலர், ஏதேனும் ஒரு சிறு பாத்திரத்தைக் கொண்டு தாழியிலுள்ள ஜலத்தை மொண்டு மொண்டு கீழே ஊற்றிவிட்டு, பிறகு வேறு ஜலத்தைத் தாழியில் ஊற்றுவது வழக்கம். அப்படிச் செய்வதனால் அநேக கெடுதிகள் உண்டாகின்றன.

தாழியிலுள்ள தண்ணீரைப் பாத்திரத்தில் முகக்கும்போது, அதிலுள்ள மச்சங்களின் மேல் பாத்திரம் படும். தண்ணீர் அதிகமும் அலைவதனால் அந்த ஜந்துக்கள் திகில் கொண்டு அதிகமும் அலைந்து அடித்துக் கொள்ளும். அப்படி அடித்துக் கொள்ளும்போது தாழியில் அதிக ஜலம் இல்லாமையால் அந்த ஜந்துக்களின் உடல் அங்குள்ள மணலிலும் பாத்திரத்திலும் தாக்குண்டு, அவ்வுடலின் மேலுள்ள வழுவழுப்பான பசை சேதமடையும். அதனால் மீன்களுக்குப் பிராணபத்தான இம்சை உண்டாகும். அன்றியும், அதில் முளைத்துள்ள நீர்ப் பூண்டுகளின் வேர்களும் அசைவுற்று மெலிந்து போகும். இவ்விதக் கெடுதிகள் உண்டாகாதபடி தண்ணீரை மாற்ற வேண்டும். அந்த முறையை இங்கு விவரிப்போம் :



நீர்த் தாழிக்குத் தகுந்தபடி ஒரு நீளமான கண்ணாடிக் குழையை (Glass tube) எடுத்து, அதன் முக்காற்பாகத்தில் சூடு உறைக்கும்படி ஸ்பிரிட் விளக்கில் (Spirit lamp) காட்டினால் அது இளகி வளையும். அப்போது அதை ட என்னும் எழுத்து வடிவமாக வளைத்துக் கொள்ளவேண்டும். பிறகு அதன் ஒரு முனையின் வாயை ஒரு விரலால் நன்றாய் அழுந்த மூடிக்கொண்டு மற்றொரு முனையின் வாய்வழியாகத் தண்ணீர்விட்டு நிரப்பி மூடிக்கொண்டு விரலால் அடைத்த பக்கத்தை, அடைத்தபடியே, நீர்த் தாழியின் அடிவரையில் கொண்டு போய், விரலை எடுத்துவிட்டு, பாத்திரத்திற்கு மேலாக வளைந்திருக்கும் வாயையும் திறந்து விட்டுவிட்டால் தாழியிலுள்ள நீர் தானாகக் குழையின் வழியாய் வெளியே வந்துவிடும். அப்போது தண்ணீர் அலையாது, மணலும் கலையாது இப்படியே நீர் முழுதும் வடித்துவிட்ட பிறகு அந்தக் குழை வழியாக மறுபடியும் சுத்த ஜலத்தை ஊற்றித் தாழியை நிரப்பி விடலாம். கண்ணாடிக் குழையை இளக்கி வளைப்பது கஷ்டமாக இருந்தால், ரப்பர் குழையைச் சாதாரணமாக வளைத்து உபயோகித்துக் கொள்ளலாம். இதுதான் சிறந்த முறை.

## மீன் உணவு

மீன்கள் உண்ணும் உணவைப்பற்றி முன்னமே கூறியிருக்கிறோம். நீர்த் தாழியிலுள்ள மீன்களுக்கும் அவற்றிற்கேற்ற உணவுகளை இடவேண்டும். சாதாரணமாக அவித்த இறாவைச் சிறு துண்டுகளாக அறுத்துப் போடலாம். வேகவைத்த முட்டையிலுள்ள வெண் கருவைப் பொடியாக்கிப் போடலாம். சிறு புழுக்களைப் போடலாம். மிகச் சிறிய மாமிசத் துண்டுகளையும் ரொட்டித் துண்டுகளையும் போடலாம். சில சமயங்களில் உயிருள்ள நாகப் பூச்சி முதலியவற்றைப் போட்டால் மீன்கள் கூட்டமாக கூடிச் சென்று அதைப் பக்கத்திற்கு ஒன்றாகப் பற்றி, முன்னும் பின்னும் இழுத்து விளையாடித் தமக்குக் கிடைத்த துண்டுகளைக் கொண்டு போய் இஷ்டத்துடன் தின்று களிப்பதைப் பார்க்கலாம். இப்படியெல்லாம் செய்வதனால் ஜந்துக்கள் தாம் சிறையில் அடைபட்டிருப்பதாக எண்ணி ஏக்கங் கொள்ளாமல் சந்தோஷத்துடன் வாழ்ந்திருக்கும். அதனால் அவை அதிகநாள் தாழியில் ஜீவித்திருக்க மார்க்கமுண்டு.

தக்கவாறு ஆகாரம் கொடாமல் விட்டாலும், சரியானபடி ஆகாயம் பரவும்படி செய்யாவிட்டாலும் போதுமான அளவு வெளிச்சமும் உஷ்ணமும் அடையும்படி செய்யாவிட்டாலும் மீன்கள் நோய் கண்டு இறந்துவிடும். தண்ணீரில் மீன்கள் சாதாரணமாக இருக்க வேண்டிய தன்மையை விட்டு, வாலை மேலுக்கு வைத்து தலையைக் கீழாக வைத்துக்கொண்டு தள்ளாடிச் செல்லக் கண்டால், ஆகாயம் குறைவென்று உணர வேண்டும். உணவு இல்லாவிட்டாலும் சில சமயங்களில் இப்படி இருப்பதுண்டு. இந்த விஷயங்களை யெல்லாம் நன்கு கவனித்து நீர்த் தாழியை நன்றாய்ப் பாதுகாத்து வந்தால் மீன்களும் சௌக்கியமாக இருக்கும். அவைகளைப் பார்க்கும் பிள்ளைகளும் அவற்றைப் பற்றிய விஷயங்களை நன்கு உணர்ந்து ஜீவகாருண்யமும் தெய்வ பக்தியும் உள்ள சிறுவர்களாக விளங்குவார்கள்.

பத்திராதிபர்.

# AUTOBIOGRAPHY OF AKBAR

## பேபர் எழுதிய தற்சரிதை

நான் 1494௵ ரம்சான் பண்டிகை மாதம் பெர்கானா என்னும் நாட்டிற்கு அரசனானேன்; அப்போது எனக்கு இருபத்தைந்து வயது. இத்தேசத்தில் மேற்குப் பக்கந்தவிர, மற்றெல்லாப் பக்கங்களிலும் குன்றுகள் சூழ்ந்திருக்கின்றன. இங்கே தானியங்களும் கனி வர்க்கங்களும் மலிந்திருக்கும்; திராட்சையும் முலாம்பழங்களும் அபரிமிதமாக விளையும். இது மாதளைக்குப் பேர் போனது.

இத்தேசமெங்கும் சுத்தமான தெள்ளிய நீரோடைகளுண்டு; வசந்த காலத்தில் அதிக மனோகரமா யிருக்கும். ஆற்றங் கரைகளை யடுத்து அழகிய தோட்டங்களுண்டு; பழ மரங்கள் தளிர்த்துத் தழைத்து பூத்துக் காய்த்து கனிந்து செறிந்து விளங்கும்; ரோஜாச் செடிகள் பார்ப்போர் கண்களைக் கவரும் வண்ணம் செழித்து வளர்ந்திருக்கும்; சூரிய கிரணங்கள் பூமியிற் பரவாதபடி அழகிய செடிகள் அடர்ந்திருக்கும். அங்கங்கே பச்சைப் பசேலென்று பசும்புற்றடங்கள் அதி ரம்மியமான



தங்கு மிடங்களாக அமைந்திருக்கின்றன; இந்த இடங்களில் பாட்டைசாரிகள் இளைப்பாறுவதற்கு விரும்பி நாடுகிறார்கள்.

இத்தேசமெங்கும் பறவைகளும் விலங்குகளும் பெருகியிருப்பதால், நல்ல வேட்டைகள் அகப்படும்; இங்கே பிராணியும் கொழுப்பும் தசையும் நிறைந்துள்ளதால், வேட்டையாடுவோன் சாப்பிட மிக்க சுவை யுள்ளதாக இருக்கும். மான் வேட்டைக்குக் குறைவில்லை; மானிறைச்சி மிக்க ருசி யுள்ளது. வெள்ளை மான்கள், மலை ஆடுகள், கலை மான்கள், முயல்கள் அபரிமிதமாகக் கிடைக்கும். எங்கேயும் வேட்டைகள் நடக்கும். பழக்கிய பருந்தைக்கொண்டும் பறவைகளை வேட்டை ஆடுவார்கள்.

குன்றுகளில் விலையுயர்ந்த கற்கள் அகப்படுகிற அநேக சுரங்கங்களுண்டு. பள்ளத்தாக்கான இடங்களிலுள்ளவர்கள் மிக்க நேர்த்தியான ஊதா நிறமுள்ள ஆடைகள் நெய்கிறார்கள். பெர்கானா தேசத்து வருவாய் சுமார் 4000 போர்வீரர்களைக் காக்கப் போதுமானதாக இருந்தது.

என் தகப்பனார் பெயர் ஒமீர் ஷேக்மீர்ஸா; இவ்வரசர்; அதிகாரமும் புகழும் அடையவேண்டுமென்கிற பேராவா உடையவர். அவருடைய செய்கைகள் எல்லாம் நடிப்பானதாகவும் படாடோபமுள்ளதாகவு மிருக்கும். தேசங்களை யெல்லாம் ஜயித்து வெற்றி அடையச் சதா சூழ்ச்சி செய்துகொண்டிருப்பர். பல தடவைகளில் சமர்கண்ட் என்னும் நாட்டின் மீது தண்டெடுத்துச் சென்றும் தோல்வியே யடைந்தார்.

1494௵ மகமத்கான் அமத் மீர்ஸா என்ற சுல்தான்கள் இருவரும் இவர்மேல் வெகுண்டு ஒன்று சேர்ந்து வந்து இவரது தேசத்தைத் தாக்கிப் போர் புரியும்போது எதிர்பாராத ஒரு சம்பவம் உண்டாயிற்று. அக்ஷிகோட்டை செங்குத்தான மலையின் மேலுள்ளது. இம் மலையின் ஓரத்தில் உயர்ந்த கட்டடங்கள் இருக்கின்றன. அப்போது ரம்ஸான் பண்டிகையின் நான்காவது தினம்; என் தகப்பனார் இவ் வுயர்ந்த கட்டடங்களிலொன்றின் மேல் நின்றுகொண்டு புறாக்களுக்குத் தீனி கொடுத்துக்கொண்டிருக்கும்போது, கால்சறுக்கிவிட, பாறையின் உச்சியிலிருந்து தலைகீழாக விழுந்து உயிர் துறந்தார்.

என் தகப்பனார் வனப்புள்ளவரல்லர்; குட்டை வடிவினர்; பருத்த உடலினர். அவர் உள் சட்டையை இறுக்கமா யணிந்து கொள்ளுவார். சட்டையின் கயிற்றை முடியும்போது, இடுப்பைச் சுருக்கி மறுபடியும் தளரவிடும்போது, முடிந்த கயிறு அறுபடும். அவர் உண்டு உடுப்பதை அதிகமாய் கவனிப்பதில்லை; மடிப்பில்லாமலே பின் கொஞ்சம் முன் கொஞ்சம் விட்டு, தலைப் பாகையைத் தரித்துக்கொள்ளுவர். பெருந்தன்மை அவரிடம் குடிகொண்டிருந்தது; கருணை வாய்ந்தவர். பேராண்மை யுற்றவர்; ஆனால் சிறந்த வில்லாளி அல்லர். முஷ்டியின் பலம் அபாரமானது; ஒரே குத்தில் எவனையும் வீழ்த்திச் தள்ளுவர். மிக்க இரக்கமுடையவர்.

அவருக்கு மூன்று குமாரர்கள்; ஐந்து குமாரத்திகள். மகமது பேபர் என்னும் நான்தான் மூத்த குமாரன்; என் தாயார் பெயர் குட்லக் கானம் என்பது.

என் தகப்பனாரிடத்தில் அநேக உத்தியோகஸ்தர்களும் அமைச்சர்களும் இருந்தார்கள். ஸைதமூர்ஷா இவர்களிலொருவர்; ராஜ குடும்ப காரியங்களுக்குத் தலைமையானவர்; சற்றேறக் குறைய இருபத்தைந்து வயதுள்ள விட புருஷனா யிருந்தாலும், குடும்ப காரியங்களை ஒழுங்காயும், திட்டமாயும் நிதானமாயும் நடத்த வல்லவர். இவர் சண்டையில் மாண்டுபோனதை அவசரமாய் தெரிவிக்கும்பொருட்டு, தூதன் ஒருவன் 500 மைல் தூரத்தை நான்கு நாளில் சவாரி செய்தான.

ஹஸிம்பெக் என்பவர் மற்றொரு உத்தியோகஸ்தர். நான் காபூலை கைப்பற்றிக்கொள்ளுமுன், இந்துஸ்தான் மூலமாய் மெக்காவுக்கு யாத்திரை செய்யும்போது, வழியிலே இறந்து போனார். அவரோ கபடமற்றவர்; பொறையும் பணியும் இவைபோன்ற நற்குணங்கள் அமையப் பெற்றிருந்தார்; ஆழ்ந்த புத்தியுடையவரல்லர்; இனிமையாய்ப் பாடவல்லவர். மஜீத்பேக் முதலில் எனக்கு ஆசிரியராக இருந்தார். அவருடைய ஒழுக்கும் மகிழ்ச்சியும் மெச்சத்தக்கன. என் தகப்பனாருக்கு இவரிடத்தில் அதிக மதிப்பு. ஆலிமஜீத் மிக்க நம்பிக்கைத் துரோகி; வெய்யன், பொய்யன், கபடன்.

ஹஸ்லான் யாகுப் வெளுத்ததெல்லாம் பால் என்று நினைப்பவன்; ஆண்மை, திறமை, உற்சாகம் இவற்றில் குறைந்தவ



னல்லன்; கைதேர்ந்த வில்லாளி, குதிரைப் பந்தாட்டத்தில் இவனுக்கு நிகரானவனைப் பார்ப்பது அரிது. என் தகப்பனார் காலஞ் சென்றதும், என் குடும்ப காரியங்களுக்கு தலைமை பூண்டான்; ஆனால் சிலாக்கியமாய் நடந்து கொள்ளவில்லை. நட்பு பிரித்தலும், பகை நட்டலும் இவனிடத்தில் குடிகொண்டிருந்தன.

காஸிம்பெக் என்பவரும் என் வீட்டிற்கு காரியஸ்தர்தான்; உயிரோ டிருக்கும் வரைக்கும், என் காரியங்களை நன்றாய் கவனித்தான்; அதிகாரமும் தட்டுத் தடங்க லில்லாமல் வலுத்தது; அஞ்சா நெஞ்சு படைத்தவன். ஒரு காலத்தில் அஸ்பெக்ஸ் என்ற கூட்டத்தார் தேசத்தைச் சூறை ஆடிவிட்டு ஓடும்போது அவர்களைப் பின் தொடர்ந்து நெருங்கி நன்றாய் சிதற பதற அடித்தான். வாட் போரிலும் இவன் பின் வாங்கினவனல்லன். காபூலுக்கு நான் அரசனானதும், என் குமாரன் யுமாயூனுக்கு இவன் ஆசிரியனானான். நான் ஜெமீன் தேசத்தைத் தாக்கிப் பிடித்த போது, இவன் விண்ணுலகஞ் சென்றான். இவன் மிக்க புனிதனென்றே சொல்லலாம். நெறிதவறாத உத்தமனான இம் மகமதியன் ஊனைத் தின்று ஊனைப் பெருக்காதவன். உய்த்துணர்வும் பகுத்தறிவும் மிக்கவன்; அவன் நடை விசித்திரமானது. கல்வியறிவு சிறிதேனு மில்லாதிருந்தும், நன்றாய் பேசும் திறமை வாய்ந்தவன்.

என்னுடைய ஆசிரியனாகிய பாபாகூலி பேக் சேனையை பழக்குவதிலும் ஒழுங்காய் நடத்துவதிலும் பிரசித்தமானவன். பணிவிடைக் காரரிடத்தில் மிக்க கண்ணோட்ட முடையவன்; தேவதாப் பிரார்த்தனையுங் கிடையாது; விரதங்களும் அனுஷ்டிப்பதில்லை. நாஸ்திகனைப் போலிருப்பான்; ஆயினும் கடின சித்தமுள்ளவனல்லன்.

என் தாயாரைப் பெற்ற மூதாட்டிக்கு, ஆலிதோஸ்ட்டாகோ நெருங்கின பந்து; எனக்கு மிக்க உபகாரமா யிருப்பாரென்று சொன்னதின் பேரில் அவனிடத்தில் அன்பும் தயவும் காட்டியும், எனக்கு யாதொரு பிரயோஜனமற்றவனா யிருந்தான். அவன் மந்திரவாதி போல் நடித்தான். இவனிடத்தில் தீய குணங்கள் பொருந்தி யிருந்தன; யாவரையும் வஞ்சித்து ஒழுகுபவன்; அருளும் அன்பும் தாக்ஷிண்யமும் சிறிதும் இல்லாதவன்; நெஞ்-

சில் காவுடையவன். லாகரி உத்தியோகஸ்தனே இயற்கையாகவே பேரறிவு வாய்ந்தவன்; போலி நடையே கிடையாது.

மீர் கையாஸ் தாகே என்பவன் பிரதான அமைச்சன்; இனியவன்; உல்லாச விநோதன்; சிற்றினப் பிரியன்.

ஆலிடெர்லிஸ் கொராசான் தேசத்தவன்; ஆற்றல் மிக்குடையவனாயினும், மிக்க இழிஞன்; புல்லியன்; இச்சகம் பேசுபவன்.

காம்பர் ஆலி மொகலாயன்; இந்த ஊருக்கு வந்தபோது தோல் பதனிடுந் தொழிலில் அமர்ந்தான்; தோல் பதனிடுவதில் சமர்த்தனானன். என்னுடைய தயவுக்கு பாத்திரனாகி, வர வர மேன்மையும் சிறப்பு மடைந்தான். தனக்கு உயர்ந்த பதவி கிடைக்கும் வரைக்கும், எல்லோருக்கும் நல்லவனா யிருந்தான்; பெரும் பதவி அடைந்ததும், தன் வேலையில் அசட்டை உண்டாகி, நெறிகுலைந்து விட்டான். வெற்றுரை யாடுவான். திறமை போதாது; மந்த புத்தியுள்ளவன்.

என் தகப்பனாருக்கு மரண ஆபத்து நேரிடும் போது, அண்டிசான் ஊரில் அரண்மனை உய்யான வனத்திலிருந்தேன்; துரிதமாய் ஒரு பரிமாவில் ஏறி, என் அருகிலிருந்த காரியத் தலைவர்களோடு, கோட்டையை கைப்பற்றச் சென்றேன்

மிர்ஜா கோட்டை வாயலில் நான்வந்து சேர்ந்ததும், கூஷியராம் தாகே என் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, திறந்த முற்றவெளிக்கு என்னை தூக்கிக் கொண்டு போய்விட்டார். பலாட்டியனான சுல்தான் அமெட் மீர்சா பெருஞ் சேனையோடு நெருங்கிவருவதால், அண்டிஜான் நாட்டைச் சேர்ந்த பேக்சாதியார்கள் என் தேசத்தையும் என்னையும் அவனிடத்தில் ஒப்படைத்து விடுவார்களென்ற எண்ணம் கூஷியார்மா தாகே மனத்தில்பட்டது; ஆதலால் சத்துருக் கையில் நான் அகப்படாதபடி, குன்றுகள் ஓரமாயுள்ள வேறு இடத்தில் கொண்டு போய் என்னை வைத்து விட வேண்டுமென்றும், கூடுமானால் என் அம்மான்மார்களோடு சேர்த்து விடலாமென்றும் நோக்கங்கொண் டிருந்தார்.

கோட்டையி லிருந்த காஜியும் பேக்கர்களும் எங்களுடைய வர்த்தமானத்தை தெரிந்துகொண்டு, எங்கள் மனத்திலுண்டான அச்சத்தைப் போக்குமாறு வெகு நாள் பழக்கமும்



உண்மையுமுள்ள வேலைக்காரனொருவனை எங்களிடத்தில் அனுப்பினார்கள். அவனே ஓடி எங்களை தொடர்ந்து மடக்கிக்கொண்டு வந்த வழியே திரும்பும்படி செய்ததின்பேரில் கோட்டையில் மேல்தளத்தி னருகில் வந்து சேர்ந்ததும், எங்களைக் கோட்டைக்குள் நடத்திக் கொண்டு போனான்; நானும் அப்போதுதான் குதிரை விட்டு இறங்கினேன். முக்கிய உத்தியோகஸ்தர்களும் பேக்கர்களும் என்னுடைய சமுகத்தில் வந்து ஒன்றுகூடி, ஆலோசிக்கலானார்கள்.

ஒருவர்க் கொருவர் தங்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொண்டார்கள்; அவர்களுடைய சூழ்ச்சிகள் நிறைவேறும் பொருட்டு முன்வந்தார்கள்; கோட்டைகளையும் கொத்தளங்களையும் பாதுகாப்புக்காக வேண்டிய ஏற்பாடு செய்தார்கள். என் தகப்பனாரிடத்திலிருந்த பிரதான உத்தியோகஸ்தர்களும் அமைச்சர்களும் என்னுடைய சேவகத்தில் வந்து அமர்ந்துக்கொண்டார்கள். எல்லோரும் ஒரேமனமாய் தேசத்தைப் பாதுகாப்பதென்று கங்கணங் கட்டிக்கொண்டார்கள்.

மேலே குறிப்பித்த சுல்தான் அமட் மீசா கோசண்டிற்கு அரசுரிமை பூண்டதும், அண்டிசானுக்கு எட்டு மைல் தூரத்தில் பாளயமடித்தான்; அந்த சமயத்தில் அண்டிசானில் பிரசித்தி பெற்ற கா (gaw) சந்நியாசி, ராஜ தூஷணைக்காக கண்டிக்கப்பட்டதும், மற்ற குடிகளெல்லாம் ராஜனுக்கு கீழ்ப்படியலானார்கள்.

பத்திராதிபர்.

# MODEL LESSON ON DIVISION

## மாதிரிப்பாடம் — வகுத்தல்.

Subject — Division Class III.

N-B. — உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு வகுத்தல் கணக்கை ஆரம்பிக்கு முன் இப்போது சில பள்ளிக்கூடங்களில் நடத்துவது போல ஆரம்பத்திலேயே 96÷8 என்பதை 8)96(12 / 96 இப்படிச் செய்து காண்பித்து விடை 12 என்று சொல்வதை விட்டு அடியில் கண்டபடி வாரம் ஒரு படி (Step) ஆக நடத்தி, ஒவ்வொரு படியிலும் நன்றாய்த் தெரிந்த பிறகு கடைசியில் VIII-வது படி (Step) ல் கண்டபடி நடத்தலாம்.


"வகுத்தல்" என்பதற்கு அர்த்தம் "பங்கிடுதல்." வகுத்தலானது "கூட்டல்," "கழித்தல்," "பெருக்கல்" இவைகளினால் ஏற்படும். அதாவது —

### 1. கூட்டல் முறை

கணக்கு — 96 ÷ 8.

N-B. — உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு கட்டத்தின் மூலியமாகச் சொல்லித் தருதல்.

அதாவது: 96 சின்னக் கட்டங்களை, 8 சின்னக் கட்டங்கள் சேர்ந்து 1 பெரிய கட்டமாகும்படி செய்து காட்டுதல்.



8
16 = 8 + 8
24 = 16 + 8
32 = 24 + 8
40 = 32 + 8
48 = 40 + 8
56 = 48 + 8
64 = 56 + 8
72 = 64 + 8
80 = 72 + 8
88 = 80 + 8
96 = 88 + 8


∴ 8 சிறிய கட்டங்களுக்கு 1 பெரிய கட்டம்
96 ,, 12 ,,
∴ 96 ÷ 8 = **12** விடை.



### 2. கழித்தல் முறை

கணக்கு — 96 ÷ 8.

க. ப. வில் 96 சிறிய கட்டங்களிருக்கின்றன. அதில் ஒவ்வொரு தடவையும் 8 சிறிய கட்டங்களை அழித்து விடுதல்.



96 − 8 = 88
88 − 8 = 80
80 − 8 = 72
72 − 8 = 64
64 − 8 = 56
56 − 8 = 48
48 − 8 = 40
40 − 8 = 32
32 − 8 = 24
24 − 8 = 16
16 − 8 = 8
8 − 8 = 0

ஷை பெரிய கட்ட மடங்கிய படத்தில் மொத்தம் 96 சிறிய கட்டங்க ளிருக்கின்றன. தடவை ஒன்றுக்கு 8 சிறிய கட்டங்களை அழித்துவிட்டால், அப்போதைக் கப்போது எவ்வளவு மீதி யிருக்கிறதென்பதையும், தடவை ஒன்றுக்கு 8 சிறிய கட்டங்கள் வீதம் எத்தனை தடவையில் முழுவதையும் அழித்துவிடலா மென்பதையும் காட்டுகிறது. அப்படிச் செய்தால் 12 தடவையில் அழித்துவிடலாம். **12** விடை.

### 3. பெருக்கல் முறை.

கணக்கு — $96 \div 8$

| (a) | (b) | | (c) | | (d) |
|---|---|---|---|---|---|
| 1 தரம் | 8 | = | 8 | = | 00000000 |
| 2 தரம் | 8 | = | 16 | = | 00000000 |
| 3 தரம் | 8 | = | 24 | = | 00000000 |
| 4 தரம் | 8 | = | 32 | = | 00000000 |
| 5 தரம் | 8 | = | 40 | = | 00000000 |
| 6 தரம் | 8 | = | 48 | = | 00000000 |
| 7 தரம் | 8 | = | 56 | = | 00000000 |
| 8 தரம் | 8 | = | 64 | = | 00000000 |
| 9 தரம் | 8 | = | 72 | = | 00000000 |
| 10 தரம் | 8 | = | 80 | = | 00000000 |
| 11 தரம் | 8 | = | 88 | = | 00000000 |
| 12 தரம் | 8 | = | 96 | = | 00000000 |

N.B.—உபாத்தியாயர் ஒவ்வொரு தடவையும் c-ல் வந்த விடையானது a-யும் b-யும் பெருக்கி வந்த தொகைதான் என்று விளக்கிக் காட்ட d வரிசை 0-க்களை ஒவ்வொரு தடவைகளிலும் சேர்த்து கூட்டிப் பார்க்கும்படி செய்க.

∴ $12 \times 8 = 96$ அதாவது —

$1 \times 8 = 8$; $12 \times 8 = 96 =$ **12** விடை.

### 4. கூட்டல், கழித்தல், பெருக்கல் முறை.

கணக்கு — $96 \div 8$.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தரம் | 8 = | 8 | மீதி | 88 | மொத்தம் | 96 |
| 2 | ,, | 8 = | 16 | ,, | 80 | ,, | 96 |
| 3 | ,, | 8 = | 24 | ,, | 72 | ,, | 96 |
| 4 | ,, | 8 = | 32 | ,, | 64 | ,, | 96 |
| 5 | ,, | 8 = | 40 | ,, | 56 | ,, | 96 |
| 6 | ,, | 8 = | 48 | ,, | 48 | ,, | 96 |
| 7 | ,, | 8 = | 56 | ,, | 40 | ,, | 96 |
| 8 | ,, | 8 = | 64 | ,, | 32 | ,, | 96 |
| 9 | ,, | 8 = | 72 | ,, | 24 | ,, | 96 |
| 10 | ,, | 8 = | 80 | ,, | 16 | ,, | 96 |
| 11 | ,, | 8 = | 88 | ,, | 8 | ,, | 96 |
| 12 | ,, | 8 = | 96 | ,, | 0 | ,, | 96 |

**12** விடை.



### 5. வகுத்தல் முறை.

(a) கணக்கு $96 \div 8$.

ஷை கணக்கில் 8 "வகுக்கும் எண்" என்றும் 96 "வகுக்கப்படும் எண்" என்றும், ÷ "வகுத்தல் குறி" என்றும் போதித்தல்.

(b) வகுக்கும் எண் 8-ல் (பத்துக்கள் இல்லை) ஒன்றுகள் 8 இருக்கிறது.

வகுக்கப்படும் எண் 96-ல் 9 பத்துக்களும் 6 ஒன்றுகளும் இருக்கின்றன.

(c) ஆகையால் 9 பத்துக்களையும் 6 ஒன்றுகளையும் 8 களாக பிரிக்கவேண்டும். அதாவது —

9 பத்துக்கள் = 90
6 ஒன்றுகள் = 6

(d) 90 ஐ 8 களாக 11 தரம் கொடுத்து மீதி 2 ஒன்றுகளிருக்கிறது.

6 ஐ 8 களாக கொடுக்க முடியவில்லை ஆனால் 90 ல் அதிகமாக யிருக்கப்பட்ட 2 ஒன்றுகள் மீதியும் 6 ஐ பங்கிட்டதில் பங்கிட முடியாத 6 ஒன்றுகளையும் சேர்த்தால் 8 ஒன்றுக ளாகின்றன.

ஆகையால் இப்போது ஷை 8 ஐ எட்டாகக் கொடுத்தால் ஒருதரம் கொடுத்து மீதி யில்லை.

∴ பத்துக்களில் 11 எட்டும்
ஒன்றுகளில் 1 எட்டும்
ஆக 12 எட்டும் அதாவது 12 தரம் அடங்கு [கிறது.
$96 \div 8 =$ **12** விடை.

1. கணக்கு $96 \div 8$. அதாவது —

```
8)96(12 ஈவு
  8
  --
  16
  16
```

ஷை ஈவில் 1 என்பதற்கு அர்த்தம் 1 பத்து. 2 என்பதற்கு அர்த்தம் 2 ஒன்றுகள்.

```
8)96(10+2
  80
  --
  16
  16
  --
```

ஆகையால் 1 பத்தும் 2 ஒன்றுகளும் சேர்ந்து 12. அல்லது $10 + 2 = 12$.

**12** விடை.

2. கணக்கு — $96 \div 8$.

$$
\begin{array}{l}
(a)\,(b)\,\,(c) \\
8)\,96\,(12 \\
\quad\;\; 8 \\
\quad\;\; 16 \\
\quad\;\; 16 \\
\quad\;\;\; 0\,(d)
\end{array}
$$

இதில் $a$ அல்லது 8 "வகுக்கும் எண்"
$b$ ,, 96 "வகுக்கப்படும் எண்"
$c$ ,, 12 "ஈவு"
$d$ ,, 0 "மீதி"

என்று பெயர்.

ஷை வகுத்தல் கணக்கை சரி பார்க்கும் வழி.

$a = b \div c = 96 \div 12 = 8$
அல்லது $(b - d) \div c = (96 - 0) \div 12 = 8$
$b = a \times c = 8 \times 12 = 96$
அல்லது $c \times a = 12 \times 8 = 96$
அல்லது $(a \times c) \times d = (8 \times 12) \times 0 = 96$
$c = b \div a = 96 \div 8 = 12$
அல்லது $(b - d) \div a = (96 - 0) \div 8 = 12$
$d = b - (a \times c) = 96 - (8 \times 12) = 0$
அல்லது $b - (c \times a) = 96 - (12 \times 8) = 0$

பிள்ளைகள் இந்த வழிகளைக் கொண்டு வகுத்தல் கணக்கை தாமே சரிபார்க்க பழகச் செய்தல்.

3. கணக்கு — $96 \div 8$.

$$
(a)\quad \begin{array}{l} 8)96(12 \\ \quad 8 \\ \quad 16 \\ \quad 16 \end{array}
\qquad\qquad
(b)\quad \begin{array}{l} 8)96(12 \\ \quad \underline{96} \end{array}
$$

N-B. — ஷை உதாரணமாக கொடுத்த கணக்கைப்போல பல வகுத்தல் கணக்குகளைக் கொடுத்து பிள்ளைகள் நன்றாய்த் தெரிந்துகொண்ட பிறகு பெரிய கணக்குகளைக் கொடுத்தால் எளிதில் அறிந்துகொள்வார்கள்.

S. GOPALA ROW,
*Assistant, Board Muhamadan Elementary School,*
*Aravakurchi,*
*Karur Range.*



# BOOKS FOR TEACHERS

## உபர்த்தியாயருக்கான புஸ்தகங்கள்

எலிமெண்டெரிப் பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள எல்லாக் குறைவுகளோடும், உபாத்தியாய்ருக்கு உதவியான புஸ்தகங்கள் ஏதும் இல்லை என்பது முதன்மையாக நிற்கிறது இப்போது இதைப்பற்றி வித்தியாதிகாரிகள் மிகவும் கவனிக்க ஆரம்பித்திருக்கின்றனர். இது விஷயமாகப் பேசும்போது பலர் பலவிதமாக அபிப்பிராயங் கூறுகின்றனர். சிலர் பல புஸ்தகங்களிலேயே அததற் கேற்றவாறு ஆங்காங்கே போதனை முறைக் குறிப்புகளும் பொருந்தி யிருத்தல் கூடாதா என்கின்றனர். சிலர் போதனை முறைகளை விளக்கும் ஏதேனும் இங்கிலீஷ் புஸ்தகத்தை மொழி பெயர்த்துவிட்டால் போதாதா என்கின்றனர். போதனுப்பியாச பாடசாலையிலேயே இதைப் போதித்துவிடக் கூடாதா என்கின்றனர் சிலர். இப்படியே அவரவர் தம்தம் மனம் போனவாறு கூறுகின்றனர். 'அக்கரை யுண்டானால் அனைத்தும் ஏற்படும்' என்பது ஒரு முதுமொழி. அதுபோல் ஒன்று வேண்டும் என்று வற்புறுத்துகிறபோது அதற்கு ஏற்ற சாதனங்கள் புறப்படாதா! என்று எண்ணுகின்றனர் சிலர். இதைப்பற்றி ஈண்டு ஆராய்வோம் :

புஸ்தகங்களில் மாணக்கர்களுக்கு வேண்டியவை என்றும் உபாத்தியாயர்களுக்கு வேண்டியவை யென்றும் இரண்டுவகைப் படும். மாணக்கர்களுக்கான புஸ்தகங்கள், சென்ற பத்து வருட காலத்துக்குள், பெரும்பாலும் பரவி யிருக்கின்றன. உபாத்தியாயருக்கான புஸ்தகங்கள் ஏன் அப்படி வரவில்லை! மாணக்கருக்கென்று எழுதப்படும் புஸ்தகங்கள், துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்படுமானல், பெரும்பாலும் செலவாகின்றன. எழுதிய ஆசிரியருக்காவது வெளியிட்ட வியாபாரிகளுக்காவது ஏதும் நஷ்டமில்லை. உபாத்தியாயருக்கான புஸ்தகமோ வென்றால் அங்கீகரிக்கப்பட்டாலும் அவ்வளவு செலவாவதில்லை. கொஞ்சமாகச் செலவாகும் புஸ்தகங்களுக்கு ஏற்படும் விலை அதிகமாகவே இருக்கும். எந்தப் பாஷையிலும் இது சகஜமே. இப்படியானல் எழுதிய ஆசிரியர் நஷ்டப்படுவாரா? வெளியிட்ட வியாபாரி நஷ்டப்

படுவாரா? ஒருமுறை நஷ்டப்பட்டால் மறுமுறை அந்த வேலைக்கு அந்த வியாபாரி முன் வருவாரா?

அங்கில பாஷையில் அளவிறந்த நூல்கள் ஆசிரியர்களுக்காக வெளியிடப்படுகின்றன. அவர்களுக்கு உலகம் முழுதும் வியாபார ஸ்தலம். ஓரிடத்திலில்லாவிட்டால் ஓரிடத்தில் விலையாகும். ஒரு தேசத்தாருக்குச் சரிப்படாவிட்டால் மற்றொரு தேசத்தாருக்குச் சரிப்படும். ஒரு துரைத்தனத்தார் அங்கீகரியாவிட்டால் மற்றொரு துரைத்தனத்தார் அங்கீகரிப்பார். உலகம் பலவிதம் என்பது அவர்கள் வியாபாரத்திற்குப் பொருந்தும். நமது சுதேச பாஷை புஸ்தகங்களுக்கு என்ன கதி? ஒவ்வொரு பாஷைக்கும் ஏற்பட்ட தாயகம் நாலைந்து ஜில்லாக்கள். ஒரு புஸ்தகம் வெளி வந்தால், அது அங்கீகாரம் பெறுமானால், இந்த ஜில்லாக்களில் விலையானால் ஆனபடி. இன்றேல் அழியவேண்டியதே. செலவானாலும் சில வருஷங்கள் செல்லும். அதனால் அறிஞர் பலர் அவ்வகைய புஸ்தகங்கள் எழுத அஞ்சுகின்றனர். சில புஸ்தகங்கள் பாட புஸ்தகங்களாக அமைக்கப்பட்டால் செலவாகின்றன. பொது நோக்கமான புஸ்தகங்களை உபாத்தியாயர்களேனும் பொது ஜனங்களேனும் வாங்கி வாசிக்கும் வழக்கம் ஏற்பட்டாலொழிய இவ்வகையான குறைவுகள் நீங்குவது கஷ்டம். உபாத்தியாயர்கள் இப்படிப்பட்ட புஸ்தகங்களை வாங்கிப் படிக்க ஆவலுள்ளவர்களானாலும் பொருளின்மையால் பெரிதும் வாடுகின்றனர். சாதாரணமாக எலிமெண்டரிப் பாடசாலை உபாத்தியாயர்கள் நாலணா ஆறணா விலையுள்ள புஸ்தகங்களையும் தாராளமாக வாங்கி வாசிக்கச் சக்தியற்றவர்களாகின்றனர். வரும்படி குறைவானால் எதைத்தான் செய்ய இயலும். ஒரு புஸ்தகம் வேண்டுமானால் வித்தியாதிகாரிகளுக்கு எழுதி அவர்கள் அனுமதி பெற்று அதை வாங்குவதானால் சில சமயங்களில் அது பகீரதப் பிரயத்தனமாகவும் ஏற்பட்டு விடுகிறது. இதற்கு அஞ்சியும் சில உபாத்தியாயர்கள் சும்மா இருந்து விடுகின்றனர். இது விஷயமாக இவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளும் இன்னல்களும் இன்னும் பலவாம்.

(தொடரும்.)

பத்திராதிபர்.



# CHARITY

## தர்மம்.

1. திரவியத்தாலேனும், வாக்குச் சகாயத்தாலேனும், தேகப் பிரயாசையாலேனும், அந்நியருக்கு உதவி செய்தல் தர்மம் எனப்படும். அவ்வித தர்மத்தை நமது முன்னோர் 32 பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். அவையாவன: —

1. தரித்திரருக்கு அன்னசாலை. 2 படிப்போர்க்கு உணவு அளித்தல். 3. அறுசமயத்தார்க்கு உண்டி. 4. பசுவுக்கு வாயுறை. 5 காவலிலகப்பட்டவர்க்கு அன்னங் கொடுத்தல். 6. தின்பண்ட நல்கல். 7, பிச்சை யிடுதல். 8. அநாதைகளுக்கு அன்னங் கொடுத்தல். 9. மகப்பெறுவித்தல். 10. மகவு வளர்த்தல். 11. மகப்பால் வார்த்தல். 12. அநாதைப் பிணஞ் சுடுதல் அல்லது புதைத்தல். 13. அநாதருக்கு வஸ்திரங் கொடுத்தல். 14. சுண்ணம். 15 நோய்க்கு மருந்து. 16. வண்ணார். 17. நாவிதர். 18. கண்ணாடி. 19. காதோலை. 20. கண்மருந்து. 21. தலைக்கெண்ணெய். 22. பெண்போகம். 23. பிறர் துயர்காத்தல். 24. தண்ணீர்ப் பந்தல். 25. மடம். 26. தடம். 27. சோலை. 28. பசு முதலிய சொறிந்துகொள்ள கால் நாட்டல். 29. விலங்கிற்கு உணவு. 30. ஏறு விடுதல். 31. விலைகொடுத் துயிர்காத்தல். 32. கன்னிகா தானம்.

2. அஹிம்ஸோ பரமோதர்மஹ — சிலர், தங்கள் மேலோருக்கு அடங்கி நடக்காமல் அவமரியாதையாய் நடந்து அவர்களை இம்சிக்கின்றனர். சிலர், தங்களுக்குப் பணந்தேவையா யிருக்கும்போது, பணமுடையாரிடம் சென்று அவர்களது கஷ்டநிஷ்டூரங்களை கேட்போர் மன மிளகும்படி எடுத்துரைத்து, கடன் வாங்கிப் பிறகு, காணயப்படி செலுத்தாமல், கேட்கும் போதெல்லாம் ஏதேனும் சாக்குப் போக்கான முகாந்தரங்கள் சொல்லி நாள் கடத்தி அநீதியாய் எதிர்த்துப் பேசியும் ஆபத்தில் உதவிய நன்றியை மறந்து கடன் கொடுத்தோரை மனம் நோகச் செய்கின்றனர். நியாய சபையில் பிராது செய்தால், எதிர் வாதம் செய்து பணத்தைக் கொடாமல் மோசஞ் செய்யவும் வழி தேடுகின்றனர். சில வியாபாரிகள், அளவைகளிலும் சரக்குகளிலும் கபடம்

செய்து, தந்திரமாய்ப் பேசி, சாமான் வாங்குகிறவர்களை ஏமாற்றி விடுகின்றனர். சிலர் தங்கள் பெண்டு, பிள்ளை முதலிய சுற்றத்தாரையும், வேலைக்காரர்களையும் மிகக் கொடுமையாய் நடத்தி இம்சிக்கின்றனர். சிலர் கடும் வட்டிக்குப் பணம் கொடுத்து, தன்னிடத்தில் கடன் வாங்கின எளியவரை மிகுந்த கஷ்டத்துக்குள்ளாக்குகின்றனர். இவ்வித மெல்லாம் செய்யாமலிருப்பது ஒருவகைத் தர்மமாகும்.

3. கர்மலோபம் தர்மலோபமாம் — ராஜாங்க உத்தியோகஸ்தரும், சம்பள வேலைக்காரர்களும், கூலிவேலைக்காரர்களும் தங்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கடமைகளை ஒழுங்காகச் செய்து முடிப்பதும், தங்களிடத்தில் வேலை செய்கிறவர்களுக்கு, தாங்கள் கொடுக்கவேண்டிய சம்பளம் வகையராக்களை, அவர்கள் பலமுறை கேட்டு, வாங்கிக் கொள்ளும்படி வைத்துக் கொள்ளாமல், காலாகாலங்களில் தாங்களே வலியக் கொடுத்து விடுதலும் ஒருவகைத் தர்மமாகும்.

4. தர்மம் செய்யும் வகை — இல்லாதவர்க் கொன்றைக் கொடுப்பதே தர்மமெனப் பெயர்பெறும். ஒருவர் அன்னியருடைய உதவியை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் அச்சமயம் அவருக்கு வேண்டியதை உதவுவது மிகுந்த பலன் தரத்தக்கது. திருப்தியாகச் சாப்பிட்டு வந்திருக்கும் ஒருவருக்கு மேன்மேலும் உபசாரஞ் செய்து, இனிய தின்பண்டங்களையும் பானங்களையும் கொடுப்பதைக் காட்டிலும் பசியால் மெலிந்திருக்கும் ஒருவனுக்கு கொஞ்சம் அன்னம் கொடுத்துதவுவது மேலான தர்மமாகும். பலர் தன்னைப் புகழ வேண்டும் என்னும் டாம்பீகார்த்தமாய்ச் செய்யாமல், ஜீவகாருண்யத்தால் தர்மம் செய்யவேண்டும். யாதொரு பிரயோசனத்தையும் எதிர்பாராது செய்யும் நிஷ்காமிய தர்மத்தையே நீதி நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றமையால் அவ்விதம் செய்வது நலம்.

5 தர்மமும் பாலபோதமும் — சில மாணாக்கர்கள், தங்கள் சகபாடிகள், எழுதுகோல், காகிதம் முதலிய கல்விப்பொருள்கள் கைவசமில்லாமல் வருந்தும் சமயங்களில் தங்களிடத்திலிருப்பதைக் கொடுத்து உபகரிக்கின்றனர். தங்களுக்குக் கிடைக்கும் தின்பண்டங்களை, தங்கள் சிநேகிதர்களுக்கு ஆவலுடன் கொடுத்துத் தாங்களும் உண்கின்றனர். வேறு சில மாணாக்கர் தங்கள்



உபயோகத்துக்கு அதிகமாகவே, கல்விப் பொருள்களை உடையராக இருந்தாலும், தங்கள் சகபாடிகளுக்கு சமயங்களில் கொடுத்துதவ மனமில்லாமல், உள்ளதையும் மறைத்துவைத்துக்கொண்டு மௌனமாயிருந்து விடுகின்றனர். தங்களுக்கு கிடைக்கும் தின்பண்டங்களை அநேகமாகப் பிறர் அறியாமலே தின்ன முயலுகின்றனர். ஒரு வேளை யாராவது எதிர்ப்பட்டுவிட்டால் ஏதேனும் தந்திரம் செய்து பிறருக்குக் கொடாதிருக்க வழிதேடுகின்றனர். உதாரணமாக இப்பேர்ப்பட்ட பிள்ளைகள், தங்கள் சகபாடிகளைச் சந்திக்க நேரிட்டால், தாங்கள் வைத்திருக்கும் தின்பண்டங்களில் தூ! தூ! தூ! என்று துப்பி வைத்துக்கொண்டு எச்சிலாய்ப்போய் விட்டது என்று சொல்வது வழக்கம். உபாத்தியாயர்கள் பிள்ளைகளின் சுபாவகுணங்களை யறிந்து, அவர்களுக்குத் தர்மாதர்மங்களின் பலன்களை எடுத்துரைத்துச் சீர்திருத்த முயலவேண்டும். தர்மவான்களின் சரித்திரங்களை சுருக்கமாகத் தயாரித்து கதை சொல்லல் என்னும் பாடத்தில் சம்பந்தப்படுத்திப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். தர்மசம்மந்தமான செய்யுள்களையும் போதிக்கவேண்டும். அவற்றில் சில அடியில் எடுத்தெழுதப்பட்டிருக்கிறது :

1. காவோடறக்குளந் தொட்டானு* நாவினால்
வேதங் கரைகண்ட பார்ப்பானுந்—தீதிகந்
தொல்வது பாத்துண்ணு மொருவனு மிம்மூவர்
செல்வ ரெனப்படுவார். (திரிகடுகம்)

2. ஊருணிநீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் றிரு. (திருக்குறள்)

3. நல்லாரெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று. (திருக்குறள்)

4. பாத்தூண்† மறீ இவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டலரிது. (திருக்குறள்)

6. பயன்—"முழங்கை நீண்டால் முன்கை நீளும்" என்னும் பழமொழிக்கிணங்க, நாம் பிறருக்கு உதவி செய்தால்தான், நமக்குச் சமயா சமயங்களில் பிறரது உதவிகிடைக்கும். திருமலை நாயகர், மங்கம்மாள் ராணி, பச்சையப்ப முதலியார் இவர்கள்

* தொட்டானும் = தோண்டினவனும். † பாத்து = பங்கிட்டு

போன்ற தர்மவான்களும், லோகோபகாரமாக உழைத்துப் பாடுபடும், பரோபகாரியாகிய, காலஞ்சென்ற கனம் கோகலேபோன்ற பெரியோர்களும், தங்கள் காயம் நீங்கினும் அழியாத புகழ் உடம்பைப் பெற்றுச் செத்துஞ் சாவாதவராய் விளங்குகிறார்கள். அதுபோல் தர்மம் செய்வோரும் கீர்த்தியுடன் ஜனசமூகத்தில் பிரகாசிப்பார்கள்.

S. KRISHNAN,
*Headmaster, Board Ely. School,*
*Karungalakudi.*

## STORY TELLING

### கதை சொல்லல்

#### மாயப் பெண் அரசி

அநேக ஆண்டுகட்கு முன் மன்னவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஏழு குமாரர்கள் உண்டு. அவர்கள் எல்லோரும் கல்வி, அழகு, குணம், நன்நடக்கை, தைரியம் முதலிய நற்குணங்களமையப்பெற்றவர்களாய் யாவரும் வியக்கத்தக்க நிலைமையிலிருந்தார்கள். மதிவல்லவனாகிய மன்னவன் எல்லாக் குமாரர்களிடத்தும் ஒரேவிதமான அன்பு பாராட்டிவந்தான். அவர்கள் உடுக்கும் உடையிலும், உண்ணும் உணவிலும் ஊரும் வாகனங்களிலும் சிறிதும் பேதம் என்பதே கிடையாது. அவர் அவர்கட்குத் தக்க வயது வந்த பிறகு ஒவ்வொருவருக்கும் ஒரு அழகிய மாளிகையை அமைத்து அதில் வசிக்கும்படி அரசன் கட்டளையிட்டான். ஏழு மாளிகைகளும் ஒரேவிதமாயும், ஒரேவித சாமான்களை உடையனவாயும் இருந்தன. எல்லாம் ஒரே வரிசையாக ஒரே இடத்தில் அமைக்கப் பெற்றிருந்தன. யாராவது ஒருவர் ஒரு மாளிகையைப் பார்த்தால் மற்றைய மாளிகைகளைப் பார்க்க வேண்டியதில்லை. இத்தகைய அழகுவாய்ந்த மாளிகைகளில் ஏழு குமாரர்களும் வாழ்ந்திருந்தார்கள்.



2. அரசிளங்குமாரர்கட்குக் கல்யாணம் செய்யும் வயது வந்துவிட்டது. அரசன் தூதர்களை அநேக தேசங்கட்கு அனுப்பி, ஒரே வயதும், ஒரே குணமும், ஒரேவிதமான அழகும் வாய்ந்த ஏழு பெண்களைத் தேடும்படி கட்டளையிட்டான். அவர்கள் உலகமெல்லாம் தேடினார்கள். மன்னவன் சொல்லிய வண்ணம் மடந்தையர்கள் இருந்தார்களெனினும் ஒரே இடத்தில் ஏழுவர் கிடைப்பது அருமையாக இருந்தது. பெண் தேடச் சென்ற தூதர்கள் திரும்பிவந்து, 'அரசர் பெருமானே, நாங்கள் காடு மலை வனாந்தரங்கள் கடந்து சென்று அநேக தேசங்களிலும் இராஜதானிகளிலும், ஏழைக்குடிகளிலும், செல்வர் மாளிகைகளிலும், அரசர் அரண்மனைகளிலும் தாங்கள் சொல்லிய குணங்கள் அமையப் பெற்ற கன்னிகைகளைத் தேடினோம். கிடைக்கவில்லை, என்செய்வோம்' என்றார்கள்.

இந்த சமாசாரத்தைக் கேட்டதும் அரசனுக்கு மனவருத்தம் உண்டாயிற்று. அரசன் வருந்துவதைக்கண்ட அமைச்சன், 'அரசரேறே, தாங்கள் ஏன் கவலைப்படவேண்டும். ஒரே குணம் வாய்ந்த பெண்கள் ஏழுவர் கிடைக்கவே மாட்டார்கள். மனிதயத்தனத்திற்கு எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்தாயிற்று. இனிமேல் தெய்வத்தை நம்பித்தான் நடக்கவேண்டும். நாம் பிள்ளைகளை அழைப்பித்து அவர்கள் தங்கட்குரிய மனைவியர்களைத் தெய்வத்தை முன்னிட்டுச் செய்யும் காரியமூலமாக ஏற்படுத்திக்கொள்ள சம்மதமோ என்று கேட்போம். அவர்கள் அதற்குச் சம்மதித்தால் அவர்கள் பிரியப்படி நடப்போம். தாங்கள் இதைப்பற்றிக் வலைப்பட்டு சாத்தியமில்லை' என்று கூறினான். அமைச்சன் சொல்லியதற்கிணங்கி அரசன் தன்னுடைய ஏழு குமாரர்களையும் வரவழைத்து கல்யாண விஷயமாக அவர்கட்குள்ள அபிப்பிராயத்தை அறிவிக்குமாறு வினவினான். அவர்கள் அமைச்சன் சொல்லியபடி நடப்பதற்குச் சம்மதித்தார்கள். உடனே அரசன் தன் அரண்மனையிலுள்ள உப்பரிகையின்மீது அழைத்துச் சென்றான். அந்த உப்பரிகையின்மீது நின்று பார்த்தால் நகரமெங்கும் செவ்வையாகப் புலப்படும். ஏழு வில்லும் ஏழு பாணங்களும் வரவழைத்து ஒவ்வொரு குமாரனிடத்தும் ஒரு வில்லையும் அம்பையும் கொடுத்தான். பிறகு புதல்வர்களை நோக்கி, 'என் அருமந்த சிறுவர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள்பால் உள்ள

வில்லை நாணேற்றி அம்பைப்பூட்டி உங்கட்கு இஷ்டமான திசையில் எய்யுங்கள்; அவ்வம்பு எந்த வீட்டின்மேல் போய் விழுகிறதோ அவ்வீட்டிலுள்ள கன்னிகையை நீங்கள் மணந்து கொள்ளவேண்டும். அந்தப் பெண்ணின் தகப்பன் ஏழையா யிருந்தாலும் பணக்காரனாயிருந்தாலும் சரியே. இந்தக் கட்டுப்பாட்டிற்குத் தவறப்படாது' என்று சொன்னான். தந்தையின் கட்டுப்பாட்டிற்குச் சம்மதித்து எல்லாக்குமாரர்களும் தங்கள் தங்கள் வில்லில் நாணேற்றி அம்பைப்பூட்டி எய்தார்கள். ஏழாவது குமாரனுடைய அம்பு தவிர மற்றைய ஆறு பாணங்களும் அந்நகரத்திலுள்ள திரண்ட தனவந்தர் மனையின் மீதே விழுந்தன. ஏழாவது குமாரன் எய்த அம்பானது பட்டணத்தைக் கடந்து வெகுதூரஞ் சென்று எவருடைய கண்ணிற்கும் புலப்படவில்லை. அம்பு எங்கே விழுந்தது என்பதைக் கண்டறியும்படி அரசன் தன்னுடைய வேலையாட்களை பலதிக்குகளிலும் தேடிச்செல்லும்படி கட்டளையிட்டான். தேடித்தேடி அந்த அம்பு காட்டிலுள்ள ஒரு மரக்கிளையில் தொங்கிக்கொண்டிருப்பதையும் அம்மரத்தில் ஒரு பெண்குரங்கு உட்கார்ந்து கொண்டிருப்பதையும் கண்டார்கள்.

ஏழாவது குமாரன் எய்த அம்பு இவ்வாறு மரத்தில் தொங்கிக்கொண்டிருப்பதையும் அதனருகே பெண் குரங்கொன்று இருப்பதையும் கேட்ட அரசனுக்கு அடக்கவொண்ணாத் துன்பம் உண்டாயிற்று. அரசன் தன் குமாரனை அழைத்து, 'குரங்கை மணந்துகொள்வது மனிதர்களுடைய இயற்கைக்கு மாறான விஷயமாகையால் நீ எப்படி குரங்கை மணந்து கொள்வது. நீ இன்னொருவிசை வில்லில் அம்பைப்பூட்டி எய்தால் அவ்வம்பு எங்கே விழுகின்றதோ அவ்வீட்டில் உள்ள மடந்தையை மணக்கலாம்' என்று சொன்னான். ஏழாவது குமாரன் 'எந்தையே எனக்கு மூத்தோர்கள் அறுவர்கட்கும் யவ்வனமும் அழகும் வாய்ந்த மனைவியர்கள் வாய்த்தது அவர்கள் செய்த பாக்கியம். "ஆவாரையாரே அழிப்பவர்" என்று சொல்லியபடி அவர் அவர்கட்கு வரும் நன்மையை எவ்வாறு தடுக்க முடியும். அவர்கட்குக் கிடைத்த பாக்கியத்தைப்பற்றி யான் குறைகூறவுமில்லை பெருமை கொள்ளவுமில்லை. அம்பெய்ய எல்லாரோடும் எனக்கு ஒருசமயம் வாய்த்தது. அதில் என் துர் அதிர்ஷ்டம் குரங்கு வாய்த்தது. அதை எவ்வாறு தடுக்க



முடியும். ஈசுவரன் ஆன்மாக்கட்கு என்ன கொடுக்கிறானோ அதை அநுபவித்தல்லவோ தீரவேண்டும். மீட்டும் அம்பெய்யமாட்டேன். குரங்கை மனிதன் மணந்துகொள்வது அடாதென்பதை நன்குணர்வேன். என் ஆயுள் பரியந்தம் மணம்புரிந்து கொள்ளமாட்டேன். அந்த குரங்கையே என்னிடம் வைத்துக் கொண்டு வளர்த்து என் காலங்கழிப்பேன்' என்று விடை பகர்ந்து விட்டு உடனே மரத்தண்டை சென்று அந்தக் குரங்கைத் தன் அரண்மனைக்கு எடுத்துக்கொண்டு வந்து விட்டான்.

ஏனைய ஆறு குமாரர்களுக்கும் மிகவும் சிறப்பாகவும், அலங்காரமாகவும் மணம் நடை பெற்றது. நகரம் முழுவதும் விளக்கு வைக்கப்பட்டிருந்தமையின் அது ஒரே சோதிமயமாய்க் காண்பவர் கண்கட்குப் புலப்பட்டன. தெருக்கள் தோறும் பாட்டும் கூத்தும் மலிந்து கிடந்தன. நகர மாந்தர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளை அலங்காரஞ் செய்தார்கள். ஏழாவது குமாரன் தவிர நகரமாந்தர் அனைவரும் ஆனந்தக் கடலில் அமிழ்ந்திருந்தார்கள். ஏழாவது குமாரன் யாருடனும் சேராமல் தன் மாளிகையில் குரங்குடன் தனியே வருந்திக்கொண்டிருந்தான். வைரம் பதிக்கப்பெற்று பொன்னால் செய்யப்பட்ட ஒரு கழுத்தணியை அக் குரங்கின் கழுத்திற் கட்டி ஒரு நாள் காலையில் அதை எப்போதும் உட்காரவைத்துக்கொண்டு அத்துடன் பேசிக்கொண்டேயிருப்பான். அதன் பசி வேளையில் அதற்கு உருசியுள்ள உணவுகளை ஊட்டுவான். இத்தகைய செய்கைகளைக் கண்ட அரசகுமாரனுடைய நண்பர்கள் அறிவினம் என்றும், பைத்தியம் என்றும், பிடிவாத குணம் என்றும் பலவாறாய்ச் சொல்வாராயினர்.

அரசன் நாள்தோறும் தன் ஏழாவது குமாரனை எவ்விதமாகத் தன் வசப்படுத்தலாமென்று மந்திரிகளுடனும், கற்று வல்ல சான்றோர்களுடனும் ஆலோசிப்பானாயினன். வேறொரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி அரசன் தன் குமாரருக்குச் சொல்லிய புத்திமதிகள் சிறிதும் பயன்படவில்லை. அரசகுமாரன் ஒரேபிடிவாதமாக இருந்தான். இவ்வாறு நாள்கள் பல சென்றன. அரசகுமாரன் தான் கொண்ட நிலையினின்றும் சிறிதும் மாறவில்லை. நாள் செல்லச்செல்ல அரசகுமாரனுக்குக் குரங்குக்குட்டியினிடத்தில் பிரியம் அதிகரித்-

தது. குரங்கும் அரசன் தன் மீது வைத்திருக்கும் பிரியத்தை அங்கீகரித்து சந்தோஷித்ததுபோல் சிலசைகைகளைக் காட்டின.

மன்னவன் ஓர் நாள் 'தன்னுடைய குமாரர்கள் எழுவரையும் விளித்து 'என் அன்புள்ள குமாரர்களே! நீங்கள் எல்லோரும் மணம்புரிந்து கொண்டு இல்லற தருமத்தை நடாத்த அருகராய் விட்டீர்கள். நீங்கள் சந்தோஷத்துடன் வாழ்வதைப் பார்ப்பதே எனக்குப் பெரிய ஆனந்தம். எனது கடைசி குமாரனுகிய நீயும் குரங்குடனே சுகமாக வாழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. தந்தையாகிய எனக்குப் பிள்ளைகள் எல்லோரும் சுகமாய் வாழ்கிறதைக்கண்டு களிப்பதைவிட மேலான ஆனந்தம் என்ன இருக்கின்றது. என்னுடைய மருமக்கள்மார்களை எல்லாரையும் கண்டு வெகுமானம் கொடுக்கவேண்டும் என்று பிரியப்படுகிறேன்' என்று சொன்னான். தந்தை இவ்வாறு கூறக்கேட்ட அரசிளங்குமாரர்களில் மூத்தவன் தந்தையை அடிவணங்கி 'எந்தையே! தாங்கள் நாளைய தினம் என்னுடைய மாளிகைக்கெழுந்தருளி என்னுடன் போஜனம் பண்ணும் பெருவாழ்வை அளிப்பின் யான் புனிதனாவேன்' என்று சொன்னான். தந்தையும் தன்னுடைய மூத்த குமாரனுடைய வேண்டுகோட்கு இயைந்தனன். உலக மன்னவனுகிய தந்தையை வரவேற்பதற்கு வேண்டிய சகலவிதமான ஏற்பாடுகளும் வெகு சிறப்பாகச் செய்தான். மருமகளும் மாமனார் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். அரசன் குறிப்பிட்ட காலத்தில் தன் பரிவாரங்களுடன் மூத்த மகனின் அரண்மனையையடைந்து, அங்கே தனக்கெனச் செய்திருக்கும் ஏற்பாடுகளை எல்லாம் கண்டு களிப்பெய்தி தன் குமாரனையும் அவன் மனைவியையும் மார்பிறுகத் தழுவி, ஆசீர்வதித்து, அளவற்ற செல்வங்களையும் ஆபரணங்களையும் பரிசாகக் கொடுத்தான். இம்மட்டோ தன்னுடைய குமாரனும் மருகியும் இல்லற தருமத்தை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதைத் தெளிவாகப் போதித்தான். நெடுநேரம் அவ்விருவர்களுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்துவிட்டு தன்னரண்மனைக்குத் திரும்பிவிட்டான்.

(இன்னும் வரும்)

ஒரு தமிழ்ப் புலவர்.


# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

## மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1917வரு ஜூலைமீ | மாதம் 2


## ZOOLOGY

### பிராணி சாஸ்திரம்

### தவளை — Frog.

(முன் தொடர்ச்சி — பக்கம் 4.)

இதுவரையில் நாம் மீனைப் பார்த்து ஆராய்ச்சி செய்து அதைப் பற்றிய விஷயங்களை ஆதியோடந்தமாக வாசித்து வந்தோம். இனி, தவளையைப் பற்றிய விஷயங்களையும் அவ்வாறே ஆராய வேண்டும். மீனை அடுத்துத் தவளையை வைத்ததற்கு ஏற்ற காரணங்களை நல்லாசிரியன் 12-ஆம் சம்புடத்தின் 51-ஆம் பக்கத்தில் விளங்கக் கூறியிருக்கின்றோம்.

உயிர்நூற் புலவர்கள் தவளையை ஆதியில் ஊர்வனவற்றில் சேர்த்திருந்தார்கள். பிறகு அதன் ஜீவிய சரித்திரத்தை உற்றுப்

பார்த்ததில் அது ஆரம்பத்தில் மீனின் வாழ்க்கையையும் பிறகு ஊர்வனவற்றின் வாழ்க்கையையும் உடையதாக இருப்பதைக் கண்டு, அதைத் தனிப் பிரிவாக்கி, அதற்கு இரட்டை வாழ்க்கைப் பிராணி (Amphibians) என்று பெயரிட்டிருக்கிறார்கள். இப்படி ஆரம்பத்தில் ஒருவித வாழ்க்கையும் பிறகு வேறுவித வாழ்க்கையும் உடைய பிராணி இந்தத் தவளைவகை ஒன்றேயாகும். அதனால் தவளையினம் மாத்திரம் இரண்டாவது இனமாக ஏற்பட்டிருக்கின்றது.

நாம் முன்பு மீனைப்பற்றி ஆராயும்போது, முதலில் அதன் மேற்புறத் தோற்றத்தை உற்றுக் கவனித்து ஆராய்ந்தது போலவே, இப்போது தவளையின் மேற்புறத் தோற்றத்தை உற்றுக் கவனிப்போம்.

### தவளையின் மேற்புறத் தோற்றம்.

நிறம் — தலை — மூக்கு, கண், காது, வாய் — உடல் — முதுகு, வயிறு, முன்கால், பின்கால், தோல்.

நிறம் — தவளையின் நிறம் சாதாரணமாகக் கருமை கலந்த வெண்ணிறமானது. அதாவது, ஒருவகைப் பழுப்பு நிறம் என்று கூறலாம். சில தவளைகள் கருமை நிறமாகவும் காண்கின்றன. பச்சைத் தவளை என்னும் வகையைச் சார்ந்த தவளைகள் பச்சை நிறமாகவே இருக்கின்றன. இந்தப் பச்சைத் தவளைகள் மற்றத் தவளைகளைவிடச் சற்று உருவத்திலும் பெருத்து இருக்கின்றன. இந்த நிறங்கள் எல்லாம் தவளைக்கு இயற்கையானவையன்று — அவை வசிக்கும் இடத்தின் நிறத்தை யடைகின்றன. பெரும்பாலும் ஜந்துக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிறம் தம்மைத் தம் பகைவருக்குத் தெரியாமல் மறைத்துத் தப்பித்துக்கொள்ள ஏற்றவாறு அமைந்திருக்கின்றன என்பது உயிர்களை உற்றுக் கவனிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். அதுபோலவே தவளைக்கும் நிறங்கள் ஏற்பட்டு இருக்கின்றன.

சாதாரணமாகப் பழுப்பு நிறம் வாய்ந்த ஒரு தவளையை இரண்டொரு நாள் இருட்டு அறையில் போட்டு வைத்தால், அது கருமை நிறத்தையடையும். அதையே மறுபடியும் வெளிச்சத்தில் போட்டால் அது சிறிது வெளுத்துக் காட்டும். பச்சைத் தவளை எப்போதும் பாசி பற்றியிருக்கிற தண்ணீரிலேயே



காணப்படும். அந்தப் பச்சைத் தவளையைப் பிடித்து வெளிச்சத்தில் வைத்து வைத்தால் அதன் நிறம் வெளுத்துக் காட்டும். அதே பச்சைத் தவளையை இருட்டறையில் போட்டு வைத்தால் கருமை நிறத்தை யடையும். நிலத்திலும் மரத்திலும் வசிக்கும் தவளைகளைப் பார்த்தால் அவை வசிக்கும் நிலத்தைப் போலவும் மரத்தின் பட்டையைப் போலவும் நிறத்தை யடைந்திருக்கும். இந்த விதங்களை நன்றாய்க் கவனித்தால் தவளையின் தோலுக்கு நிறங்களைக் கிரகிக்கத் தகுந்த ஓர் அபூர்வ சக்தி அமைந்திருக்கிறதென்பது விளங்குகின்றது. இப்படித் தவளை தான் வசிக்கும் இடத்திற்கு ஏற்றதுபோல் நிறத்தை யடையாவிட்டால், அது வெகு சுலபமாகத் தன் சத்துருவிடம் அகப்பட்டுக் கொண்டு அதற்கு இரையாகி இறந்துவிடும். இப்படியே மற்ற உயிர்களுக்கும் கடவுள் ஏற்றவாறு நிறவேறுபாடுகளை அமைத்திருக்கின்றார்.

பத்திராதிபர்.

## BOTANY

## தாவர சாஸ்திரம்

### முன்னுரை

உலகில் காணும் எல்லாப் பொருள்களும் இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என இரண்டு வகைப்படும். மனிதன் முதலிய பிராணிகளால் செய்யப்படாமல் தானே உண்டாகும் பொருள் இயற்கைப் பொருளாம். மனிதனாலும் மற்றுமுள்ள உயிர்களாலும் செய்யப்படும் பொருள்கள் செயற்கைப் பொருள்களாம். மரம் தானே தோன்றுவது, ஆதலால் அது இயற்கைப் பொருள் ; அம் மரத்தினால் செய்யப்படும் நாற்காலி மேஜை முதலிய பொருள்கள் மனிதனால் செய்யப்பட்டவை, அதனால் அவை செயற்கைப் பொருள்களாம். உற்று நோக்கினால் செயற்கைப் பொருள்களும் இயற்கைப் பொருள்களினால் உண்டான காரியப் பொருள்களே என்பது தெளிவாகும். இங்கே செயற்கைப் பொருள்களை நீக்கி, இயற்கைப் பொருள்களின் முக்கியமான பிரிவுகளைக் கவனிப்போம்.

இயற்கைப் பொருள் செயற்கைப் பொருள் ஆகிய எந்தப் பொருளும் நிலைத்து நிற்பதற்கு இடமாயிருப்பது இந்தப் பூமியே. அதனால் பூமிக்கு நிலம் என்னும் பெயர் தமிழில் வழங்குகின்றது. நிலம் என்றால் நிற்பதற்கு உரியது என்பது பொருள். அதனால் எல்லாப் பொருள்களும் நிற்பதற்குரிய இடம் இந்தப் பூமியே என்பது நன்கு விளங்கும். இவ்வுலகு நிலப்பரப்பு நீர்ப்பரப்பு என்னும் இரண்டு பிரிவினை யுடையதாகக் காணப்பட்டாலும், நீர்ப்பரப்பின் அடிப்புறமும் நிலப்பரப்பாக இருப்பதனால், பூகோளம் முழுதும் நிலப்பரப்பாகவே இருக்கிறதென்று தெரிந்து கொள்ளலாம்.

நிலத்தின் மேலும் நிலத்தின் கீழும் அநேக வஸ்துக்கள் அமைந்து கிடக்கின்றன. சில பொருள்கள் நிலத்தினின்றும் தோன்றி, மேலே வந்து, தோன்றிய அந்த இடத்தைவிட்டுப் பெயராமல் ஆகாயத்தை நோக்கி நெடுகச் செல்கின்றன. சில பொருள்கள் நிலத்தைத் தமக்கு இடமாகக் கொண்டு இடம்விட்டுப் பெயரவும் ஓடவும் ஆடவும் இரை தேடவும் கூடிய தன்மை யுடையனவாக இருக்கின்றன. சில பொருள்கள் ஆகாயத்திற் சஞ்சரிக்கும் சக்தியுடையனவாக இருக்கின்றன. இவ்வாறெல்லாம் பேதப்பட்டு இருக்கும் பொருள்கள் அனைத்தையும் உயிரில்லாதவை உயிருள்ளவை என்னும் இரண்டே பகுதியில் அடக்கிவிடலாம். அதெப்படி?

(1) நிலத்தின் மேலும் நிலத்தின் கீழும் அமைந்து கிடக்கும் பொருள்களைப் பார்த்தால் பலவகையான மண்ணும் கல்லும் உலோகங்களுமாகக் காணப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் கனிஜங்கள் அல்லது சுரங்கப் பொருள்கள் என்று பெயர்.

(2) நிலத்தினின்றும் தோன்றி மேலே வந்து இடம் பெயராமல் இருந்து ஆகாயத்தை நோக்கிச் செல்லும் பொருள்களை இரண்டாவதாகக் கூறலாம். அவை எவை? அவை செடியும் கொடியும் மரமும் முதலியன இவற்றிற்கெல்லாம் தாவரங்கள் என்று பெயர்.

(3) நிலத்தைத் தமக்கு இடமாகக் கொண்டு இடம் விட்டுப் பெயரவும் ஓடவும் ஆடவும் இரை தேடவும் கூடியவையும் ஆகாயத்திற் சஞ்சரிக்கும் சக்தியுடையவையும் மூன்றாம் வகையைச் சேரும். அவை எவை? இந்த வகையில் புழுக்கள் பூச்சிகள் பறவைகள் மிருகங்கள் மனிதர்கள் முதலியவற்றை அடக்கிக் கூறலாம். இவற்றிற்கெல்லாம் பிராணிகள் என்று பெயர்.



இனி, மேலேகுறித்த மூன்று பிரிவுகளையும் கவனித்தால், முதற் பிரிவிற் சேர்ந்த கனிஜப் பொருள்களுக்கு உயிர் இல்லை என்பதும் மூன்றாம் பிரிவிற் சேர்ந்த பிராணிப் பொருள்களுக்கு உயிர் உண்டு என்பதும் தெளிவாக விளங்கும். ஆனால் இரண்டாம் பிரிவிற் சேர்ந்த தாவரப் பொருள்களைக் கவனித்தால், அவை உயிர் இல்லாதவைகளைப்போல இடம் விட்டுப் பெயராமலும் உயிர் உள்ளவைகளைப்போல வளர்ச்சி யடைந்துகொண்டும் இருக்கின்றன. அதனால் இந்த இனத்தைச் சார்ந்த பொருள்கள் உயிருள்ளவை உயிரில்லாதவை ஆகிய இரண்டு பிரிவுகளில் எந்த இனத்தைச் சார்ந்தவை என்பதை ஈண்டு ஆராய வேண்டும்:

எப்படி ஆராய்வது என்றால், உயிர் உள்ளவற்றிற்கும் உயிர் இல்லாதவற்றிற்கும் ஏற்பட்டுள்ள தன்மைகளைக் கவனித்து, அவற்றோடு இந்த தாவரத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், இது எந்த இனத்தைச் சார்ந்ததென்பது ஏற்படும்.

உயிர் உள்ளவை இடம் விட்டுப் பெயர்ந்து செல்லும்; உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமாக ஆகாயத்தை உட்கொண்டு மூச்சுவிடும், வளர்ச்சி யடையும், வளர்ச்சி யடைவதற்கு அனுகூலமாகத் தமக்கு ஏற்ற உணவைப் பல பக்கங்களிலும் சென்று தேடிக்கொள்ளும்; உறங்கும், தம்மைப் போன்ற பொருள்களை உண்டாக்கி விருத்தி செய்யும், முடிவில் இறக்கும்.

உயிர் இல்லாதவைகளோ என்றால், இடம் விட்டுப் பெயராமல் இருந்த இடத்திலேயே கிடக்கும். வளர்ச்சி யடையா, உணவு கொள்ளா, உறங்க மாட்டா, தம்மைப் போன்ற பொருள்களை உண்டாக்கமாட்டா. ஆனால், சீதோஷ்ணம் தம்மீது பட்டால் அவை தம் உருவில் மாறுபாடு அடையும்.

இனி, தாவரத்தின் தன்மையைக் கவனித்தால், உயிர் உள்ளவற்றைப்போல வளர்ச்சி யடைகின்றது. வளர்ச்சி யடைவதற்கு அவசியமான ஆகாயத்தையும் உணவையும் இருந்த இடத்திலிருந்தே தேடிக்கொள்ளுகின்றது. தன்னைப்போன்ற பொருள்களை உற்பத்தி செய்கின்றது. முடிவில் இறந்து விடுகிறது. ஆனால் இடம்

விட்டுப் பெயர்வதில்லை. இந்த விஷயங்களை உற்றுக் கவனிக்கும்போது தாவரத்திற்கு உயிருள்ள பொருள்களுக்குள்ள தன்மைகளே மிகுந்திருக்கின்றன. அதனால் தாவரம் உயிருள்ள பொருள் என்றே நன்கு விளங்குகின்றது. ஆகையால், தாவர வர்க்கத்தின் உறுப்புக்களையும் அவை முறையேசெய்யும் தொழில்களை நாம் விவரமாக ஆராய்வோமானல் தாவரத்திற்கு உயிருள்ள விஷயம் இன்னும் விசதமாகும்.

இக்காலத்தில் தாவர சாஸ்திரிகள் தாவரங்களின் தன்மைகளை நன்கு ஆராய்ந்து, அவைகள் வளர்ச்சியடைவதே யல்லாமல், மற்ற உயிருள்ள பொருள்களைப்போல் சுகதுக்கங்களையும் உணர்கின்றன என்று பிரத்தியக்ஷமாகக் கண்டறிந்திருக்கிறார்கள். நம்முடைய முன்னோர்களாகிய அறிஞர்களும் பிராணிகளைத் தரம் பிரித்து, உயிர்களுக்குப் படிப் படியாக ஓரறிவு முதல் ஆறறிவு வரையில் உண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள். அவை வருமாறு —

1. புல் பூண்டு செடி கொடி மரம் முதலிய தாவரங்கள் எல்லாம் பரிச உணர்ச்சி ஒன்றே யுடைய ஓரறிவுயிர்களாம்.

2. இப்பி, நத்தை முதலிய சில ஜந்துக்கள், பரிச வுணர்ச்சியும் சுவைக்கும் உணர்ச்சியும் உடைய ஈரறிவுயிர்களாம்.

3. சிதல், எறும்பு முதலிய சில ஜந்துக்கள் பரிச வுணர்ச்சியும் சுவைக்கும் உணர்ச்சியும் முகரும் உணர்ச்சியும் உடைய மூன்றறிவுயிர்களாம்.

4. தும்பி, வண்டு முதலிய சில ஜந்துக்கள் பரிச வுணர்ச்சியும் சுவைக்கும் உணர்ச்சியும் முகரும் உணர்ச்சியும், பார்க்கும் உணர்ச்சியும் உடைய நான்கறி வுயிர்களாம்.

5. பக்ஷிகள், மிருகங்கள் முதலிய ஜந்துக்கள் பரிச வுணர்ச்சியும் சுவைக்கும் உணர்ச்சியும் முகரும் உணர்ச்சியும் பார்க்கும் உணர்ச்சியும் கேட்கும் உணர்ச்சியும் உடைய ஐயறி வுயிர்களாம்.

6. மனிதனோவென்றால் பரிசம், சுவைத்தல், முகர்தல், பார்த்தல், கேட்டல் ஆகிய ஐந்து அறிவுகளோடு நன்மை தீமைகளையும் பாவ புண்ணியங்களையும் பகுத்தறியும் உணர்ச்சியையும் பெற்று ஆறறிவு உயிராக விளங்குகிறான். இதனாலேயே மனிதனை எல்லா உயிர்களிலும் சிறந்தவனாகக் கூறுவதும் என்க.



குறிப்பு — நம் முன்னோர் வகுத்த பிரிவுகளிலும் தாவரத்தை உயிருள்ள' பிரிவிலேயே சேர்த்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் இன்னின்ன பிரிவிற் சேர்ந்த உயிர்களுக்கு இத்தனை உணர்வுகள் உண்டு 'என்று குறித்திருப்பவைகளில், இக்காலத்து ஆராய்ச்சியின்படி, சிலவற்றிற்கு சில அறிவு மிகுந்திருக்க அறிகிறோம். அவற்றைப்பற்றி இனி நாம் தனித்தனி ஆராயும் பாடங்களில் அவற்றின் உண்மை தெளிவாக விளக்கிக் காட்டுவோம்.

இவ்வுலகத்திலுள்ள உயிருள்ளவை உயிரில்லாதவை ஆகிய சகல வஸ்துக்களையும் இக்காலத்து சாஸ்திரிகள் மூன்று வர்க்கங்களாகப் பிரித்திருக்கின்றனர். அவை — கனிஜவர்க்கம், தாவரவர்க்கம், பிராணிவர்க்கம் என்பனவாம்.

| உயிரில்லாதவை | உயிருள்ளவை | |
|---|---|---|
| கனிஜவர்க்கம் | தாவரவர்க்கம் | பிராணிவர்க்கம் |
| களிமண்<br>கருங்கல்<br>சீமைக்கண்ணாடி<br>இரும்பு<br>ஈயம்<br>பொன்<br>முதலியன | அவரைக்கொடி<br>அருகம்புல்<br>மல்லிகைச் செடி<br>தாமரை<br>தென்னை மரம்<br>புளியமரம்<br>முதலியன | பச்சைப் புழு<br>பட்டாம் பூச்சி<br>மீன், தவளை<br>ஓணான்<br>காக்கை<br>குரங்கு, மனிதன்<br>முதலியன |

இவற்றுள் இனி நாம் தாவரவர்க்கத்தைப்பற்றி நன்றாய் ஆராயவேண்டும்.

பத்திராதிபர்.

# STORY TELLING

## கதை சொல்லல்

### மாயப் பெண் அரசி

(முன் தொடர்ச்சி பக்கம் - 24)

8. மறுநாள் இரண்டாவது குமாரன் தன் தந்தையைத் தன் அரண்மனைக்கு வரும்படி யழைத்தான். இவ்வாறு இளைய குமாரன் தவிர ஏனைய ஆறு குமாரர்களும் தன் தந்தையாகிய மன்னவனை விருந்திற் கழைத்தார்கள். மன்னவனும் ஒவ்வொரு புத்திரன் வீட்டிற்கு ஒவ்வொரு நாளாகச் சென்றான். ஏழாவது குமாரன் முறை வந்தது. அவன் என்ன செய்வான் பாவம்! 'பாழே மடக்கொடி யில்லா மனை' என்றபடி, அவன் அரண்மனை இல்லாளில்லாமல் பாழடைந்து கிடக்கிறது. தந்தையைத் தன் அரண்மனைக்கு அழைப்பதற்கில்லையே என்னும் வருத்தத்துடன் வீட்டிற்கு வந்து தன்னுடைய பிரியமான குரங்கை நோக்கி, 'என்னுடைய துக்கத்தையும் ஆனந்தத்தையும் அனுபவிக்க என்னுடன் வளரும் என் அன்பே! நான் இன்னது செய்வது என்று எனக்கு விளங்கவில்லையே. எனக்கு இப்போது நேர்ந்திருக்கும் ஆபத்தினின்றும் என்னை நீக்கத் தகுந்த ஆலோசனை சொல்லும்படி எல்லாம் வல்ல இறைவன் உனக்குப் பேசுந்தன்மையை அளிக்கமாட்டாரா என்று பலதரமும் அவரைப் பிரார்த்திக்கிறேன். என்னுடைய சகோதரர்களெல்லாம் அவரவர்களுடைய மனைவிமார்களையும், வீடுகளையும் தந்தைக்குக் காண்பித்து, அவரைச் சந்தோஷிப்பித்தார்கள். என் தந்தை என் அரண்மனைக்கு வரின், யான் யாரைக் காண்பிப்பது; அவரை அழைப்பதற்கும் அஞ்சுகிறேனே; முன்னமே என்னை எல்லாரும் உன்னைத் துணையாகக் கொண்டிருப்பதற்குப் பரிகாசஞ் செய்கிறார்கள். என்னுடைய தந்தையை அழைத்து உன்னைக் காண்பிப்பேனாயின் அவர்கள் எல்லோரும் பின்னும் என்னைப் பரிகாசஞ் செய்யமாட்டார்களா?' என்று கூறிப் 'பலவாறாக வருந்தினான். இவ்வாறு நெடுநேரம் குரங்குடன் வார்த்தையாடிக்கொண்டிருந்தான். அவன் நாம் யாரைப் பார்த்துப் பேசுகிறோம், அது அஃறிணையாயிற்றே, அதற்குப் பேசும் திறமை



கிடையாதே என்பதை முற்றிலும் மறந்தான். குரங்கும் அரசகுமாரன் சொல்வதை எல்லாம் உணர்ந்துகொண்டதுபோல் குறிப்பாகக் காண்பித்தது. இவ்வாறாக மன்னன் மகன் பேசிமுடிந்தபிறகு அவன் ஆச்சரிய மடையும்படி குரங்கானது அரசகுமாரனை நோக்கி, 'அரசகுமாரனே, ஏன் வருந்துகின்றாய்? இனி வருத்தம் வேண்டா. நீ உன் தந்தையிடம் சென்று அவரைத் தன் பரிவாரங்களுடன் நம்முடைய மாளிகைக்கு வரும்படி வேண்டுக. நான் சொல்வதைத் தட்டாமற் செய்' என்று சொல்லிற்று. ஒருநாளும் பேசியறியாத குரங்கு இப்போது பேசியதைக் கேட்ட மன்னவன் மகனுக்கு அளவில்லாத ஆச்சரியம் உண்டாயிற்று. அவன், 'எல்லாம் வல்ல இறையவனே, என்றைக்கும் பேசாத குரங்கு இன்று பேசியது என்ன மாயமோ அறியேன்!' என்று சொல்லிக்கொண்டே விரைந்துசென்று, தன் தந்தையையும் அவரைச் சூழ்ந்திருக்கும் மந்திரி முதலியவர்களையும் தன் அரண்மனைக்கு விருந்துண்ண வரும்படி வேண்டினான். மந்திரி முதலியவர்கள் இவன் அழைத்ததைக் கேட்டு 'இவன் எவ்வாறு நமக்கு விருந்தளிக்கப் போகிறான்!' என்று தங்களுக்குள்ளே, வியந்து பேசுவாராயினர். 'இவன் அவமான மடைவது நிச்சயம், அந்த வேடிக்கையும் பார்ப்போம்' என்று தீர்மானித்தார்கள்.

9. ஏழாவது குமாரன், தந்தையாகிய அரசனையும் அவன் பரிவாரங்களையும் தன் மாளிகைக்கு விருந்துண்ண வரும்படி யழைத்த பிறகு தன் வீட்டிற்கு வந்து, இனிநடக்கவேண்டிய காரியங்கட்கு என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டே யிருந்தான். இவ்வாறு அவன் யோசனையி லாழ்ந்திருக்கும்போது ஒரு சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் எங்கிருந்து வருகிறது என்று பார்க்கும்போது இவன் பிரிய தோழியாகிய குரங்கு தன் நாயகனைத் தன் அருகே வருவதற்குச் செய்த சத்தமாகத் தெரியவந்தது. அரசகுமாரன் உடனே அதன் அருகிற் சென்று, 'என் நாயகியே, என்னை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கின்றாய். உன்னுடைய பேச்சைக் கேட்டு என் தந்தையையும் அவருடைய பரிவாரங்களையும் என் அரண்மனைக்கு விருந்துண்ண வரும்படி அழைத்தாயிற்று. அவர்கள் வரின் அவர்களை உபசரிப்பதற்கு மனிதர்களும், செலவிற்கு வேண்டிய பணமும் யான் எங்கிருந்து

சேகரிப்பேன். யான் என்ன செய்யவேண்டும் என்பதை நீயல்லவோ சொல்லவேண்டும். ஏன் மௌனம் சாதிக்கின்றாய், மறுபடியும் பேச்சை யிழந்துவிட்டாயோ?' என்று பலவாறு பேசிப் புலம்பினான். அவன் நாயகியாகிய பெண்குரங்கு ஒன்றும் பேசவில்லை. ஏழாவது குமாரன் தன் நாயகி பேசவில்லை என்றும், பேசினதாக எண்ணியது தன்னுடைய பிசகென்றும் வருந்தினான். நாயகன் வருந்துவதைக் கண்ட குரங்கு, தன்னுடைய கரத்தில் சிறிய ஓடு ஒன்றைப் பிடித்துக்கொண்டு, தன் நாயகனைத் தன்னிடம் வரும்படி சைகை செய்தது. ஏழாவது குமாரன் குரங்கினருகே சென்றபோது அது அந்த ஓட்டை அவனிடம் கொடுத்தது. அதில் 'யான் பேசாமலிருப்பதைப்பற்றி தாங்கள் வருந்த வேண்டா. என்னை முதல் முதலில் எங்கிருந்து எடுத்துக்கொண்டு வந்தீர்களோ அந்த ஆலமரத்தருகே சென்று அங்குள்ள பொந்தில் இந்த ஓட்டுத்துண்டை போட்டுவிட்டு பதில் வரும் வரையில் அங்கே யிருங்கள்' என்று எழுதியிருந்தது. இவ்வாறு எழுதியிருப்பதை வாசித்த அரசகுமாரனுக்கு இன்னது செய்வது என்று விளங்கவில்லை. தன் நாயகி சொல்லியபடி நடந்து பார்ப்போமா என்று ஆலோசித்தான். செய்தால் யாது தீங்கு நேரிடுமோ என்றும் பயந்தான். முடிவாகத் தன் நாயகி சொல்லியபடி செய்வோம் என்று தீர்மானித்து, காட்டுக்குச் சென்று, அந்த ஆலமரத்தைக் கண்டுபிடித்தான். அம்மரம் மிகப் பருத்து நீண்டு பக்ஷி சாலங்கள் நிறையப்பெற்று கண்டோர் யாவரும் வியக்கத்தக்க வளப்பு வாய்ந்திருந்தது. தன் நாயகி சொல்லியபடி அதில் பொந்தொன்று காணப்பட்டது. அப்பொந்தில் மன்னவன் மகன் தான் கொண்டுவந்த ஓட்டை எறிந்துவிட்டு அம் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டிருந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் யவ்வனமும் அழகும்வாய்ந்த ஒருபெண் பச்சைநிறமுள்ள பட்டாடைகளை உடுத்திக்கொண்டு வெளியே வந்தாள். அவள் அரசகுமாரனை, என் எஜமாட்டி உம்மைப் பார்க்க விரும்புகிறபடியால் தாம் தன்னுடன் வரவேண்டும்' என்று வேண்டினாள். உடனே அரசகுமாரன் மரத்தின் மீது ஏறி பொந்தின் வழியாய் இறங்கினான். இறங்கவும் எங்கும் ஒரே இருட்டாகக் காணப்பட்டது. சிறிது நேரம் கழித்து வெளிச்சம் இவன் கண்ணுக்குப் புலப்பட்டது. 'நாம் இப்போது எங்கே இருக்கிறோம்



என்று மன்னவன் மகன் ஆலோசித்தான். சிறிதுநேரம் தாழ்த்துத் தான் ஒரு, அலங்காரமான உத்யானவனத்தில் இருப்பதாகப் புலப்பட்டது. அவ்விடத்துக் காணப்படும் மரங்கள் எல்லாம் பொன்மயமாக இருந்தன. அவைகளின் இலைகள் எல்லாம் நீலக்கல்லாலும், ஏனைய இரத்தினங்களாலும் இயற்றப்பட்டிருந்தன. மரங்கள் எல்லாம் ஒரே வரிசையாக இருந்தன. அவைகளின் நடுவே சுகந்த மணம் வீசும் நீருள்ள ஓர் ஆறு பாய்ந்துகொண்டிருந்தது. அதன் ஜலத்தைக் காண்போர் தேவாமிர்தமே இவ்வாறு ஆறாகப் பெருகி ஓடுகின்றதோ என்று நினைத்தற்கும் இடமுண்டு. அதில் உள்ள ஜலம் பரிசுத்தமாய் இருந்தபடியால் அதின் அடியில் இருக்கும் இரத்தினங்களும், வைரக்கற்களும் அந் நதியில் இங்கு மங்கும் திரிந்துகொண்டிருக்கும் மீன்களும் நன்கு புலப்பட்டன. மரங்களின் மீது பக்ஷி சாலங்கள் எல்லாம் இனிமையாகப் பாடிக்கொண்டு இருந்தன. சுகந்தத்தோடும் கூடிய காற்று மெல்லென வீசிக்கொண்டு இருந்தது. பூமிக்குக் கீழேயிருக்கும் இந்த அற்புத உலகத்தில் காணப்படும் விளக்குகளும் நூதனமாகவே இருந்தன. ஐந்து நிமிஷத்திற்கு ஒருவிசை அத் தீபங்கள் வெவ்வேறு நிறமுள்ளவைகளாகக் காணப்பட்டன. மன்னவன் மகனுக்கு முதலில் தான் ஏதோ ஒரு பாணமருந்தினால் காட்டப்படும் விநோதத்தைக் (பாண வேடிக்கை) காண்பதாகத் தோற்றியது.

10. இத்தகைய அழகுவாய்ந்த அந்த உத்யானவனத்தின் கடைசியில் ஒரு அழகிய தடாகமும் அதனருகே ஒரு உப்பரிகையும் காணப்பட்டன. அம் மாளிகைக்கு ராஜகுமாரனை, அழைக்க வந்த பெண் கூட்டிக் கொண்டு சென்றாள். அம் மாளிகையின் ஓர் புறத்தில் சிங்காதனத்தின் மீது ஓர் அழகு வாய்ந்த பெண்ணரசி வீற்றிருப்பதை அரசகுமாரன் கண்டான். அம் மாளிகையிலுள்ள விநோதங்களை எல்லாம் கண்ட அரசகுமாரன் இன்னது செய்வதென்று தோன்றாமல் மதி மருண்டு தான்வந்த காரியத்தைச் சொல்லாமல் வெறுமனே நின்றுகொண்டிருந்தான். சிங்காதனத்தின் மீது வீற்றிருந்த பெண்மணி, 'அரசகுமாரனே நீ என்ன காரியத்திற்காக இங்கு வந்தனை என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். அதைப்பற்றி நீ கவலைப்படாதே. நீ

வீட்டுக்குப்போ. நாளையகாலைக்குள் உன் தந்தையை வரவேற்பதற்கு வேண்டியவைகள் எல்லாம் உன் வீட்டில் சித்தமாயிருக்கும்' என்று பகர்ந்தனள். இதைக் கேட்ட அரசகுமாரன் பெண்மணிக்கு வந்தனை புரிந்து தன் வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

11. வீடுவந்து சேர்ந்து, தன் நாயகிக்கு தான் போன இடத்தில் நிகழ்ந்தவைகளை எல்லாம் பகர்ந்தான். தான் போன மாளிகையில் கண்ட விநோதங்களையும் அங்கே சிங்காதனத்தில் வீற்றிருந்த பெண்மணியையும் நினைத்துக் கொண்டே யிருந்தமையின் அவனுக்கு அன்றிரவெல்லாம் நித்திரையே யில்லை. பொழுது விடிந்ததும் தனக்குப் பெண்கள் நாயகம் சொல்லியது பொய்யோ மெய்யோ என்பதைப் பரிசோதிப்பதற்காக தன் மாளிகையை விட்டு வெளியே வந்தான். அவன் மாளிகையிலிருந்து அவன் தந்தையாகிய அரசன் வசிக்கும் அரண்மனை வரையில் இரண்டு பக்கங்களிலும் அழகான மரங்கள் முளைத்திருப்பதைக் கண்டான். மரங்களில் பலரும் அருந்துதற்குரிய பழங்கள் குலைகுலையாய்த் தொங்கிக் கொண்டிருந்தன. இடையில் சுத்த ஜலங்கொண்ட நீரோடைகள் காணப் பட்டன. உயர்ந்த பட்டினால் நெய்யப்பட்டதும், பொற் சரிகை வேலைகளை யுடையதுமான ஒரு பெரிய விரிப்பு அல்லது ஜமக்காளம் அரசகுமாரன் வீட்டிலிருந்து அரசன் அரண்மனை வரையில் விரிக்கப்பட்டிருந்தது. வழிகளில் கொடிகளும், தோரணங்களும், காற்றிலசைந்து கொண்டிருந்தன. மர நிழல்களில் பழங்கள், வாசனை வஸ்துக்கள், வேனிற் காலத்தில் அருந்துதற்குரிய குளிர்ந்தபானங்கள், விலைக்குத் தயாராக இருந்தன. மரங்கட்கருகே அழகிய கூடாரங்கள் அமைக்கப் பட்டு பற்பல விளையாட்டுகள் அவைகளில் நடந்தேறிக்கொண்டே யிருந்தன. ஆண், பெண், சிறுவர்கள் ஆகிய இவர்கள் திரள் திரளாய் பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும் இருந்தார்கள். அரசகுமாரனுக்கு இந்த வேடிக்கைகளை எல்லாம் கண்ட அளவில் உண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

(இன்னும் வரும்)

ஒரு தமிழ்ப் புலவர்.



## SCHOOL GARDEN

## பாடசாலைத் தோட்டமும், அதன் சம்பந்தமான வியவசாய விஷயங்களும்.

1. பாடசாலைத்தோட்டம் என்பது என்ன? எலிமெண்டரி முதல் ஹைஸ்கூல் வகுப்புகள் வரையில் டிரில், தேஹாப்பியாசங்கள் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த தோட்டத்தையும் அதன் வியவசாய கோரிக்கைகளையும் நன்றாய் கவனிப்பது அவசியம். பாடசாலைத் தோட்டமென்பது மூன்று வகைப்படும்:—

(a) புலங்களின் விருத்தியைத் தேர்ச்சி செய்வதற்காக, ஏற்படும் பொதுத் தோட்டம். இதில்லாத, விருக்ஷங்களும், அவைகளைச் சுற்றிலும் அநேக ரூபங்களும், வர்ணங்களும், வாஸனை முதலான அநேக விஷயங்களைக் கற்பிக்கக்கூடிய மனசுக்கு ரமணீயமானதும், தாவர சாஸ்திரத்தை (Botany) போதிக்கக்கூடியதுமான தோட்டம். இதைப்பற்றி ஜர்மனி தேசத்தில் பாலவித்யா விஷயத்தைப் பற்றி அநேக காலமாக ஆலோசித்து, கடைசியாகத் தீர்மானித்து எழுதிய, மஹா வித்வத் சிரோமணியாகிய (ப்ரோபெல்) என்பவருடைய கிண்டர் கார்டன் முறையும், இதை உத்தேசித்தே கிண்டர்கார்டன் என்னும் பதத்துக்கு அர்த்தமே குழந்தைகளது தோட்டம் என்றேற்பட்டது.

(b) பாடசாலை இருக்கும் கிராமத்தில் பயிரிடப்படும் பல பயிர்களைச் சிறு சிறு பாத்திகளில் பயிரிட்டுக் காட்டுவது.

(c) மேற்கண்ட வியவசாயத்தை அப்போதைக்கப்போது கற்றுக்கொண்ட நூதன விஷயங்களாலும் விசேஷ எரு முதலானவைகள் சேர்ப்பதாலும் சோதிக்கவேண்டிய பரிசைஷ் தோட்டம் மேலே சொல்லிய (b, c,) தோட்டங்கள், அடுத்தடுத்தாவது, எதிர்த்தாவது இருக்கலாம்.

2. இந்த மூன்று தோட்டங்களும், கால்நடை முதலான ஜந்துக்கள் பிரவேசிக்க முடியாமல் சாதகமான சுவர்கட்டடமாவது, நல்ல செடிகளாலான வேலியாவது வைத்து, காப்பாற்-

றப்பட வேண்டும். இந்த மூன்று தோட்டங்களும், பள்ளிக்கூட கட்டட விஸ்தீரணத்திற்குச் சமமாக அளந்து அமைக்க வேண்டும்.

ஆனால் பள்ளிக்கூடத்துக்குச் சுற்றுப் பக்கத்தில் இருப்பதும் தோட்டத்திற்காகக் கிடைக்கக்கூடிய இடத்தைப் பொறுத்ததாக விருக்கிறது. தோட்டத்திற்காகக் கிடைக்கக்கூடிய இடத்தை, நீளம், அகலம், அளந்து, நடுவில், 2 அல்லது 3 அடி அகலத்தில், பாதை ஒன்றும், ஆரம்பிக்கு மிடத்திலிருந்து, அதே அடி, அகலத்தில், நாலு பக்கத்திலும், சுற்றுப் பாதையும், ஏற்படுத்தவேண்டும். தேவையானால் இதன் மத்தியிலும், சுமார் 12 அல்லது 15 அடிக்கு, குறுக்குப் பாதையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். மேற்கண்ட பாதைகள் எல்லாம், பள்ளிக்கூடத்திற்கு சமதூரத்தில் எடுத்துக்கொண்ட கோட்டுக்குச் சமகோணத்திலேயே இருக்கவேண்டும். நேர்கோணங்கள் புலங்கள் அளக்கும், சங்கிலி, டேப், கயிறு, இவைகளால் ஒருபக்கம் 15ம் மற்றொரு பக்க 25யுமாக புலத்தின் நான்கு மூலைகளிலும் நேர்கோணங்கள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

பிற்பாடு வரும் அளவுகளெல்லாம், சமமான தூரத்திலிருக்கவேண்டும். இப்படியே (b, c,) தோட்டங்களில் கண்ட பாத்திகளை, 4 அடி நீளம் 3 அடி அகலத்தில் பிடித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாத்தியின் ஓரத்தில், நடைபாதைகள் தவிர மற்ற இரண்டுபக்கத்திலும் ½ அடி அகலம் வரப்புப் போடவேண்டும். இப்படியே பள்ளிக்கூடங்களில் 3 வது ஸ்டாண்டர்டு முதலாயுள்ள பிள்ளைகளை, நார்மல் ஸ்கூலாயிருந்தால் மற்றப் பள்ளிப் பிள்ளைகளையும் கணக்கிட்டு, ஒவ்வொரு பிள்ளைக்கும் 4 அடி நீளம் 3 அடி அகலம் கொண்ட இரண்டு பாத்திகள் ஒன்று சாதாரண வியவசாயத்துக்கும், மற்றொன்று பரீக்ஷைக்கும், கொடுக்கவேண்டும்.

இந்தத் தோட்டத்திற்கு ஜலதாரம், கிணறாயிருந்தால், ரோதை முதலானது போட்டும், தொட்டிகட்டியும் அதிலிருந்து, தங்கள் பாத்திகளுக்குப் பாய்ச்சும்படி தகரத்தினால் கெண்டி மாதிரியாய் மூக்கில் ஜல்லடைக் கண்கள் அமைக்கப்பட்ட பாத்திரங்களால் தண்ணீர் பாய்ச்சவேண்டும். அல்லது ஜலாதாரக் குழாயாக இருந்தால், நீர்ப்பாய்ச்சும் கால்-



வாய்கள் ஏற்படுத்தி ரஸ்தாக்களுக்குக் குறுக்கில், 4 அங்குலம் மண்குழாய்களை அமைக்கவேண்டும். ரஸ்தாக்களின் ஓரங்கள் இருபக்கத்திலும், கரணடித்து புல் வளர்ப்பதும். அடிக்கடி அதை வெட்டிவிடுவதும், தோட்டத்திற்கு அந்தமாயிருக்கும்.

3. தோட்டத்தைக் குச்சிகளாலும், கயிற்றினாலும், டேப்பினாலும், அளந்து பாத்திகள் ஏற்படுத்திக்கொண்ட பிற்பாடு, வியவசாயத்துக்கு வேண்டிய கருவிகளைப்பற்றி கவனிக்கவேண்டும், அவையாவன: கை மண்வெட்டி அல்லது களைகட்டு பின்னும் ஆழமாய் வெட்ட கவர்முட் கருவி, (Digging fork) இது தோட்டவேலை செய்கிற ஒவ்வொருவருக்கும் வேண்டியது அனாவசியம். பள்ளிக்கூடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முட்கருவிகள் இருந்தால் போதுமானது. இப்படியே பெரிய மண் வெட்டியும். ஆனால் கைமண்வெட்டி அல்லது களைகட்டு மட்டும், ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொன்று இருக்கவேண்டியது அவசியம். நமது பள்ளிக்கூடங்களில் சாதாரணமாய்த் தோட்டவேலை செய்வதை மனவுல்லாசத்துடன் செய்வதில்லை. மண்வெட்டி முதலான கருவிகளால் வேலை செய்வதை மிகவும் இழிவாக நினைக்கிறார்கள். தேக உழைப்பின் மேன்மையை (Dignity of Labour) தெரிந்த ஜாஸ்திப் படிப்புக்காரர்கள் தவிர மற்றவர்கள், வேலைகள் செய்வதனால் உண்டாகும் தேகப் பயிற்சியும், அதனாலுண்டாகும் கைப் பழக்கமும், வஸ்துவின் சுபாவங்களை நன்றாய் ஆராயும் சக்தியும், தெரிந்து கொள்ளுகிறார்களில்லை. ஆகையால் அந்தந்த வகுப்பு உபாத்தியாயர்கள் தாங்களே நேரில் தோட்டவேலையைப் பிள்ளைகளுடன், விளையாட்டாய்ச் செய்துகாட்டி, வேலையின் மேன்மையையும், அதன் பிரயோஜனத்தையும், அடிக்கடி எடுத்துக்காட்டி பிள்ளைகளால் செய்விக்கவேண்டும். 'தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது,' என்னும் நீதி மொழியைப் பிள்ளைகளுக்குப் பிரத்தியக்ஷமாயும், கதைகள் மூலமாகவும், போதிக்கவேண்டும்.

4. நிலத்தைப் பண்படுத்தும் விதம். எந்த விதமான, நிலமாயிருந்தபோதிலும் அதற்குத் தகுந்த, முயற்சி எடுத்து, அதை விளைநிலமாக்கலாம். கூழாங்கற்கள் நிறைந்த நிலத்தைப் பார்க்கிலும், விவசாயத்திற்குக் கெடுதியானது, ஒன்றும் காண முடியாது. அது நாளடைவில் சுபாவமாய் விளைநிலமாக்கலாம்.

கொஞ்ச காலத்திலேயே அக்கற்களை உடைத்துப் பொடியாக்கி தக்க எருச் சேர்த்து, நல்ல நிலமாக்கக்கூடும். [இதை கோயம்புத்தூர் ஜில்லாவில் அநேக இடங்களில் உக்கிலிய கவுண்டர்கள் எவ்விடங்களில் குடியிருக்கிறார்களோ அவ்விடத்தில் காணலாம். சென்ற பத்து வருடத்துக்கு முன்பு ஒன்றுக்கும் பயன்படாத கல்லாங்கரிசில் வாரிகைப் புல்கூட முளையாத இடத்தைக் கவுண்ட ஜாதியார்கள் தங்கள் முயற்சியாலும் ஊக்கத்தாலும் பெரிய கற்களாயிருந்தால் அத்துச் சுவருக்கு உபயோகப் படுத்தியும் மற்ற சிறு கற்களை உடைத்தோ அல்லது சுவபடியே சுபாவத்திலேயே கரையும்படிவிட்டு 10-வருடத்திற்குள் விளைநிலமாக்கி நாளடைவில் தோட்ட நிலத்திற்கும் லாயக்குச் செய்கிறார்கள்.] என்பதை பாடசாலைத் தோட்டத்தில் செய்து காண்பிக்கவேண்டும். இயற்கையிலே வாய்க்கும் நல்ல நிலங்கள் தவிர, மற்றவைகளை பின் வருமாறு சரிப்படுத்தலாம், பாத்திகளில் கவர்முட்கருவிகளால் $\frac{1}{2}$ அடி ஆழம் அளந்து தோண்டி மேற்படி மண்ணை ஒரு குவியலாகக் குவித்து, அந்தக் குவியலுக்கு மேல் மண் என்று பெயர் கொடுத்து, அடையாளம் செய்து, பிற்பாடு பாத்திகளில் மேலே கண்டபடி $\frac{1}{2}$ அடி ஆழம் தோண்டி, அதையும் வேறு குவியலாகக் குவித்து அதற்கு நடு மண் என்று பெயர் கொடுத்து அடையாளமிட்டும், இவ்விதமே மேற்படி பாத்திகளில் ஓரடி ஆழத்திற்குக் கீழிருக்கிற நிலத்தை மறுபடியும் $\frac{1}{2}$ அடி ஆழம் தோண்டி அதை மூன்றாவது குவியலாகக் குவித்து அந்த குவியலுக்கு அடிமண் என்று பெயர் கொடுத்து அடையாளமிட்டும், இதன் பின்னர் மேற்படி மூன்று குவியல்களையும் பரீக்ஷிக்கவேண்டும். அதாவது, முதலாவது குவியலைச் சோதித்து, கற்களை உடைத்துப் பொடியாக்கியோ, அல்லது அப்புறப் படுத்தியோ, நன்றாய் புரட்டிக் கொடுத்து, பாத்தியின் அடிமண்ணைப் போடவேண்டும். பிற்பாடு மூன்றாவது குவியலைச் சோதித்து, மேற்சொன்னபிரகாரம் புரட்டிக்கொடுத்து, கொஞ்சம் எருவாவது, நல்ல மண்ணைக் கலந்தாவது, இரண்டாவது வரிசையாகப் பாத்தியில் போடவேண்டும். அதன் பிற்பாடு இரண்டாவது குவியலைச் சோதித்து மிகவும் நன்றாய் காற்று உலவும்படி புரட்டிக்கொடுத்து, சரியானபடி எருச் சேர்த்து, பாத்தியின்மேல் மட்ட மண்ணைப் போடவேண்டும். இப்படிச் செய்வதனால் எப்பேர்-



பட்ட கெட்டமண்ணும், நல்ல விளைநிலமாய்விடும். சுபாவத்திலேயே பாத்திகளில் நல்ல மண்ணாகவிருந்தால், அதை அநேகதடவை $\frac{3}{4}$ அடி ஆழம்வரையில் வெட்டிக் கிண்டுவதினாலேயே சாரமாய்விடும் இதனால் காற்றோட்டம் பூமிக்கு வேண்டுமென்றதையும், பூமியிலிருக்கிற அநேக இந்திரிய வஸ்துக்களும் செடியுணவுகளும் பயிர்களுக்குச் சரியான உணவைக் கொடுக்கும்படி செய்யும் என்ற வியவசாய ரகஸியத்தையும் தோட்டவேலை செய்யும் ஒவ்வொரு மாணாக்கனுக்கும் போதிக்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

S. RAGHAVA IYENGAR,
*Agriculture Instructor,*
*G. T. School, Dindigul.*

# TEMPERANCE

## மதுபான விலக்கு

(முன் தொடர்ச்சி, வால்யூம் - 12 பக்கம் — 279)

நாளடைவில் சில குடியர் இவனுக்கு நேயராகிவிடுவர், அக்குடியர் சில சமயங்களில் தம் நண்பனுக்குத் தங்கள் செலவில் மதுபானம் வாங்கிக் கொடுப்பார்கள். அதினால் இவன் அவர்களின் மீது அதிகமும் பிரீதியுள்ளவனாயிருப்பது மன்றி, சமயம் ஏற்பட்டபோது, அவர்கள் பல சமயங்களில் தனக்கு மதுபானம் வாங்கிக் கொடுத்திருப்பதை நினைத்து, தனது நேசரை சந்தோஷப் படுத்தவும், அவர்கள் தன்னை உதாரகுணமுள்ளவனென்று புகழ்ந்துரைக்கவும், தன் ஸ்நேகத்தைக் காட்டவும் தனது காசைச் செலவழித்து அவர்களுக்கு மதுபானம் வாங்கிக் கொடுப்பான். இவன் அன்றாடம் உழைத்துச் சம்பாதிக்கும் கூலிக்காரனென்றும், தான் மட்டும் குடித்துவிட்டு வீட்டுக்குப் போவதினாலேயே தனது கூலியிற் பாதி போய்விடும், அதினால் அவனது வீட்டிலுள்ளவர்களின் போஷணை குறையுமென்றும் முன் சொல்லியிருக்கிறோமல்லவா? இப்போது அவன் தனது நேயர்களுக்குச் செலவு செய்வதால் தன்

பணம் (கூலி) முழுவதையும் இழந்து விட்டும், சில சந்தர்ப்பங்களில் கடன் முதலாய் வாங்கிச் செலவு செய்துவிட்டும் வெறுங்கையனாய் வீட்டுக்கு வருவான்.

அன்று அவனோடு வீட்டிலுள்ள அனைவரும் பட்டினிதானென்பது சொல்லாமலே புலப்படும். மனைவியானவள் இவ்வித கஷ்டங்களைச் சகிக்க மாட்டாதவளாய் 'என்ன, எப்போதும் இப்படிச் செய்கிறீர்? இப்படிச் செய்துவந்தால் நாங்கள் என்னசெய்வது? எவ்வாறு உய்வது? எங்கள்மீது இரக்கம்கொள்ளுப? என்று எவ்வளவு ஹிதமாக மொழிந்தாலும், அவன் அடிபட்ட நாகப்போற் சீறிச் சினந்து, தன் மனைவியை வாயில் வந்தபடி வைவான், கைசலிக்க அடிப்பான், பிள்ளைகளையும் அடித்து ஹிம்ஸிப்பான். இச் சமயத்தில் அவர்களின் கதியை என்னவென்று சொல்லலாம்! ஐயோ பரிதாபம், ஆ, இதுதானா குடியனின் மதி! இதுதானா அவன் மனைவி மைந்தரின் கதி! மனைவி ஓர் ஆதரவற்ற கைம்பெண்சாதிக்கு இணையாகிறாள். பிள்ளைகள் அநாதப் பிள்ளைகள் போலவே யிருக்கிறார்கள். குடியர் தாங்கள் நாசமாய்ப் போவது போதாதென்று தங்கள் குடும்பத்தாரையு மன்றோ மடிய வைக்கின்றனர். இப்பேர்ப்பட்டவர்கள் தங்கள் பெண்சாதி பிள்ளைகளை நேசித்துப் போஷிக்கிறார்களென்று எப்படிச் சொல்லலாம்.

'உறவினரெல் லாங்கூடி மணவிழாச்
செய்துரியோ னுரிமை யென்னப்
பெறவரும்பேர் பெற்றுமொரு வரையொருவர்
பேணாரேற் பெருமை யென்னே
அறவறிவி லாவெனினும் விடாநட்புற்
றாண்பெண்ணு மமைந்து வாழும்
பறவைமிரு கங்களைப்பார்த் தாயினுநன்
னேயமன்னார் பயில னன்றே'

அந்தோ! பகுத்தறிவற்ற விலங்கினங்களும் பறவைகளு முதலாய்த் தத்தம் குட்டிகளையும், குஞ்சுகளையும் எவ்வளவோ அன்புடன் ஆதரித்துக் காப்பாற்றி, அவைகளுக்கு உணவளித்து வருகின்றன. அவற்றைவிட எவ்வளவு உயர்ந்துள்ள ஆறறிவுடையவனாகிய மனிதன் மதுபானத்தால் அவற்றிற்கும் இழிந்தவனாகிறான். இது எவ்வளவு விசனகரமானது.



சில சமயங்களில் குடிக்கக் காசில்லாவிட்டால் என்ன செய்வான்? வீட்டிலுள்ள தட்டு முட்டு சாமான்களையும், வஸ்திரம் முதலியவற்றையும் விற்று மதுவுண்பான். குடியிருக்கும் வீட்டை முதலாக விற்றுவிட்டு இருக்க இடமின்றி, குடிக்கக் கஞ்சியின்றி மிகவும் கஷ்டப்படுவான். ஐயோ! சில சமயங்களில் தன் மனைவி யணிந்திருக்கும் தாலியைக்கூட விற்று மதுபானம் செய்வான். ஆ! என்ன காலகோலம்! குடியர் இன்னும் மகாகேவலமான செயல்களையும் செய்யத் துணிவு கொள்வார்கள் மதுபானம் செய்யும் சதிமானத்தை பாருங்கள்.

'சீயென விகழ்தரு தேனுண் போர்களை
நாயெனக் கோவென வாக்கு நாடொறும்
ஆயினை மகளையில் லாக்குந் தானொண்ட
சேயிழை யையும்விலைச் செய்யச் செய்யுமால்'

இவ்வளவு கஷ்ட நஷ்டங்களை யநுபவித்துக்கொண் டிருக்கும் மனைவி மைந்தர் என்ன செய்வார்கள். பாவம், இவ்வளவு கஷ்டமும் தரித்திரமும் அநுபவிப்பதைவிட உயிர் துறப்பது மேலென்று முதலாய் எண்ணுவார்கள், ஏனெனில் தரித்திரமானது சகல துன்பங்களுக்கும் காரணம்.

'நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது'

மனைவி மைந்தர் என்ன கஷ்டப்படுகிறார்கள்! பிச்சை எடுக்கப் போனாலும் 'தீவட்டித் தடியனைப் போல உன் புருஷனிருக்க நீ ஏன் பிச்சைக்கு வருகிறாய்; போவென்று துரத்துவார்கள். குடியன் தன் காசு பணமெல்லாம் இழந்த பின், எங்கேயாவது கடன் கேட்டால் எவராவது கொடுப்பார்களோ? இல்லை இல்லை. இவன் சம்பாதித்த பொருளெல்லாம் சாராயக் கடைக்கும், கஷ்டப்பட்டுத் தேடிய பணமெல்லாம் கள்ளுக் கடைக்கும் கொடுத்துவிட்டு இருக்கிறானே, இவன் அரைக் காசுக்கு வழி. யில்லாதவன், வாங்கின கடனை எப்படிக் கொடுப்பான்? வீடு வாசலில்லை, படுக்கப் பாயில்லை, உடுக்கத் துணியில்லை. உலகில் எவரும் அவனை மதிக்க மாட்டார். மதுபான ஆசை இவனைத் தூண்டுமே, என்ன செய்வான், எத்தனைநாள் பட்டினி யிருப்பான்? எத்தனைநாள் சொற்பமாய் மதுபானம் செய்வான்? எவ்வளவு துன்பங்களைத் தான் சகித்துக் கொண்டிருப்பான்

இந்தச் சங்கடங்களை நீக்க வழியில்லாமல் திருட ஆரம்பிப்பான். அடிக்கடி திருடுவானன்றே? 'பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்'. இவன் திருடும்போது அகப்பட்டுக் கொண்டால் அவன் கதி யாதாகுமென இதனைப் படிப்போர் உணர்ந்து கொள்ளலாம். மதுபானம் திருட்டுக்கு ராஜா என்பது உண்மை. மதுபானத்தின் தன்மையைப் பாருங்கள்!

மதுபானம் மதன நெருப்புக்குக் காஷ்டம் என்பது வெள்ளிடை மலை. யாவரும் நகைக்கத்தக்க விதமாகக் குடியர் நடந்துகொள்ளும் தன்மையும், விபசாரத்தில் குடியர் அமிழ்ந்திருப்பதுமே இதற்குச் சாக்ஷி.

குடியருக்குப் பகைவர் அதிகப்பட்டே இருப்பார்கள். குடித்து விட்டு வரும்போது மற்றவர்களை வாயில் வந்தபடி திட்டுவார்கள், அடிக்கவும் போவார்கள். அப்போது யாராவது கோபக்காரனுயிருந்தால் அன்று ஏழு செருப்பு நஷ்டந்தான்; இந்தக் குடியர் பாடு கஷ்டந்தான். ஏன் இவ்வளவு கஷ்டப்படக் காசு கொடுத்துக் குடிக்க வேண்டும்?

மதுமயக்கமுள்ளோர் கொலை செய்யவும் அஞ்சார். அநேகர் தற்கொலை செய்துகொண்டிருக்கின்றனர். சிலர் பிற கொலையும் செய்திருக்கிறார்கள். இதற்கு அநேக அத்தாக்ஷிகளுள. ஒரு குடியன் ஒரு சிறு குழந்தையைக் கொலை செய்ய எத்தனித்த விஷயத்தை நேரில் கண்டவாறு கீழே சுருக்கிக் கூறுவோம்:

அதிகமாகக் குடித்து மயங்கிய ஒரு மனிதன் தன் வறுமை காரணத்தால், ஒரு தெருவில் விளையாடிக்கொண்டிருந்த சிறு பிள்ளையை நயவஞ்சகமாக அழைத்துச் சென்று, ஒரு பழய இடிந்துபோயிருந்த வீட்டில் உட்கார்ந்து, அந்தக் குழந்தை அணிந்திருந்த ஆபரணங்களை யெல்லாம் கழற்றிக் கொண்டான். அம்மட்டோடு பிள்ளையை விட்டு விடாமல், அப் பாவி அக்குழந்தையின் முகத்தைத் தரையில் அழுத்தித், தன் இடுப்பில் செருகியிருந்த அரிவாளை எடுத்து, அறுக்கப் போனான். முகத்தைத் தரையில் அழுத்தவே, குழந்தை அழுதது; திணறியது. தற்செயலால் அங்குவந்த சிலர், பார்த்து, உடல் வேர்த்து, அக் கொடியனை நையப்புடைத்து, போலீஸார் வசம் ஒப்பித்தனர். அவன் நன்றாய்க் குடித்திருந்தான். குழந்தை காயம்



பட்டிருந்தது. சாகவில்லை, செய்த சிகிச்சையால் நாளடைவில் குழந்தை சுகமடைந்தது. இக்கொலைக்கு மதுபானமே காரணம். மதுவின் மயக்கத்தினால் தான் செய்வதிதுவெனவும், அதினால் நேரும் பழிபாவங்கள் இவையெனவும் அவன் உணரவில்லை. குடியருக்குப் பாவம் ஏது? புண்ணியம் ஏது? அக் கொடிய மதுவை யுண்டவர் செயற் பாலதாய தீமைகள் எண்ணிறந்தன.

'வறுமையாய் களவு செய்வர் மையலாற் காமத்தாழ்வர்
குறுமைசேர் பகையி னல்வெங் கொலைசெய்வர் வசையினோடுஞ்
சிறுமைதந் துயிரிருந்துஞ் செத்தவ ராக்கி யிம்மை
மறுமையை யழிக்குங் கள்ளை மாந்தலெப் பயன்வேட் டம்மா'

இவ்வளவு கேட்டை விளைக்கும் மதுவை வேண்டுமெனக் குடித்தல், தன் ஆயுளைக் குறைத்துத், தன் மரணத்தைச் சுருக்குப் படுத்திக் கொள்வதாகும்.

இது நிற்க, குடியருக்கு நாணமில்லையென்று ஆங்காங்கு பொதுவாய் கூறியிருப்பினும், மற்றும் ஒரு முறை வற்புறுத்திக் கூறுவோம்.

'ஊனுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு'

என்றார் திருவள்ளுவர். அஃதாவது உண்ணல், உடுத்தல் முதலியன யாவருக்கும் பொது. நன்மக்களுக்கு நாணமுடைமையொன்றே சிறப்பு குடியர் மேற்குலத்தி லுதித்தவராயினும் அவர்களுக்கு நாணமின்மையால், அன்னவர் கடைக் குலத்தவரே. அவர்கள் பாண்டிய குலமென்று வேண்டியமட்டுஞ் சொல்லினும், தாழ்ந்த குலத்தார்களே யாவார். குடியருக்கு நாணமே கிடையாதென்பதற்கு அவர்கள் பேசும் இழிவான பேச்சுக்களும், செய்யும் விகற்பமான செயல்களுமே போதிய சான்றும். அந்தோ! பலகுடியர் மிதமிஞ்சிய குடியால் மயங்கி யாவரும் நடந்துபோகும் நடுத் தெருவிலும் நிர்வாணமாய் விழுந்துகிடக்கின்றனரே. இது எவ்வளவு கேவலம். அங்கு வருபவர் போகிறவர் அனைவரும் நகைக்கின்றனரே! யாவரும் 'சீ'யென இகழ்ந்துரைக்கின்றனர். அநேகர் அவர்களைக் காணுவதற்கும் அஞ்சி, தூரத்தில் நீங்குவார்கள். மிருகங்களுக்கு எப்பாதும் சொந்த அறிவுண்டு. குடியருக்கு அதுகூட வில்லையே!

'குலஞ்சுடு கொள்கை பிழைப்பி னலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை'

ஒருவனுக்கு ஒழுக்கம் வழுவுமாயின், அது அவன் குலத்தைக் கெடுக்கும். நாணமில்லாமை யானது அவனது நன்மை யாவற்றையும் கெடுக்கும். மதுவுண்பவருக்கு கொஞ்சமேனும் மானம், நாணம் கிடையாதென்பது பிரதியக்ஷம்.

'நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு'

ஆகவே மதுபானி தாழ்ந்த விலங்கினங்கட்கு மிழிந்தவன். இவ்வளவு கேவல முடையவர்கள் உலகில் இருந்து என்ன, இறந்து என்ன. மதுவால் உண்டாகும் கேடுகளை எப்படி என்ன விதமாய்ச் சொன்னாலும் மதுபானிகள் கேட்பார்களோ? பெரிய ஞானி யைப்போல் பேசுவார்கள். என்ன எனக்குத் தெரியாத புத்திக்கு நீ என்ன சொல்லவேண்டும், இவ்வளவு நான் குடித்துக்கொண் டிருக்கிறேனே எனக்கு என்ன கெடுதி வந்துவிட்டது போ' என்று பேசுவார்கள்.

மதுமயக்கத்தில் அவர்கள் செய்த அநீதசெயல்களை யெல்லாம் சொல்லி அவர்கள் மதுபானம் செய்யாதிருக்கும் போது செய்யத்தகாத செய்கைகளையெல்லாம் இப்படியும் செய்யலாமா? என்றால் நாங்கள் ஒருபோதும் அப்படிச் செய்யவில்லை என்பார்கள். ஏனெனில்: குடியருக்கு சித்தஸ்வாதீனம் இல்லை.

ஒருதடவை ஒரு குடியன் இனி மதுபானம்செய்தால் இன்னபடி யென்று, தன்னைத்தானே சபித்துக் கொண்டான். மறுநாள் பதுபானம் செய்துவிட்டு வந்தான். என்ன ஐயா! நேற்று என்ன சொன்னீர்? இப்போது என்ன செய்தீர்? என்று கேட்டதற்கு, 'குடிகாரன் பேச்சுப் பொழுது விடிந்தாற் போச்சு' என்றும், குடியருக்கு ஆணையேது? சத்தியம் ஏது என்றும் சொன்னான். அவனை என்னவென்று சொல்லலாம்.

'ஈன்றாள் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி'

என்ன தப்பிதம் செய்தாலும் சகித்துக் கொள்ளும் தன்மையுள்ளவளாகிய தாய்க்கே, தன் மகன் மதுவுண்பது மிக்கவருத்தத்தைக் கொடுக்குமென்றால், நல்லொழுக்கம் நிறைந்த சான்றோருக்கு மதுபானியைக் கண்டால் எவ்வளவு வருத்தம் உண்டா-



கும். சுருக்கிக் கூறுமிடத்து குடியருக்கு வேதமேது? பெரியவர் போதமேது? தேவ வரப்பிரசாதமேது? பாவம் ஏது? புண்ணியம் ஏது? மோக்ஷமேது? ஆகவே குடியருக்கு நரகந்தான். ஏனெனில்; மானிடனாய்ப் பிறந்து, கடவுளால் கொடுக்கப்பட்ட அறிவை என்றும் தீநெறிக்கண் செலுத்தி, கடுகளவும் நன்மையடையாது, தன்னையும், தன் குடும்பத்தாரையும், மற்றோரையும் கெடுத்துவிடும் கொடிய சத்துருவா யிருக்கிறான் குடியன்.

ஆகவே 'நிலமதி நரகமாம் நிதங்கள் ளுண்பர்க்கே' என்னும் நீதி நூலின்படி குடியர் மோக்ஷமடைவதே யில்லை. மரணமும் என்றும் காத்துக்கொண் டிருக்கும். ஆதலால் இதனை வாசிக்கும் அனைவரும் குடியால் உண்டாகும் கேடுகளை உய்த்துணரக் கடவார்கள். மதுபானிகளே! 'நாம் சர்வேஸ்வரனால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஆயுணாட்களை மதுபானத்தால் குறைத்துக் கொண்டு, ஆரோக்கியத்தைக் கெடுத்து, எண்ணிறந்த பழிபாவங்களைச் செய்கிறோம்; கடைசி நாளில் நமது பழிபாதகங்களுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும்; அப்போது என்ன செய்ய முடியும்; வெள்ளம் வருமுன் அணை கோலிக் கொள்ள வேண்டும்' என்று சாவதானமாய் யோசித்து, சகல தீமைக்கும் காரணமாகிய இந்தக் கேடுகெட்ட மதுபானத்தை அறவே நீக்கவேண்டும். 'அடிக்கடி குடித்தால்தான் தீமை, எப்போதாவது ஒரு தடவை குடித்துவிட்டு வீட்டுக்குவந்து பேசாமல் படுத்துக் கொண்டால் என்ன செய்யும், இதனால் குற்றமில்லை. யென்று சிலர் எண்ணுவார்கள். அன்றன்று. மதுபானத்தை கொஞ்சம் உபயோகித்தாலும், இயற்கையாய் அந்த சதிமானமுள்ள மதுபானத்தின் மீது அதிக ஆசை உண்டாகும். மேலும் ஒருவன் ஒரு பாம்பைக் கையில் வைத்திருப்பதைக் கண்ட ஓர் மனிதன், 'அப்பா! இந்த பாம்பு கெட்டது. அது அநேகருடைய உயிரைப் போக்கி யிருக்கிறது, சமயத்தில் உன்னையும் வேலை தீர்த்துவிடும், அக் கொடிய சர்ப்பத்தைத் தொடாதே' யென்று சொன்னால், அவன் அதைக் கேளாமல் எப்போதாவது ஓர் சமயத்தில் இந்தப் பாம்பை வைத்திருப்பதால் ஒரு குற்றமும் உண்டாகாது. அடிக்கடி அதை எடுத்துவந்தால் சிலவேளை கடிக்கும், என்னை இது ஒன்றும் செய்யாது என்று சொல்வானானால் அவனை என்னவென்று நினைக்கலாம்? ஆகவே

பாம்பினுங் கொடியதாகிய மதுவை எப்போதாவது அருந்தினால் குற்றமல்ல வென்பது பேதைமையே. மதுபானத்தை விலக்குவது எப்படியெனப் பின்னால் கூறுவோம்.

(இன்னும் வரும்.)

M. அடைக்கலசாமி,
ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல்
திருநரையூர்.

## TRY AGAIN

### முயலுக மேன்மேல்

1. முயலுக மேன்மேல் முயலுக மேன்மேல்
முயலுக முயலுக மேன்மேல் முயலுக
முதலிற் கருமம் முடியா தொழியினும்
முயலுக மேன்மேல் முயலுக மேன்மேல்
தொடுத்தநல் லூக்கம் சோர்வுறா வண்ணம்
அடுத்து முயன்றால் ஆகா உளவோ
அஞ்சேல் வெற்றி அடைவது திண்ணம்
நெஞ்சே கருமம் நேருந் தனையும்
முயலுக மேன்மேல் முயலுக மேன்மேல்

2. எடுத்தநற் கருமம் இரண்டொரு காலில்
அடுத்தடுத் தழியினும் அஞ்சேல் அஞ்சேல்
முயன்றவக் கருமம் முடியுங் காறும்
முயலுக மேன்மேல் முயலுக மேன்மேல்
நாடிக் கொண்டவந் நற்கரு மங்கள்
கூடா தொழியினும் குறை நமக் கிலையால்
எடுத்த கருமம் இடர்ப்படு மாயினும்
விடுத்ததை நெஞ்சே விதன முறாது
முயலுக மேன்மேல் முயலுக மேன்மேல்

3. பின்னுநீ கொண்டது பெருங்கா ரியமெனின்
முன்னி முயலுக முயலுக மேன்மேல்
காலமே கருமம் முடிக்குங் கருவியாம்
ஏல அதனை எய்துங் காறும்
முயலுக மேன்மேல் முயலுக மேன்மேல்
அரிய கருமமும் பெரிய கருமமும்
உரிமையின் முடித்த உத்தமப் பெரியார்
முறையாற் பொறுமையால் முடித்தன ரதனால்
முயலுக மேன்மேல் முயலுக மேன்மேல்.

பத்திராதிபர்.

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1917ஆ ஆகஸ்டு மீ | மாதம் 3

OFFICE ... 30 OCT 1917 MADRAS

## A GARLAND OF VERSES

### செய்யுள் மாலை

#### தாய் பிள்ளையைத் துயில் எழுப்புதல்

1. காரிருள் போயது காலையும் போந்தது
காக்கைகண் விழித்துடன் கரைவதும் காணாய்
பாரெலாம் பச்சைமேல் பதித்தமுத் தெனவே
பனித்துளி தங்கிய பசுந்தரை காணாய்
சூரியன் தன்கதிர்க் கைகளை நீட்டித்
தூங்கிடும் உயிர்களைத் தூண்டுதல் காணாய்
ஏமர் பஞ்சணை இன்றுயில் நீத்தே
என்னருஞ் செல்வமே எழுந்திடு வாயே.

2. தினகரன் தோன்றிடும் செவ்வியை உணர்ந்தே
சேவல்கள் கூவின சிறைகளை யடித்தே
மனமது தெளிவுற வானம் நிர்மலமாய்
வாயுவும் தண்ணென வயங்குதல் காணாய்
புனமலர்ச் சோலைகள் புதுமலர் உகுத்தே
பொங்கிய நறுமணம் வீசுதல் காணாய்
இனமுறும் பஞ்சணை இன்றுயில் நீத்தே.
என்னருஞ் செல்வமே எழுந்திடு வாயே.

3. கன்றுடன் காலிகள் கண்விழித் தெழுந்த
காருடல் மள்ளர்கள் கலப்பைகள் எடுத்தார்
தன்றுணை யுடனெழப் புள்ளினம் எழுந்த
தருக்களும் தழைவிரித் தெழுவன காணாய்
சென்றுசென் றுழைத்திடும் தேனினம் எவையும்
திகழ்மலர் தொறும்இரை தேடுதல் காணாய்
இன்றுயில் கொள்ளுவ தின்னமும் அழகோ
என்னருஞ் செல்வமே எழுந்திடு வாயே.

4. கருத்தை விளக்கிடக் காலையே காலம்
கலைகள் பயின்றிடக் காலையே காலம்
வருத்தி யுழைத்திடக் காலையே காலம்
வலிவுறப் பயிலவும் காலையே காலம்
அருத்தியோ டிறைவனை அகமுறத் துதித்தே
அருச்சனை புரியவும் காலையே காலம்
இருத்திய பஞ்சணை இன்றுயில் நீத்தே
என்னருஞ் செல்வமே எழுந்திடு வாயே.

## சிறுதுளி பெருவெள்ளம்

அறிவுள மகனே அறிவுள மகனே
சிறியதென் றெதையும் சிந்தைகொண் டிகழேல்
எளியதென் றெதையும் இகழ்ந்து நீக்கேல்
எளிய வெல்லாம் எளியவு மல்ல
சிறிய வெல்லாம் சிறியவு மல்ல
அறிவுள மகனே அதனால் ஆய்ந்து
சிறியவும் பெரியவும் தெரிதர வேண்டின்
உறுமவற் றவற்றின் பயனால் உணர்க



சிறுதுளி யன்றே பெருவெள்ள மாவதும்
சிறுகல் லன்றே பெருமலை யாவதும்
சிறுகா லன்றே பேரா றாவதும்
சிறுசொல் லன்றே பெருநூ லாவதும்
சிறுபொழு தன்றே பெரும்பொழு தாவதும்
சிறுமீன் சினையினும் சிறுவிதை யன்றே
நறுநிழல் நல்கும் நன்மர மாவதும்
சிறுக சிறுகச் சேர்ந்தமண் ணன்றே
செறியுமிப் பூமித் திரட்சி யாவதும்
அதனால்
சிறிது சிறிதாத் தினமுஞ் செய்யின்
நெறியுடன் முடிவுறும் அரிய செயலெலாம்
சிறிது சிறிதாச் சிந்தை செய்யின்
பெரியதோர் கருத்தும் உரியதா யமையும்
சிறிது சிறிதாச் செய்யும் திறத்தோர்
பெரியதென் றெதையும் பேசார் எண்ணார்
அதனால் என்றன் அறிவுள மகனே
சிறியதென் றெதையும் சிந்தை செய்யாது
உரிமை கண்டு உணர்க உண்மையே.

பத்திராதிபர்.

# BOTANY

## தாவர சாஸ்திரம்

(முன்தொடர்ச்சி பக்கம் - 31)

### வேர் — Root.

மரம், செடி, கொடி, புல் முதலிய எதைப் பார்த்தாலும் ஒவ்வொன்றும் பூமியில் நிலைத்திருப்பதாகத் தோன்றுகிறது. தாவர வர்க்கத்தில் எதையேனும் முழுதும் பார்க்க வேண்டுமானால், அதை அடியோடு பிடுங்கினால்தான் பார்க்கக்கூடும். இப்போது, ஒரு பூவரச மரத்தைப்பற்றி ஆராய்வோம் பூமிக்கு மேற்புறத்திலுள்ள அதன் பாகங்களைப் பார் என்னென்ன உறுப்புகள் காண்கின்றன? அடிமரம், கிளை, மிலாறு, இலை, பூ,

காய் ஆகிய உறுப்புகள் தெரிகின்றன. பூமிக்குள் இருக்கும் உறுப்பு வேர் ஒன்றேயாம். இப்போது, மேற்குறித்த உறுப்புக்களில் ஒவ்வொன்றையும் பற்றி ஆராய்ந்தால், தாவரத்தைப்பற்றி முழுதும் ஆராய்ந்து தெரிந்துகொண்டபடியாகும். இந்தப் பாடத்தில் முதலாக வேரைப்பற்றி ஆராய்வோம்:

வேர் என்பது தாவரத்திற்குப் பூமிக்குள் அமைந்திருக்கும் உறுப்பாகும். நாம் ஏதேனும் ஒரு விதையை நட்டால், அது முளைக்கும்போது பூமிக்குள் வேரும் பூமிக்கு மேல் இலையும் கிளைத்து வருவதைக் காண்கிறோம். செடி முதலில் வேர் விடும்போது, முக்கியமான முதல் வேர் பூமிக்குள் நேராகச் செல்லுகிறது. அவ்வேர் மேற் பாகம் தடித்தும், கீழ்ப்பாகம் சிறுத்தும் இருக்கிறது. அதன் உருவத்தைப் பார்த்தால் ஓர் ஆணியைப்போல் தோன்றுகிறது. அதனால் முதன்மையான அந்த வேருக்கு ஆணிவேர் என்றும் பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆணிவேர் கொஞ்சம் நீண்டு சென்றால் அதின் பக்கங்களில் சில வேர்கள் கிளைக்கின்றன. அந்த வேர்களுக்குப் பக்க வேர்கள் என்று பெயர். ஆணிவேர் பக்கவேர்களின் முனைகளில் மெல்லிய சிறு சிறு வேர்கள் கிளைக்கும். அவற்றிற்கு வேர்த்துய்கள் என்று பெயர். ஆகவே வேர்களில் முக்கியமாக ஆணிவேர், பக்கவேர், வேர்த்துய்கள் என்று மூன்று பிரிவுகள் இருப்பது தெளிவாகும்.

இப்போது ஒரு வேரை எடுத்துப் பரிசோதித்துப் பார்ப்போம். வேரை உடைத்து அல்லது அறுத்துப்பார்; மேற்புறத்தில் பட்டையும், அதற்குள் மெல்லிய கயிறுபோன்ற சடைப்பொருளும் காணப்படுகின்றன. இந்தச் சடைப்பொருள் முதிர்ந்தால் கட்டைபோல் உறுதியானதாக ஏற்படுகிறது.

## வேரினால் தாவரத்திற்கு உண்டாகும் உபயோகம்

இனி இந்த வேர்களின் வேலையைக் கவனிப்போம். மரத்திற்கு வேர் இல்லாவிட்டால் என்ன? (1) வேர் இல்லாவிட்டால் மரம் நிலைத்து நிற்க முடியாமல் கீழே விழுந்து விடும். ஆகையால் மரம் பூமியில் நிலைத்து நிற்பதற்கு வேரே முக்கிய ஆதாரம் என்பது தெளிவாகிறது. (2) ஒரு செடியை வேரோடு பிடுங்கிவிட்டால் அது விரைவில் வாடி உலர்ந்து போகிறது.



அதனால் செடி உயிர்வாழ்வதற்கு வேரே ஆதாரம் என்பதும் விளங்குகின்றது. ஆகையால் வேர் தாவரத்திற்கு முக்கியமாக இரண்டு வகையில் உபயோகப் படுகிறது என்பது தெரிகிறது.

## (1) தாவரம் நிலைப்பதற்கு வேரே ஆதாரம்

ஒரு கழைக்கூத்தன் தன் ஸ்தம்பத்தை நிறுத்தும்போது என்ன செய்கிறான்? தான் ஏறி ஆடவேண்டிய மூங்கில் வாரையை பூமியில் நிறுத்தி, அதன் மேற்பாகத்தில் (சற்று ஏறக்குறைய முக்காற்பாகத்தில்) கயிறுகளைக் கட்டி பூமியில் நாலாபக்கங்களிலும் அடித்துள்ள முளைகளில் அந்தக் கயிறுகளை இழுத்துக் கட்டுகிறான். பிறகு அவன் அதன் மேல் ஏறி உச்சியில் தங்கித் தன் வல்லமையைக் காட்டப் பல பக்கங்களிலும் சாய்ந்து விளையாடுகிறான். அவன் எப்படிச் சாய்ந்தாலும் நடுவில் நிற்கும் வாரை சாய்ந்துபோகாமல் நேரே நிலைத்து உறுதியாக நிற்கிறது. கழைக்கூத்தன் ஆடும் அந்த ஸ்தம்பம் சாய்ந்து போகாமல் தாங்கிக் கொண்டிருக்கிற பக்கத்துக் கயிறுகளைப்போல், மரத்திற்கு ஏற்பட்டுள்ள பக்க வேர்கள் மரம் உறுதியாக நிலைத்திருப்பதற்கு உதவி செய்கின்றன. நடுவில் நிற்கும் ஸ்தம்பத்தின் கீழ்ப்பாகத்தைப்போல் ஆணிவேர் உதவி செய்கின்றது. ஆணிவேர் இல்லாவிட்டால் பக்கவேர்கள் அவ்வளவாகப் பலம் செய்யாது. அதனால்தான் ஆணிவேர் பலமாக அடையப்பெறாத சில மரங்கள் காற்று கொஞ்சம் பலமாக வீசும்போது அடியோடு பேர்ந்து சாய்ந்துவிடுகின்றன.

## (2) தாவரம் உயிர்வாழ்வதற்கு வேரே ஆதாரம்

நாம் செடி வைத்து வளர்க்கும்போது, தண்ணீரை வேரண்டை வார்க்கிறோம். செடி வாடக் கண்டால் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என்கிறோம். அதனால் நீரே தாவரம் விருத்தியாவதற்கு ஆதாரம் என்பது விளங்குகிறது. அந்த நீர் செடிக்கு வேரின் மூலமாகச் செல்லுகிறது என்பதும் எவரும் அறிந்த விஷயமே. இனி, செடியின் வேர் நீரை கிரகிக்கும் விதத்தையும், தாவரம் உட்கொள்ளும் உணவின் விதங்களையும் அடுத்த பாடத்தில் விவரிப்போம்.

பத்திராதிபர்.

# DISTRIBUTION OF WORK TO TEACHERS

## உபாத்தியாயர்களுக்கு வேலை விதித்தல்.

ஒரு வகுப்பின் எல்லாப் பாடங்களையும் ஒரே உபாத்தியாயர் போதிக்கலாம்; அல்லது பற்பல வகுப்புகளில் பற்பல பாடங்களையாவது, தங்களுக்கு மிகவும் நன்றாய்த் தெரிந்த ஒரே பாடத்தை எல்லா வகுப்புகளிலுமாவது நடத்தலாம். உயர்தரக் கல்விச் சாலைகளில் கணித பாடம் அப் பாடத்தில் தேர்ந்த (Mathematics Professor) கணிதசாஸ்திர நிபுணராலும், சரித்திர பாடம் அப்பாடத்தில் தேர்ந்த (History Professor) சரித்திர நிபுணராலும், மற்றும் எப் பாடத்தில் எவர் பாண்டித்ய முடையவரா யிருக்கிறாரோ அப்பாடம் அவராலும் நடத்தும்படி செய்யப்பட்டு வருகிறது. இவ்விதம் செய்வதால் உபாத்தியாயர் உற்சாகத்தோடும், சிரத்தையோடும் போதிக்கவும், அப்பாடத்தில் திறமை வாய்ந்தவரா யிருப்பதால், விஷயங்களைத் தெளிவாய் உதாகரிக்கவும் பிள்ளைகளின் சந்தேகங்களை நிவர்த்திக்கவும் தகுந்தவரா யிருக்கின்றார். இவ்விதம் விதித்தலால் நெருங்கிய மேல் விசாரணையும் தகுந்த கண்டிப்பும் ஏற்படுவதோடு உபாத்தியாயரும் தம் அதிகாரத்தை சரிவர செலுத்தக்கூடும். சிறு பிள்ளைகளுள்ள பிரைமரிப் பாடசாலைகளுக்கு இவை அவ்வளவாக ஏற்றதல்ல. பிள்ளைகள் தங்களுக்குத் தாங்களே விஷயங்களை ஆராய்ந்து அறிந்துகொள்ளக் கூடிய திறமையுள்ளவர்களுக்கு இந்த ஏற்பாடு அதிக அனுகூலமாகும்.

சிறு பாடசாலைகளில் உபாத்தியாயர் எப்பொழுதும் அதே வகுப்பில் இருப்பதால் பிள்ளைகளுடைய குணகுணங்களை அறிந்து அவர்களுக்குச் சன்மார்க்கப் பயிற்சியை உண்டாக்கக் கூடும். ஆனால், இங்கிலீஷ் பாடங்களையும், மொழி பெயர்த்தல் பாடங்களையும் இங்கிலீஷும் சுயபாஷையும் நன்றாய்த் தெரிந்த உபாத்தியாயர்களே எல்லா வகுப்புகளுக்கும் போய் நடத்த வேண்டும். ஆகையால் கீழ் வகுப்புகளில் தனித்தனி உபாத்தியாயர் ஏற்படுத்தி வகுப்பின் எல்லாப் பாடங்களையும் நடத்தச் செய்வதே சிறு பிள்ளைகளுக்கு அனுகூலமாக முடியும்.



தலைமை உபாத்தியாயர் செய்யவேண்டிய கடமைகள் —

1. தலைமை உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தின் வெளிச்சம் காற்று முதலான ஏற்பாடுகளைக் கவனித்து, வகுப்புகளை ஏற்படுத்தி வேலையைக் கிரமமாய் உதவி உபாத்தியாயர்களுக்கு வகுத்துக்கொடுக்க வேண்டும்.

2 ரிஜிஸ்தர்களை அப்போதைக் கப்போது தாமே பதிவு செய்து வருவதோடு ஒவ்வொரு வகுப்பிற்கும கால அட்டவணை ஏற்படுத்தி அதன்படி கையாளப்பட்டு வருகிறதா என்று பார்க்க வேண்டும்.

3. உயர்ந்த வகுப்பிற்குப் பாடம் நடத்தவேண்டும்.

4. கீழ் வகுப்புகளில் மாதிரிப்பாடங்களையும் பரீக்ஷையையும் அடிக்கடி நடத்தவேண்டும், சில சமயங்களில் அவர் பிள்ளைகளின் அப்பியாச புஸ்தகங்களையும் பரிசோதித்து பிழைகளை எடுத்துக் காட்டலாம்.

5. மேல் பரிசோதனை செய்வதும் உதவிகளிட மிருந்து சரிவர வேலைவாங்குவதும் அவர் கடமை

6. பிள்ளைகளுக்குச் சரீரதண்டனை விதித்தல்; அவர்கள் கொண்டுவரும் பிராதுகளை விசாரித்து குற்றஞ் செய்தவர்களைத் தண்டித்தல்.

7. பள்ளிக்கூடத்திற்கு வாராதவர்களையும் நேரம் சென்று வருகிறவர்களையும் கண்டித்துக் கிரமமாய் வேளை தப்பாமல் வரும்படி செய்தல்.

8. பிள்ளைகளின் நடை யுடை பாவனைகளைக் கவனித்துச் சீர் திருத்தல்.

9. பெற்றோர்களோடு பிள்ளையின் படிப்பு விஷயமாய்ப் பேசிக்குறைகளைத் தெரிந்துகொள்ளுதல்; அப் பெற்றோர்களுக்குப் பிள்ளையின் படிப்பைப் பற்றிக் காட்டுதல்.

10. பள்ளிக்கூட மேலதிகாரிகளோடு கடிதப் போக்கு வரவு செய்து அவர்களிடும் கட்டளைகளை உதவிகளுக்குக் காண்பித்து அதன்படி நடக்கச் செய்தல்.

11. உதவிகள் எழுதிவரும் பாடக்குறிப்பு அன்றாட டைரி முதலியவைகளைச் சரிபார்த்து இன்ஷியல் செய்தல்.

12. பாடசாலைக்கு வரும் பிள்ளைகளைச் சேர்த்தல், விலக்குதல், சம்பளவசூல் செய்தல், வசூலான தொகையை கஜானாவில் செலுத்தல்.

13. உபாத்தியாயர்களின் சம்பள பில் தயாரித்து அனுப்புதல் சம்பளபட்டுவாடா செய்தல்.

14 பாடசாலைக்குச் சப்ளையா யிருக்கும் சாமான்கள், புஸ்தகங்கள், உபகரணங்கள் முதலியவைகளை உதவிகள் கேட்கும்போது கொடுத்து திருப்பி வாங்கி ஜாக்கிரதையாய் வைத்திருத்தல்.

15. உதவிகளிடத்தில் ஒற்றுமையா யிருந்து அவர்களை உற்சாகப்படுத்தி வேலை வாங்குதல்.

16. மாதாந்த வருஷாந்தக் கணக்குகள் தயார் செய்து அனுப்புதல் முதலியவைகளும் அவர் கவனிக்கவேண்டிய விஷயங்களாகும்.

உதவி உபாத்தியாயர்கள் செய்யவேண்டிய கடமைகள்:—

1. உதவி உபாத்தியாயர்கள் எப்போதும் தலைமை உபாத்தியாயர் இடும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து தங்கள் வேலையைச் சரிவரப் பார்க்கவேண்டும்.

2. அவர்களுக்கு ஏற்படும் வகுப்புகளுக்குப் பொறுப்பாயிருந்து சிரத்தையாய்ப் போதிக்கவேண்டும்.

3. சமயம் நேரிடும்போதெல்லாம் தலைமை உபாத்தியாயருக்கு அவர்கள் ஒத்தாசைசெய்து பள்ளிக்கூடத்தை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர எப்போதும் சிரமப்படவேண்டும்.

4. தலைமை உபாத்தியாயரால் தயாரித்து மேலதிகாரியின் அங்கீகாரம் பெற்ற கால அட்டவணையின் பிரகாரம் பாடங்களைப் போதிக்கவேண்டும்.

5. வகுப்பிற்கு ஏற்பட்ட பாடக்குறிப்பு, தங்கள் வேலையைக் காட்டும் தினசரி முதலியவைகளை ஏற்ற காலங்களில் எழுதி வரவேண்டும்.



6. ஒரே பாடசாலையில் வேலைசெய்யும் உதவிகள் ஐக்கியமாயிருந்து ஒருவர்க்கொருவர் ஒத்தாசை செய்யும் குணமுடையவராயிருத்தல்வேண்டும்.

7. தலைமை உபாத்தியாயரும் உதவிகள் சொல்லும் புத்திமதிகளை உடனுக்குடனே கேட்டு நியாயமானவைகளை அனுசரித்து அவர்களுடன் ஒற்றுமையா யிருக்கவேண்டும்.

M. தங்கரத்தினம் பிள்ளை,
*Teacher, Municipal Hindu Elementary School, Palni.*

## SCHOOL GARDEN

## பாடசாலைத் தோட்டமும், அதன் சம்பந்தமான வியவசாய விஷயங்களும்.

(முன் தொடர்ச்சி பக்கம் - 41)

5. பயிர்செய்யும் விதம். பாத்திகள் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு மாணாக்கனும், மேற்சொன்னவிதமாய் தங்கள், தங்கள், பாத்திகளைத் தயார்செய்துகொண்டு, இரண்டு பாத்திகளில் ஒரு பாத்தியை பள்ளிக்கூடமிருக்கும், ஊரிலுள்ள பயிர்களை, சாதாரண குடித்தனக்காரன் செய்வதுபோலப் பயிரிட்டும், மற்றொன்றை தான் விவசாயவிஷயமாய் உபாத்தியாயரால் கற்றுக்கொண்டதை தானேசெய்துபார்த்தும், இவ்விரண்டையும், அடிக்கடி தான் கவனித்து, இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை தனக்குக்கொடுக்கப் பட்டிருக்கிற அன்றாடம் எழுதவேண்டிய தினசரி என்னும் புஸ்தகத்தில் குறிக்கவேண்டும். தினசரி எழுதுவதைப்பற்றி பின்னால் சொல்வோம். தோட்டவேலைக்கு ஏற்படுகிற ஒவ்வொரு மாணாக்கனுக்கும், வேறு வேறு பயிரைச் செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டும். தோட்டவேலையும், வகுப்பில் உட்கார்ந்து படிப்பதுபோல ஒழுங்காயும், கிரமமாயும் செய்யவேண்டும். மேற்படி தோட்டவேலையை மேல்பார்க்கிற உபாத்தியாயர், மாணாக்கர்கள் வேலைக்கு ஆரம்பிக்கு முன் பாத்திகளைச் சுற்றிப்பார்த்து, குற்றம் குறைகளைக் கவ-

னித்து, அந்தந்த மாணாக்கனுக்கு எடுத்து உரைத்து நிவர்த்தி செய்தும், மேல்செய்யவேண்டிய முறைகளைக் கற்பித்தும், எருவிடுதல், தண்ணீர் பாய்ச்சுதல் பூச்சி முதலானவைகளைக் கொல்ல ஏற்பாடு செய்தல், இவைகளெல்லாம் போதிக்கவேண்டும். ஒவ்வொரு பயிரிலும் விதைமுதல், செடிகள் விதை அல்லது பலன் கொடுக்கும் வரையில், அதனுடைய சரித்திரங்களை நன்றாய்க் கவனித்துப் பதிவு செய்யவேண்டும். இப்படி ஒவ்வொரு மாணாக்கனும், தனக்குக்கொடுக்கப் பட்டிருக்கும், இரண்டு பாத்திகளின் சரித்திரத்தை எழுதுவதுடன், தன் தோழமாணாக்கர்கள் செய்திருக்கும் தோட்டத் தொழிலைப்பற்றிக் குற்றங் குறைகளைக்கண்டு, பயிர்களைப்பற்றி மாத்திரம், ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு வியாசம் எழுதும்படி செய்யவேண்டும். மேற்சொல்லியவைகளின், விஷயத்தை நேராகவே சோதிக்க, பரிக்ஷா பாத்திகளில், கம்போடியாப்பருத்தி போடவும், நெற்பயிர்களில் நாற்றைக்கலப்பாய் ஒற்றை நான்றாய் நடவும், வேர்கடலை போடும்படியான நிலமுண்டாக்கவும், கரும்பு உயர்ந்த ஜாதி கலப்பாய் நட்டுப்பார்க்கவும், காற்றினால் தள்ளப்படாத மோரிஸ் வாழை பயிர் செய்யவும், இன்னும் உருளைக்கிழங்கு, இஞ்சி, சேனைக்கிழங்கு இவை முதலானவைகளை விவசாய சாஸ்திரப்படி அநேக தினுசான எருவிட்டும், பயிர்செய்து பரிக்ஷித்தும் அறியலாம்.

எருவைப்பற்றி முக்கியமாய் போதிக்கவேண்டிய அம்சங்கள். இது இருவகைப்படும்.

## GENERAL MANURE.

(*a*) புலங்களில் பயிர்விளையவேண்டிய எல்லா இந்திரிய உணவுகளையும் கொடுக்கக்கூடியது. இது நம் கொல்லையில் அன்றாடம் சேர்க்கப்படும், சாணி, குப்பைமுதலான உரம்.

## SPECIAL MANURE.

(*b*) சில விசேஷப்பயிர்கள் விளைய குத்த ஆங்கீக உணவுகளை கொடுக்கக்கூடிய இதற்கென்று தயார்செய்யப்பட்ட எரு

(*a*) நமது தேசத்தில். இதைப் பெரும்பான்மையும் தனக்கு ஆஸ்தி என்றே கவனிக்காமல், ஏதோ கேவலம்



குப்பை, சாணி என்று, அலக்ஷியமாய் கண்டபடி விட்டுவிடுகிறார்கள். ஜப்பான் தேசத்தில் தங்கள் வீட்டுக்கு வரும் விருந்தினர்கள், தங்கள் வீட்டிலேயே மல ஜலபாதையைக் கழிக்காமலிருப்பதைக் குற்றமாக எண்ணுகிற மேற்படி ஜாதியார்கள், விவசாயத்தின் மேன்மையையும், எருவின் உபயோகத்தையும், எவ்வளவு நன்றாய் அறிந்திருக்கலாம் என நாம் யோசிக்கவேண்டும். ஆகையால் ஒவ்வொரு வீட்டிலுமுண்டாகும் எருவின் சாரத்தை வெயிலால் உலர விடாமலும், மழைத்தண்ணீர் ஓட்டத்தால் அடித்துக்கொண்டுபோக இடங்கொடுக்காமலும் காற்றினால் எருவின் சாரம் போகவிடாமலும், காப்பாற்றும் முறையையும், அதை விருத்தி பண்ணும் முறையையும், மாணாக்கர்களுக்கு கற்றுக்கொடுப்பது அத்தியாவசியம். இதற்காகவே மாணாக்கர்கள் செய்யும் தோட்டத்தின் ஒருகடைசியில் எருவுக்கென்று குழிகள் ஏற்படுத்தி, பின் சொல்லுகிற எருக்களைச் சேகரித்துப் பயிர்களுக்கு உபயோகப்படுத்திப் பரிக்ஷைசெய்யவேண்டும். ஒவ்வொரு குழியும் சுமார் 4 அல்லது 6 அடி நீளமும், 3 அல்லது 4 அடி அகலமும், 3 அடி ஆழமும் இருக்கலாம். இந்தக்குழிகளில் முறையே, கால்நடை சாணி முதலானவைகளை ஒன்றிலும், குதிரை எருவை ஒன்றிலும், பசுந்தாள் உரத்திற்கான பயிர்களைச்செய்து, அதைத் தினுசுக்கு ஒவ்வொரு குழியிலும், பொதுவாய் சம்பாதிக்கக்கூடிய காட்டுத்தழைகளை இரு குழியிலும் விசேஷ உப்புமண் அல்லது தெலுங்கு தேசத்தில் அகப்படுகிற பாடிமண் இன்னும் விசேஷ எருக்களையும். சுலபமாய் சம்பாதிக்கக்கூடியவைகளையும் மேற்படி குழிகளில் சேகரித்து, குவியலாய்ப் போடாமல், பரவலாய்ப்போட்டு, அதற்குமேல் தழைகளால் மூடி, [illegible]மோனால் இந்தக்குழிகள் மழைகளினின்றும் காப்பாற்றுவதற்கு பந்தல் முதலானவைகள் ஏற்பாடு செய்யலாம். பசுந்தாள் உரத்திற்கான பயிர்கள் அவுரி, கொளிஞ்சி, சணல், கொள்ளு, தகப்பூண்டு (Daincha) அல்லது, ஆவாரை முதலியவைகள். சதாரணமாய் தோட்டங்களில் பரீக்ஷிக்கக்கூடிய பயிர்கள் :— பங்குநெல்லு, கம்போடியாபருத்தி, கம்பு, டிரான்ஸ்வால்கம்பு, பெரிய மஞ்சள், சோளம், புகையிலை மோரிஸ்வாழை, மணிலாக்கொட்டை, மக்காச்சோளம் சிலகிழங்கு தினுசுகள், பல காய்கறிகள், இவைகளை பயிர் செய்து பரீக்ஷிக்கும்படி செய்யலாம்.

மேற்படி விஷயங்களை, பாலர் 1, 2, வகுப்புகளுக்கு தோட்டப்பாடமென்று, அழைத்துக் கொண்டுபோய் காட்டி கவனிக்கும்படி செய்யலாம்.

6. தினசரி எழுதும் விதம். இதற்கென்று ஒரு சிறிய நோட்டு புத்தகம் ஏற்படுத்தி அதில் தான் புலப்பிரவேச முதல், அன்றாடம் செய்கிற வேலையை ஒருபக்கத்திற்கு அதிகப்படாமல், ஒரு வியாசம் எழுதவும். மற்றொரு பக்கத்தில் தான் செய்யும் இரண்டு பாத்திகளுள்ள, முளை, செடி, பயிர் இவைகளில் ஒவ்வொரு பாத்தியிலும், ஒருசெடியை முதலிலேயே குறிப்பிட்டு, அதில் விதை முதல் பலன் கொடுக்கும்வரை ஒவ்வொரு நாளும் வளர்ச்சியை சித்திரம் எழுதக்கூடுமானால் ப்ராஷ்வொர்க்கு செய்து, அன்றாடம் உபாத்தியாயரிடம் காண்பித்து, வியாசத்திலும், சித்திரத்திலும், தப்புகளிருந்தால் தித்துபாடு செய்வித்தும் உபாத்தியாயரின் கையெழுத்தும், வாங்கவேண்டும். இந்த வேலை, காலை 7-மணிக்குள்ளாவது மாலை 5-மணிக்கு மேலாவது தினம் $\frac{3}{4}$-மணி நேரத்திற்கு அதிகப்படாமல், பாத்தி வேலையுடன் சேர்த்து தினசரியும் எழுதவேண்டும். ஒவ்வொரு வார முடிவிலும், தன் பாத்திகள் தவிர, மற்ற மாணாக்கர்களுடைய பாத்திகளை (கோடைகாலம், மாரிகால, ஸ்கூல் ரஜாக்கள் விடுமுன் எல்லா மாணாக்கர்களுடைய பாத்திவேலையை கவனிக்கும்படியாக) ஒவ்வொரு வாரத்துக்கும் பாத்திகளைப் பகுத்துத் தானாகவும், பாத்திகளுக்குச் சொந்த மாணாக்கர்களைக் கேட்டும், மொத்தமாய் அவரவர்கள் பரீக்ஷித்த விஷயங்களையும், தன்னுடைய ஆராய்ச்சியையும் சுருக்கமாய் ஒரு வியாசம், வார டைரியில் எழுதவேண்டும். ஆகவே இவ்விரண்டு டைரிகளையும் உபாத்தியாயர் அடிக்கடி கவனித்துவரவேண்டும்.

7. இவ்விதமாய்த் தோட்டவேலை செய்வதனால் 2-வது பாராவில் கண்டபடி பாத்திகளை ஏற்படுத்துவதில் க்ஷேத்ரகணிதமும், கணக்குகளும், அன்றாடம் டைரி எழுதுவதனால், சித்திரம் வரைதல், தமிழ் வியாசம் எழுதலும், அடிக்கடி செடிகளை உற்றுப்பார்ப்பதினால் அவற்றின் வளர்ச்சி முதலானவைகளை குறிக்கிற தாவரசாஸ்திரமும் கற்றுக்கொள்ளும்படி உதவுகிறது.

S. RAGHAVA IYENGAR,
*Agriculture Instructor, G. T. School,*



# THE DUTIES OF TEACHERS

## உபாத்திமைத் தொழில்

சமீபத்தில் வெளி வந்துள்ள உபாத்திமார்களுக்கான மாதாந்த சஞ்சிகைகளிரண்டில் ‘உபாத்தியாயர் வாழ்வும் அவர் வேலையும்’ என்ற தலைப்பின் கீழ், ‘மற்றத் தொழில்களில் இருப்பவர்களைக் காட்டிலும் உபாத்தியாயருக்கு வேலை யதிகமில்லை. அதிகமாய் வேலை செய்தால் 5-மணிக்குமேல் கிடையாது. அதனிடையில் ஓய்வு நேரமும் இருக்கின்றது. * * * மற்ற வேலையிலிருப்பவருக்கு ஓய்வு கிடையாது. உபாத்தியாயர்களுக்கோ கோடைகால மழைகால பெரிய விடுமுறைகளைத் தவிர, வாரம் வாரம் இரண்டு நாள் விடுமுறையும் பண்டிகைகளுக்காக வேறு விடுமுறையும் அதிகம். ஒருகால் அவர்களின் வேலையினால் ஏதேனும் சிரமமடைந்தாலும் அதைத் தீர்த்துக்கொள்ள நிரம்ப அவகாசமிருக்கிறது. * * உபாத்தியாயருக்குக் குறிப்பிட்ட மணிதான் வேலை. அதாவது 10-மணி முதல் 5-மணி வரை. அதற்கு முன்னும் பின்னும் தன் காலத்தை அவரிஷ்டப்படி கழிக்கலாம். * * * உபாத்தியாயருக்கு மாத்திரம் சௌகரிய மதிகம்’ எனப் பிரசுரித்திருப்பதிலிருந்து கிராமாந்தர உபாத்திமார்களின் சௌகரியா சௌகரியங்களை எமது சிற்றறிவிற் கெட்டியவரை இதன் கீழ் விவரிக்கின்றோம்.

அவ் வியாஸத்திற் கூறிய வக்கீல், வைத்தியர், வியாபாரி, வியவசாயி, உபாத்தியாயர் முதலானவர்களின் வேலைகளைச் சற்றாராய்வாம்.

வக்கீலுக்கோ சேர்ந்தாப்போல் பல கேஸுகளிருக்கும் சில கேஸுகள் ஒரு நாளையிலேயே வெவ்வேறு கோர்ட்டுகளில் நடைபெறும். கக்ஷிக்காரர்கள் தமது சாக்ஷிகளுடன் வந்து தமது வியவகாரம் நடைபெற வேண்டியவைகளைப்பற்றியும் வியவகாரத்தில் நடந்துகொள்ள வேண்டியவைகளைப்பற்றியும் சம்பாஷித்துக்கொண்டிருப்பர்தான், மாற்றியுள்ள கேஸுகளால் சில நாள் நியாயஸ்தலத்திற்குச் செல்லவேண்டிய அவசியமில்லாமலுமிருக்கும். இவரோ தம்முடைய சுவாதீன

முடையவர். தமது சௌகரியம்போல் வியவகாரங்களை மாற்றியுங் கொள்ளலாம். போகலாம் — வரலாம் — இருக்கலாம்.

வைத்தியருக்கோ வக்கீலவ்வளவு வேலையிராது. வியாதியஸ்தர்களைப் பார்வையிட நேரம் ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர். மற்றும் அதிக அவகாசம் அனுதினமும் இருக்கின்றது.

வியாபாரிக்கோ அனேகமாய் வியாபாரம் நடந்துகொண்டிருப்பதால், வக்கீலைப்போல ஓய்வு இராதெனினும் சதா இடைவிடாது சிறுபான்மை நடவாது. சில சமயங்களில் வியாபாரமில்லாமலுமிருக்கும். இவரும் சுயேச்சையுடையவரே.

வியவசாயியோ சாகுபடி காலத்தில் உழுது விதைத்துத் தண்ணீர் பாய்ச்சுவதும் வடியவிடுவதும் களைபிடுங்குவது முதலிய விஷயங்களைக் கவனிக்க வேண்டுமாயினும் ஒவ்வொரு வேலையும் ஒருநாள் முழுதும் சதா வேலையிராது. இவர் வருஷத்தில் பாதிநாள் உழைத்துப் பாதிநாள் வேலையின்றி யிருப்பவர். எல்லாரையும் விட இவருக்கே அதிக அவகாசம்.

உபாத்தியாயருக்கோ சதா கவலைதான். கிராமாந்தரங்களிலுள்ள சர்க்கார்ப் பாடசாலைகளாயினுஞ் சரியே 5-மணி நேரம் ஏற்பட்டிருப்பினுஞ் சரியே. காலை 6-மணி முதல் மாலை 6-மணி வரையில் பாடசாலை நடைபெற வேண்டியதுதான். இல்லாவிடிலோ உபாத்தியாயர் உதவியற்றவர். பிரயோஜனமில்லாதவர். பள்ளிக்கூடம் எங்கே வைக்கிறார்? பள்ளிக்கூடத்திலெங்கே யிருக்கிறார்? ஏதோ காலையில் 4-5 நாழிகை, மாலையில் 4-5 நாழிகை, பையன்களைக் கூட்டி வைத்துக்கொண்டு கதையுங் காரணமும் வேடிக்கையும் விளையாட்டுமாகக் காலத்தைப் போக்கிவிட்டுப் போய்விடுகிறார். என்ன சொல்லித்தருகிறார் என்கின்றனர் கிராமத்தார். பள்ளிக்கூடத்திற்குப் போய் என்ன படிக்கிறான்? அங்கு என்ன சொல்லிக் கொடுக்கிறார்கள்? போகாவிட்டால் போகிறான், எருமையை யோட்டிப்போய் மேய்த்து வந்தாலும் நன்றாய் வயிறெடுக்கும், அதிக பால் தரும், தினம் 2 3 அணா அதிகமாகக் கிடைக்கும். அல்லது வேலைக்குப்போனாலும் தினம் 2½ அணா 3-அணா அவன் சாப்பாட்டுக்காவது கொண்டு வந்துவிடுவான் என்கிறார்கள்—அல்லது வேறு பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்கள் — அனுப்ப யோசிக்கிறார்கள் —



எத்தனிக்கிறார்கள் — அல்லது வேறு உபாத்தியாயர் பார்க்கிறார்கள். இவ்வளவுக்குங் காரணம் 5-மணி நேரப் பாடசாலையே.

உபாத்தியாயர் 10-நாழிகைக்கு வந்து 16-நாழிகைக்குப் போய் மறுபடி 20-நாழிகைக்கு வந்து 26 நாழிகைக் கெல்லாம் போய்விடுகிறார். என்ன பள்ளிக்கூடம் — சீமையிலில்லாப் பள்ளிக்கூடமா யிருக்கிறதென்கிறார்கள். இவ்விதம் நடத்தினால் பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகள் வருவதோ பெருமோசமா யிருக்கிறது — நிறுத்திக் கொள்ளுகிறார்கள். இதனால் பிள்ளைகள் குறைந்தாலோ சர்க்காருக்கும் ஜனங்களுக்கும் உபாத்தியாயர் உதவியற்றவ ராகிறார் — ஊக்கமில்லாதவ ராகிறார் — உபாத்திமைத் தொழிலே தெரியாதவ ராகிறார். ஆகவே கிராமத்தார்களின் விருப்பப்படி பாடசாலை நடத்தவேண்டி யிருக்கிறதினால் பண்டைக்கால வழக்கப்படி உதயமுதல் அஸ்தமனம் வரை பாடசாலை வைக்கவேண்டி யிருக்கிறது. இது கிராமங்களில பழக்கப்பட்டவர்களுக்கும் கிராம உபாத்திமார்களுக்கும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும். இதினின்றும் உபாத்திமார்களின் அவகாசம் இவ்வளவென்று தெரியும். இதிலும் கிராமாந்தரப் பிள்ளைகளை அடக்கியாள்வது நகரப் பிள்ளைகளைவிடச் சிரம சாத்தியமென்பதும் கவனிக்கத் தக்கது.

விடுமுறையோ வாரம் 1½-நாள் விடப்படுகிறது. இதுவோ ஒரு நொடி ஒரு யுகமாக விருக்கிறது. பண்டிகைகளின் விடுமுறையோ கிராமங்களில் சுமார் 3 வாரம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ் விடுமுறைகளில் சில விசேஷ தினங்களில் உபாத்திமார் மாணவரோடு சேர்ந்து அவ் விசேஷதினத்தைக் கொண்டாட வேண்டி யிருக்கின்றது. பாடசாலை நாட்களைவிட இவ் விசேஷ நாட்களில்தான் உபாத்திமாருக்கு அதிக சிரமம் பிள்ளைகளை உற்சாகத்தோடும் அடக்கியாள வேண்டியிருக்கிறது. கோடைகால விடுமுறையோ ஒரு மாதத்திற்கு முக்கால் மாதமே அனுமதி கிடைக்கிறது. கிறிஸ்மஸ் பண்டிகைக்கு இரண்டு வாரமும் விடப்படுகிறதெனிலே கிராமாந்தரங்களில் அநேகமாக இவ் விடுமுறைகள் பாதிக்குப் பாதியாகவே விடப்படும். இதற்குக் காரணம் மேலே கூறியவையாகும்.

இந்த லீவுகளில் இன்னும் இரண்டொரு முக்கிய விஷயங்களைக் கவனிக்க அத்தியாவசியம். அதாவது, வருடத்திற்குக்

காஸுவல் லீவு 15-நாட்கள் ஏற்பட்டிருக்கிறது. இதை ஆறு மாதத்திற்கு ஏழு நாளைக்கு மேலெடுத்தல் கூடாதெனவும், எடுத்துக்கொண்டால் சம்பளப் பிடித்தஞ் செய்தும் விடுகின்றனர். அன்றியும் மாதத்திற்கு ஒன்றே கால் நாள்தானே எனவும் சொல்வதைக் கேட்ட எவர்தான் ஆச்சரிய முறாதிருப்பர். யாதாமொரு முக்கிய காரியங்களிருப்பின் ஒரு தடவை ஒன்றேகால் நாள்தானா போதுமானதாயிருக்கும்? ஆயினும் மாதம் 1¼ நாள் வீதமும் சர்வீஸான மாதங்களுக்குக் கொடுக்கப்படுவதே யில்லை. இந்த லீவைச் சனி யன்று அரைநாளும் ஞாயிறன்று முழுநாளாகவும் ஏற்பட்டிருக்கும் வாரத்திய ஒன்றரை நாள் லீவுடன் முன்னே பின்னே சேர்த்து எடுத்துக் கொள்ளலா மெனினும் சனி ஞாயிறின் 1½-நாளையும் பள்ளிக்கூட நாட்களாகக் கருதி எல்லா நாட்களையும் காஸுவல்லீவாக சிறுபான்மையும் சம்பளப்பிடித்தமாகப் பெரும்பான்மையும் செய்துவிடுகின்றனர். வேறு பண்டிகை விடுமுறை நாட்களின் முன்னே பின்னே சேர்த்து கேட்பினும் இந்த லீவு நாளையும் அவ்வாறே செய்துவிடுகின்றனர். ஐயோ என்ன அநியாயம்! கவனிப்பார் மட்டும் இல்லையேயன்றி, உபாத்திமார்களுக்கு அவ்வவுள சௌகரியம் இவ்வளவு சௌகரியமென்று பேசவும் எழுதவும் மட்டும் முன் வந்துவிடுகின்றனரே யன்றி, இவ்விதக் குறைகளைப்பற்றி எங்கே கவனிக்கின்றனர். ஆயினும் இவர்கள்பால் குறை சொல்லவும் பொருத்தமானதா யில்லையென எண்ண வேண்டியிருக்கின்றது. இவர்களுக்குத் தெரிந்தால்தானே கவனிப்பர். தெரியாவிட்டா லென்செய்வர்? ஏற்பட்டிருக்கும் — ஏற்படும் குறைவுகளை இன்னோர்களுக்கு நல்லாசிரியன். சற்குரு, சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகள் மூலமாயாவது தெரிவிப்பது அத்தியாவசியம். கஷ்டம் கஷ்டம் என்று தம் மனத்தோடும் பிறரோடும் உரையாடிக்கொண்டிருப்பின் என்ன பிரயோஜன முண்டாகும்? இதற்குக் காரணம் உபாத்திமார்களே யாயினும், தமது விஷயங்களை வெளியிடு மிவர்களை இவைகளைப்பற்றிப் பயமுறுத்தி உம்மை அப்படிச் செய்தாலென்ன? இப்படிச் செய்தாலென்ன? என்று இம்சிப்பின் இவர்கள்தா னென்செய்வர்? யாதொரு குறைவை நிவர்த்திக்க வேண்டுமாயின், அக் குறைவு இன்னின்னதென்று புகலமுன் வந்தாலன்றோ சாத்-



தியமாகும். எனக்கென்ன உனக்கென்ன? அவனுக்கொத்தது நமக்கும், என்றிருந்தா லெப்படி?

சபைகளில் பொது நலத்திற்காகப் பாடுபடுவோரும் கல்வி யபிவிருத்தியடைய எண்ணும் பரோபகார சீலர்களும் பத்திராதிபர்களும் மேலதிகாரிகளும் இவைகளைப்போன்ற குறைவுகளைக் கவனித்தும் விசாரித்தும் தெரிந்தும் நிவர்த்திக்க ஏற்பாடு செய்வார்களென எண்ணி இறைவனை ஏத்துகின்றோம்.

இவ்வளவு அசந்தர்ப்பத்தில் பாடக் குறிப்பும் எழுதவேண்டியிருக்கிறது. இதனால் பாடக் குறிப்பு கூடாதென்பதாகக் கொள்ளுதல் கூடாது. பாடக் குறிப்பு எழுதுவது உபாத்தியாயருக்குச் சௌகரியமே யன்றி அசௌகரிய மொரு போது மில்லையாயினும் 4-5 வகுப்புக்களையுடைய உபாத்தியாயர் ஒவ்வொரு வகுப்பின் ஒவ்வொரு பாடத்திற்கும் குறிப்பு எழுதுவது சாத்தியப்படாது. ஒரு வகுப்புக்கு ஒரு நாளைக்கு சுமார், மேல் வகுப்புக்களுக்கு 6-ம், கீழ்வகுப்புக்களுக்குப் பன்னிரண்டுமாக 4-வகுப்புக்களுக்கும் சுமார் 36-பாடம் நடக்கவேண்டி யிருந்தாலும் அவ்வளவுக்கும் குறிப்பு எழுத வேண்டியிராது. போதனைமுறைப் பாடசாலையில் எழுதிய மாதிரி எழுத சாத்தியப் படாதாகையால், அவ்விதமே எழுத வேண்டிய அவசியமுமில்லை. 2 அல்லது 3-வகுப்புக்களையுடைய உபாத்திமார்களுக்கும் சிரமந்தான். ஏனெனில், மேற்கூறிய காரணங்களால் அவகாசமே கிடையாதன்றோ? பாடக் குறிப்பு எழுதும்படி கட்டாயப் படுத்தப்படுவதால் முறைப்படி அன்றன்று எழுதமுடியாததோடு அவ்விதம் நடைபெறுவதுமில்லை. கட்டாயத்திற்காக ஏதோ அவகாசம் கிடைத்தபோது (எழுதாதிருந்து) சேர்ந்தாற்போல் சுமார் 1 அல்லது 1½ வாரத்திற் கொருதரமே, 'ஏதோ எழுத வேண்டியதற்காக' எழுதப்படுகிறதாகும். உபாத்திமாருக்கு இவ்வளவு அசௌகரிய மிருக்கும் போது, இதைக் கவனியாது வீணே குறை கூறுதல், உபாத்திமாருக்கு மென்மேலும் உபாதி யுண்டாக்குவதே யாகும்.

P. பரிமணப் பல்லவராயர்,
போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர்சோலை போஸ்டு, திருச்சிதாலுக்கா.

# STORY TELLING

## கதை சொல்லல்

(முன் தொடர்ச்சி பக்கம் - 36)

### மாயப் பெண் அரசி

12. தோட்டத்தில் காணப்பட்ட அற்புதங்களை எல்லாம் கண்ட மன்னவன்மகன் தன் வீட்டிற்குத் திரும்பினான். தான் வெளியே செல்வதற்கு முன் நிச்சப்தமாய் இருந்த அரண்மனையில் அழகிய உடைகளுடன் அநேக ஆட்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். பதினாயிரம் பேரை வரவேற்பதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றன. உண்ணும் உணவுகள் பழவர்க்கங்கள் முதலியவை பொற்பாத்திரங்களில் நிறைக்கப்பட்டிருந்தன. அரண்மனை முழுவதும் நவரத்தின மாலைகளாலும் புஷ்பமாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டது. இவைகளைக் கண்ட அரசகுமாரன் திகைத்து நின்றான்.

13. மன்னவன் மகன் தான் எண்ணதபடி இவ்வளவு சிறப்பாய் தன்னுடைய மனைவியின் அற்புதச் செய்கையால் தந்தையின் வரவேற்பிற்கு நடைபெறும் ஏற்பாடுகளைக் கண்டு மகிழ்வடைந்தான். அப்போது ஒரு சேவகன் ஓடிவந்து, மன்னவன் அரண்மனை வாயிலை அடைந்ததாகத் தெரிவித்தான். அரசகுமாரன் விரைந்து சென்று தன் தந்தையை வரவேற்று அரண்மனைக்குள் அழைத்து வந்து, அவருக்கென சித்தப்படுத்தியிருந்த சிங்காதனத்தில் அமருமாறு வேண்டினான். அவருடன் வந்த பரிஜனங்கட்கும் தக்கவாறு ஆசனம் அமைக்கப்பட்டிருந்தன. எல்லோரும் அமர்ந்த பிறகு பொற்றட்டிலும், வைரக் கிண்ணங்களிலும் உணவு பரிமாறப்பட்டன. வந்திருந்தவர்கள் எல்லாம் உணவின் உருசியையும், ஏற்பாடுகளையும் கண்டு மட்டில்லாத மனமகிழ்ச்சி அடைந்தார்கள்.

14. போஜனம் முடிந்த உடன் அரசன் தன் குமாரனை நோக்கி, 'எனது அருமந்த புதல்வனே, இங்கே காணப்படும் செல்வங்கள் எல்லாம் யான் உடைத்தாயிருப்பவைகளைவிட ஆயிரம்பங்கு விலை ஏறப்பெற்றவைகளாக இருக்கின்றன. அவைகளை



நீ எவ்வாறு சேகரித்தனை என்று வினவவாவது, என்னுடைய வாழ்நாளில் என்றும் சுவைத்தறியாத உருசியுள்ள உணவுகளை யார் சமைத்தவர்கள் என்று தெரிந்து கொள்ளவாவது பிரியப்படவில்லை. உன்னுடைய மனைவியைப் பார்த்து ஆசீர்வதிக்கவே விரும்புகிறேன்' என்றான். அரசகுமாரன், 'எந்தையே, தங்களுடைய கட்டளையைச் சிரமேற் கொண்டேன். என்னுடைய மனையாளை உடனே அழைத்து வருகிறேன்' என்று மன வருத்தத்துடன் அந்தப்புரத்திற்குள் சென்றான். நம்முடைய பெண்சாதி குரங்கல்லவா. அதை கண்டால் எல்லோரும் பரிகாசஞ் செய்வதற்கு இடமுண்டாகுமே என்று வருந்தினான். மன்னவனாகிய தந்தையும் இவன் அரண்மனைக்கு வந்தது தன் குமாரனுடைய பிடிவாத குணத்தை மாற்றி ஒரு பெண்ணை அவனுக்கு விவாகம் செய்விக்கவேண்டும் என்னும் கருத்துடனேயாம்

15. தந்தையினிடம் விடைபெற்றுச் சென்ற குமாரன், தன் உயிர்த்துணையாகிய குரங்கைத் தான் விட்டுப் போன அறைக்குட் சென்றான். அந்த அறை முழுவதும் ஒரே பிரகாசமாக இவன் கண்ணுக்குப் புலப்பட்டது. இந்தப் பிரகாசத்தின் நடுவே ஓர் பொன்மயமான சிங்காதனத்தின்மீது தான் முன் மரத்தடியில் கண்ட யவ்வனமும் அழகும் வாய்ந்த மடமங்கை உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அரசகுமாரன் தன் உயிர்த்துணையாகிய குரங்கை இங்குமங்கும் தேடினான், அவன் கண்ணுக்குப் புலப்படவில்லை. இவன் தேடுவதைக்கண்ட மடந்தை 'அரசனே, உம்மைக் குகையில் கண்டதுமுதல் உம்மையே மணந்து கொள்ளவேண்டும் என்னும் விருப்பம் எனக்குண்டு. ஆகையினாலே உன்னுடைய குரங்கைத் துரத்திவிட்டு உம்மை மணந்துகொள்ள யான் இங்கே வந்திருக்கிறேன்' என்றாள். இவைகளைக் கேட்ட மன்னவன்மகன் மிகவும் வருந்தி, 'கண்ணீர்விட்டழுது, கடுங்கோபத்துடன், தழுதழுத்த சொற்களால், 'ஏ பாதகி! கொடியவளே! என் பிரியமுள்ள நாயகிக்கு என்ன கெடுதி செய்துவிட்டனை! என் வாழ்நாள் முழுவதும் அவளையே துணையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று அல்லவா தீர்மானஞ் செய்திருந்தேன்! உன்னை மணந்துகொள்ளும் பொருட்டா அவளை அகற்றிவிடச் சொல்கிறாய். மிக நன்றாயிருக்கிறது. நான் உன்னை முதலில் குகையில் பார்த்தபோது உன்னைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தேன். நான் அந்த அபிப்பிராயம்

கொண்டது தவறு என்று தெரிகிறதே' என்று பதில் அளித்தான். மடந்தை புன்னகையுடன், 'அரசகுமாரனே! என்னுடைய அழகுக்காக என்னை மணக்க விரும்பாவிடினும் யான் உனக்குச் செய்திருக்கும் உபகாரத்திற்காகவாவது என்னை மணந்து கொள்ள வேண்டியது அவசியமல்லவா? உன்னுடைய தந்தையையும் உன் சுற்றத்தாரையும் வரவேற்பதற்காக யான் எடுத்துக்கொண்ட பிரயாசையைப் பார். இத்தகைய விருந்து மனிதர்களால் செய்யுந் தரத்ததன்றே, தேவகணங்களாகிய எம்போலியர்கட்கல்லவா சர்வ சுலபமாய் முடியும். மன்னவனே! யான் சொல்வதைத் தட்டாமல் என்னை மணந்துகொள். இந்தச் செல்வமெல்லாம் உன்னுடையதாகும்' என்றாள். அரசகுமாரன் மிகுந்த கோபத்துடன், 'பெண்கள் நாயகமே! இவைகளை எல்லாம் எனக்குக் கொடுக்கும்படி நான் உம்மைக் கேட்கவில்லை. இவ்வளவு ஆடம்பரங்கள் செய்தது என்னுடைய மனைவியை என்னிடமிருந்து பிரித்து விடவா; என்னுடைய மனைவியாகிய குரங்கை எனக்குக் கொடுத்துவிடு, என்னுடைய ஆயுள்பரியந்தம் உமக்கு அடிமையாக இருந்து, இப்போது செய்த உபகாரத்திற்காக ஏற்பட்ட கடனைக் கழித்துவிடுவேன்' என்று சொல்லி, மடந்தை அமர்ந்திருக்கும் சிங்காதனத்தை நமஸ்காரஞ் செய்தான். மடந்தை சிங்காதனத்தை விட்டிறங்கி, புன்னகையுடன், 'மன்னவனே, நான்தான் அந்தக் குரங்குவடிவங் கொண்டிருந்தவள். உன்னுடைய உண்மையையும், பிரியத்தையும் சோதிக்கும் பொருட்டே மாறுவடிவங்கொண்டிருந்தேன். அதோ பார் மூலையில் குரங்கின்தோல் இருக்கிறது' என்றாள். மன்னவன் மகன் தன் மனைவி காண்பித்த இடத்தைப் பார்த்தான். தான் ஆதரித்த குரங்கின்தோல் அங்கே காணப்பட்டது. அப்போது அரசகுமாரனுக்கு உண்டான ஆனந்தத்தை யாவரால் சொல்ல முடியும்.

16. அரசகுமாரன் மனைவி தன் கணவன் கையைப் பற்றி இழுத்து, தன்னுடன் ஆசனத்தில் அமரும்படி வேண்டினாள். அவன் உட்கார்ந்தவுடனே சிங்காதனம் ஆகாய மார்க்கமாய்ப் பறந்து அரசனும் பரிஜனங்களும் இருக்கும் இடத்திற்குச் சென்றது. அரசகுமாரன் தன் மனைவியைத் தந்தைக்குக் காட்டினான். அப்போது அரசனுக்கும் அவனுடன் வந்த பரிவாரங்கட்கும் உண்டான ஆச்சரியத்தை என்னென்று சொல்வது. குரங்கைப்



பார்த்து மன்னவன் மகனைப் பரிகாசஞ் செய்யவேண்டும் என்னும் எண்ணத்துடன் வந்தவர்கள் திப்பிரமை கொண்டவர்களாய்த் திகைத்து நின்றுவிட்டார்கள். அரசன் ஏனைய குமாரர்களின் மனைவியர்களைவிட இவள்மீதில் அதிக பிரியங் கொண்டவனாய்ச் சிறந்த வெகுமதிகள் கொடுத்தான். அந் நகரமாந்தர்கள் எல்லோரும் அரசகுமாரன் தன் மனைவியினிடம் வைத்திருந்த அன்பையும், பிரியத்தையும் அவனுக்குக் கடவுள் புரிந்த நன்மையையும் கொண்டாடினார்கள்.

17. மன்னவனுடைய ஏனைய குமாரர்களும் தன் சகோதரனுக்குக் கிடைத்த அளவில்லாத செல்வத்தைப் பார்த்து பொறாமை கொண்டவர்களாய் அவனை எவ்வாறு கெடுக்கலாம் என்று ஆலோசிக்கலானார்கள். ஒரு நாள் தம் இளைய சகோதரனை விளித்து, 'சோதர! உன்னுடைய மனைவி பூதகணத்தைச் சேர்ந்தவள் என்று எங்கட்குத் தெரியவருகிறது. பூதகணத்தைச் சேர்ந்தவர்கள் நிலையான புத்தியுள்ளவர்களல்ல என்பது நீ அறிவையோ? அவள் முன் கொண்டிருந்த குரங்கு உருவத்தின் மேற் போர்வையாகிய தோல் உன்வசம் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். நீ ஏன் அதை பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறாய்? உன் மனைவி மீட்டும் ஏன் குரங்கு வடிவங் கொள்ளமாட்டாள் என்பது யாருக்குத் தெரியும். நீ அந்தப் போர்வையை நெருப்பிலிட்டு எரித்துவிடுவது உசிதம் என்று தோன்றுகின்றது' என்றார்கள். சகோதரர்கள் சொல்லிய யோசனை நல்லதென்றே அவனுக்குத் தோற்றியது. உடனே தன்வசமிருந்த குரங்கின் மேற்போர்வையை எரியும் நெருப்பில் வீசி எறிந்தான்.

18. குரங்கின் தோல் நெருப்பில் பட்டவுடன், 'நான் எரிந்து போகிறேன், நான் எரிந்துபோகிறேன்' என்னும் ஒரு கூச்சல் உண்டாயிற்று. அவன் மனைவி அந்த நெருப்புச் சுவாலையின் நடுவே மேற்கூறிய கூச்சலுடன் எரிந்து கொண்டிருப்பதை மன்னவன் மகன் கண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த நெருப்பு கண்ணுக்குப் புலப்படவில்லை. சத்தமும் நின்றுவிட்டது. இவைகளை எல்லாம் கண்ட அரசகுமாரனுக்கு யாதொன்றும் தோற்றவில்லை. உடனே தன் வீட்டண்டை ஓடிவந்தான். தன் அரண்மனையும், மனைவியும், அவள் வரவழைத்த விநோத-

மான சாமான்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. அவனுக்கு அப்போது உண்டான துயரத்தை என்னவென்று சொல்வது. அரச குமாரன் தான் செய்த குற்றத்தையும் அதனால் தனக்கு நேரிட்ட அதிர்ஷ்ட ஈனத்தையும் எண்ணி எண்ணி வருந்துவானாயினான். அரசனும் மந்திரிகளும் அவனுக்குப் பலவித தேறுதல் சொன்னார்கள். அவைகளை அவன் சிறிதும் ஏற்றுக்கொள்ளாமல் மனம் வருந்திக்கொண்டேயிருந்தான். அரசன், தன் குமாரன் ஆராத்துயரத்தால் ஊரைவிட்டு எங்கேயாவது போய்விடுவானோ அல்லது தற்கொலை புரிந்துகொள்வானோ என்னும் கருத்துடையவனாய் அவனுக்கு ஒரு அபாயமும் நேரிடாதபடி அவன் முதலில் அமைத்துக் கொண்ட மாளிகையிலேயே காவலில் அமர்த்தினான். மன்னவன் மகன் பூதகணத்தின் கூட்டுறவால் தன் அரண்மனையிலேயே காவலில் இருக்க நேர்ந்தது.

(இன்னும் வரும்)

ஒருதமிழ்ப் புலவர்.

# BABAR

## பாபர்

(முன்தொடர்ச்சி - பக்கம் 9)

சுல்தான் அமத்மீர்சா என்பவனிடம் என் தூதுவர்களை அனுப்பினேன்; அவர்களை சிற்சில சமாசாரம் தெரிவிக்கச் சொன்னேன்; அவையாவன: 'இந் நாட்டை பாதுகாப்பதின் நிமித்தம் உங்கள் காரியஸ்தர்களில் ஒருவனை நியமிப்பது அவசியம். உங்களுக்கு நான் ஓர் ஊழியனாயிருப்பதுமன்றி மருகனுமாவேன். என்னையே இந்நாட்டிற்கு அதிபதியாக ஏற்படுத்தினால், உங்கள் எண்ணம் எளிதில் திருப்திகரமாக முற்றுப்பெறும்.' சுல்தான் அமத்மீர்சா சாது சுபாவமுள்ளவன்; திடசித்தமில்லாதவன்; வெற்றுரையாடான். அன்றியும் அவனுடைய அபிப்பிராயங்களும் தன்னுடைய பேக்குகளின் புத்திமதிகளை முற்றிலும் தழுவியே யிருக்கும்; ஆனால் அவர்கள் மேற்குறித்த யோசனைக்கு சம்மதிக்கவில்லை; ஆகவே அவன் கடுமையாகவே மறுமொழி சொல்லி அனுப்பிவிட்டு, தன் சைந்நியங்களை மேலே நடத்திச் சென்றான். இதுவரையில் எல்லாம் வல்ல இறைவன் பக்துவகால முணர்ந்து என்னுடைய கோரிக்கைகளை



மனித சகாய மில்லாமலே இனிதுபெறச் செய்திருக்கிறார்; அதுபோலவே இப்பொழுதும் அவரது கருணையால் சில சம்பவங்கள் உண்டாகி, அதனால் விரோதிக்கு அனேக கஷ்டங்கள் உண்டாயின. அவன் எடுத்த படையெழுச்சி அவலமாய்ப் போய்விட்டது; அதனால் அவன் ஆற்றொணாத் துயரமடைந்தான்.

அச்சம்பவங்களிலொன்று அடியில் வருமாறு: காபா என்பது ஒரு நதி; அதன் ஜலம் கருமைநிறமுள்ளதும், வழுவழுப்பான பிசுக்குள்ளதுமா யிருக்கும்; அதனால் அதை பாலமில்லாமல் கடக்க முடியாது. சுல்தான் தன் பெரும் படையோடு ஆற்றின் ஒரு பாலத்தை நெருங்கினான். சேனைகள் திரண்டு உருண்டு பாலத்தைக் கடக்கும்போது அனேக குதிரைகளும் ஒட்டகங்களும் நெருக்குண்டு மாண்டன. மூன்று நான்கு வருடங்களுக்கு முன் இதே சைனியங்கள் கர் என்னும் ஆற்றண்டை பெருத்த அபஜயமடைந்ததுண்டு; அது இப்போது ஞாபகத்திற்கு வரவே, அவை கலக்கமடைந்தன.

மற்றொரு சம்பவம் என்னவென்றால்: அச்சமயம் குதிரைகளில் ஒருவித நோய் பரவி, அவை கணக்கற்று இறந்துபோயின. மற்றொரு விஷயமாவது, என்னுடைய போர்வீரர்களும் குடிகளும் ஒருமனப்பட்டு திடமனமுள்ளவர்களாய் நின்றார்கள். அவர்கள் பிராணன் போகுமளவும் சண்டை செய்தே தீர்வார்களென்றும், படையெடுத்து வருபவர்களின் ஆட்சிக்கு உட்படவே மாட்டார்களென்றும் விரோதிகளின் வீரர்களுக்கு நன்றாய் புலப்பட்டது. இந்த சம்பவங்களால் மனமுடைந்த விரோதி அன்டிசானுக்கு ஒரு மைலுக்கு உள்ளாகவே வந்தும் மகமத் டெர்கான் (Terkhan) என்பவனை தூதாக அனுப்பினான். கோட்டையிலிருந்த ஹுசன்யாகோப் என்பவன் வந்து டெர்கானைச் சந்தித்து இருவரும் ஆலோசித்து ஒருவிதமாக சமாதானம் ஏற்படுத்திக்கொண்டார்கள். அதன்பயனாக படையெடுத்து வந்த சைந்நியம் திரும்பிச் சென்றது. இதனிடையில் சுல்தான் மாமூத்கான் கோஜாண்டு நதியின் வடபுறமாய் விரோத எண்ணத்துடன் இராச்சியத்தில் பிரவேசித்து அக்ஸி (Akahsi)யை முற்றுகை போட்டான். அவன் அக்ஸியண்டை வந்ததும் சிலபேக்குள் அவனை அணுகி, காஸானை (Kasan) அவன்வசம் ஒப்பித்து விட்டார்கள். பின்பு மாமூத்கான் அக்ஸியை நெரு-

ங்கி அதைப் பன்முறையும் தாக்கினான்; ஆனால் பலன் ஒன்றும் பெறவில்லை. அச்லியிலிருந்த பேக்கர்களும் வாலிபர்களும் அதிக தீரத்துடன் போர் புரிந்தார்கள். அத்தருணத்தில் சுல்தான் மாமூத்கான் நோயடைந்தான். அன்றியும் அவனுக்கு யுத்தத்தில் வெறுப்புண்டாயிற்று; அதனால் அவன் நாட்டிற்கு திரும்பிச் சென்றான்.

இந்த முக்கியமான சம்பவங்கள் நடந்துக்கொண்டிருக்கையில், எனது தந்தையாருடன் இருந்த பேக்கர்களும் பிரபுக்குமாரர்களும் திடமனத்துடன் ஒருமித்து பெருந்தகை காட்டி எங்கள் முயற்சிக்குத் தம்முயிரையுங் கொடுக்க ஊக்கங்கொண்டிருந்தார்கள். பிறகு அவர்கள் எனது பாட்டியாராகிய ஷா சுல்தான் பேகம் அம்மையும் (Shah Sultan Begum) அந்தப்புரத்திலுள்ள மற்ற ஸ்திரீகளையும் அக்லியிலிருந்து அண்டிசானுக்குக் கொண்டுபோய் சேர்த்தார்கள்; அங்கே உத்தரகிரிகைகளெல்லாம் சரிவர நடந்தன; ஏழைகளுக்கும் பக்கிரிமார்களுக்கும் அன்னபானாதிகள் அளவின்றி அளித்தார்கள்.

இந்த அபாயங்கள் எல்லாம் நீங்கின பிறகு ராஜ்ய பரிபாலனத்தைக் கவனித்து, நாட்டைச் சீர்திருத்தி எல்லாவற்றையும் நல்ல நிலைமையில் கொண்டு வைக்க வேண்டியது அவசியமாயிற்று. அண்டிசானின் பரிபாலனமும் அரண்மனையின் அதிகாரமும் ஆஸான் யாகூப்புக்குக் கொடுக்கப்பட்டன. என் தகப்பனாருடைய அரண்மனையிற் சேர்ந்த பேக்கர்களுக்கும் ஏனைய பிரபுக் குமாரர்களுக்கும் அவரவர்களுக்குத் தகுந்தாற்போல் ராஜ்ய அதிகாரமோ அல்லது பூஸ்திதியோ கொடுக்கப்பட்டது. யாவரும் ஏதோ ஒருவிதமான கௌரவமும் கொடுக்கப் பெற்றார்கள்.

பத்திராதிபர்.




மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1917ஆ செப்டம்பர் மீ | மாதம் 4

## GARLAND OF VERSES

### செய்யுள் மாலை

ஒன்றே செய்க ஓரோரு காலில்

ஒன்றே செய்க ஒரொரு காலில்
ஒரொரு காலில் ஒன்றே செய்க
ஒன்றே செய்க நன்றாச் செய்க
நன்றாச் செய்க நன்றே செய்க
என்றும் உலகில் ஏற்ற மடைய
ஒன்றும் இதுவே உயர்வழி யாமே

செய்வினை யேதும் திருந்தச் செய்யென
மெய்வழி கூறினர் மேதக் கோரே
அதனால்
ஆடும் போழ்தில் அகமகிழ்ந் தாடுக
தேடும் போழ்தில் தீரத் தேடுக
கற்கும் போழ்தில் கருத்தொடுங் கற்க
நிற்கும் போழ்தில் நிலையில் நிற்க
அரைகுறை யாகச் செய்வன அனைத்தும்
நிறைவுற லில்லை நெடுங்கா லத்தும்
அதனால் அன்பநீ
ஒன்றே செய்க ஓரொரு காலில்
ஒன்றே செய்கதை நன்றாச் செய்கவே. (1)

## விண்மீன்

1. என்னே நின்னெழில் என்னே நின்னொளி
மின்னி மின்னி விண்ணின் விளங்குவை
மின்னுந் தன்மையால் மீனே யாயினை
விண்ணின் விளங்கலால் விண்மீ னாயினை
மண்ணிற் கருங்கடல் வாழ்மீ னென்ன
விண்ணிற் கருங்கடல் மேவினை நீயே
என்னே நின்னெழில் என்னே நின்னொளி
மன்னும் வானில் வயிர மணியென
மின்னுநின் ஒளியை என்னெனப் புகழ்வேன்.

2. கதிரவன் மேற்பாற் கடலிற் குளித்ததும்
முதிரக் காரிருள் மூடிக் கொண்டதும்
ஒளிமுகங் காட்டிநீ வெளிவரு கின்றனை
அளியுற இரவெலாம் அலர்கின் றனையால்
என்னே நின்னெழில் என்னே நின்னொளி
மன்னிய வானில் வயங்குவிண் மீனே.

3. ஆழ்கடற் பரப்பில் அருங்கலம் உகைக்கும்
வாழ்வினைக் கொண்ட மாலுமிக் கொருநீ



சிறியதோர் ஒளியாற் பெருந்துணை யாகிக்
காரிரு ளதனிலும் காட்டுவை வழியே
நின்னொளி யிலதேல் நிலைதடு மாறி
அன்னவன் அல்லல் அடைந்திடு வானே
என்னே நின்னெழில் என்னே நின்னொளி
மன்னிய வானில் வயங்குவிண் மீனே.

4. உற்று நோக்கின் ஊசி நாட்டவும்
வெற்றிட மின்றி விண்ணிட மெல்லாம்
கொண்டே சிறிதும் பெரிதுமாக் குலவி
அண்டுநின் அழகை என்னென் றறைவேன்
உன்னுடை யுறவா உற்ற சில்லோர்
தந்நிலை மாறாது தங்குதல் காண்பேன்
மாறி மாறி வயங்கலுங் காண்பேன்
சீறிய எரியாச் சிந்தலும் காண்பேன்
ஒருகால்
வாலுங் கொண்டு வருதல் காண்பேன்
நீளும் உருக்கொடு நிலவுதல் காண்பேன்
இவ்வா றெல்லாம் இலங்குறு நீயே
செவ்விய ஞாயிறு சிரத்தினைக் காட்டலும்
ஒளிக்கின் றனையிலை ஒளிக்கின் றனையே
களிப்புறு காலம் காரிருள் நினைக்கோ
அறைமதி எனக்கிதை அன்புடை உடுவே
தறைமிசை இதனைச் சாற்றுவா ரிலையே
மன்னிய வானில் வயங்குவிண் மீனே
நின்னியல் தன்னை நிகழ்த்துவை நீயே.

பத்திராதிபர்.

# WHO IS A QUALIFIED TEACHER?

## நல்லாசிரியர் எவர் ?

உலகத்தில் மானிடராய் ஜன்மிப்பது பாக்கியமன்றே, அப்பாக்கியத்திலும் உபாத்திமைத் தொழிலை ஏற்கும் ஒருவர் பெரும்பாக்கியத்தை அடைகிறார். எவ்வாறெனில், அவர் பரோபகாரமுடையவராகி, குழந்தைகளுக்குப் பேரறிவும், இராஜாங்கத்திற்குப் பெருங் கீர்த்தியும், இராஜபக்தியும் உண்டாக்குகின்றார் என்பதற்குச் சற்றும் ஐயமில்லை.

வையகத்தில் பலர் அநேக சாஸ்திர வித்தைகளைக் கற்று, உத்தியோகஸ்தர்களாகவும் வியாபாரிகளாகவும் விளங்குகிறார்கள். அவர்கள் நாட்டிற்குச் சிறிதும் பெரிதுமான நன்மைகளைச் செய்கின்றனர். சிலர் ஏதும் செய்யாமலே, தாங்கள் க்ஷேமமாக இருக்கவும், அதிக திரவியம் சம்பாதித்துக்கொள்ளவும் எண்ணமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். அவ்வெண்ணங்களும் ஆசைகளும் நல்லாசிரியரிடத்தில் நிலைகொள்ளா; அவர் தம் அலுவலை உண்மையாயும் திருப்திகரமாயும் செய்து முடிப்பவர் ஆவர். அவ்வாறு செய்வதினால் அவர் குடிகளிடத்தில் நன் மதிப்பும், துரைத்தனத்தாரிடத்தில் நற்பெயரும் கீர்த்தியும் அடைவார். முற் காலத்தும் இக்காலத்தும் பெரிய தனவான்கள் அதிக திரவியம் செலவழித்து, சத்திரம், சாவடி, கிணறு, குளம் முதலியவைகள் கட்டியும் வெட்டியும் வைத்து, இன்னும் ஏழைகளுக்கு அநேக தர்மம் செய்தலினால், அவர்கள் உயிரோடு ஜீவிக்கும்போதும் இறந்த பிறகும் நற்பெயரும் கீர்த்தியும் அடைகிறார்கள். அப்பொருள்களே அவர்களின் குணங்களை எடுத்துக் காட்டுகின்றன. நல்லாசிரியரும் அவ்வாறு ஒப்பாவார். ஆசிரியரின் சம்பளத்தை நோக்குகையில் அதிகமும் விசனிக்கத்தக்கதே. ஆயினும் அவர் தம் சிரமத்திற்குத் தக்கவாறு இருதாரத்தாரிடமும் திரவிய சகாயத்தை அடைவார் என்பது திண்ணம்.

### அதிக திரவிய சகாயமடைய வேண்டிய பொது விஷயங்களாவன

1. கட்டடம் — அதிக சந்தடி இல்லாத இடத்தில் சுகாதார முறைகள் நன்கு அமைந்த கட்டடம் வேண்டும் அதில்



வெளிச்சம் ஆகாயம் வியாபித்திருக்கப் போதுமான ஜன்னல்கள் ஏற்பட்டிருக்கவேண்டும். இல்லாவிடில் குழந்தைகளுக்கு வியாதி உண்டாகும் வகுப்பு அறைகளில் அனாவசியமான சத்தம் இரைச்சலில்லாமலிருக்க ஏற்ற சாதனங்களும் அமைத்திருக்கவேண்டும். பொதுவாய் தரை, சுவர்கள், படங்கள், மியூசியம், பாடக்கிரம அட்டவணைகள், மாணாக்கரின் நடை, உடை பாவனை முதலியவற்றால் ஒரு பள்ளிக்கூடத்தின் தராதரத்தை உணர்ந்து கொள்ளலாம். இன்னும் ஆசிரியரின் குணங்களாலும் அறியலாம். சிலர் ரெஜிஸ்தர் முதலிய ரெகார்டுகளைத் திருப்திகரமாக வைத்துக் கொள்ளாமல் தங்கள் பெயரையும் பெருமையையும் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். நல்லாசிரியர் தம் மனம் அறிய உள்ளபடியே உண்மையாய் எக்காரியங்களையும் செய்யத் துணிவார்.

2 மியூசியம் — ஒரு தொழிலாளி தன் தொழிலுக்குப் பற்பல ஆயுதங்களைச் சேகரித்து, அதனதன் தொழிலுக்கு உபயோகிப்பது போல் பள்ளிக்கூடத்தில் ஆசிரியரும், மாணாக்கர்களும் பல உபகரணங்களை, வாசகம், கணக்கு, பூகோளம் சித்திரம், இயற்கைப் பொது அறிவு, இவை முதலிய எல்லாப் பாடங்களுக்கும் வேண்டிய கருவிகளைக் கூடியமட்டும் செலவின்றி பிரயாசத்துடன் சேகரித்துக் கொள்ளுவார்கள். இவ்வாறு அவைகளை அதிகமாயும் அழகாயும் வைப்பது தற்கால நூதன போதனை முறைகளில் முதன்மையாம்.

3. தோட்டம் — பயிர்த்தொழில் செய்து ஜீவிப்பது நம் தேசத்தின் முதன்மையான தொழில். இதுகண்ட டிப்பார்ட்டுமெண்டார் தோட்டம் அவசியம் என்றும், சிறுவர்களுக்கு இளமையிலேயே கற்பித்து விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார்கள். இத்தோட்டத்தை வைத்துப் போதிக்க சந்தர்ப்பமில்லாத இடங்களில் விஷயங்களை உபகரணங்களால் போதிக்க வேண்டும்.

4. வாசகம்—மாணாக்கர் பெரியவர்களாகி, நல்லொழுக்கம், சுத்தம், ஜீவகாருண்யம் முதலிய நற்குணங்களில் சிறந்து, பெரியோர்களிடத்திலும், சபையிலும் கூச்சம், நாணம் பயமின்றிப் பேசவும், வாசிக்கவும், எழுதவும் இதன் கருத்தாயிருக்கிறது போதிக்கும்போது சிறு வகுப்புகளுக்குக் கோவையாய் நாள்

ஒன்றுக்கு ஒவ்வொரு பிரகரணமாயும் பெரும் வகுப்புகளுக்கு இரண்டு பிரகரணங்களாகவும் கற்பிப்பது மேலானது. ஆசிரியருக்கும் மாணாக்கர்களுக்கும் விருத்திசெய்ய இடமுண்டாகிறது. பெரும பாடத்தைக் கொடுப்பதால் ஆசிரியருக்குத் துன்பமும் தேக அசௌக்கியமும் நேரிடும்.

5. செய்யுள், எழுத்து, சித்திரம் — நம்மால் கூடியமட்டும் சிரத்தையோடு இராகத்துடனும், கூடிய உருவங்களோடும் முறையே அவைகளைக் கற்பிக்கவேண்டும். பாடகர்களாகவும் சித்திரக்காரர்களாகவும் ஆக்கவேண்டியது இதன் நோக்கமல்ல. எழுத்து பள்ளிக்கூடத்தின் மாணாக்கரின் ஆபரணமாகும், அதைக் கூடியமட்டும் தேர்ச்சி செய்யவேண்டும்.

6. கணக்கு — இப் பாடமும் வாசகத்தைப்போல் முக்கியமாகி அவர்களுக்கு அதிக பலாபலனைத் தரும். கற்பிக்கும்போது சிறு வகுப்புகளுக்கும் பெரிய வகுப்புகளுக்கும் சிறிய மனக் கணக்குகளே உத்தம பீடிகைகளாப். அச் சிறு வகுப்புகளுக்கு ஒரேவித அப்பியாசத்தை பல உபகரணங்களாலும் வார்த்தைகளாலும் மாற்றி மூன்றுவார கால அளவு வரைக்கும், பெரிய வகுப்புகளுக்கு ஷை முறையே ஒன்று அல்லது இரண்டு வாரமளவும் வீட்டு அப்பியாசங்களோடும் கற்பிக்கலாம். வாசகம், கணக்கு, சொல்வதெழுதல் முதலியவைகளை மாணாக்கர் செய்யும் தருணங்களில் கண் கூர்மையாயிருந்து, அவர்களின் தப்பிதங்களையும் பார்த்துத் திருத்தித் தேர்ச்சிக்குக் கொண்டுவரவேண்டும்.

இவ்வாறு தன் கடமைகளை பாராட்டுகிறவரும் செய்பவருமே நல்லாசிரியர் எனப்படுவார்; அதிகாரிகளால் ஏற்பட்டுள்ள சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யவேண்டும். அவர் ஜீவிக்கும்போது தமக்கு எதிரில் நற் பெயரும், பெருமையும், இறந்தபின் இறவாப் பெயருமுடையாராகி, அவரின் நற்குணங்கள் பலராலும் எடுத்து நன்கு மதிக்கப்படும் நல்லாசிரியரைப் போல் நமது ஆயுள் பரியந்தம் நடப்போம்.

K. ARULANANDAN,
*II Asst. St. Antoney's Elmy. School,*
*Uppilipalyam, Coimbatore.*



# A PROVERB — EXPLAINED

## 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்'

சம்பாஷணைக் களம் — ரங்கோனிலுள்ள ஓர் பாடசாலை

சம்பாஷணைக்காரர் — பாடசாலையின் தலைமை உபாத்தியாயரும் உதவி உபாத்தியாயரும் —

(உதவி உபாத்தியாயர் படிப்பித்த 3-வது வகுப்பு பரீக்ஷிக்கு மதிகாரிகளால் பரீக்ஷிக்கப்பட தகவலாய்க் காணப்பட்டது. அதன்பேரில் அதிகாரியானவர் குறைவைச் சீர்திருத்தக் கண்டிப்பாய் எழுதினமையால் தலைமை உபாத்தியாயர் உதவி உபாத்தியரோடு பேசுகிறார்.)

தலைமை உபாத்தியாயர் — என்ன உபாத்தியாயர், இப்படிப் போகுமென்று கனவிலுங் கருதவில்லையே. என்ன அப்படியென்றாலுங் கொஞ்சமாவது பிசகு இல்லையா? இவ்வளவில் இருந்தால் என்ன பாடந்தான் நடந்திருக்கும்?

உதவி உபாத்தியாயர் — ஐயா! நீங்கள் அறியாததில்லையே. உங்களையறியாமல் என்னதான் நடக்கும், நானென்னசெய்வேன், முந்தினவர் ராஜினாமாச் செய்துபோன பின் 3-மாதம் சும்மா வெறுமனே சுற்றினார்கள் பிள்ளைகள் என்று சொல்லுகிறீர்கள். நான் வந்து இன்று சரியாய் ஒன்று குறைய 30-நாட்கள்மட்டுமே யாகிறது. பின்னை யதற்குத் தக்கபடி தானே இருக்கும்.

தலைமை உபா. — எத்தனை நீர் சொன்னால்தா னென்ன? படித்துக் கொடுப்பவருக்கு இது ஒரு மலையா? ஒரு மாதத்துக்குள் தான் ஒரு வருஷப் படிப்பையுங் கொடுத்து விடலாமே — படித்துக் கொடுக்க வேண்டுமென்று நினைத்துச் செய்தால், 30 நாளைக்குள் தான் முந்தினது பிந்தினது சமூலமும் மூட்டிவிடலாமே. உம்மைப் போன்ற உபாத்தியாயருக்கு இது பெரிய காரியமா? மெற்றிக்கிலேஷன் பரீக்ஷையிற் தேர்ந்திருப்பவர் 3-ம் வகுப்புப் படித்துக் கொடுக்கிறது எவ்வளவு இலேசு, கூடவும் மூன்று வகுப்புகளை இந்த ஒரு மாதத்திற்குள் முன்னுக்குக் கொண்டுவரலாமே. சின்னக் காரியத்தை வைத்தே எவ்-

வளவோ செய்யலாமே. செய்யவேண்டுமானால், அரைமணி நேரத்தில் ஒரு பையனை அரைமனிதனாக்கலாம்; முழுமணி நேரத்திலவனை முழுமனிதனாக்கிவிடலாமே; ஓய், என்னண்டைக் கொடுத்துப் பாரும், வல்லவனுக்குப் புல்லுமாயுதமென்பதை நீவிர் கேட்டதில்லையோ.

உதவி உபா. — (அதிக அமர்ந்த மனத்தோடு) என்னவோ மடமடவென்று பேசிவிட்டீர்கள். தங்களுக்குத்தான் பேசத் தெரியுமென்று, சாகப் போகிற கிழவிகூடத்தான் ஐந்தாறு சாதிக்கிறவள் போல் பேசத்தான் செய்வாள். என்னவோ வல்லவனுக்குப் புல்லுமாயுதமாம், அரைமணி நேரத்தில் அரைமனிதனாக்கலாமாம், பின்னை உங்கள் பிள்ளைகளுக்கெல்லாம் நீங்கள் தயவு செய்து ஒரு மணிநேரம் படித்துக் கொடுத்து விட்டுப் பின் பறந்துவிடுங்களேன் வெவ்வேறிடங்களுக்கு, ஏன் வீணே பணஞ் செலவழிக்கிறீர்கள். பழமொழியின் அருத்தந் தெரியாவிட்டாலும் என்னவோ படபடவென்று பறையடிக்கிறீர்கள். நன்றாயிருக்கிறது, இப்படிப்பட்ட ஆளைத்தான் நானுந் தேடி நின்றேனிதுவரையும்.

தலைமை உபா. — (சற்றுக் கோபமாய்) அப்படி யென்ன என்னை மதித்து விட்டீர். எச்சரிக்கை, படித்துக் கொடுக்கத் தெரியா விட்டாலும் வாயைப்பாருங்கள். பழமொழியென்றா லென்னவென்று தெரியா விட்டாலும் புரட்டுகளைப் பாருங்கள், இவருக்குத்தானைந்தாறு அருத்தங்கள் தெரியும் போலும். ஓய், கேளும் கதையை: ஒரு ராஜன் தன் மந்திரியைச் சிறையாக ஒரு கோபுர உச்சிமாடியில் வைத்துவிட்டான் ஏதோ குற்றத்தின் பொருட்டு. அவன் பெண்சாதி தினசரி அதன் அடியில் வந்து அழுது கொண்டிருந்ததைப் பார்த்து அவன் ஒரு வண்டின் தலையில் சற்று நெய்பூசி இடுப்பில் ஓர் மெல்லிய நீளமான பட்டு நூலையும் பின்னதன் அந்தத்தில் வேறொரு மெல்லிய நூலையும் அப்படியே பின் படிப்படியாய் கயிறுகளையும் வடங்களையும் கட்டிவிடச் சொல்லினான். அப்படிச் செய்யவும் வண்டு நெய் வாசனைபற்றி மேலே கோபுர ஜன்னல்வரை சென்றது. பட்டு நூல் எளிதாக விருந்தபடியால் வண்டுக்குக் கனமே தோன்றவில்லை. மந்திரி முதலிற் பட்டுநூலைப் பிடித்தவன் பின்னொவ்-



வொன்றாய் மேலிழுத்துக் கடைசியில் வடத்தை ஜன்னலிற் கட்டிப் பின் அதின் மூலமாய் ஓடித்தப்பினான். இப்படி அற்ப ஏதுவினால் மந்திரி பெரிய காரியத்தைச் செய்தான். இப்படிச் சொல்லப்போனா லின்னும் எத்தனை? இன்னமுங் கேளும் — பலசாலியான ஒரு மனிதனிருந்தான். அவனை ஒருதடவை 100 பேர் சூழ்ந்துவந்து எதிர்த்தனர் உயிரை வாங்க. அவன் கைவசம் ஆயுதமொன்றுமில்லை. கடைசியில் ஒரு கழுதையின் தாடை யெலும்பு ஒன்று கிடைத்தது. அதைக் கொண்டே அவ்வளவு பேரையு மொருங்கே சாவடித்து விட்டான். இப்படிப் பலசாலி இருக்கிறான் கேளும். சும்மாவா; வல்லவன் பம்பரம் மணலிலு மாடும் என்கிறார்கள். நீர் என்னத்தைக் கண்டீர், மதலைப் புத்திக்காரர், சிலம்பம் கற்றவன் ஒரு சிறு கம்பினால் தன்னை யெதிர்த்துவரு மெத்தனையோ பேரையும் எளிதின் மடக்க வல்லமையுற்றவனா யிருக்கிறான். இப்படியிருக்கப் பழமொழியைப் புரட்டுகிறேன் என்றீரே. உம்மாலே ஒன்றும் முடியவில்லை யென்றால் அந்தப் பேச்சா. இவரைந்தாறு அருத்தங் கண்டார். சும்மா சொன்னதைக் கேட்டுக்கொண்டு ஆம் என்று போகக்காணோம். ஏலமாட்டாத ஆண்பிள்ளைக்கு வாயைப்பாரேன் என்று உம் பெண்சாதியு மும்மைக் கேலி பண்ணப்போகிறாள். இனி சரியாய்ப்பாரும் வகுப்பை.

உதவி உபா. — (சற்று இரங்கிய குரலோடு யாதொரு கோபமுங் கொள்ளாமல்) ஐயா, சற்று நான் சொல்வதைக் கேளுங்கள், பின் நிதானித்துப் பேசுங்கள். எங்கள் ஊரின்கண் புஜபல பராக்கிரமம் பொருந்திய சுத்தவீர னொருவனிருந்தான். அவனைக் கண்கொண்டு பார்க்க முடியாது. பார்க்கவே நடுக்கங் கொள்ளும், அடித்துக் கொன்றாலும் ஆறுமாதஞ் செல்லும், மிதித்துக் கொன்றாலும் 3-மாதஞ் செல்லும், அவனுக்குக் காலில் ஒரு மைக்கூர் வந்ததுதான் தோஷம், 3-நாளில் உயிரை வாங்கிப் பிணமாக்கக் கிடத்திவிட்டது. அந்தோ முண்டனென்றோர் மூர்க்கம் பொருந்திய மனுஷனிருந்தான். அவன் கைவிழுந்த இடமெல்லாங் கண்கற்றோர் கைலாசம் புகுவர், அவன் விழுந்தாலோ ஆயிரம்பேர் யமபுரி செல்வர். சண்டையிட அஞ்சாத சிங்கம். இவனொருநாள் ஒரு சோலைவாய் நுழையுங்காலை ஏதோ ஒரு கம்பு இவனது மூக்கில் இடித்துவிட்டது.

உடனே விழ்ந்து இறந்துபட்டானன்றோ! எவ்வளவு பரிதாபம்! உலக்கையாற் புடைத்துக் கொன்றாலும் ஒன்பது மாதஞ் செல்லும் — சிறுகம்பு — ஒரு முறியில் அதை ஒன்பது சல்லியாக்க வல்லவன், அதுவே இவனைக் கொல்லும் ஆயுதமாய் நின்றதல்லவோ? இத்தோடா போய்விட்டது. இன்னமும் கேளுங்கள் — பார்த்தாற் கண்ணைப்பறிக்கு முருவத்தையுடைய கம்மாளனொருவனிருந்தான். அவன் நடை வெள்ளாட்டின் நடையையொத்தது. தன்னையெதிர்க்க யாதொரு ராஜனுமில்லையென்றெண்ணமிடும் ராஜாவின் நடையுமிவன் நடைக்கு ஈடல்ல, இவன் வீரமு மப்படித்தான். அவன்போன போக்குமப்படித்தான், குளக்கரையை யடுத்த வரப்புத் தட்டினதுதான் தோஷம், உயிரைவிட்டான் உடனே. என் சின்னையா மகனும் நானும் ஒருநாள் உலாவப்போனோம். அவன் இத்தனைக்குங் குனிந்துதான் நடப்பான். ஒரு சிறு புல் தட்டிவிட்டது. கைதவறினானன்று. இன்னமும் எத்தனை? சோறுவிக்கிச் செத்தவர்களில்லையா? முள் தைத்து மாண்ட மகான்களில்லையா? ஆவென்று கொட்டாவி விடுத்து திறந்த வாய் மூடுமுன்னே அன்னாருடைய வாழ்வு முடிந்துபோகிறதில்லையா? குத்துதேவென்கிறான், உடனே சவமாக விழுகிறானே. எப்பேர்ப்பட்ட வல்லவனாயிருந்தாலென்ன? வலிமை படைத்தென்னை? ஒரு சின்னஞ் சிறு கருவி யவனை உயிர் வாங்கும் ஆயுதமாய் நிற்கிறதே. ஆயுதமென்றால் உயிரை வாங்குங் கருவியன்றோ? ஆக எப்பேர்க்கொத்த வல்லவனுடைய உயிரையுங் கடைசியாய் மாய்ப்பது அற்ப எது வல்லவா? சரியான அருத்தம் இதுதான். யோசித்துப் பாருங்கள். கசடறக் கற்றவர்கள் தாமே. உலக நடவடிக்கையைக் கவனிக்கிறபொழுது நீங்கள் சொல்வதும் சரிதான். ஆனாற் செவ்வனே கூறின் இதுவே பழமொழியின் விரிவுரையாகும்.

தலைமை உபா. — (தணிந்த புத்தியுடன் மிகவும் சடைந்து கொண்டு) சரிதான் சரிதான். நாங்கள் படிக்கிற காலமெல்லாம் அர்த்தம் அதுவே. நீங்கள் நூதனமாய்ப் படிக்கப்போய் இந்த அர்த்தமெல்லாஞ் சொல்ல வருகிறீர்கள்போலும். மண்ணாங்கட்டி அர்த்தங் கிடக்கட்டும். வேலையைச் சரியாய்ப் பாரும். எது எப்படியும் போகட்டும்.



உதவி உபா —

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே'

ஆகையால், நூதன காரியங்களையும் படிக்க வேண்டியதுதானே. எல்லாந் தெரிய வேண்டியது அவசியமே — (சற்று நில்லு) — நல்லது சரியாய்ப் பார்த்துக் கொள்ளுவேன். நீங்கள் யோசிக்க வேண்டாம்.

தலைமை உபா. — ஆமாம் உபாத்தியாயரே. அதுதான் சொல்லவந்தேன். நல்லது, போவோம். (போகிறார்கள்.)

JAMES G. SUNDRAM,
*The Kellett High School,*
*Triplicane, Madras.*

## STORY TELLING

## கதை சொல்லல்

(முன் தொடர்ச்சி பக்கம் - 70)

19. ஒரு நாள் புரவலன் மகன் — காவலாளர்களை ஏமாற்றிவிட்டு அரண்மனையினின்றும் வெளியேறி, தான் முதல் முதல் குரங்குக் குட்டியை எடுத்துக் கொண்டு வந்த ஆலமரத்தருகே போனான். தான் முதலில் பார்த்த ஆலமரம் அவன் கண்ணுக்குப் புலப்படவில்லை. அது இருந்த இடத்தில் எரிந்த சாம்பல் மலை ஒன்று காணப்பட்டது. அவ்விடத்தை விட்டு நீங்கி திக்காக்கிராந்தனாய் அரச குமாரன் வழியில் கிடைக்கும் கனிவர்க்கங்களைப் புசித்துக் கொண்டே நெடுநாள் பிரயாணஞ் செய்தான். அவன் கால்கள் சோர்வடைந்தன; ஆயினும் மனம் சிறிதும் சலிப்படையவில்லை. இவன் இவ்வாறாகப் பிரயாணஞ் செய்துகொண்டு காடு மலை வனாந்தரங்களை எல்லாம் கடந்து போகும் போது வழியில் ஒருவன் ஒற்றைக் காலில் நின்றுகொண்டு, 'நான் ஒருதரம் தானே பார்த்தேன். மீட்டும் ஒருகால் என் கண்ணுக்குப் புலப்படமாட்டாயா' என்று கதறிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். பார்த்திபன் புதல்வன் அவனருகிற் சென்று, 'ஏன் இவ்வாறு புலம்புகின்றாய்? உன் விருத்தாந்தத்தைச் சொல்' என்று கேட்டான். 'ஏ வழிப் போக்கனே, நான்

ஓர் இராஜகுமாரன். வேட்டை யாடுவதற்காக இந்தக் கானகத்திற்கு வந்தேன். வேட்டையாடி ஊருக்குத் திரும்பும் சமயத்தில் யௌவனமும், அழகும் வாய்ந்த பெண் ஒருத்தி, 'நான் எரிந்து போகின்றேனே! நான் எரிந்து போகின்றேனே! என்னை யாரோ ஒருவர் கொளுத்துகின்றார்களே! என்னையாரோ ஒருவர் கொளுத்துகின்றார்களே' என்று சொல்லிக் கொண்டே எனக் கெதிரே போவதைப் பார்த்தேன். அது முதல் இவ்விடத்தை விட்டு அப்புறஞ் செல்லாமல் இவ்வாறே வருந்திக் கொண் டிருக்கிறேன்' என்று பகர்ந்து, 'நான் ஒருதரம்தானே பார்த்தேன் மீட்டும் ஒருகால் என் கண்ணுக்குப் புலப்படமாட்டாயா' என்று வருந்தத் தொடங்கினான். இவைகளைக் கேட்ட இராஜகுமாரன், 'மலர் மங்கையை ஒத்த மடந்தையை எரித்த மகாபாவி நான்தான். நான்தான் அவள் கணவன். அவள் எந்த வழியே சென்றாள் என்பதைத் தாங்கள் சொல்ல இயலுமோ' என்று வருத்தத்துடன் சொன்னான். வழியில் காணப்பட்ட இராஜ குமாரன் அவள் சென்ற திசையைக் காண்பித்தான். அரச குமாரனும் தன் மனைவியைத் தேடிச் செல்லப் புறப்பட்டான். வழியில் நின்று அவளுக்காக ஏங்கிக்கொண் டிருந்தவன், 'ஏ வழிப்போக்கரே, உமது மனைவி உமக்குக் கிடைக்கும்படி நான் நாள்தோறும் கடவுளை நோக்கிப் பிரார்த்தித்துக்கொண் டிருப்பேன். அவள் உமக்குக் கிடைப்பாளாயின் எனக்கு அவளை ஒருதரம் காண்பித்துவிட்டுப் போக வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அதை நீ மறவாமலிருக்கும் பொருட்டு என் ஞாபகார்த்தம் இந்த இருப்புத் தடியைக் கொடுக்க எண்ணுகிறேன். இந்தத் தடிக்கு ஓர் அற்புத குணமுண்டு. யார் வசத்தில் இது இருக்கின்றதோ அது அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும். யாரையாவது புடைக்கவேண்டும் என்று எண்ணி, அவர்கள்மீது ஏவினால் அவர்கள் எங்கிருப்பினும் அங்கே சென்று அவர்களை நையப் புடைத்துவிட்டு வரும். இத்தகைய இருப்புத்தண்டம் உம்வசம் இருப்பின் உனக்கு உபயோகமாகும். இதை நீர் வைத்துக்கொள்ளும். என் வேண்டுகோளை மாத்திரம் மறவாதீர்' என்று சொல்லித் தன் இருப்புத் தண்டத்தை அவன் வசம் கொடுத்தான். மன்னவன் மகன் இருப்புத் தண்டத்தை வாங்கிக்கொண்டு அவனுக்கு வந்தனம் புரிந்துவிட்டு மேலே செல்லத் தொடங்கினான்.



20. நாள் பல சென்றன. தன் மனைவி போன இடம் இவனுக்குப் புலப்படவில்லை. ஆயினும் மன்னவன் மகன் தான் கொண்ட எண்ணத்தை மாற்றவில்லை. காடுகளையும் மலைகளையும் கடந்து போய்க்கொண்டேயிருந்தான். வழியில் அவன் ஒரு பாலைவனத்தை கடக்க நேர்ந்தது. அதற்கும் இவன் சலிக்கவில்லை. அதில் மிக வருத்தத்துடன் நடந்து போகும் போது அதன் நடுவே ஒரு சோலையும் தடாகமும் அவன் கண்ணுக்குப் புலப்பட்டன. வெயிலில் வருந்திய அவன், தடாகத்தையடைந்து கைகால்களைக் கழுவிக்கொண்டு நீர் அருந்தி சோலையின் ஒரு புறத்தில் இளைப்பாற உட்கார்ந்தான். அப்போது யாழோசை ஒன்று அவன் செவியிற்பட்டது. அவ்வோசை மிக இனிமையாக இருந்தமையின் அது எங்கே இருந்து வருகின்றது என்பதை அறிய அவ்வழியே சென்றான். சோலையின் ஒரு புறத்தில் முப்பது வயதுள்ள யௌவனபுருஷன் யாழ் வாசித்துக் கொண் டிருப்பதைப் பார்த்தான். அவ்வியாழோசையின் இனிமையால் பக்ஷிகளும், மிருகங்களும் அசைவற்று சித்திரம் போலிருந்தன. ஆடவனும் யாழ் வாசித்து முடிந்தவுடன், 'நான் ஒருதரம்தானே பார்த்தேன். மீட்டும் ஒருகால் என் கண்ணுக்குப் புலப்பட மாட்டாயா' என்று வருந்தினான். இவன் வருந்துவதைக் கண்ட அரசிளங் குமரன் அவனை, 'நீ யார்?' என்று வினவினான். யாழ் வாசிப்போன் 'யான் ஒரு வர்த்தகன் மகன், இந்த வழியே போய்க்கொண் டிருக்கும் போது யௌவனமும் அழகும் வாய்ந்தபெண் ஒருத்தி, 'நான் எரிந்து போகின்றேனே. நான் எரிந்து போகின்றேனே! என்னை யாரோ ஒருவர் கொளுத்துகின்றார்களே! என்னை யாரோ ஒருவர் கொளுத்துகின்றார்களே!' என்று சொல்லிக் கொண்டு போவதைப் பார்த்தேன். அதுமுதல் யான் இங்கேயே இருக்கின்றேன்' என்றான். அரசிளங் குமாரன் தன் வரலாற்றை வர்த்தகன் மகனுக்குத் தெரிவித்தான். வர்த்தகன் மகன் தன்வசத்துள்ள யாழை அவனுக்குப் பரிசாக அளித்து தன் இசையை கேட்டோர் யாவரையும் தன் வசப்படுத்தும் அரிய குணம் இதற்கு உண்டு என்று அதன் ஆற்றலையும் பகர்ந்தான். அரசிளங் குமாரன் வந்தனத்துடன் அவ் வியாழை ஏற்றுக்கொண்டு, தன் மனைவியைக் காணப்பெறின் அவனிடம் தன் மனைவியுடன் அவசியம் வருவதாக வாக்களித்து மேலும் செல்வானாயினான்.

21. மீட்டும் நாள் பல சென்றன. அரச குமாரனுக்கு வழியில் நேரிட்ட இடையூறுகள் எண்ணிறந்தன. ஒரு நாள் ஒரு மலைபடிவாரத்தண்டை அரசிளங் குமரன் வரும்படி நேர்ந்தது. அந்த மலையைக் கடந்தால்தான் அவன் மேலும் பிரயாணஞ் செய்யலாம். மனைவியைத் தேடிப் பிடிப்பதையே மேற்கொண்டவனாகையால் இடுக்கணுக்கு இளைக்காமல் அந்த மலையை ஏறத் தொடங்கினான். அம்மலை பனியினால் மூடப்பட்டு இருந்தது. பனி வழுக்கிய படியால் ஏறுவது அசாத்தியமாக இருந்தது அரசிளங் குமரன் சலிக்கவில்லை. மலையின் உச்சிக் கருகே சென்றபோது, 'நான் ஒருதரம் தானே பார்த்தேன். மீட்டும் ஓர்கால் என் கண்ணுக்குப் புலப்பட மாட்டாயா' என்று வருந்தும் சத்தம் அவன் செவிக்கு எட்டியது. இங்கு மங்கும் சுற்றிப் பார்த்தான். இக்குரல் எங்கிருந்து வருகிறது என்பதை அறிந்து கொள்ள இயலவில்லை. அரசிளங் குமரன் 'நிர்மானுஷியமான மலையின் மீது யார் இவ்வாறு வருந்துவது. அவன், அவ்வாறே துன்பமடையும் இன்னொருவன் கண்ணுக்குத் தோற்றுவது முறையன்றோ' என்று பலமாய்க் கூவினான் உடனே மெலிந்த தேகமுடைய ஆடவன் ஒருவன் மேற் சொல்லியவாறு பிதற்றிக்கொண்டு தன் கண்முன் வருவதை அரசிளங் குமரன் கண்டான். அவனை யார் என்று வினவியபோது, 'சிறிது காலத்திற்குமுன் யான் இந்தவழியே போய்க்கொண்டிருந்தேன். அப்போது ஓர் அழகுள்ளபெண் "நான் எரிந்து போகின்றேனே! நான் எரிந்து போகின்றேனே! என்னை யாரோ ஒருவர் கொளுத்துகின்றார்களே! என்னையாரோ ஒருவர் கொளுத்துகின்றார்களே" என்று கதறிக் கொண்டு போவதைப் பார்த்தேன். அது முதல் அவளையே நினைத்துக்கொண் டிருக்கிறேன்' என்றான். மலையின் மீதுள்ள ஆடவன் சொல்லியதைக் கேட்ட மன்னவன் மகன் தன் வரலாற்றை அவனுக்குச் சொல்லினான். மலையில எதிர்ப்பட்டவன், 'மன்னவனே, இந்தக் குல்லாவை ஏற்றுக்கொள். இதை அணிந்து கொள்பவன் யாவர் கண்ணுக்கும் புலப்படமாட்டான். அவனுக்கு மாத்திரம் எல்லாம் புலப்படும். இந்த அற்புதகுணம் பொருந்திய வஸ்து உனக்கு உபயோகப்படும்' என்று சொல்லி, குல்லாவை அரசகுமாரனுக்குக் கொடுத்தான். இராஜ குமாரன் வந்தனத்துடன் அந்தக் குல்லாவை ஏற்றுக்கொண்டு, மேலும் பிரயாணஞ் செய்யத் தொடங்கினான்.

(இன்னும் வரும்)

ஒரு தமிழ்ப் புலவர்.



# TEMPERANCE

## மதுபான விலக்கு

(முன் தொடர்ச்சி, பக்கம் - 48)

அன்பார்ந்த நண்பர்களே! மிஞ்சிய கேடுகளை விளைக்க வல்லதாகிய சதிமானமுள்ள மதுபானத்தால், நமது தேகம் கெட்டுப் போகும் விதங்களையும், மற்றும் ஏற்படக்கூடிய உலக நிந்தைகளையும், பழிபாவங்களையும் இன்னும் விரிவாயுரைத் திருக்கலா மெனினும், ஏதோ எம் சிற்றறிவுக் கெட்டிய மட்டில் சற்றுச் சொற்றனம். யாங் கூறிய சொற்ப விஷயங்களைக் கொண்டே மதுபானத்தின் தீமைகள் ஒருவாறு நன்கு விளங்கி யிருக்கும். இடுக்கண் நிறைந்த துடுக்கான மதுவைக் குடிக்கிற தெதனாலெனப் பார்ப்போம்:

1. உற்சாகமும் உவகையும் பெறவெனச் சிலர் அருந்துவார்கள்.

2. அதிக வேலைசெய்து களைப்படைந் திருக்கும்போது சிரமம் நீங்குவதற்காக அநேகர் மது உண்பார்கள்.

3. மனக் கவலையையும் வருத்தங்களையும் போக்கிக்கொள்ளப் பலர் கள்ளைப் பானம் பண்ணுவார்கள்.

4. நண்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கி இன்னும் சிலர் மதுபானம் செய்வார்கள்.

5. இலவசமாய்க் கிடைக்கும்போது ஏன் இதை விடவேண்டுமென வேறநேகர் குடிப்பார்கள்.

6. மருந்துக்காக வெனப் பலர் குடிப்பார்கள்.

7. வேலையற்ற சோம்பேறிகள் ஓயாமல் குடிப்பதையே தொழிலாகக் கொண் டிருக்கின்றனர்.

### மதுபானத்தை விலக்குவது எப்படி?

மதுபானம் செய்வதின் காரணங்களைப் பார்த்தோம். இனி மதுவை விலக்குவது எப்படி யென அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகையால், அதனைக் கவனிப்போம்.

(a) உவகையும் உற்சாகமும் பெறவெனச்சிலர் மதுவருந்துவார்கள். இவர்கள் மதுபான மென்றால் எப்பேர்ப்பட்டதென் றுணரார்போலும். மதுவுண்பதால் சிறிது நேரம் உற்சாகம் உண்டாகு மென்பது மெய்யே. ஆனால், வர வர மயக்கம் உண்டாவது திண்ணம். இவ் விஷயங்களை யெல்லாம் முன்பே கூறியுள்ளன மாகையால் இங்கு அதைப் பற்றிச் சொல்வது அனுவசியம். வருஷோற்சவங்களிலும், திருவிழாக்களிலும் தங்கள் குடும்பங்களில் ஏதாவது சுபகாரியங்கள் நடைபெறும் போதும் மது உண்பவர்கள் கவனிக்க வேண்டியதாவது: மது, களிப்பைத் தாராது. அதற்கு விரோதமாய் கேட்டைத்தரும், உற்சாகம் அடைய, விநோதமான விளையாட்டுக்களும், தமாஷான பேச்சு வார்த்தைகளும், நல்ல புஸ்தகங்களும் எத்தனையோ ஷமாக உதவும் அவைகளை விவரிக்கலா மெனினும் விஷயப் அவ க்கிற் கஞ்சி விடுத்தனம்.
ே தார

னே (b) அதிக வேலை செய்து களைப் படைந்திருக்கும்போது
வாறு நீங்குவதற்காக உபயோகிக்கிறவர்களே! நாடோறும்
குமர உழைக்கும் கூலிக்காரரே! களைப்பு நீங்கு மெனக்
கால
அப்ருந்த வேண்டாம். அது பெரிய அல்லலை உண்டாக்கு நாளபது திண்ணம். யாம் சொல்வதைக் கேளுங்கள்:— வேலை செய்து அலுத்துப் போயிருக்கும்போது நேரே வீட்டுக்கு வந்து வெந்நீர் ஸ்நானம் செய்து, குடிக்கும் காசைக்கொண்டு, நல்ல பலந்தரும் உணவுப் பதார்த்தம் வாங்கிச் சமைத் துண்டால் தேஹம் பலப்படுமல்லவா? வீட்டிலுள்ளவர்கள் சந்தோஷப்படுவார்களல்லவா? இரவில் நல்ல நித்திரை வருமல்லவா? ஆதலால் இந்த நல்ல முறையை விட்டு மதுவருந்துவதால் என்னென்ன கேடுகள் விளையும்! ஆதலால், நண்பரே! இனி மது அருந்த வேண்டாம்.

(c) மனக் கவலையும் வருத்தமும் உடையவரே! மனக் கவலையை மதுபானம் போக்குமோ? ஒருகாலும் போக்காது. மனக் கவலைதீர நல்ல சிநேகிதருடைய நட்பும் உற்சாகமாக தமாஷான பேச்சுகளும் ஏற்ற சாதகம். ஆகையால் வருத்தத்தை மது நீக்கு மென்பது அபத்தம். அம் மதுவை உட்கொண்டால் அதிக வருத்தம் உண்டாகும். இது அநுபவ சித்தம்.



(d) நண்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கி மது வுண்போரே! மதுவால் நீங்கள் நாணங்கெட்டு துன்பப்பட்டு வருந்தும் போது குடிகாரரான நண்பர் உதவுவார்களோ? நஞ்சையுண்டால் கட்டாயம் செத்துப் போவோமல்லவா? நஞ்சை நமது நண்பனொருவன் கொண்டு வந்து, இதை உட்கொண்டால் ஒரு கேடும் வராது, இதை உட்கொள்ளாவிடில் என் நட்பை இழந்து விடுவா யென்று சொல்லி, நஞ்சைக் கொடுத்தால், சாப்பிடுவீர்களோ? அப்படிப்பட்ட துரோகியான நண்பனை என்ன செய்வீர்கள்? உங்கள் மனச் சாக்ஷியைக் கேட்டால் திவ்யமான பதிலை யறிந்துகொள்ளலாம். நஞ்சு சரீரத்தைமட்டும் கொல்லும், மது சரீரம் ஆன்மா இரண்டையுங் கொல்லும்; நஞ்சுக்கு மருந்துண்டு, மதுவுக்கோ மருந்தில்லை யென்பதை நன்றாய் உணர்ந்து, நஞ்சினுங் கொடியதாகிய மதுவை யருந்துவதை விட, அந்த மதுவை உங்களுக்குக் கொடுக்கும் நண்பரை விட்டு விலகல் மாண்பன்றோ? ஆகவே, குடியருடைய நேசத்தை முற்றும் விலக்கவேண்டும்.

(e) இலவசமாய்க் கிடைக்கும் போது ஏன் இதை விட வேண்டு மென உண்பவர்கட்கும் மேற்கூறிய காரணத்தையே மீண்டும் உரைக்கின்றோம். 100 ரூபா கொடுக்கிறேன், இந்த சர்ப்பத்தினிடம் கடிபட்டு இறந்து போவென வொருவன் சொன்னால், பண ஆசைப்பட்டு பாம்பினிடம் கடிபடுவாயா? ஆதலால் பாம்பினும் பன்கு கொடியதாகிய மது இலவசமாய்க் கிடைக்கும் போது உண்பது புத்தியீனம் வேண்டாம் வேண்டாம். இனியாவது புத்தியாய் நடந்துகொள்ளுங்கள்.

(f) மருந்துக்காக வென மதுவை யுண்போர், மதுவின் விஷத்தன்மையை யுணர வேண்டும். மதுகலந்த மருந்து எதுவும் நச்சுத் தன்மையுடைய தெனக் கைதேர்ந்த வைத்யர்கள் கூறியிருக்கின்றனர். ஔஷதத்தில் எதற்காக வானாலும் சரி, மதுவருந்துதல் தீமையே. இப் பழக்கம் எப்படியாவது வேரூன்றி நிலைத்து விடும். 'தொட்டுப் பழக்கம் சுடுகாடு மட்டில்' ஆதலால் கவனியுங்கள்.

(g) ஓயாமல் குடிக்கும் வேலையற்ற சோம்பேறிகட்கு யாம் இதுகாறுங் கூறியுள்ள விஷயங்களையே நினைவு கூரட்டும். ஏதோ விளையாட்டுக்காக, காலப் போக்கில்லாமல், வேலை-

யற்றுப் போய் இவன் எழுதியிருக்கிறான். இவனுக்கு வேறு வேலையில்லையா? இதைக் கேட்டு யார் குடியை நிறுத்தப் போகிறது, என அநேகர் எண்ணுவார்கள். அவர்கட்கு ஏற்ற பதில் சொல்லப் புகின் பெருகுமென விரிவஞ்சி விடுத்தனம். அங்ஙனம் எண்ணுகிறவர்கள், அறியாமையினால துஷ்டருடைய வாளுக் கிரையாகும் சிறுவரை நோக்கி அந்த இடத்துக்குப் போகவேண்டாம், போனால் கட்டாயம் மடிவீர்களென வுரைக்கு மொருவனை துரை கொள்ளாது, மீட்டும் அவ்விடம் சென்று மடியும் சிறுவரைக் கண்டு களித்து, சிறுவரை எச்சரித்த மனிதனை வைது துரத்தும் மா கொடியரின் குருக்கள்தாம்.

இது நிற்க, மதுபானத்தை விலக்க யாங் கூறிய இக் காரணங்களுக் கெல்லாம் முக்கிய காரணம் ஒன்றுள்ளது. அதை யநுசரிப்பவர் க்ஷேம மடைவார்கள். அது அவரவரிடத்தே யுள்ளது. அஃதாவது, 'அவர்களின் மனதுதான்' 'மனமுண்டேல் வழியுண்டு' ஆ! எமது நண்பரே! நன்றாய்க் கண்டு பிடியுங்கள். இவ்வளவு கேட்டை விளைக்கும் மதுவை யருந்தல் எவ்வளவோ மதியீனம். உடனே பிரதிக்கினை செய்ய வேண்டும். நீங்கள் மதுவுண்பது சரியான காரியமா வென இருதயத்தில் கைவைத்து மனதைக் கேளுங்கள். நல்ல, நேர்த்தியான பதில் வரும். நேசரே 'இனி இன்றுமுதல் என்றும் மதுவை யருந்துவதில்லை, சத்தியமாய் அருந்துவதில்லை.' என்று உடனே வாக்குக் கொடுத்துக் கொள்ள வேண்டும். கொடுத்த வாக்கு யார் முன்னெனிலோ? சர்வ வியாபியான சர்வேஸ்வரன் முன்னிலையிலேயே. ஆதலால், உடனே பிரதிக்கினை செய்ய வேண்டும். மது உண்பவர் எவ்வளவு கண்ணுக்குக் கண்ணான நேயரா யினும் சரி, அவர்களின் சிநேகத்தை அறவே நீக்கவேண்டும். தந்திரமாய் வந்து உரையாடி மயக்கப் பார்ப்பார்கள். ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். விசேஷமாய் மதுபானக் கடைகளின் பக்கம் எக்காரணத்தைக் கொண்டும் போகக் கூடாது. போக நேரிடின், அந்தக் காந்தம் கட்டாயம் இரும்பு போன்ற குடியரை இழுத்துக் கொள்ளும். இது மெய்யாகவே நடந்த துக்ககரமான விஷயம். ஆதலால் அப்பக்கங்களில் போகவே கூடாது. பாடுபட்டு உழைக்கிறவர்கள், கருமமே கண்ணாயினார் ஆகிய இவர்களுக்கு கள்ளிச்சை உண்டாகாது.



நேயரே! யாம் முன்பு கூறியபடி அநுஸரிப்பதால் எண்ணிறந்த நன்மைகள் விளையும். நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் க்ஷேம மடைவீர்கள். நேயரே, இதனை அநேக முறை சாவதானமாய் வாசித்து யோசித்து மதுவைத் துவேஷித்துப் பயன் பெறுவீர்களாக! எல்லாம் வல்ல விறைவனி னருளால் மதுவின் தீமையை யாவரும் நன்றாய் உணர்ந்து, அதை முற்றும் நீக்கி இம்மையில் நோயற்ற வாழ்வும், சகல சௌபாக்கியங்களும், மறுமையில் வீடுபேறும் பெற்று வாழ்வார்களாக!

*N. B.*—இதனை யெமக்கு அரிதிற் கிடைத்த அவகாச காலங்களிற் றொகுத்து வரைந்தமையின் பிழைகள் பல விருத்தலுங் கூடும். நல்லறிவாள ரவற்றினைத் திருத்தி எம்மை மன்னிப்பாராக. இவ் வற்ப விஷயத்தை 'நல்லாசிரியனில்' பதித்து எம்மை மஹிமைப்படுத்திய ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியா ரவர்கட் கெமது முனமுவந்த வந்தன மளிக்கக் கடமைப் பட்டுள்ளேம். சுபம்! சுபம்!! சுபம்!!!

M. அடைக்கலசாமி,
ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல்,
திருநரையூர்.

## WAYSIDE REFLECTIONS: A STORY IN NATURE

## உலாவுகையில் உய்த்துணர்வு

சமீபகாலத்தில் ஒருநாள் யானும் எனது நண்பர்கள் பால் பிள்ளை யவர்கள் (Naturalist and Taxidermist), நரசிம்ஹம் பந்துலு அவர்கள் (Telugu Pandit, Queen Mary's College, Madras) ஆகிய இருவரும் ஓய்வுக் காலத்தில் மேரி மகாராணியார் கலாசாலைக்கு அருகிலுள்ள ஒரு சோலையில் உலவச் சென்றிருந்தோம். அங்கு உலவிக் கொண்டே இடந்தோறும் பார்த்து வருகையில் ஓர் இடத்தில் ஒரு குளவி (Wasp) அதிவேகமாகப் பறந்து திரிந்துகொண்டு இருந்தது. அதின் பரபரப்பைப் பார்த்ததும், அது என்ன செய்யப் போகிறது என்று அறிய எங்களுக்கும் ஆவல் உண்டாயிற்று. அதனால் அதன் செய்கையை விடாது கவனித்துக்கொண் டிருந்தோம்.

அக் குளவி அதிக ஊக்கத்துடன் பறந்துகொண் டிருக்கையில் பிள்ளைப் பூச்சி (Field Cricket) ஒன்று தன்னிடம் விட்டுத் தரையினின்றும் வெளியேவந்தது. அதைக் கண்டதும் குளவி அதன்மேற் பாய்ந்து தன் கால்களால் பற்றிக் கொண்டு, தன் உடலின் பின்புறத்திலுள்ள கொடுக்கினால் அப் பிள்ளைப் பூச்சியின் உடலில் கொட்டிற்று. அதனால் அப் பூச்சி துடிதுடித்து உயிர் சோர்ந்து பிணம்போல் கிடந்தது. நாங்கள் இருவரும் அப் பூச்சி இறந்ததென்றே எண்ணினோம். பால் பிள்ளை மட்டும் அது இறக்கவில்லை, மூர்ச்சையடைந்து செயலற்றுக் கிடக்கிறது என்றார். அநுபவமுள்ள அவர் சொல்லியும் எங்களுக்கு அவ்வளவாக நம்பிக்கை ஏற்படவில்லை.

பிறகு அக் குளவி முன்னிலும் பதின்மடங்கு வேகமாகப் பறந்து பூமியைப் பலவிடங்களிலும் தொட்டுப் பார்த்தது. முடிவில் ஓர் இடத்தில் ஒரு சிறு துவாரம் தோன்றியது. அந்தத் துவாரத்தைக் குளவி தன் கால்களால் ஆழத் தோண்டிற்று. பூமி உறுதியாக இருந்தமையால் விரைவில் பள்ளம் ஏற்படவில்லை. குளவி தன்னால் ஆனமட்டும் தோண்டிப் பார்த்தது. அது தோண்டும்போது மற்றொரு காரியத்தையும் விடாமல் செய்து கொண்டே யிருந்தது. அது என்னவெனில், குளவி பள்ளந் தோண்டிக்கொண்டு இருக்கையில் அடிக்கடி பிள்ளைப்பூச்சியண்டை வந்து அதன்மேல் உட்கார்ந்து விட்டுப் போய்ப் பள்ளந் தோண்டிக்கொண் டிருந்தது. அக் குளவி தன்னால் ஆனமட்டும் முயன்றும் அதற்கு இஷ்டமானபடி பள்ளம் ஏற்படவில்லை.

குளவி இவ்வாறு கஷ்டப் பட்டுக்கொண் டிருக்கையில், பிணம்போற்கிடந்த பிள்ளைப் பூச்சியைச் சில எறும்புகள் சுற்றிக் கொண்டன. மற்றும் சிறிது நேரத்திற்குள் எண்ணிறந்த எறும்புகள் அப் பிள்ளைப் பூச்சியைச் சூழ்ந்து பற்றிக்கொண்டு இழுத்துக் கொண்டு போயின. குளவி திரும்பவும் அந்தப் பிணத்தண்டை வந்தது. பிணமோ பிறர் வசத்தில் அகப்பட்டுக் கொண்டதைப் பார்த்தது. பகைவரோ பலத்திருக்கிறார்கள் என்பதைக் குளவி உணர்ந்து, இனி தான் அதன்மேல் ஆசை வைப்பது தகாதென்று எண்ணி விரைந்து பறந்து வேறோர் இடம் போய்விட்டது.



எமனுக்குச் சமமான எறும்புகளிடம் அகப்பட்டுக்கொண்ட பிள்ளைப் பூச்சி கொஞ்சம் கால்களை அசைக்கத் தலைப்பட்டது. எறும்புகள் அதைக் கண்டு இறுகப் பிடித்துக்கொள்ளத் தலைப்பட்டன. அதற்குள் பிள்ளைப் பூச்சி தூங்கி எழுந்தவன் போல் கால்களையெல்லாம் நன்றாய் உதறிக்கொண்டு உடலையும் அசைத்துப் புரட்டி, தன்னைப்பற்றிக்கொண்டிருந்த எறும்புகளையெல்லாம் துரும்புகளாகச் சிதறியடித்தது. எறும்புகள் அத்தனையும் சிதறிப்போய்விட்டன. எமன் கையில் அகப்பட்டு இன்னலடைந்த பிள்ளைப் பூச்சி தப்பிப் பிழைத்து அருகிலிருந்த ஒரு புழுதிக்குள் புகுந்து பிழைத்துப்போயிற்று. எமன் கையிலகப்பட்ட உயிர் தப்புமா என்னும் பழமொழிக்கு விரோதமாக இப் பிள்ளைப் பூச்சி, உயிர் பெற்று இன்பமடைந்ததன்றோ. ஆசிரிய நேசர்கள் இந்த நிதர்சனத்தால் சில உண்மைகள் நமக்குப் புலப்படுகின்றன. அவையாவன:

1. குளவி தன் இரையைக் கொன்றுவிடாமல், அதன் உடலில் விஷப்பிரயோகம் செய்து, அதைச் செயலற்றுக் கிடக்கச் செய்து, தன்னிடம் கொண்டுபோய் அதை உட்கொள்ளும் என்பது தெரிகிறது. இங்கே மற்றோர் உண்மையை உற்றுக் கவனிக்க வேண்டும். 'குளவி புழுவைத் தன் இனம் ஆக்குகிறது, என்னும் வாக்கியம் வழங்குகிறது. உயிர்நூற் புலவர்கள் இதன் உண்மையைக் கண்டறிந்து, 'குளவி தான் இடும் முட்டையிலிருந்து வெளிவரும் புழுவுக்கு ஆகாரமாக வெளியிலிருந்து ஒரு வகைப் பச்சைப் புழுவைக் கொண்டுபோய், தன் கூட்டில் வைக்கிறது. குளவி தன் கூட்டில் வேறு புழுவை வைக்கும் விதத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்: இந்தக் குளவி இந்தப் பிள்ளைப் பூச்சிக்கு விஷமூட்டியதுபோலவே, குளவிகள் தாம் கொண்டுபோகும் புழுக்களுக்கும் விஷப்பிரயோகஞ் செய்து, மயக்கமடையச் செய்து கூட்டிற்குள் கொண்டுபோய், அதற்கென்று திரட்டிவந்துள்ள களிமண்ணில் தான் கொண்டுவந்த புழுவை ஒட்டவைத்து, தன் கூட்டின் கதவை லேசாக மூடிவிட்டுப் போய்விடுகிறது. இவ்வாறு ஒட்டப்பட்டிருக்கும் புழு சிறிது நேரத்திற்குள் மயக்கந் தெளிந்து, இடம்விட்டுப் பெயர முடியாமல் தத்தளித்துக்கொண் டிருக்கும். இதற்குள் குளவி யிட்ட முட்டையிலிருந்து புழு வெளிவந்து, தன் தாய் தனக்கென்று அமைத்து வைத்துள்ள பச்சைப் புழுவாகிய உணவை

உட்கொண்டு, வளர்ந்து, சிறிது நாட்களில் சிறகடைந்து, கதவை உடைத்துக்கொண்டு வெளியே வந்து பறந்து போகிறது' என்று கூறுகிறார்கள். குளவி புழுவைக் கொல்லாமல் விஷப் பிரயோகஞ் செய்து அதை மயக்க வைத்து, மண்ணினால் ஒட்ட வைக்கிறது என்னும் விஷயம் நன்கு கவனிக்கத்தக்கது. குளவி தான் கொள்ளும் ஜந்துவின் சக்தியை உணர்ந்து அதற்கு ஏற்றபடி விஷப்பிரயோகம் செய்கிறது. அதிகமாக விஷமூட்டினால் அந்த ஜந்து இறந்துவிடும் என்பதும் குறைவாக விஷமூட்டினால் அந்த ஜந்து தப்பித்துக்கொண்டு போய்விடும் என்பதும் குளவிக்கு நன்றாகத் தெரியும். ரணவைத்தியர்கள் நோயாளியின் உடலைக் கீறிச் சிகிச்சை செய்ய வேண்டுமானால் நோயாளிக்கு மயக்கங் கொடுத்துக் கீற ஆரம்பிக்கின்றனர். அப்போது மயக்கங் கொடுக்க ஒரு வைத்தியரும் கீறுவதற்கு ஒரு வைத்தியரும வேண்டும். மயக்கங் கொடுப்பவர் அதி ஜாக்கிரதையாகக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கொடுத்துக் கொண்டே நோயாளியின் நாடியை பரீக்ஷித்துக் கொண்டே இருப்பார். அப்படிப்பட்ட திறமை இந்தக் குளவிக்கு இயற்கையில் அமைந்திருக்கிறது. உற்றுநோக்கினால் இந்தத் தந்திரத்தை வைத்தியர்கள் குளவி முதலிய ஜந்துக்களிடத்தினின்றே உணர்ந்திருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டு.

இது நிற்க, குளவி பிள்ளைப்பூச்சிக்கு விஷப்பிரயோகஞ் செய்துவிட்ட பிறகு துவாரஞ்செய்ய முயல்வானேன் என்று நீங்கள் எண்ணலாம். அது ஏன் எனின், தன் இரையை ஒரு க்ஷேமமான இடத்தில் சேமித்துவைத்து, பிறகு அதை உண்ண எண்ணங்கொண்டு அப்படிச் செய்கிறது என்று யாங்கள் எண்ணினோம். மிஸ்டர் பால் பிள்ளையவர்கள் 'அப்படியல்ல, குளவி தான் முட்டையிடும் சமயம் நேர்ந்தபோதுதான் இவ்வளவு பரபரப்பாக வேலைசெய்யும். அதனால், இந்தப் பிள்ளைப் பூச்சியைத் தக்க இடத்தில் சேமித்து, அதன்மேல் முட்டையிட்டுப் போய்விடும். பிறகு அந்த முட்டையிலிருந்து புழு வெளிப்பட்டு இந்தப்பிள்ளைப் பூச்சியைத் தின்று வளர்ந்து சிறகடைந்து போகும்' என்று கூறினார். பிறகு அது உண்மையென்றே எங்களுக்கும் பட்டது. அவரே மற்றொரு நியாயமுங் கூறினார். அது என்னவெனில்,' பிள்ளைப்பூச்சியைக் கண்ட குளவி அதைவிஷமூட்டிக் கிடக்கச்செய்து, அது தங்கியிருந்த இடம்



சமீபத்திலேயே இருக்கும் என்று தடவிப்பார்த்து அங்கே இன்னும் சில பூச்சிகள் இருக்கும் என்று எண்ணுகிறது' என்றார். பின்னால் சொன்ன அவ் விஷயம் அவ்வளவு உண்மை யென்று புலப்படவில்லை. கிடைத்ததை விட்டு கிடைக்காததற்கு இப்படி முயன்று, இருந்ததையும் போக்கடித்துக்கொள்ளுமா—இராது.

குளவி தன் இரையை விஷமூட்டிக் கொன்றுவிடாமல் என் மயக்கம் கொள்ள வைக்கிறது என்று நீங்கள் சந்தேகிக்கலாம். அந்த இரையைத் தான் உட்கொள்ளுவதானாலும் தன் குஞ்சுகளுக்காக அமைத்து வைப்பதனாலும் அந்த இரை கெடாமல் இருக்கவேண்டும். அதனால் அப் பூச்சியைக் கொன்றுவிட்டால், தான் இடும் முட்டையினின்றும் புழு வெளிப்படு முன் அந்த இரை அழுகிக் கெட்டுவிடும். அதனால் தன் முட்டைக்கும் புழுவுக்கும் நாசம் நேரிடும் என்பதைக் குளவி உணர்ந்திருக்கலாம். தான் உடனே உட்கொள்ள வேண்டுமானால் ஒருகால் அதைக் கொன்று தின்னவுங் கூடும்.

குளவி பள்ளந் தோண்டும்போது அடிக்கடி பிள்ளைப் பூச்சியண்டை வந்து அதைத் தொட்டுப்பார்த்து விட்டு போவது எதற்கு என்று நினைப்பீர்கள். அதற்கு இரண்டு நியாயங்கள் தோன்றுகின்றன. ஒன்று — தான் அந்தப் பூச்சியைச் சேமித்து வைப்பதானால் அதைப் புதைக்கப் போதுமான பள்ளம் ஏற்படுகிறதா என்பதை உணர அடிக்கடி அந்தப் பூச்சியின் உடல் அளவை அளந்து பார்க்கிறது என்று கூறலாம். இன்றேல், தான் தேடிய இரையை வேறெவரும் கவர்ந்து கொண்டு போகாதபடி அடிக்கடி வந்து கவனித்துக்கொள்ளுகிறது என்பது மற்றொன்றாக இருக்கலாம். அன்றி, அப்பூச்சி மயக்கந் தெளிந்து போய்விடப் போகிறது என்று கவனிக்கவும் இருக்கலாம். அன்றி அம்பூச்சி மயங்கந் தெளிந்து போய்விடப் போகிறது என்று கவனிக்கவும் இருக்கலாய்.

இப்படியே இன்னும் அநேக அரிய விஷயங்கள் இந்த ஆராய்ச்சியால் விளங்குகின்றன. ஆசிரிய நேசர்காள் வெளிப் பாடம் போதிக்கப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு போகும் போது இத்தகைய அரிய விஷயங்களை ஆராய்ந்து அறியத் தூண்டவேண்டும். அந்த விஷயங்களையே பாடசாலையில் வியாசமாக எழுதச் செய்தால் விஷய உணர்ச்சியும் வியாசம் எழுதும் முறையும் நன்கு அமையும்.

பத்திராதிபர்.

நல்லாசிரியன்

VOL. 13] JUNE 1917 [NO. 1 PAGE 14

## பிழை திருத்தம்.

2. கணக்கு — $96 \div 8$.

| | |
|---|---|
| $(a)\ (b)\ (c)$<br>$8)\ 96\ (12$<br>$8$<br>$16$<br>$16$<br>$0\ (d)$ | இதில் $(a)$ அல்லது 8 "வகுக்கும் எண்"<br>$(b)$ ,, 96 "வகுக்கப்படும் எண்"<br>$(c)$ ,, 12 "ஈவு"<br>$(d)$ ,, 0 "மீதி" |

என்று பெயர்.

ஷை வகுத்தல் கணக்கை சரி பார்க்கும் வழி.

$a = b \div c = 96 \div 12 = 8$

அல்லது $(b - d) \div c = (95 - 0) \div 12 = 8$

$b = a \times c = 8 \times 12 = 96$

அல்லது $c \times a = 12 \times 8 = 96$

அல்லது $(a \times c) + d = (8 \times 12) + 0 = 96$

$c = b \div a = 96 \div 8 = 12$

அல்லது $(b - d) \div a = (96 - 0) \div 8 = 12$

$d = b - (a \times c) = 96 - (8 \times 12) = 0$

அல்லது $b - (c \times a) = 96 - (12 \times 8) = 0$

பிள்ளைகள் இந்த வழிகளைக் கொண்டு வகுத்தல் கணக்கை தாமே சரிபார்க்கப் பழகச் செய்தல்.

ஷை கோடிட்ட இடத்தில் $\times$ குறிக்குப் பதில் $+$ குறியாக திருத்திக்கொள்க.

S. GOPALA ROW,
*Assistant, Board Muhamadan,*
*Elementary School, Aravakurchi,*
*Karur Range.*

1 - DEC 1917
MADRAS




மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1917ஆ அக்டோபர்மீ | மாதம் 5

## A TALE IN TAMIL VERSE

### நாயினுங் கடையேன்

1. முக்குறும் பெறிந்து மனநிலை கண்ட
முதல்வனே முனிவர்நா யகனே
இக்கணம் பற்பன் முறைவலம் வந்தே
இழிதகை யுற்றிவ ணெய்தும்
குக்கலைப் பரவி யிருகரங் கூப்பிக்
குலவிட நின்றனி றென்னே
மக்களுண் மிக்க மாதவத் தவரோர்
மாவினை வணங்கலு மரபோ.

2. என்றொரு நாளை வணங்கியே நின்ற
இருமறைத் தலைவனை யெய்தி
நன்றிசேர் நகர மானிடர் சில்லோர்
நவின்றனர் முனிவரர் நாதன்
கன்றிய கருத்தாற் குக்கலென் றிதனைக்
கழறினீர் பண்பினைக் கருதிர்
ஒன்றிய வருளா னிறையவன் படைத்த
வுயிர்களு ளீதுமொன் றன்றே.

3. இறையவன் படைப்பி லெய்திய வுயிர்க்குள்
ஏற்றிழி வென்பது முண்டோ
குறையுறு மியல்பின் மானிட ரேயிக்
கொள்கையாற் குறையுறு கின்றார்
நிறையுறு மான்ற கருணையே யுருவாம்
நிமலனுக் கோரமு முண்டோ
கறையுறு மனத்தான் மானிட ரேயிக்
கதிக்கெலாங் காரண மாவர்.

4. எவ்வகை யுயிரு மிறையவன் படைப்பின்
இயல்பினை மாறிடா திருந்து
ஒவ்விய வகையிற் றம்முயி ரோம்ப
உற்றநன் னெறியினை யுணர்ந்து
செவ்விசேர் கால முறையினுக் கேற்பச்
செய்கையும் வேறுறத் திகழ்ந்து
திவ்விய ஞான நாயகற் கணித்தாத்
திகழ்தர விளங்குவ வன்றே.

5. உணவெலா மியற்கை யுணவதே கொண்ட
உடையெலா மியற்கை யினுடையே
வணமெலா மியற்கை வண்ணமே நாளை
வருவதும் சென்றதும் கருதும்
எணமெலா மின்றிக் கண்டதை யுண்டே
ஏற்றிழி வின்றியே வாழும்
குணமெலாங் கொண்ட மாந்தரே நாமிக்
கொள்கையை யடைந்த னங்கொல்லோ



6. மானிட ருண்ணும் உணவெலாம் செயற்கை
மற்றவ ருடையெலாம் செயற்கை
மானிட ரெய்து முணர்வெலாம் செயற்கை
வகையுறு செயலெலாம் செயற்கை
மானிடர் கொள்ளும் கொள்கைகள் நாளும்
மாறிடும் செயற்கையா மிந்த
மானிடர் தமையோ வுயிர்களுண் மிக்க
மாண்பின ரெனவகுப் பதுவே

7. எனமுனி கூறக் கேட்டவ ரிதயத்
திவ்வியல் நன்றென வெண்ணி
மனமினை யறுத்த மாண்டவ ரேறே
வாய்மையே யுரைத்தனி ரெனினும்
கனவென வுலகைக் கண்டநம் போல்வார்
கருத்துறத் தமையிழித் திடுங்கால்
இனமுறு வழக்கிங் கிரண்டினும் நாயேன்
என்றிதைக் காட்டலு மெவனோ.

8: விளங்கிட வுரைமி னெனவிரந் தவர்தாம்
மெய்யுணர் வெய்திட முனிவன்
களங்கமில் வகையா னுரைக்குவேன் கேண்மின்
கைதவ மற்றநற் பெரியார்
உளங்கொளும் வகையான் றம்மியல் கண்டு
ஒப்புமை கொண்டுரைத் திடுங்கால்
வளங்கொள நாயேன் நாயினுங் கடையே
னெனவுரைத் திடுதலும் வழக்கே.

9. ஒருமுறை யுண்டு நறுங்கலை கண்டு
உள்ளுறக் கொண்டதை யொருகாற்
பெருகுறக் கற்று மற்றதை வெறுக்கப்
பெற்றிலா ததனையும் புதிதா
அருகுறக் கொண்டே யார்வமோ டருந்தி
யகமகிழ் வார்குண மிந்தத்
திருகுறு முலகில் நாயினுக் கன்றே
சேர்ந்திடல் காண்குது மன்றே.

பத்திராதிபர்.

# BOTANY

## தாவர சாஸ்திரம்

(முன் தொடர்ச்சி பக்கம்-53)

### வேர்கள் சேகரிக்கும் உணவு

செடி வைத்து வளர்ப்பவர்கள், அதற்குக் காலமறிந்து வேரண்டை நீரை வார்க்கிறார்கள். இதனால் செடி வளர்வதற்குத் தண்ணீர் முக்கிய ஆதாரம் என்பது விளங்கும். செடிகள் உணவைக் கொள்வதற்கு ஏற்ற வாய்கள் வேரில் அமைந்திருப்பதனால் தண்ணீரை வேரில் வார்க்க வேண்டியது அவசியம் என்பதும் தெளிவாகிறது. இனி, தாவரத்திற்கு வேண்டிய உணவு நீர் மாத்திரமா — வேறு வஸ்துக்களும் வேண்டுமா என்பதை இங்குக் கவனிக்க வேண்டும்.

எந்த வுயிரும் தனக்கு உணவாக ஏதேனும் கனபதார்த்தத்தை உட்கொண்டு, பிறகு தண்ணீர் குடிக்கிறது. ஆடு மாடுகள் புல்லைத் தின்று தண்ணீர் குடிக்கின்றன. மனிதர் தமக்கு வேண்டிய உணவை உட்கொண்டு தண்ணீர் அருந்துகின்றனர். பட்சிகளும் தமக்கு வேண்டிய இரையை உட்கொண்டு பிறகு தண்ணீர் குடிக்கின்றன. உயிர்கள் உட்கொள்ளும் உணவைத் தண்ணீர் கரைத்து சுலபமாக ஜீரணிக்கச் செய்கின்றது.

சிசுக்கள் முதலில் கனபதார்த்தத்தை உட்கொண்டு ஜீர்ணித்துக் கொள்ளச் சக்தியற்றிருப்பதால், கடவுள் அவற்றின் சக்திக்கு ஏற்றவாறு பால் உணவை அமைத்திருக்கிறார். பாலில் நீரும் வேறு உணவுப் பொருளும் கலந்திருக்கின்றன.

இனி மரவுணவைப் பற்றி ஆராய்வோம். மரத்திற்கு உணவாக நாம் தண்ணீர் வார்க்கிறோம். அந்தத் தண்ணீர் பூமியில் சுவறி மரத்திற்கு ஆகாரமாகிறது. வெறும் தண்ணீர் மட்டும் அதற்கு ஆகாரமாவதில்லை. ஏனென்றால், ஒரு செடியை வேருடன் பிடுங்கி ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அதில் அந்தச் செடியை நாட்டி வைத்தால் அது இரண்டொரு நாட்களில் வாடி அழுகிப் போய்விடும். இதனால் செடிக்குத் தண்ணீர் மட்டும் ஆகாரமாகப் போதாது என்பது விளங்குகிறது. செடி பூமியில் நிலைத்திருக்கும்போது வேரண்டை நீரைவிட்டால் அது செழித்து வளர்கின்றது. அதனால் செடி நீரின் உதவியைக் கொண்டு பூமியினின்றும் ஏதோ சில பொருள்களை உட்கொள்ளுகின்றது என்பது நிச்சயம்.



162014

பூமியில் ஒருவகைச் சுண்ணாம்பும் உலோகப் பசையும் இருக்கிறது. அந்தப் பொருள்கள் தண்ணீர் சம்ப[illegible] கரைந்து ஒருவகைக் குழம்பாகிறது. அந்தக் குழம்பான சாரத்தையே செடிகள் தமக்கு உணவாகக் கொள்கின்றன.

செடிகள் பயிரிடப்படும் இடத்தில் அதற்கு வேண்டிய சாரம் இல்லாவிட்டாலும், இருக்கும் சாரத்தில் போதுமான அளவு கிடைக்காவிட்டாலும் தாவரங்கள் செழித்து வளரமாட்டா. அதனால்தான் அவற்றிற்கு அடிக்கடி எருவிட நேரிடுகின்றது. எருவிலுள்ள சாரம் தண்ணீரில் கரைந்து செடிகளுக்கு உணவாகின்றது.

நாட்டில் பயிரிடப்படும் செடிகளுக்குத்தான் இவ்வளவு பக்குவம் செய்கிறோம். காட்டில் பயிராகும் செடிகளுக்கு யார் இப்படிச் செய்கிறார்கள் என்று நீங்கள் எண்ணலாம்.

இயற்கையாக விட்டால் எதுவும் நன்றாக இருக்கும். செயற்கையாகச் செய்யும்போதுதான் இடையூறுகள் எல்லாம் ஏற்படுகின்றன.

நாட்டிலுள்ள பூமி, மனிதர்கள் அடிக்கடி பயிர் செய்வதால், இயற்கை வளம் குறைந்துவிடுகிறது. காட்டிலுள்ள பூமியோ இயற்கை வளம் மாறாமல் இருக்கிறது. இதுவுமன்றி மற்றும் சில நியாயங்களும் உண்டு. அவற்றைக் கூறுவோம்:

வெய்யிற் காலத்தைவிட மழை காலத்தில் தாவரங்கள் செழித்து வளர்கின்றன. மழைநீர் பூமிக்கு மேலுள்ள பலவித அழுகிய பதார்த்தங்களைக் கரைத்து பூமிக்குள் கொண்டுபோகின்றது. அதனால் அக் காலத்தில் தாவரங்கள் தமக்கு வேண்டிய வுணவை ஏராளமாகப் பெறுகின்றது. அன்றியும் மழைநீர் சுவறும்போது பூமி யிளகி ஆகாயத்தையும் கிரகித்துக் கொள்ளுகின்றது. அதுவும் தாவர வளர்ச்சிக்கு அதிக உபயோகமாகின்றது. இவ்வகையில் பூமிக்குள்ளிருக்கும் நாகப்பூச்சி முதலிய ஜந்துக்களும் தவரங்களுக்கு அதிக உதவி செய்கின்றன.

பத்திராதிபர்.

# DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

## A FEW HOME-MADE REMEDIES AGAINST SOME COMMON PLANT PESTS.

## செடிகளை நாசம்பண்ணும் சில சாதாரண பூச்சிகளைக் கொல்வதற்கு எளிதில் வீட்டில் செய்யக்கூடிய ஔஷதங்கள்.

சென்னை ராஜதானியில் பற்பலவிடங்களிலிருந்து, காய்கறி தோட்டங்களிலும் பூ, பழவகை தோட்டங்களிலும் சேதத்தை உண்டு பண்ணும் சாதாரண பூச்சிகளை போக்கடிக்கும் பரிகார முறைகளை தெரிவிக்கும்படி அடிக்கடி எமக்கு கடிதங்கள் வருவதுண்டு.


ஆகையால், பின்வரும் சில முறைகள் இப்பேர்ப்பட்ட தொந்தரவு செய்கின்ற பூச்சிகளை அப்புறப்படுத்துவதற்கு கொஞ்சம் ஏதுவாயிருக்கு மென்பதற்கு ஐயமில்லை.

தொந்தரவு செய்யக்கூடிய பூச்சிகளில் சாதாரணமானவைகள் பின்வருவன —

(i) செடிப்பேன் அல்லது அசுவுணி — இவை இயற்கையாய் எல்லாவித மரம், செடிகளிலும் இருப்பவை. சாதாரணமாய் செடியினது துளிர்களிலும், கொம்புகளிலும், கொழுந்து இலைகளிலும், மொக்கு, பூ முதலானவற்றிலும் கூட்டம் கூட்டமாய் காணலாம். அவைகள் உறுஞ்சும் பூச்சிகள், ஆனதினாலே மிருதுவான இடங்களிலிருந்து செடியின் சாரத்தை உறுஞ்சுகிறது. ஒரு செடியில் அதிகமாய் இப்பூச்சிகள் காணும்பொழுது இலைத்துளிர்களும், மொக்குகளும் அதிக நஷ்டத்தை யடைகின்றது. இலைகளும் சுருங்கி, துளிர்விடுவதும் நின்று பூச்சியினால் பீடிக்கப்பட்ட பாகங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் காய்ந்து கடைசியில் செடியே பட்டுப்போகின்றது.



சற்றுநேரம் இந்தச் செடிப்பேனை உற்றுப் பார்ப்போமாகில், அதற்கு 6 கால்களும், 2 மீசைகளும், தலையின் அடிப்பாகத்தில் ஊசிபோன்ற ஒரு ஆயுதமும் காணலாம். (இதை படத்தில் பார்க்க)



இதைத்தவிர அதன் உடலின் பின்பாகத்தில் ஒவ்வொரு பாகத்திலும் ஊசிபோன்ற சிறு குழாய்களுண்டு. இவைகளுக்கு தேன் துவாரங்களென்று பெயர். பூச்சியானது இத் துவாரங்களினின்று தேன்போன்ற மதுரமான சாற்றை வெளியாக்குகிறது. இதுகாரணத்தால் எறும்புகள் அவ்விடங்களை அதிகமாய் நாடி வரும். எறும்புகள், விளையும் பயிர்களுக்கு கெடுதி விளைவிப்பது மிக்க அபூர்வம். எறும்புகள் அதிகமாய் செடிகளின்பேரில் காணப்படும்போது அவைகள் செடிப்பேன் அல்லது அசுவுணியைத் தேடித்திரிகிறதென்று நிதானிக்கலாம். செடிப்பேன் கூட்டத்தின் பெரும்பான்மை ஜந்துக்களுக்கு இறகுகள் கிடையா. ஆனால் மெதுவாய் ஊரும் சக்தியுடையது.

மொச்சைச் செடி சாதாரணமாய் இப்பேனினால் அதிகமாய் பீடிக்கப்படும் செடிகளிலொன்று. ஆயிரக்கணக்கான பேன்கள் இளஞ்செடிகளையும், துளிர்களையும், பூக்களையும் முற்றிலும் மூடியிருப்பதை அடிக்கடி காணலாம். இப்பூச்சியினால் சாதாரணமாய் பீடிக்கப்படக்கூடிய செடிகளாவன —

பருத்தி, புகையிலை, கத்தரி, முட்டைக்கோஸ், முள்ளங்கி, அகத்தி முதலானவை.

(ii) மாப்போன்ற பூச்சி — செடிப் பேனைப்போல இவைகளும் செடியின் சாரத்தை உறுஞ்சும் பூச்சிகள். ஆனால் அவைகள் வடிவத்தில் வித்தியாசமானவை. இவைகள் மிருதுவான தேகத்தோடு கூடியதும், ஒருவித பட்டுபோன்ற தூளினால் மூடப்பட்டு மிருக்கும் சில பிராணிகளில் இப்பட்டுடை மிகுதியாயும் இன்னம் சிலவற்றில் குறைவாயும் மற்றவைகளில் அந்த ஜந்துவின் உடம்பிலிருந்து கிளம்பும் அநேகமான சிற்சில முளைகளாய் காணப்படும்படியாயும் அப்பட்டுடையினால் மூடப்பட்டுள்ளது.



ஆனதுகொண்டு இப்பூச்சிக்கு மாப்பூச்சி என்று பெயர். இந்தப்பூச்சியின் ஒருமாதிரி, சாதாரணமாய் பூச்செடிகள் ரோஜா இன்னும் மற்ற தோட்டத்தின் செடிகளிலும் வெள்ளை வெள்ளையாய் புலப்படும். (படம்பார்க்க) அநேக ரகங்கள் நிறைந்துள்ள இப்பூக்சிகள் பருத்தி, கத்திரி, மா, கரும்பு, அன்னாசி, தக்காளி முதலியவற்றில் அதிகமாய்க் காணலாம்.

(iii) செதிள் பூச்சி — பழக்க வழக்கங்களில் இப்பூச்சிகள் மேற்கூறிய இரண்டு பூச்சினங்களைப்போல உறுஞ்சுகிறவைகளேயாயினும் பார்வையில் அவைகள் ஜீவனில்லாதவைப்போலத்



தோன்றும். இப்பூச்சிகள் தங்கள் பிராயத்தில் செடிகளில் ஒட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மை சிலாம்புபோலக் காணப்பட்டு செடியின்மேல் மூடப்பட்டிருக்கும். அவைகள் இளந்துளிர்களையும், மரக்கிளைகளையும், நடு மரத்தையும் நாசம் பண்ணும். இவ்விதப்பூச்சியினால், பழவிருக்ஷங்களும், காப்பி, தேயிலைபோன்றபயிர்களும் மிச்சமாய் சேதமடைவதுண்டு. இப்பூச்சினத்தில் அதிகமாய் அறியப்பட்டவை காப்பிச் செடியில் விழும் தவிட்டு நிறமுள்ள பூச்சியும், பச்சை வர்ணமுள்ள பூச்சிகளுமே. இன்னம் மற்றவை கொய்யா, வேப்பு, கருவேல், மா, மற்றும் பல சாதாரண மரங்களிலுங் காணப்படும் (படம் பார்கக்) இந்தப் பூச்சிகளெல்லாம் ஏராளமாயும் அதிசீக்கிரமாயும் பெருகக்கூடிய சக்தியுடையது. ஆனது பற்றி அவைகளைமுதலிலேயே, பெருகவிடாமல் தடுக்கவேண்டும். இல்லாவிடில் அவைகள் ஏராளமாய் நஷ்டத்தை விளைவிக்கக் கூடியன. அந்த நஷ்டத்தை தடுப்பதற்கு பின்வரும் எளிதில் வீட்டில் செய்யக் கூடிய ஔஷத முறைகள் அதிக அநுகூலமானவை —



சீமை எண்ணெய் ஔஷதம் — இதை செய்யும் முறை — 1 அல்லது $1\frac{1}{2}$ பவுன் சாதாரண மட்ட சவுக்காரத்தை $2\frac{1}{2}$ படி (பட்டணம் படி தண்ணீரில் கரைத்து அடுப்பேற்றி, நன்றாய் கொதிவந்தவுடன் அடுப்பிலிருந்து எடுத்துவிட்டு கொஞ்சம் கொஞ்சமாய் 5 படி

சீமை எண்ணெய் அதில் விட்டுக்கொண்டே ஒரு குச்சியினால் முழுவதும் வெள்ளையாகும் வரையிலும் கலக்கவேண்டியது. இப்படிச்செய்த இந்த மருந்தை, உறிஞ்சும் பூச்சிகளை நாசம் பண்ண செடிகளில் பிரயோகிக்கும்போது 150 படி தண்ணீர் கலக்கி உபயோகிக்க வேண்டியது. மருந்தை, கொஞ்சம் ஜலம்விட்டோ, அல்லது அதிகம் ஜலம்விட்டோ, சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் உபயோகிக்கலாம். உப்பு ஜலமாயிருந்தால் சவுக்காரம் எளிதில் கரையாது. அதிக சவுக்காரம் தேவையாயிருக்கும். இந்த மருந்து அசுவணி, செடிப்பேன் முதலிய மிருதுவான தேகத்தோடுகூடிய பூச்சிகளை நாசம்பண்ண 150 அல்லது 175 படி தண்ணீரில் கலக்கி நல்ல பலன் உண்டாகும்படி உபயோகிக்கலாம். கெட்டியான தேகமுடைய பூச்சிகளுக்கும் இலைகளின் சிறு தத்துப் பூச்சிகளுக்கும் அதிக காரமாக இம்மருந்தை உபயோகிக்கவேண்டும். அதாவது 75 அல்லது 100 படி தண்ணீர்மாத்திரமே விட்டுக் கலக்கவேண்டியது. இம்மருந்து எலிப் புழுவுக்கும் கால்நடைகளின் சிரங்குமுதலான பூச்சி சம்பந்தமான வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம்.

புகையிலைமருந்து — இதை செய்யும் முறை—1 பவுன் புகையிலையை (கவைக்குதவாத புகையிலைத் தூளும் தண்டும் போதுமானது 2½ படி தண்ணீர் போட்டு அரைமணி நேரம் காய்ச்சி இறக்கி வைத்துக்கொள்ளலாம். அல்லது காய்ச்சாமல் ஒரு நாள் முழுவதும் புகையிலையை ஊறவைத்து சாற்றை எடுத்து வைத்துக்கொள்ளலாம். இதில் கால் பவுன் சவுக்காரத்தைப் போட்டுக் கரைக்கவும். இப்படிச் செய்த மருந்தை செடிகளின்பேரில் பிரயோகம் செய்யுமுன் 6 அல்லது 7 மடங்கு தண்ணீரில் கலக்கவும் இம்மருந்து சீமை எண்ணெய் நாற்றம் பிடியாதபடி, அசவணி, மாப்பூச்சி இவைகளை போக்கடிக்கவேண்டிய தருணங்களில் அதி உபயோகமானது. அதாவது கீரை முதலிய இலைகளில் சீமை எண்ணெயை உபயோகித்தால் சாப்பிடமுடியாது. அவ்வித தருணங்களில் இம்மருந்தை உபயோகப்படுத்தலாம். புகயிலைச்செடி செடிப்பேனினால் பிடிக்கப்படும்போதும் இதை உபயோகிக்கலாம்.

கெடுதல் செய்யும் பூச்சிகளில் பிச்சுமானவைகளைத் துரத்துவதற்கு செடியின் பக்கத்திலுள்ள மண்ணில் உலர்ந்த புகையிலைத் தூளை பிரயோகிக்கலாம்.



கீரை, முட்டைகோஸ் முதலிய உணவுக்குரிய இலைக்கறி செடிகளில் சீமை எண்ணெய் அல்லது புகையிலை ஔஷதத்தை உபயோகப்படுத்தினால் துர்நாற்றம் அநேகநாள் இருக்கக்கூடியது. ஆதலால் அப்பேர்ப்பட்ட செடிகளுக்கு உபயோகப்படுத்த பின் வரும் பரிகாரமுறை நல்லது. ஆனால் அநேகநாள் தாங்காது.

சவுக்காரமருந்து — கால் பவுன் மருந்தை 2½ பட்டணம் படி தண்ணீரில் கரைத்து, ஒருவாரத்தில் அல்லது 3 தடவை உபயோகப்படுத்துவது.

நாப்தலீன் — செடிப்பேனுக்கு நாப்தலீன் மருந்தை பொடித்து இரண்டுபங்கு சாம்பலுடன் கலக்கி பேன்விழுந்த விடங்களில் தெளிப்பது. இம்மருந்தை விடியற்காலம் இலைகள் பனியினால் நனைந்திருக்கும்போது உபயோகப்படுத்த வேண்டியது. அல்லது குளிர்ந்த ஜலத்தை முதலில் தெளித்து, அதன்பிறகு மருந்தை பிரயோகிக்க வேண்டியது. அப்படி செய்தால்தான் மருந்து பூச்சியின்பேரில் ஒட்டி, அதிக குணம் செய்யும். நாப்தலீன் மருந்தின் அனுகூலமென்னவென்றால் அது தீங்கற்றது, பூச்சிகளை கொல்வதில் திறமுடையது. 24 மணிநேரத்தில் செடியின்மேல் பட்டவிடங்களில் வாசனைகூட இல்லாமல் ஆவியாய் மாறிவிடக்கூடியது. கொஞ்சம் செடிப்பேன்களுக்கு மேல்தோல் தடித்திருக்கும். ஆனதுபற்றி சீமை எண்ணெய் மருந்து உபயோகமில்லை. அதற்குபதிலாக ரோசின் மருந்தை உபயோகிக்கலாம்.

அதை செய்யும் முறை — ஒரு பாத்திரத்தை அடுப்பேற்றி அதில் 2 பவுன் ரோசினும் 1 பவுன் சோடா உப்பும் பொடித்துப் போட்டு அதை மூடும்படியாக தண்ணீர்விட்டு அவை முழுவதும் கரையும் வரைக்கும் கொதிக்க வைத்து, கொதிக்கும்பொழுது கொஞ்சம் கொஞ்சமாய் 7½ பட்டணம் படியாகும்படி குளிர்ந்த ஜலம் விட்டு, மருந்தானது சுத்தமாகவும், இலேசாயும், பாகு நிறமாகும்வரைக்கும் காய்ச்சி இறக்கிவைக்கவும். அப்படி இறக்கிவைத்த மருந்தில் ஒன்றுக்கு 7 மடங்கு தண்ணீர்விட்டு பிரயோகம் செய்யவேண்டியது. மருந்து இன்னம் கெட்டியாகவேண்டியபொழுது, ஜலத்தை கொஞ்சமாகவும் விட்டு உபயோகப்படுத்தலாம் இம்மருந்து (செடிப்பேன்) விழுந்த விடங்களில் பிரயோகம் செய்யும் பொழுது பூச்சியின்பேரில் நுரைபோல்போய் மூடி, கொஞ்சம் உலர்ந்தவுடன் பூச்சியின்மேலுள்ள மூச்சுத்துவாரங்களை

முழுவதும் மூடிக்கொள்வதினால் அவைகளைச் சாகச் செய்யும். மற்றும் இப்பூச்சிகளை கொல்வதற்கு தயார்செய்து விற்பனை செய்யப்படும் ஔஷதங்கள் பல. அதிக மருந்து வேண்டியகாலத்தில் அவைகளை வாங்கி உபயோகிக்கலாம். அவைகளில் முதன்மையானது குரூடாயில் எமல்ஷன் என்பதும் (crude oil emulsion) மீன் சோப்பெண்ணெய் (fish oil soap) மருந்துமே. சீமை எண்ணெய் மருந்து முதலான, பூச்சிகளைக் கொல்லும் இம்மருந்துகளை அதிகமாய் அளவுக்குமேல் பிரயோகிப்பதால் செடியிலுள்ள இலைகளை கருக்கி நாசப்படுத்துவதால் ஔஷதமானது வியாதியைப் பார்க்க அதிகம் கெடுதிசெய்யும் என்பதை மறக்கக்கூடாது. கூடியவரையில் மேற்கூறிய முறைப்படியே மருந்துகளை கலக்கி உபயோகப்படுத்தவேண்டியது. ஆனால் பூச்சிகள் மிருதுவாயிருக்கும்பொழுது அதிகம் தண்ணீர்விட்டு கலக்கி, லேசாயும், கெட்டியான தோலினால் அவை மூடப்பட்டிருக்கும்பொழுது, கொஞ்சம் தண்ணீர் விட்டு கலக்கி கெட்டியாகவும் உபயோகப்படுத்தலாம். இம்மருந்துகளை எப்பொழுதும் விடியற்காலங்களில், சூரியனுடைய வெப்பம் அதிகரிக்குமுன்னமே பிரயோகம் செய்வது நலம்.

பூச்சிகள் அதிகமாய் காணும்பொழுதும் அதிக நாள்விடாமல் காணும்பொழுதும் மருந்தை ஒருதரம் மாத்திரமேயல்ல, மூன்று அல்லது நான்கு முறை 15 நாளுக்கு ஒரு முறையாக விடாமல் உபயோகப்படுத்தவேண்டியது.

மருந்து பிரயோகம் செய்யுமுன் முழுவதும் செடிப்பேனினால் பிடிக்கப்பட்ட கிளைகளையும் அல்லது உலர்ந்து பட்டுப்போன செடிகளையும் அப்புறப்படுத்தி கொளுத்தி விடுவது நல்லது. இல்லாவிடின் இவைகள் பூச்சிகள் வந்து தங்குவதற்கு நல்ல குடியிருப்பாகிவிடும். அடியிற் கையொப்பமிட்டிருப்பவர் இன்னம் மற்ற பூச்சி சம்பந்தமான கேள்விகளுக்கு வேண்டுமான முறைகளை தெரிவிக்க சித்தமாயிருக்கிறார்.

டி. வி. ராமகிருஷ்ணய்யர்,
ஆக்டிங் சர்க்கார் பூச்சி சாஸ்திரி,
கோயம்புத்தூர்.



# TIME TABLE

## கால அட்டவணை

கால அட்டவணை என்பது பள்ளிக்கூடத்தில் நடத்தவேண்டிய பாடங்களின் ஒழுங்கைக் குறிக்கும் பத்திரிகையாம். அது கற்பிக்கவேண்டிய பாடங்கள், அவைகளுக்குச் செல்லும் நேரம், நடத்தும் மணி, போதிக்கும் உபாத்தியாயர், வீட்டப்பியாசம் முதலிய பாகங்களைக் காட்டும்.

### கால அட்டவணையின் உபயோகம்

1. இதனால் பாடங்களை உபாத்தியாயர்களும் பிள்ளைகளும் கிரமப்படி தயார் செய்யச் சாதகமாகிறது.

2. பிள்ளைகளிடத்திலும் உபாத்தியாயரிடத்திலும் ஒழுங்கு, காலந்தவறாமை, முறைமை முதலிய நல்ல வழக்கங்களை உண்டு பண்ணி அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் தங்கள் காரியங்களை ஒழுங்காய்ச் செய்யப் பழக்குகிறது.

3. பள்ளிக்கூடத்திலுண்டாகும் சத்தத்தையும் குழப்பத்தை தையும் நீக்கி பிள்ளைகளைப் பாடத்தில் எப்போதும் அமர்த்தித் தண்டனையின் அவசியத்தைக் குறைக்கும்.

4. உபாத்தியாயர் தனக்கு மிகப் பிரியமான பாடங்களை அதிகமாய் நடத்தி இதர பாடங்களை முற்றிலும் மறந்தாவது அதிகமாய் கவனிக்காமலாவது இருப்பதற்குக் காரணம் இராது.

5. உபாத்தியாயர் தன் வகுப்பில் நடத்தவேண்டிய பாடங்கள் இன்னவை எனத் தீர்மானிக்க ஏதுவாகிறது.

### கால அட்டவணையை ஏற்படுத்தும்போது கவனிக்கவேண்டிய முக்கிய குறிப்புகள்

1. பிள்ளைகளுக்காவது உபாத்தியாயருக்காவது அலுப்புண்டாகும்படி வெகு நேரம் எந்தப் பாடத்தையும் நடத்தக் கூடாது; அல்லது பாட முழுவதையும் பிள்ளைகள் அறியாமலிருக்கும்படி அதி சீக்கிரத்தில் முடிக்கவுங் கூடாது.

2. முக்கியமான பாடங்களுக்கும் கஷ்டமான பாடங்களுக்கும் தக்கபடி காலம் ஏற்பட வேண்டும்.

எப் பாடமாயிருப்பினும் அதை ஒரு மணி நேரத்திற்குமேல் நடத்துவது கூடாது. ஆனால் பெரிய வகுப்புகளில் அவசியமானால் கணிதத்தையும் பாஷையையும் சற்று நேரம் நீடித்துக்கொள்ளலாம். சாதாரணமாய் பிரைமரிப் பாடசாலைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் முக்கால் மணி, அல்லது அரைமணி நேரம் போதும்.

ஐந்து வயது முதல் ஏழு வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு ஒரு பாடம் 25 நிமிஷத்திற்கு மேல்படக் கூடாது. ஏனெனில், ஒரு விஷயத்தையே அதிக காலம் கவனிக்கக் கூடிய சக்தி அவர்களிடத்தில் இராது.

3. வகுப்பின் முதற்பாடமானது பிள்ளைகளின் மனோதிடத்தைக் கோரும் முக்கியமான பாடமாயிருக்கவேண்டும். (பாஷை, இலக்கணம், கணிதம்)

பிள்ளைகள் பாடசாலைக்கு வந்த முதல் மணி நேரத்தில் சுறுசுறுப்பாயும், உற்சாகமாயும், பாடத்தில் கவனமுள்ளவர்களாயுமிருப்பார்கள். ஆதலால், காலையிலும் மாலையிலும் முதல் மணியில் மற்ற நேரங்களில் நடத்தும் பாடங்களை விடக் கடினமானதாயிருக்கவேண்டும்.

4. ஒரே விதமான மனோசக்திகளுக்கு வேலையிடுகிற பாடங்களைச் சேர்ந்தாற்போல் நடத்தக் கூடாது.

முதல் மணியில் ஞாபகசக்தியை விருத்தி செய்யும் பாடமாயிருந்தால், அடுத்த மணியில் வாய்மொழிப் பாடமாயும் அடுத்த மணியில் கைக்கு வேலையுள்ள பாடமாயும், பின்பு, மனத்திற்கு வேலையுள்ள பாடமாயும் இருத்தல் வேண்டும்.

5. கடின பாடத்திற்குப் பிறகு (வாசகம், செய்யுள், இலக்கணம், கணிதம்) சுளுவான பாடத்தை (கிண்டர்கார்டன், படமெழுதல், சித்திர மெழுதல், காப்பி, பார்த்தெழுதல்) யாவது, சொற்ப சுளுவுள்ள பாடத்தை (பூகோளம், சரித்திரம், சுகவழி, இயற்கைப் பாடம், ஸிவிக்ஸ்) யாவது நடத்தவேண்டும்.

இயற்கைப்பாடம் கடின பாடமாயிருந்தாலும் பொருள்களைக் கொண்டு நேரில் காண்பித்துப் போதிக்கும் விஷயத்தில் சுளுவுள்ள பாடமாகக் கருதலாம்.)



6. சில வகுப்புகளில் சப்தமுள்ள பாடங்கள் நடத்தும்போது இடையிலுள்ள வகுப்புகளுக்குச் சப்த மில்லாத பாடங்களை (பார்த்தெழுதல், சித்திர மெழுதல், காப்பி, படமெழுதல்) யாவது அல்லது உபாய சப்தமுண்டாகும் பாடங்களை (கணிதம், சொல்வதெழுதல், வியாஸம்) யாவது நடத்தவேண்டும்.

7. கூடியவரையில் வகுப்பின் பிள்ளைகள் பாடங்களுக்கு இடமாறுதல் நலம். (பள்ளிக்கூட நேரத்தின் $\frac{2}{3}$ பாகம் அவர்கள் நிற்கும்படியாகவும், $\frac{1}{3}$ பாகம் உட்கார்ந்திருக்கும்படி யாகவும் இருக்கவேண்டும்.

8. வாரத்தின் கடைசியில் பாடங்களைத் திருப்பவும், தலைமை உபாத்தியாயர் குறைந்தபக்ஷம் பிரதி வகுப்பிற்கும் வாரத்திற்கு ஒருதடவை யாகிலும் பரீட்சைகள் மாதிரிப் பாடங்கள் நடத்தவும்; பிரதிதினமும் ரிஜிஸ்தரில் பதிவு செய்தல், வகுப்புகளைச் சுற்றிப் பார்த்தல் முதலான சில்லரை வேலைகளைச் செய்யவும் காலம் ஏற்படவேண்டும்.

9. கவாத்து அப்பியாசம் சாயங்காலத்தில் நடத்தவேண்டும்,

10. வீட்டப்பியாசங்கள் இன்னவை என்று அட்டவணையில் குறிக்க வேண்டும்.

11. அட்டவணையில் வகுப்பின் உபாத்தியாயரையும், இடை ஓய்வு காலங்களையும், நடத்தும் பாடங்களின் சுருக்கத்தையும் காட்டவேண்டும்.

12. வகுப்புக்கால அட்டவணை தவிர, உபாத்திமார் பெயர்களும் நடத்தும் வகுப்புகளும், நேரங்களும் அடங்கிய கால அட்டவணை (Teachers' time table) ஒன்றும் ஏற்படுத்தவேண்டும். இது ஒரே உபாத்தியாயருள்ள பாடசாலைகளுக்கு அவசியமில்லை.

குறிப்பு — பாடசாலை முழுமைக்கும் ஒரு பொதுக் கால அட்டவணை (General time table) இருப்பதோடு ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் பிரத்தியேகமாகவும் ஒன்று ஏற்படவேண்டும்.

M. THANGARATHINAM PILLAI,
*Teacher, M. H. E. School, Palani.*

# HOW TO IMPROVE EDUCATION?

## கல்வி அபிவிருத்தி யாவதெங்ஙனம்?

கல்வி யபிவிருத்திக்குக் காரணமாயுள்ளோர் உபாத்திமார்களே. இவ்வுபாத்திமை வேலைக்கு வருவோர் அநேகமாக ஏழைகளே. இவ்வுபாத்திமை வேலைக்குத் தேக திடமும் மனோ திடமும் அறிவின் முதிர்ச்சியும் வேண்டுவது அத்தியாவசிய மன்றோ? உபாத்திமார் அவ்விதத் திடனைப் பெற ஏற்ற காலங்களில் ஆகாராதிகளை அளவுக்குக் குறையாதவாறு அருந்துதலும் சௌகரியங்கள் செய்து கொள்ள வேண்டுவதும் அத்தியாவசியகமே. இதற்குப் போதிய (பொருள் வேண்டியது) சம்பளம் பெறுவது அவசியமாகும். இன்னவர்களுக்குத் தற்போது கொடுக்கப்படும் சம்பளமும், அளிக்கப்படும் அவகாசங்களும் மிகக் குறைவே.

இஃது இங்ஙனமாகப் பத்திரிகைகளில் எழுதுவோரும் பிரசங்க மேடைகளில் நின்று பிரசங்கிப்போரும் ஆகிய கனவான்களும் அதிகாரிகளும் ஜனத்தலைவர்களுமாகிய இன்னோர்கள், 'வரும்படி குறைவென்று சிறிதுங் கவலைப்படாமல் கல்விப் பெருமைக்குச் செல்வம் ஈடாகாதென்பதை மட்டும் மனத்திற்கொண்டு சலியாத நெஞ்சமும் ஊக்கமும் விடாமுயற்சியும் உடையவர்களாய் சந்தோஷத்துடன் தேசத்தின் பொதுநல விருத்தியை யுன்னிப் பாடுபடுவீர்களானால் இந்தியாவின் முன்னேற்றத்தைக் கிராம உபாத்தியாயர்களால்தான் உயர்த்த முடியும் என்று எதிர்பார்த்திருக்கும் இத் தேச முதல்வர்களுக்குத் திருப்தியாகும்' என்பதையும்; 'உபாத்திமைத் தொழில் ஜீவனோபாயத் தொழிலாக மாறியிருப்பினும் அதற்குள்ள மகிமையும் முக்கியப் பொறுப்பும் குன்றவில்லை யென்பதையும் தாங்கள் சொற்ப சம்பளத்தினரேயாயினும், தாங்கள் 'ஆசான், குரு' என்னும் ஸ்தானத்தி லிருப்பவர்க ளென்பதையும் நன்குணர்ந்து அதன்படி நடப்பதற்கு இடையூறாக என்ன இக்கட்டுக ளிருப்பினும் அதைப் பொருட்படுத்தாது தங்கள் கடமையைச் செய்யத் துணிந்து அதற்குள்ள சிரமத்தையும் வகிப்பார்களென்று நம்புகிறோம்' என்பதையும் உன்னிப் பார்க்குங்கால் சதிபதி ஆகிய இருவர்க்கே போதாத தற்காலத்திய



மிகச் சொற்ப சம்பளத்தைக் கொண்டு, சதிபதியே யன்றி தாய் தந்தை தனயர் முதலிய தன் குடும்பத்தைப் போற்றியும், களையாத நெஞ்சமும் ஊக்கமும் விடாமுயற்சியும் எங்ஙனம் உண்டாகும்? அன்றியும் உபாத்திமார்களுக்காக ஏற்பட்டிருக்கும் சௌகரியங்கள்தான் எங்கே கொடுக்கப்படுகின்றன? இவ்விதக் குறைவுக ளின்றி யிருந்தாலன்றோ கல்வியி னபிவிருத்தியில் கவனமுண்டாகும்! 'பத்தும் பசி வந்திடப் பறந்து போம்', 'கவலையே காலன்' என்பவை போன்று ஏதாவது கவலைகளால் பீடித்திருக்கும் உபாத்திமார்களின் குறைவுகளை நிவர்த்திப்பது அதிகாரிகள் ஜனத்தலைவர்கள் பத்திராதிபர்கள் முதலிய தேசாபிமானிகளும் பாஷாபிமானிகளுமான கனவான்களுடைய கடமை யன்றோ?

உபாத்திமைத் தொழில் ஜீவனோபாயத் தொழிலாக மாறியிருக்கின்றதென்றால், அநேகமாக எந்தத் தொழில்தான் ஜீவனோபாயத் தொழில் அல்லாததாக இருக்கின்றது.? என்ன இக்கட்டுக ளிருப்பினும் பொருட்படுத்தாது கடமையைச் செய்ய வேண்டுமெனின், அநேகமாய்க் கீழ்தரப் பாடசாலை உபாத்திமார்களுக்கு நேர்ந்துள்ள முதல் இக்கட்டு ஜீவனோபாய இக்கட்டே! இந்த ஜீவன் தங்கியுள்ள உடலைச் சோர்வுறாது வைத்திருந்தாலன்றோ தன் கடமையைச் செய்ய சக்தி பெறலாம். அறிவு தூண்டும். அறிவும் அவயவங்களும் அயரும்படியான, சொற்ப ஆகாரத்திற்கான சொற்ப சம்பளம், எங்ஙனம் கடமையையும் சிரத்தையையும் கொடுக்கும்? சம்பளத்திற்குத் தகுந்த ஆகாரத்தின் அளவுதானே சிரத்தையும் கடமையும் உண்டாகும். இச்சிரத்தையும் கடமையும் ஏற்படும் அளவுக்குத் தகுந்தவாறு தானே போதனா சக்தி யமையும்.

ஆகவே இனியேனும் உபாத்திமார்களுக்குக் கல்வி இலாகாவில் ஏற்பட்டிருக்கும் குறைவுகளையும் அசௌகரியங்களையும் நிவர்த்தித்து, சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுத்து, கவலையின்றிக், கல்வி யபிவிருத்தியில் நாட்டமுள்ளோர்களாகச் செய்யுமாறு வேண்டுகின்றேன்.

எஜமானன்

குன்னூர் ஆநந்தாச்ரமத்து ப்ரஹ்ம ஸ்ரீ, ம. வே. சிவசுப்ரஹ்மண்ய ஐயரவர்கள் எழுதியுள்ள "ஞானதீபிகை" என்னும் கிரந்-

தத்தின் 5-வது காண்டமாகிய 'மக்களுக் கிடையூறான குண பேதங்களைப் பற்றிய தூர ஆலோசனை'யின் 3-வது அத்தியாயத்தில் 'எஜமானனும் வேலையாளனும்' என்ற தலைப்பின்கீழ் 43-ம் பக்கத்தில் எஜமானனைப் பற்றிக் கூறியவற்றை 'நல்லாசிரிய'னுக்காக இங்கு எழுதுகின்றோம். —

யஜமானனே! உன் ஊழியன் உன்னிடத்து உண்மையாய் நடந்துகொள்ள வேண்டுமானால் அவனை நியாயமாக நடத்து. அவன் உன்னிடத்து வணங்கியிருக்க வேண்டுமானால் உன் கட்டளை நீதியானவைகளா யிருக்கட்டும்.

அவனுக்கும் மனித உணர்ச்சிக ளுண்டல்லவா? பயத்தை யுண்டுபண்ணுகிற கொடுமையையும் கடூரத்தையும் காட்டி அவனுடைய அன்பைப் பெறவியலாது, கண்டிப்போடு பக்ஷத்தையுங் கலந்து கொள்; அதிகாரத்தோடு நியாயத்தையும் சேர்த்துக் கொள். அவ்விதமாக உனது எச்சரிக்கைகள் அவன் மனதில் பதியட்டும். அவன் வேலை அவனுக்குச் சந்தோஷத்தைத் தரும்.

அவன் உன்னிடத்துள்ள நன்றியறிவினால் உனக்கு உண்மையாக உழைப்பான். அன்பு காரணமாக உத்ஸாகத்துடன் உனக்குக் கீழ்ப்படிவான். அவனது சுறுசுறுப்புக்கும் உண்மைக்கும் தக்கவாறு அவனுக்கு வெகுமதி செய்யத் தவறாதே.

P. பரிமணப் பல்லவராயர்,
போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர்சோலை போஸ்டு, திருச்சி தாலுக்கா.



# STORY TELLING

## கதை சொல்லல்

(முன் தொடர்ச்சி பக்கம் - 86)

### மாயப் பெண் அரசி

22. மலையின்மேல் ஏறிச் செல்லச் செல்ல வழி மிகவும் குறுகலாகவும் அபாயம் விளைக்கத் தக்கதாகவும் இருந்தது. குளிரோ இவனை வருத்தியது இவ்வள வவ்வளவு அல்ல. என் செய்வான் பாபம்! இவன் எடுத்துக்கொண்ட காரியத்தை எவ்விதமாகிலும் முடிக்க வேண்டும் என்னும் எண்ணமுடையவனாகையால், இவ் விடையூறுகட்குச் சிறிதும் பின்னிடையவில்லை. வருத்தத்துடன் இவன் பிரயாணஞ் செய்யும்போது ஓர் ஆலயம் இவன் கண்ணுக்குப் புலப்பட்டது. அதற்குள் பிரவேசித்த வுடன் குளிர் இவனை வருத்தவில்லை. அவ் வாலயம் மிகப் பெரிதாயும் பார்ப்பதற்கு அழகுள்ளதாகவும் இருந்தது. அதில் ஒரு சந்நியாசி கண்களை மூடிக்கொண்டு தியானத்தி லிருப்பதைக் கண்டான். சந்நியாசியைக் கண்ட அளவில் மன்னவன் மகன் ஓடி நமஸ்கரித்து, அவர் தியானத்தி லிருந்து எழுந்திருக்கும் வரையில் ஒருபுறமாக கை கட்டி வாய்புதைத்து நின்றுகொண் டிருந்தான். சந்நியாசி தியானத்தை முடித்துக் கண்களை விழித்துப் பார்த்தபோது அரசன் மகன் நிற்பது அவர் கண்ணுக்குப் புலப்பட்டது. அவர் அரசகுமாரனை நோக்கி, 'அரசிளங் குமர, உன்னுடைய வரலாறு முழுவதும் யான் அறிவேன். நீ ஒரு பூதகணப் பெண்ணைத் தேடிக்கொண்டு வந்திருக்கின்றா யல்லவா? அவள் வெகு தூரத்திலுள்ள காகஸஸ் மலையின் உச்சியில் தேக சௌக்கிய மில்லாமல் இருக்கின்றாள். அவள் இறந்து போகவில்லை. இதோ காணப்படும் பாத்திரத்திலுள்ள தைலத்தை எடுத்துக்கொள். அதற்கு எத்தகைய இரணத்தையும் ஆற்றிவிடும் அருமையான குணம் உண்டு. என் வசம் உள்ள இந்தப் பாதரக்ஷையும் கைப்பற்று. இதை யணிந்துகொண்டு எங்கே போகவேண்டும் என்று நினைக்கின்றாயோ அங்கே கொண்டுபோய் விடும்' என்று சொன்னார். அரசகுமாரன் சந்நியாசியை மீட்டும் வணங்கி அவர் கொடுத்த பொருள்களை ஏற்றுக்கொண்டு அவ் வாலயத்தினின்றும் வெளியே

வந்தான். வந்தவுடன் சந்நியாசி யளித்த பாதரக்ஷையைக் காலில் மாட்டிக்கொண்டு காகஸஸ் மலைக்குப் போக எண்ணினான். உடனே அப் பாதரக்ஷை அரசகுமாரனை ஆகாய மார்க்கமாய் வெகு விரைவில் எடுத்துச் சென்று காகஸஸ் மலையினருகே உள்ள மைதானத்தில் இறக்கிற்று.

23. காகஸஸ் மலையை யடைந்த உடன் அம் மலையிலுள்ள விநோதங்களை எல்லாம் சிறிதுநேரம் சுற்றிப் பார்த்தான். பிறகு யாராகிலும் தன்னைக் காண்பார்களாயின், அவர்கள் தனக்குத் தீங்கு செய்யவும் கூடும் என்று நினைத்தான். வழியில் கண்டவர்களில் ஒருவன் கொடுத்த அற்புதக் குல்லாவை தலையில் அணிந்து கொண்டான். இதை யணிந்துகொள்பவன் யாவர் கண்ணுக்கும் புலப்படமாட்டான் என்று முன்னமே சொல்லி யிருக்கின்றோமல்லவா? அவ்வாறே இக் குல்லாவை மன்னவன் மகன் அணிந்து கொண்ட அளவில் இவன் யாவர் கண்ணுக்கும் புலப்படவில்லை. இவனுக்கு மலையின்மீ துள்ளவைகள் எல்லாம் நன்றாய்ப் புலப்பட்டன. அம் மலையின்மீது கட்டப்பட் டிருக்கும் பட்டணமானது மிகவும் அழகாகவும், அற்புதமாகவும், ஒழுங்காகவும் இருந்தது. அதில் வசிப்பவர்கள் எல்லாம் மனிதர்களைப் போலக் காணப்படினும் மனிதர்கள்தான் என்று நிச்சயிப்பதற்கு இடமில்லாமலிருந்தது. அவர்கள் வெகு அழகாகவும் பார்ப்பதற்கு அலங்கார முள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள். இவர்களை எல்லாம் பார்த்துக்கொண்டே வந்து அரசன் வசிக்கும் அரண்மனைக் கருகே வந்தான். இவன் அணிந்திருக்கும் குல்லாவின் மகிமையால் யாதொரு கவலையு மில்லாமல் கோட்டை வாயிலைக் கடந்து ஸ்திரீகள் வசிக்கும் அந்தப்புரத்திற்குள் சென்றான். அங்கே இவன் மனைவி நோயாய்ப் படுத்திருப்பதைப் பார்த்தான். அவள் இருக்கும் நிலைமையைக் கண்டதும் இவனுக்கு அடக்க ஒண்ணாத துக்கம் உண்டாயிற்று எனினும் அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு அரண்மனையை விட்டு வெளியே வந்தான்.

24. தான் அணிந்திருந்த குல்லாவைக் கழற்றிவிட்டுச் சந்நியாசி வேடமணிந்து, அற்புத யாழை வாசித்துக்கொண்டு வீதிதோறும் உலாவத் தொடங்கினான். யாழோசையின் இனிமையானது எங்கும் பரவியது. இவ்வினிய ஓசையைக் கேட்ட நகரமாந்தர்கள் எல்லோரும் 'பள்ளங் கண்டு வரு புனல்போல யாழ் வாசிக்கும் அரசிளங்குமரனைச் சூழ்ந்துகொண்டார்கள். நாள்தோறும்



அரசிளங் குமரன் வீதி வீதியாய்ச் சுற்றி வாசித்துக்கொண்டே வந்தான். அந் நகர மாந்தர்கள் யாவரும் திரள் திரளாய் வந்து யாழ் வாசிப்பதைக் கேட்டு ஆனந்த முறுவாராயினர். இந்த அற்புத யாழ் வாசிப்பவன் வந்திருக்கும் சேதி இரண்டு மூன்று தினங்கட்குள் அந் நகரத்தை யாளும் மன்னவன் காதிற்கு எட்டியது. மன்னவன் இதன் உண்மையைக் கண்டறியும் வண்ணம் யாழ் வாசிப்போ னிருக்கும் இடத்தண்டை வந்தான். அவன் வாசிக்கும் யாழின் திறத்தைக் கேட்ட அளவில் இவன் மனம் கரைந்துபோயிற்று. அவன் கொண்டிருக்கும் வேடத்தை உற்று நோக்கினான். அது யாவரும் வணங்கும் சந்நியாச கோலமாக இருப்பதைத் தெளிந்து அவன் காலில் அடியற்ற பனைபோல் வீழ்ந்து, "பெருந்தகையே! என் விண்ணப்பத்திற்குச் சிறிது செவி சாய்க்க வேண்டும். என்னுடைய பெண் மனிதர்களாலே எரிக்கப்பட்டு மிகவும் வருத்தத்துடன் இறந்துபடும் தறுவாயி லிருக்கிறாள். அவளைத் தங்கள் மகிமையினால் சொஸ்தப்படுத்தும்படி தங்களை மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அவள் என் இன்னுயிரினும் சாலச் சிறந்தவள். அவள் நோயைத் தாங்கள் குணப்படுத்தி விடின் தங்கட்கு யாது வேண்டுமோ அது கொடுக்கத் தடை இல்லை" என்று பிரார்த்தித்தான். இவைகளைக் கேட்ட மாறுவேடம் பூண்ட சந்நியாசி, "அரசே நாங்கள் எல்லாம் கடவுட்குக் கீழ்ப்படிந்தவர்களே யொழிய ஏனையவர்கட்குக் கட்டுப் பட்டவர்கள் அல்ல மனிதர்களும் நும்போன்ற பூதங்களும் வசிக்கும் இருப்பிடங்கட்கு ஒருக்காலும் செல்லோம். வேண்டுமாயின் உன்னுடைய குமாரத்தியை நாம் தங்கியிருக்கும் இடத்திற்கு அழைத்துக்கொண்டு வா. அவள் நோயைத் தீர்க்கும்படி கடவுளை வேண்டுகின்றேன்" என்றான். மன்னவன், "தவச் சிரேட்டரே! என் பெண் மிகவும் துர்ப்பலமான நிலைமையி லிருக்கிறாள். அவளைத் தங்க ளிருப்பிடத்திற்கு அழைத்து வந்தால் வரும் வழியிலேயே அவள் இறந்துபடவுங் கூடும்! ஆகலின் ஏழையின் மீது கிருபை கூர்ந்து என் சிறு குடிலுக்கு எழுந்தருள வேண்டுகிறேன்" என்று விண்ணப்பித்து பலதரம் அவன் திருவடிகளில் வீழ்ந்தான். அரசனுடைய விண்ணப்பத்தைக் கேட்ட போலிச் சந்நியாசியும் நெடுநேரம் தாழ்த்து கடைசியாக அரண்மனைக்கு வருவதற்கு சம்மதித்தான. உடனே அரசன் பல்லக்கு வரவழைத்து அதில் சந்நியாசியை எழுந்தருளப்பண்ணி அரண்-

மனைக்கு அழைத்துச் சென்றான். அரண்மனையை அடைந்ததும் நோயாளி இருக்கும் இடத்திற்கு அப் போலிச் சந்நியாசியை அழைத்துச் சென்றார்கள். சந்நியாசி போனபோது அந் நோயாளி அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தாள். சந்நியாசி சிறிது நேரம் கடவுளைத் தியானம் செய்வதுபோல் பாசாங்கு செய்து தன் வசத்தில் உள்ள அற்புதத் தைலத்தை எடுத்து அரசன் பெண்ணின் தோழியினிடம் கொடுத்து அவளை வருத்தும் புண்ணின் மேல் தடவும்படி சொன்னான். தோழிப் பெண் சந்நியாசி கட்டளைப்படி இரணத்தின்பேரில் தைலத்தைத் தடவினாள். சிறிது நேரத்திற் கெல்லாம் இராஜகுமாரி சௌக்கியமாய் எழுந்திருந்தாள். சந்நியாசி செயற்கருஞ் செய்கை செய்ததாக அந் நகரம் எங்கும் அவன் புகழ் பரவிற்று.

25. நோய் குணமாகி எழுந்த பெண்ணரசி தனக் கெதிரே நிற்கும் சந்நியாசி தன்னுடைய நாதன் என்று உணர்ந்து அவனுடன் வார்த்தையாட யத்தனித்தாள். இதை அறிந்த போலிச் சந்நியாசி அவள் தன்னை உணர்ந்துகொள்வது அபாயத்திற்கு இடம் என்று குறிப்பித்தான். தன் பெண் சௌக்கியம் அடைந்ததை அறிந்த அரசனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. சந்நியாசியைக் நோக்கி, "புண்ணிய சீலரே தங்கட்கு வேண்டிய வரத்தைக் கேட்க வேண்டுகிறேன்" என்று அரசன் அதிவிநயத்துடன் விண்ணப்பித்தான். அரசன் எப்போது இவ்வாறு சொல்லப்போகிறான் என்பதை எதிர்பார்த்திருந்த போலிச் சந்நியாசி "அரசர் ஏறே! உன்னுடைய குமாரத்தியை எனக்கு மனைவியாக அளிக்க வேண்டுகிறேன். இதுதான் என்னுடைய பிரார்த்தனை" என்றான். சந்நியாசி தான் கொண்ட ஆஸ்ரமத்திற்கு மாறாக அடாத வார்த்தையைப் புகன்றதைக் கேட்ட மன்னவனுக்குப் பெருங் கோபம் உண்டாயிற்று. உடனே தன் ஆட்களை விளித்து "இந்த அயோக்கியனைப் பிடித்து உடனே சிறையிலிடுங்கள். இவன் மகா துர்க்குணமுடையவன். அவன் செய்த நன்றிக்காக அவனுக்குப் பிரதி உபகாரஞ் செய்ய எண்ணிய என் எண்ணமெல்லாம் இவன் துர்நடக்கை மாற்றிவிட்டது" என்று சொன்னான். ஏவலாளர்கள் அரசன் கட்டளைப்படி சந்நியாசியைப் பிடிக்க வந்தபோது, சந்நியாசி தன்னுடைய அற்புதக் குல்லாவை அணிந்துகொண்டான். உடனே அவன் யாவர் கண்ணுக்கும் புலப்படவில்லை.



அவன் தன்னுடைய அற்புதத் தடியை எடுத்து அரசனையும் அவன் ஏவலாளர்களையும் நையப் புடைத்து வரும்படி கட்டளையிட்டான். அந்தத் தடியானது எஜமானன் கட்டளைப்படி அங்கே இருந்த அனைவர்களையும் நையப் புடைத்தது. மனித அரவமே இல்லாமல் தண்டாயுதம் மாத்திரம் புடைப்பதைக் கண்டோர் யாவரும் மிகவும் வருந்தி, செய்வது இன்னது என்று விளங்காமல் அழத் தொடங்கினார்கள். அரசன் "பெருந்தகையே ஏழைகட்கு இரங்க வேண்டுகிறேன். எங்கள் அறியாமையினால் செய்த குற்றத்தை மன்னிக்குமாறு பிரார்த்திக்கின்றேன். தாங்கள் எங்கிருந்து எங்களைத் தண்டிக்கின்றீர்கள் என்பதே எங்கட்குத் தெரியவில்லையே. அந்தத் தண்டனையை நாங்கள் எவ்வாறு அகற்றிக்கொள்ளப் போகிறோம். தாங்கள் தயவுகூர்ந்து எங்கள் கண்ணுக்குப் புலப்பட்டு எங்கள் துயரத்தை அகற்றின் தங்கட்கு என்ன வேண்டுமோ அதை கொடுக்கச் சித்தமாயிருக்கின்றேன்" என்று மன்றாடினான். போலிச் சந்நியாசியாகிய மன்னவன் மகன் அவர்கள் வேண்டுகோட் கிரங்கி அவர்கள் கண்ணுக்குப் புலப்பட்டு "அரசனே! இந்த இருப்புத் தடியை உபயோகித்ததற்காக மிகவும் வருந்துகிறேன். எனினும், என் ஆற்றலை விளக்க அவ்வாறு செய்வது அத்யாவசிய மாயிற்று. உன்னுடைய குமாரத்தியும் அவளுக்குப் பணிவிடை செய்ய மூன்று தோழிமார்களையும், உன் பொக்கிஷத்தில் உள்ள விலையேறப்பெற்ற வைரங்களையும் நகைகளையும் செய்ந்நன்றி கொன்றதற்கு அபராதமாகக் கொடுக்கவேண்டியது. இதுவேயன்றி ஆகாயமார்க்கமாய் விரைந்து செல்லும் தேர் ஒன்றும் உடனே வேண்டும்" என்று சொன்னார். அரசன் உடனே தன்னுடைய குமாரத்தியையும் மூன்று தோழிப் பெண்களையும், பொக்கிஷத்திலுள்ள திரவியங்களையும், அற்புதத் தேரையும் கொண்டுவந்து சமர்ப்பித்தான். மன்னவன் மகன் அந்த அற்புதத் தேரின் மீது நான்கு பெண்மணிகளுடன் ஏறிக்கொண்டு தன் தந்தையி னிருப்பிடத்திற்குப் போகப் புறப்பட்டான். போகும் வழியில் தான் கண்ட சந்நியாசியையும் மூன்று நண்பர்களையும் சந்தித்து நடந்த விர்த்தாந்தங்களை எல்லாம் சொல்லி அவர்கள் யாவரையும் தன்னுடைய நகரத்திற்கு வரும்படி வேண்டினான். சந்நியாசி தவிர ஏனைய மூன்று நண்பர்களும் அவன் வேண்டுகோட்கு இரங்கி அவனுடன் நகரத்திற்கு வந்தார்கள். மன்னவன்

மகன் தந்நகரையடைந்து தன் மூன்று நண்பர்கட்கு மூன்று தோழிப் பெண்களை மணம் புரிவித்து தான் மாயப் பெண்ணரசியை மணந்துகொண்டு சுகமாய் வாழ்ந்துகொண் டிருந்தான்.

26. மன்னவன் குமாரனின் சகோதரர்களான அறுவர்களின் கதி யாதாயிற்றென்பதை விசாரிப்போம்; கடைசி குமாரனுக்கு அவன் சகோதரர்கள் செய்த இடையூறுகள் எல்லாம் அவர்கள் தந்தையின் காதுக்கு எட்டியது. அரசன் அவ்வறுவர்களையும் சிறைச்சாலையில் அடைக்கும்படி கட்டளை யிட்டான். இதைக் கேள்வியுற்ற இளையவன் தந்தையினிடம் சென்று அவர்களை மன்னிக்குமாறு வேண்டி அவர்கட்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் செய்து அவர்களையும் சுகமாய் வாழும்படி செய்தான்.

ஓர் தமிழ்ப் புலவர்.

## CHILDREN OF DISTANT LANDS

## தூரதேசத்துக் குழந்தைகள்

### ஜப்பான் சிறுவர் - சீனச் சிறுவர்

சில வருஷங்களுக்கு முன் ஜப்பான் சிறுவர்களைப்பற்றிச் சில விஷயங்கள் நமது நல்லாசிரியனில் வெளிவந்த விஷயம் பலர் நன்கு உணர்வார்கள். அவற்றை விரைவில் முடிக்குமாறு நண்பர் பலர் விரும்பினர். அதனால் ஜப்பான் சிறுவர்களைப் பற்றியும் சீனச் சிறுவர்களைப் பற்றியும் பல அரிய விஷயங்கள் விளங்குமாறு இனிய புஸ்தகம் ஒன்றை எழுதி வெளியிட் டிருக்கின்றோம். இதை வாசிப்பதனால் சிறுவர்களுக்குப் பூகோள விஷயமும் சரித்திர விஷயமும் நல்லொழுக்க விஷயமும் நன்கு புலனாகும். இது தாயார் குமாரனுக்குக் கதை சொல்லும் விதமாக மிக எளிய நடையில் அநேக சித்திரப்படங்களுடன் பெரிய எழுத்தில் அச்சிட்டு வெளிவந் திருக்கிறது. சிறுவர்களுக்கு இன்பமூட்டும் இனிய கதைப் புஸ்தகம் போல்வது. இதனை ஒவ்வொரு பாடசாலையிலும் தவறாமல் உபயோகிப்பார்கள் என்று நம்புகின்றோம். விலை, அணா 6.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெருவு, சென்னை, இ.

3- JAN 1918
MADRAS



நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1917ஆ நொவெம்பர்மீ | மாதம் 6

## A TALE IN TAMIL VERSE

### பொற்கைப் பாண்டியன்

கன்னிவள நாடு கடம்ப வனநாடு
முன்னி விளங்கியதோர் முச்சங்கம் — மன்னியசீர்க்
கற்றவர்சேர் நாடு கறைகண்ட னுந்தேர்ந்த
நற்றமிப் பாண்டிநன் னாடு. (1)

முக்கண் தனைக்காட்டி முன்னவனே முன்னின்றும்
அக்குற்றங் குற்றமே யாகுமென — நக்கீரன்
சொன்ன தகைமை துலங்குந் தமிழ்நாடு
நன்னலஞ்சால் தென்பாண்டி நாடு. (2)

தமிழே பொருளாத் தமிழே உயிராத்
தமிழே உயிர்க்குற்ற சார்பும் — தமிழேநற்
சோறுமாக் கொண்டுற்றோர் சொற்ற தமிழ்மணமே
நாறும் எழில்வையை நாடு. (3)

பொன்னாடு போலும் புனனாடும் மால்வரைசூழ்
மின்னாடுந் தன்னிருபால் மேவியுறத் — தன்னவிரு
கையேபோற் கொண்டு கவினும் பெருந்தகையாம்
நைவிலாத் தண்டமிழ் நாடு. (4)

அன்னதோர் நாட்டின் அகமோ அணிமுகமோ
மன்னும் விழியோ வதனத்தில் — துன்னும்
திலகமோ ஆருயிரோ செப்பரிதா லென்றும்
உலகம் புகழ்மதுரை யூர். (5)

ஊராற் சிறந்தென்றும் ஓங்குநகர் ஊழியினும்
பேராது நிற்கும் பெரியநகர் — தீராத
செல்வஞ் சிறக்குநகர் செந்தமி ழோங்குநகர்
மல்லன் மதுரை நகர். (6)

மதுரை நகரையே மன்னகராக் கொண்டு
சதுர னெனப்புரக்கச் சீர்ந்தான் — முதிரும்
அறிவான் அருளான் அழகான் அரசிற்
செறிவான் ஒருவன் சிறந்து. (7)

மன்பதைகொள் ஆக்கமும் மகிழ்சிறந்த வாழ்வுங்கண்
டின்புறலே மன்னவற் கின்பமாம் — என்னும்
அறனை யறிந்தான் அரசியலின் செவ்வித்
திறனை யுணர்ந்தான் தெளிந்து. (8)

கண்டதுபோற் கேட்டுணர்வான் காவலர்சொல் நல்லமைச்சர்
விண்ட விதிமுறைகள் மேலாய்வான் — அண்டும்
அறிஞரொடு தேர்வான் அவைமாந்த ரோர
நெறியிற் புரிவான் நினைந்து. (9)



நினையாதங் கேதும் நிகழ்த்தான் எவருந்
தனையா தரிக்கச் சரிப்பான் — அனையனையான்
விண்முக மோங்க வேல்தொட்ட வேளன்னான்
சண்பக மாறனென்பான் றான். (10)

இவ்வண்ணல் நாளும் இரவின் உருமாறி
மெய்வண்ணங் காணநகர் வீதிதொறும் — உய்வண்ணம்
மேவுமொரு காவலன்போல் வேண்டித் தனிச்செல்வான்
காவலன் இவனன்றே காண். (11)

ஒருநாள் இரவினில் ஊருறக்கங் கொண்டு
வருவார் உருத்தெரிய மாட்டா — இருள்தனில்
அந்தணர் வாழும் அகரமறு கிற்சென்றான்
சிந்துகுரல் கேட்டான் செவி. (12)

செம்மல் இதுவென்னோ தேர்வே மெனவெண்ணி
அண்மையினிற் சென்றங் கடைகதவம் — நண்ணியே
கொற்றவனா வுற்றோன் குறிக்குமொழி கேட்டுணர
ஒற்றவனா வுற்றான் ஒளித்து. (13)

அகத்தி னகத்தின் அகமுடையாள் கேட்ப
மகப்பேறிங் கின்றி வருந்தித் — திகைத்தேம்
கண்ணே யதனால்யான் காசிப் பதியின்றே
நண்ணி வருவேன் நயந்து. (14)

என்றா னதுகேட்டங் கேழை மனமெலிந்து
நின்றாள்பின் நேர்ந்து நிகழ்த்துவாள் — நன்றேயோ
கடனறியார் போலக் கழறினீர் காணீர்
உடனிற்கு மோவிட் டுயிர். (15)

பிள்ளைப்பே றெய்தப் பெருகா தரங்கொள்வீர்
சள்ளையெனக் கொண்டென்னைத் தள்ளுவதிங் — கேள்ளளவும்
நீதியே யாமோ நேரிழைதன் காதலனிற்
பாதியா மென்னுமே பார். (15)

ஆதலால் யானுமென் அன்பருடன் போதுவதே
நீதமா மென்று நிகழ்த்தலும் — காதலன்
மெய்யேநின் மாற்றமெலாம் மேவும் வழியருமை
தையலே கண்டனையோ சாற்று. (16)

கணவ னுடனிருப்பக் காணுமோ கள்ளம்
கணவ னுடனிருப்பக் காடும் — மணமாரும்
வீடேயா மன்றோ விபுதர் பெருமானே
நாடேன் உமையகல நான். (17)

தனிமரமே போலத் தயங்கிநான் நின்றால்
இனியென் னெனக்கேட்பார் யாரே — பனிமொழியார்
துன்று மனையிற் றுணையாவா ரின்றியே
ஒன்றி யுறன்முறையா மோ. (18)

பேதைமை யென்பது மாதர்க் கணிகலமென்
றோதிய மூதுரை யுண்மையுற — மாதராய்
நின்றுநிலை நாட்டினாய் நீதியா லாட்சிபுரி
மன்றுநிலை யோராய்நீ மற்று. (19)

குடியோங்க வோங்குமே கோலென் றுணர்ந்தான்
படியோங்க வந்த பரமன் — மிடிநீங்க
நம்மைப் புரக்கும் நரபாலன் நானிலத்தில்
இம்மைக் கிவனே இறை. (20)

பொன்னவன் காக்கும் புவியெல்லாம் இந்நாளில்
தென்னவனே காக்குந் திறனுற்றான் — மின்னே
இதுநீ யறிந்திலையேல் இன்றுநான் சென்றால்
அதுவே யறிவா யகத்து. (21)

வேண்டுவார் வேண்டும் விதமெல்லாம் ஓர்ந்தருள்வான்
பாண்டியனே கண்டறிஞர் பாடினார் — காண்டகும்
கண்ணை இமையேபோல் காக்கும் கனிவினன்
எண்ணுங் குடியை இவன். (22)



வேதியன் கூறும் விதமுற்று முன்னிப்பின்
மாது மிருப்ப மனங்கொண்டாள் — தீதொரீஇ
வைகினார் தம்பிறவி மாற்றும் பதிநாடத்
துய்யவன் கொண்டான் துணிவு. (23)

அந்தணன் மாற்றம் அரையன் செவியேற்றுச்
சிந்தை மகிழ்வென்னுஞ் சிந்துவினில் — தொந்தமுற
என்போற் பெறலரும்பே றெய்தினார் யாவரே
அன்பாற் புகழ்மிக் கடைந்து. (24)

திறல்வேந்தன் கேண்மையோ தீக்கொப்பா எண்ணி
மறலியாக் கண்டு மருவார் — நெறியறிந்து
நங்கோலைச் செங்கோலா நண்ணி நயப்பரேல்
இங்கே யெனக்கா ரிணை. (25)

மறையவன் நம்மாட்டு வைத்த வுறுதிக்
கிறையளவு மாறா தியற்றல் — முறையாம்
எனவிறை யெண்ணியிதற் கென்செய லென்ன
மனமுற வுன்னினான் மற்று. (26)

நள்ளிருளில் நாடொறும் நான்மறையோன் இல்லக்குக்
கள்ளமுற வேற்றுருவங் காட்டியே — உள்ளம்
களிதுளங்க வீதிவாய்க் காவலே செய்தான்
அளிதுளங்கு மாலை யவன். (27)

காவலிதே செய்துவரின் காவலிஃ தாகுமே
ஆவலா லேயிவட்கிங் கன்னமும் — ஏவலால்
தந்தளித்த லேயறமாம் தந்தா லனைவோர்க்கும்
முந்தளிந்த லன்றோ முறை. (28)

முறைமாறிச் செய்யின் முறைமா றியதாம்
பறையறைந்தாற் போலாம் பழியும் — மறைபயந்த
வாயான் வருமளவும் வத்திரமும் தந்திவரை
நேயமாக் காப்பதே நேர். (29)

என்னப் பலவாறும் எண்ணியியல் மாறாதே
தென்னவன் செங்கோல் செலுத்துநாள் — மன்னுகங்கை
ஆடவே சென்ற அருமறையோன் மீண்டிவண்
கூடினான் கூடற் பதி. (30)

பதியடைந்து தன்னில்லம் பானா ளிரவிற்
சதியடைந்து சென்ற சரிதம் — விதியிற்
புகன்றான் புகன்றாங்கே பூண்ட பரிவால்
உகந்தான்றன் காதல் உரைத்து. (31)

காதன் மொழிமன்னன் காதிற் படலுமனங்
காதி யனலிற் கனன்றுபின் — மாதின்
கணவனே யாயிற் கலங்கான் வருமென்
றணவினான் வாயி லருகு. (32)

கதவந் தனைமெல்லக் காவலன் தட்ட
நிதமும் வருவா னிவனே — இதமறியா
வந்தானென் கொல்லென மங்கையைக் கேட்டலும்
விந்தையீ தென்றாள் வியந்து. (33)

அந்தோவிவ் வாயிழைமேல் அந்தணற்கு மாறாத
சந்தேகந் தோன்றச் சதிசெய்தேம் — இந்தவினைக்
கென்செய்கே மெவ்வா றிதையொழிப்ப தெற்கண்டார்
மன்செயல்நன் றென்பாரே மற்று. (34)

எல்லாக் கதவமும் இவ்வாறே தட்டினால்
பொல்லார் புரிந்ததோர் போக்கென்பார் — நல்லரையன்
நெட்டி யடிவைத்து நீள்கதவ மொன்றுவிடான்
தட்டியே யோடினான் தான். (35)

காரிருளின் மெய்மறந்து கண்டுயின்ற மாந்தரெலாம்
பேரிடியால் நாகம் பெயர்வதென — வாரியெழுந்
தோடினார் வீதியின்கண் உற்றார் குழுமினார்
தேடினார் கள்வரெனத் தேர்ந்து. (36.)



காணா ரொருவரையும் கள்வரெனிற் காணாரோ
சேணாரும் வன்கழுதின் செய்கையே — மாணாத
தீமை புரிவாரைத் தெரியே மிதுகாறும்
நாமவேல் மாறன்றன் நாட்டு. (37)

பகையரசி னாலச்சம் பல்லுயிரா லச்சம்
தகவிலரா லச்சமும் தன்னால் — புகுமச்சம்
அங்கத் தவராலா மச்சமும் ஏதொன்றும்
இங்ங னிதுகாறும் இன்று. (38)

இன்றே இதுநேர்ந்தேம் என்ன அனைவோரும்
சென்றே அரசவையைச் சேர்ந்தே — நன்றேயோ
கொற்றவா தென்னவர்தங் கோவே யெனக்குறித்தார்
உற்றவா றெல்லா முரைத்து. (39)

நான்மறையோர் கொண்ட நடுக்கந் தனைக்கண்டு
கோன்முறை கோடிக் குயிற்றிய — ஊனமுறை
எண்ணினான் எண்ணி இதயம்புண் ணாயினான்
உண்ணிலாம் துன்பமே யுற்று. (40)

அஞ்சினே மென்றடைந்த ஐயன்மீர் அஞ்சன்மின்
வஞ்சமா நள்ளிருளில் வந்தோனும் — நெஞ்சத்
துணிவா னுமக்குத் துயரிழைத் தோனும்
எணமிலா எழைநா னே. (41)

வெய்யனே னானேன் விபுதர் பெருமக்காள்
கையனே னானேனிக் கைதவஞ்செய் — கையதனை
இன்னே துணித்திங் கிதம்பெறுவே னென்றுதன்
மின்னேர்வாள் ஈர்த்தான் விரைந்து. (42)

கண்டார் மறையோர் கலங்கிக் கருத்தழிந்தார்
கொண்டார் இறும்பூது கூடினார் — எண்டாழ
என்செய்தாய் எங்கோவே என்றும் அறியோமே
நின்செய்கைக் கொன்று நிகர். (43)

அன்பிஞ லன்னேயே யானும் அறிவளிக்குந்
தன்மையாற் றந்தையெனச் சார்ந்தாய் — முன்னும்
கதியிற் செலவிடலாற் காதலனு மானுயே
விதியிற் றிரிவதின்ரூ வேறு. (44)

என்ன மறையோர் இசைத்த மொழிகேட்டு
மன்ன னவர்க்கு மனமார — மின்னுநூல்
மார்பன்றன் மாதொடு மற்றந்நாள் நள்ளிரவில்
நேர்ந்தன யாவும் நினைந்து. (45)

காசி நகர்செல்லக் காதலன் கூறியதும்
மாசிலா மங்கை மறுத்ததும் — நேசமுறச்
செங்கோல் நிலையையவன் செப்பியதும் தானதற்கா
அங்காவல் கொண்ட வதும். (46)

காரிருளில் நாளுந்தான் காவல் புரிந்ததுவும்
ஓரிரவு மாறுகுரல் உற்றதுவும் — தேருதற்காக்
கதவ மிடித்ததுவும் காதலன் காதலியை
கதுவிப் புகன்றதுவுங் கண்டு. (47)

அரிவைமேற் கொண்டவவன் ஐய மகற்ற
உரியவழி யிஃதேயென் ருேர்ந்து — சரியாக
எல்லாக் கதவும் இடித்தேன் உமக்கென்றும்
இல்லாக் குறையிங் கிழைத்து. (48)

இதுவே நிகழ்செய்தி இஃதேயான் செய்த
பொதுவில்லாக் குற்றம் பொறுப்பீர் — பொதுவில்
உயருய்ய ஆடும் ஒருவ னறிவான்
மயர்விஞற் செய்ததென்ருன் மன். (49)

நின்கையோ தீமை நிகழ்த்துங்கை யண்ணலே
என்கை யெமக்கே யியற்கையோ — பொன்கையா
நின்கை நிலவியிந் நீணிலத்தி லெஞ்ஞான்றும்
மின்கையா வோங்கவினி மேல். (50)



என்றேநல் லாசி இருமறையோ ரெல்லோரும்
அன்றே புகல அசரீரி — நன்றேகாண்
இன்று மூதனீ எழில்பொற்கைப் பாண்டியனு
என்றும் அடைக இசை. (51)

என்றங் கெழுந்த இனிய மொழிகேட்டு
மன்னன் மனமும் மகிழ்சிறந்தான் — பொன்கையார்
எல்லோரு நெஞ்சமுவந் தேந்தலேவாழ்த் திச்சென்ருர்
நல்லோ ரடைந்தார் நலன். (52)

பத்திராதியர்.

# BOTANY

## தாவர சாஸ்திரம்

(முன் தொடர்ச்சி பக்கம்-101)

### வேர்கள் சேகரிக்கும் உணவு

காட்டிலுள்ள மரஞ் செடிகள் மிகவும் செழித்து வளர்வதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அது என்னேயெனின், காட்டிலுள்ள மரங்களின்கீழ் இலைகள் உதிர்ந்து சருகுகளாகி அடர்ந்திருக்கின்றன. சில இலைகள் மட்கியும் இருக்கும். இந்தச் சருகுகளும் மட்கிய எருவும் மழைபெய்யுங் காலத்தில் கரைந்து பூமிக்குள் செல்லும்; அந்த ரசம் மரத்திற்கு நல்ல உரமாக அமைகின்றது அதுவுமன்றி மரம் தழைத்திருக்கும் அளவுக்குச் சுற்றிலும் இலைகள் உதிர்ந்து படர்ந்திருக்கும்; அவை மழைநீரால் அழுகி பூமிக்குள் வேர் பரவி இருக்கும் இடத்திற்கெல்லாம் செல்லுகின்றது. இதை ஒரு திருஷ்டாந்தத்தால் விளக்குவோம்.

இப்போது நாம் ஒரு மரத்தின்செடியை நட்டதாக வைத்துக் கொள்வோம். வைத்தபோது அதன் அடியைச் சுற்றிலும் பள்ளம்கோலித் தண்ணீர் ஊற்றுகிருேம். ஒரு வருஷ மானபிறகும் அடிமரத்தண்டையே தண்ணீர் வார்க்கிருேம். இது முற்றும் பிசகு. செடி சிறியதா யிருக்கும்போது வேர் சமீபத்திலேயே இருக்கும். அதனுல் அப்போது அடிமரத்தண்டை தண்ணீர் விட்டால் வேருக்குச் செல்லும். செடிவைத்து ஒரு வருஷமானு

அதன்வேர் அடிமரத்திற்கு இரண்டுமூன்று அடிக்கு அப்பால் சென்றிருக்கும். அந்தக் காலத்திலும் தண்ணீரை அடிமரத்தண்டை ஊற்றினால் என்ன பயன்? செடிவைத்தபோது அடிமரத்தண்டை பாத்திகட்டியதுபோலவே செடி வளர்ந்தபிறகு (வளர்ச்சிக்கு ஏற்க) அடிமரத்திற்கு சற்றுதூரத்தில் வட்டமாகச் சுமார் $\frac{1}{2}$ அல்லது $\frac{3}{4}$ அடி ஆழம் பள்ளந்தோண்டி எருப்போட்டுத் தண்ணீர் வார்த்தால் அந்த சாரம் நேரே பக்கவேர்களுக்குப் போய்ச் சேரும். இதைவிட்டு மரத்தடியிலேயே எப்போதும் தண்ணீர் வார்ப்பதால் ஏதும் பயன் ஏற்படாது. காட்டிலுள்ள தாவரங்களுக்கு இந்தவிதமான அனுகூலம் மழைகாலத்தில் ஏற்படுகின்றது. நாட்டிலுள்ள மரங்களின் கீழ் உதிர்கிற சருகுகளை மனிதர் பெறுக்கி எடுத்துவிடுவதனாலும், முற்கூறியபடி சத்து நேரே வேருக்குச் செல்லும்படி தக்க ஏற்பாடுகள் செய்யாமையாலும் நாம் வளர்க்கும் மரஞ்செடிகள் நன்றாய்ச் செழித்து வளர்ச்சி யடைவதில்லை.

மரம் மேலே தழைத்துப் படர்ந்திருக்கும் அளவுக்குக் கீழே வேர்களும் பரவியிருக்கும் என்று சாதாரணமாகச் சொல்லுவது வழக்கம். இது பெரும்பாலும் உண்மையே. தென்னமரம் வைப்பவர்கள் மாத்திரம் இந்த உண்மையை உணர்ந்தோ உணராமலோ பாத்தியை அகலச் செய்யவேண்டும், தண்ணீர் வேரில் குளிரப் பாயும்படி செய்யவேண்டும் என்கிறார்கள். இப்படிப்பட்ட ஏற்பாடு எந்த மரத்துக்கும் வேண்டியதே.

### வேர் உணவைக் கிரகிக்கும் விதம்

தாவரங்களுக்கு வேரே வாய்; வாயின் மூலமாகவே உணவைக் கொள்ளுகின்றன என்பது சாதாரணமாகப் பலரும் அறிந்த விஷயம். ஆனால், வேர் உணவை எப்படிக் கிரகிக்கிறது என்னும் விஷயம் சாதாரணமாகத் தெரிந்துகொள்ளக் கூடியதன்று. அதை இங்கே ஆராய்வோம்.

தரையில் தண்ணீர் ஊற்றிவிட்டால், அதைச் சுவறச் செய்யச் சாம்பல் போடுகிறோம். தண்ணீரின்மேல் சாம்பல்படையைப் போட்டால், அந்தச் சாம்பல் தண்ணீரைக் கிரகித்துக் கொள்ளுகின்றது. ஒரு செங்கல்லின்மீது கொஞ்சம் தண்ணீர் விட்டால் செங்கல் தண்ணீரைக் கிரகித்துக் கொள்ளுகின்றது. (கருங்கல் மீது தண்ணீர்விட்டால் அப்படியே தங்கியிருக்கிறது) எழுதும்போது காகிதத்தின்மீது இங்கி விழுந்துவிட்டால் பிளாட்டிங் பேபரால் ஒத்துகிறோம்; பிளாட்டிங் பேபர் இங்கியைக் கிரகித்துக் கொள்ளுகிறது. இதனால் சாம்பல், செங்கல், பிளாட்டிங் பேபர் முதலிய பொருள்களில் அதிநுட்பமான துவாரங்கள் இருக்கின்றன என்பது தெளிவாகிறது. இப்படி நுட்பமான தொளையுள்ள பொருள்கள் திரவபதார்த்தத்தைக் கிரகிக்கும் தன்மையுள்ளவையாம். இதை ஒரு திருஷ்டாந்தத்தால் விளக்குவோம். (தொடரும்)

பத்திராதிபர்.



## PUBLIC WORK OF TEACHERS

## உபாத்தியாயர் பொதுநன்மையை விரும்ப வேண்டும்.

மாந்தராய் ஜனித்தவர் அனைவரும் தத்தம் ஜீவனார்த்தம் பல்வேறு தொழில் புரிந்து வருகின்றனர். இரப்போன் முதல் இராஜன் வரையிலுமுள்ள பற்பல அந்தஸ்துள்ள மனிதரை இரு பிரிவாக்கி, அவரவர்களின் தொழிலினின்றே அவரவர்களுக்குப் பெயரளிக்கலாம். உலகில் மானிடர் எந்தத் தொழில் செய்பவராயினும், சிலர் தமது சுயநலத்தைக் கருதி, தம்மால் பிறருக்கு எவ்வித உதவியும் உண்டாகாதபடி, 'நான் உழைக்க அவன் ஏன் பலன் அடைய வேண்டும்' என்று உழைப்பார்கள். இத்தகையோரையே 'சுயநலப் பிரியர்' என்பர். வேறு சிலரோ வெனின், தாம் எங்கிருப்பினும் எவ்வேலை செய்திடினும், தங்களால் பிறருக்கு நன்மையுண்டாக உழைக்கிறவர்கள். இவர்கள் தங்களின் சுயநலத்தை மறந்து 'உலகுய்ய யான் ஒருவன் எது செய்ய முடியும்' என்று தாம் செய்யும் உதவி பெரிதோ சிறிதோ வென்று உணராது 'பொதுநன்மைக்காக' எனப் பாடுபட்டு உழைப்பார்கள்.

ஒவ்வொருவரும் தமக்கு இருக்கும் யாவற்றையும் இது எப்படி வந்தது என்று ஆலோசிப்பா ராயின், சுயநலத்தை நாடி உழைக்கும் தொழிலும் சீவியமும் எத்தன்மைய வென்றும், 'பொதுநன்மை'க்காக உழைக்கும் உழைப்பு எப்படிப்பட்டதென்றும் நன்றாய்க் கண்டுணர்வார்கள். யோசிக்குமிடத்து, மானிடராய்ப் பிறந்த எல்லோரும் உலகில் ஜீவிப்பதற்கு அவசியமா யுள்ளவைகள் பிறருடைய ஒத்தாசையா லன்றி இல்லை

யென்று திட்டமாய்க் கூறலாம். நாம் அனைவரும் குழந்தைப் பருவத்தி லிருந்தபோது பெற்றோர் காட்டிய அன்பையும், நண்பர் காட்டிய நட்பையும், பள்ளியில் உபாத்தியாயர் அன்புடன் புகட்டிய கல்வியையும், மற்றவர்களால் ஏற்பட்ட நாகரிக முறைகளையும், இன்னும் நமது சுகாநுபவங்களையும் நன்றாய் நினைத்துப் பார்த்தால் எல்லாரும் நமக்கு எவ்வளவு உதவி செய்திருக்கிறார்களென்று புலப்படும். நமது நடை யுடை பாவனை, நாம் பேசும் பாஷை, கைத் தொழில்கள், விவசாய முறைகள், வைத்திய விஷயங்கள், இலக்கிய இலக்கணங்கள்; மற்ற அம்ஸங்க ளனைத்தையும் அதிக பிரயாசையுடன் சாதுரியமாய் ஏற்படுத்தியவர்கள் யார்? நமது முன்னோர்க ளல்லவா? நாமே கற்றுக்கொண்டவையா இவை? ஆகவே நமக்கு முன்னுள்ளவர்கள் நாம் உலகில் ஜீவிக்கும்பொருட்டு எவ்வளவோ அருமையான காரியங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர்!

ஒருவருடைய உதவியு மின்றி உலகில் ஜீவிப்பவர் எவர்? அப்படி ஜீவிக்க முடியுமா? முடியாதன்றோ? ஆகவே உலகில் உய்வதற்கு ஒவ்வொருவருக்கும் பலருடைய உதவி அவசியம் என்பது புலப்படுகிற தன்றோ? இங்ஙனம், பிறந்தது முதல் இறக்கும் வரையில் பிறருடைய உதவியைக் கொண்டு பிழைக்கக் கூடியவர்களாகிய நாம், நம்மா லியன்றவளவு பிறருடைய நன்மைக்காக உழைக்கவேண்டு மல்லவா? 'நான் உழைக்க அவன் ஏன் பலனடைய வேண்டும்?' என்று உலகில் ஒவ்வொருவரும் நினைத்து, சுயநலத்தையே விரும்பி உழைக்கிறார்களென வைத்துக்கொள்வோம். என்ன நடக்கும்? ஏதும் அதிக கஷ்டசாத்திய மாகிவிடுமன்றோ? ஆகையால், 'சுயநலம் பாராட்டி ஜீவிக்கும் ஜீவியம் நல்ல ஜீவியமல்ல' 'பொதுநன்மையை' விரும்பி உழைப்பது எவ்வளவோ மேன்மையானது என்பது வெள்ளிடைமலை.

'சுயநலத்தை' விரும்பிய ஜீவனம் கேவலம் ஈனமுடையது. சுயநலப் பிரியனை யாவரும் பிரியப்படாமல் வெறுப்பார்கள். சுயநலப் பிரியன் உலகில் இருந்தென்ன, இறந்தென்ன? ஆகவே, எத்தொழில் புரியினும் 'பொதுநன்மைக்காக' என்று உழைப்பதற்கு ஈடில்லை. தனது ஆயுள்வரையில் 'பொதுநன்மையை' நாடி, தங்களுக்காக அல்லாமல் பிறருக்காக மாத்திரம் உழைக்கும் பாக்கியம் உலகில் மிகச் சிலருக்கே உண்டு. அப்பேர்ப்பட்ட புண்ணிய சீலர்கள் 'உடுக்கணத்து மதி'போன்று உலகில் நிலவுவ-



துண்டு. இவர்கள்தாம் உத்தமரெனத் தக்கவர்கள். பரோபகாரிகளென்று இவர்களைத்தான் சொல்லவேண்டும். இவர்களை உலகம் நிந்தித்தாலும், வந்தித்தாலும் 'தர்மமே ஜயம்' என்று,

"வைவார்தமை வாழ்த்திய நெஞ்சுள் வருத்தமுற்று
கைவாருடனைக் தழுதுந்தமை நண்ணித் துன்பம்
செய்வாருறு பீழை நினைந்து தஞ் சிந்தை நொந்தும்.........."

தாம் எண்ணிய கருமத்தை முடிப்பார்கள். இவர்களே ஜீவியத்தின் அந்தரங்கம் தெரிந்தவர்கள். இவர்களன்றோ அழியாப் புகழுடம்பு கொண்டவர்கள்!

உதவிகள் பற்பல விதமாயிருக்கலாம். அப்படியே தனம், கல்வி, சரீரம் முதலியவற்றால் செய்யக்கூடிய பல உபகாரங்கள். ஒவ்வொருவரும் தம் வாணாள் முழுவதையும் 'பொதுநன்மைக்காக' உபயோகப்படுத்த முடியாது. ஆனால், தமது ஓய்வுக் காலத்தின் ஒரு சொற்ப பாகத்தையேனும் பிறருடைய நன்மைக்காக உழைத்து வரவேண்டுவது அவசியம் என்பது நியாயமாகும். உலகின் எந்த அந்தஸ்துடையவராயினும் தாம் தமது ஒழிவுக் காலத்தின் சிறு பங்கைத் தத்தம் நிலைமைக் கேற்றபடி பிறர் நன்மைக்காக உழைப்பதுதான் புருஷலக்ஷணம். ஒருவருக்கும் பயன்படாது சும்மா விருதாவிற் காலங் கழிப்பவர்கள் உலகில் பிறவாதிருந்தால் நன்றென்றும் நவிலலாம். உலகத்தில் பல தொழிலாளிகளையும்விட உபாத்தியாயர்களாகிய நாம் நன்மை செய்யவே ஏற்பட்டவர்கள்! நாம் என்ன நன்மை செய்யக்கூடும் என்பதை சற்று ஆலோசிப்போம்.

நண்பர்காள்! நாம் உபாத்தியாயர்கள். இனி உலகிலிருந்து பற்பல தொழிலைப் புரிந்து 'பொதுநன்மைக்காக' உழைக்கக் கூடிய மனிதர்கள் இப்பொழுது நம்மிடம் பயிலுகின்றனர். நமது கடமை என்ன? அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதே! இது மட்டும் என்றால் மெய்யாகவே உபாத்தியாயர் வேலை உபயோகமற்ற வேலை. பின் என்ன? நம்மிடத்துள்ள பாலரை நாம் "உத்தமர்களாக்குவதே" நமது முதன்மையான வேலை, அந்தோ! சில ஆசிரிய நண்பர்கள் பாடம் கற்பித்தல் ஒன்று தவிர வேறொன்றும் செய்யார்கள். அவன் எப்படிப் போனால் நமக் கென்ன? அவன் நல்லவனானா லென்ன? நாடோடியானா லென்ன? என்

கடமை கல்வி கற்பிப்ப தொன்றே. மற்றக்கவலை யெல்லாம் நமக்கேன்? என்பார். இத்தகையோர் ஆசிரிய ராவரோ? ஆகார். இப்போது பாலர்களா யிருப்பவரே பிற்காலங்களில் பெற்றோர்களாவர். ஆகையால், இப்போதே அவர்களின் குறைகளையும், சண்டித்தனங்களையும் நீக்கி நல்வழிப் படுத்தி யிருந்தால், 'தாங்கள் உலகில் உத்தமராய் வாழ்வதுடன் தங்கள் பிள்ளைகளையும் பிற்காலத்தில் சன்மார்க்க முடையவர்களாகச் செய்வார்கள். இப்போது பாலரை வீணாக விட்டுவிட்டால் பின்னால் எவ்வளவு கேடுகள் அவர்களால் உண்டாகக்கூடும் என்பதை நாம் உய்த்துணர வேண்டும்.

'தீது நன்றறிகிலாச் சேயரென் செய்வர்
கோதற வவரை நன் னெறியிற் கூட்டிடா
தேதங்களவர் முன்செய் திழிவைக் கற்பிக்கும்
தாதைதாய் புதல்வர்க்குச் சத்துருக்களே

என்னும் நீதிநூற் செய்யுளினீற்றடியை "தாதையாசிரியர் தாய சத்துருக்களே" என்றும் சொல்லலா மன்றோ? ஆகவே தன் மாணாக்கனுக்கு கேவலம் 'மனம் படியப் பெறாத கல்வியை' மட்டும் கற்பிப்பதால் பயனே யில்லை.

ஒரு வகுப்பை மட்டு மல்ல; வகுப்பிலுள்ள ஒவ்வொரு பையனையும் உத்தம குணமுடையவனாக்க முயல வேண்டும். நம்மிடம் உள்ள மாணவர் ஒவ்வொருவருக்கும் "நான் என்ன நன்மை செய்யக்கூடும்" என்று நிதானமாய் யோசித்துக் கூடியமட்டில் வருந்தியுழைக்கவேண்டும். 'உழைப்பின் வாரா உறுதிகளுளவோ?' நமது மாணாக்கரில் சிலர் இயற்கையாய் நற்குணமுடையவராயும், மற்று அநேகர் துர்க்குணமுடையவராயு மிருப்பார்கள். நல்லவர்களைவிடச் சண்டித்தன முள்ளவர்க ளிடம் மிகவும் அன்பு பாராட்டி, அவர்களை எப்படியேனுந் திருத்த முயலவேண்டும். *மாணவரை எவ்வாறு சன்மார்க்கத்திற் பயிற்றல் வேண்டும் என்பதை முன்பு ஒருமுறை 'நல்லாசிரியனில்' வரைந்துள்ளே மாதலால் ஈண்டு அதனைக் கூறாது விடுத்தனம்.

ஆசிரியர் செய்யும் இரண்டாவது உதவியாவது யாதெனில்: 'தமது மனச்சாக்ஷிக்கு விரோதமின்றித் தம் கடமையைச்

* நல்லாசிரியன் II ஆம் வால்யூம் 9 வது நம்பர் (பெப்ருவரி மாதம்) 205 ஆம் பக்கம் பார்க்க.



செய்தலே' இது விஷயத்தில் அலக்ஷ்யமா யிருப்பதால் நேரும் இன்னல்கள் பல. ஆதலால், இவ் விஷயத்தையும் நன்கு கவனிக்க வேண்டும்.

மூன்றாவதாக உபாத்தியாயர் தமது ஊருக்குத் தம்மால் என்ன உதவி செய்யக்கூடும் என்றுணர்ந்து, கூடுமானால் அதனையும் செய்தல். கிராமாந்தர உபாத்தியாயர்கள் பெரும்பாலும் இவ் விஷயத்தில் பலவித நன்மைகள் செய்யக்கூடும். இதனால் அக் கிராமவாசிகளுக்கு உபாத்தியாயரிடத்தில் செல்வாக்கும் பெருந்தன்மையும் உண்டாகும். கிராம உபாத்தியாயர்கள் செய்யக்கூடிய உதவிகள் பல இருக்கின்றமையால் அவற்றை விஷயப் பெருக்கிற் கஞ்சி விடுத்தனம்.

உபாத்தியாயர் செய்யக்கூடிய வேலைகள் எண்ணிறந்தன. இதர தொழிலாளிகளைவிட உபாத்தியாயருக்குத்தான் அதிக வேலை உண்டு. அவ் வேலைகளும் கஷ்டசாத்திய மானவைகளே. ஊதியமோ சொல்லவேண்டியதில்லை. ஆதலால் உபாத்தியாயர் கூலிக்காக உழைக்கிறவர் என்று சொல்லுவது நன்றாய் ஆராய்ந்துணரின் எவ்வாற்றானும் பொருந்தாது. 'சிலர், நாம் வாங்குகிற சம்பளத்துக்கு இவ்வளவு வேலை போதாதோ?' என்பர். அன்னவர் ஆசிரியத் தொழிலுக்கு அருகரல்லர். மெய்யான ஆசிரியர் தம்மை மறந்து எதிர் உதவி கருதாது தம்மா லியன்றவளவு பிறருக்கு உதவி செய்வர். இன்னவரே கற்றறிந்தோர். 'கைம்மாறுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித், தம்மா லியலுதவி தாஞ்செய்வர்' என்பது இத்தகையோருக்கே பொருந்தும். எதிர் உதவி கருதிய ஈகை ஈகையல்ல. ஆகவே 'இறைக்கிற கிணறு சுரக்கும்' என்பதைப் போல், நாம் எவ்வளவுக் கெவ்வளவு பிறர் நன்மையை நாடியுழைக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு பயனடைவோம். சுயநலப் பிரியரானவர்கள் தமது முன்னோரிடமிருந்தும், பிறரிட மிருந்தும் அடைந்துள்ள நன்மைகளை சீர்தூக்கிப் பார்க்கட்டும். அதைச் சரியாய்க் கண்டுணருபவர்கள் தாமும் அப்படியே பிறர் நன்மைக்காக உழைப்பதுதான் நியாயமென்று அறிவார்கள்.

கடைசியாய், நேயரே, நமது வேலையின் கஷ்டத்தை அறிந்தும் இவ்வளவு அசாத்தியமான வேலைகளை நாம் கையேற்றுக்கொள்வது சரியல்ல என்றெண்ணுவது, நாம் ஆசிரிய வேலையை மேற்கொண்டது தவறு என்பதற்குச் சமானம். உத்தம உபாத்-

தியாயர்களே! நமது கடமையைச் சரிவரச் செய்து வருவதுடன், எல்லாப் பிள்ளைகளையு மாத்திரம் பொதுவாக அல்ல, நம்மிடமுள்ள ஒவ்வொரு பிள்ளையையும் உத்தமர்க ளாக்கவேண்டும். "இந்த ஒரு பையனுக்காக நான் என்ன நன்மை செய்யக்கூடும். இவனை இப்படியே விட்டுவிட்டால் இவனும் இவனை யடுத்தோரும் கேடடைவார்கள். அதற்கு நான்தான் காரணம் இவனை எப்படியாவது நல்வழிப் படுத்துவேன்" என்று திட்டமாய் உழைக்கவேண்டும். அப்படியே நமது வசத்திலுள்ள மாணவர் அனைவரையும் நல்வழிப் படுத்தவேண்டும். பாடு பட்டவர்கள் பலனடையா விட்டால் பயனென்ன? எவ் வேலைக்காரரும் தாம் செய்யும் தொழிலின் பலனை அடையவேண்டும்; இன்றேல், அவ்வேலையால் அவர்கட்குப் பிரயோஜனமே யில்லையன்றோ? அப்படியே நமது தொழிலின் பயனை யடையாவிட்டால் என்ன உபயோகம்! எத் தொழிலையும்விட உத்தமத் தொழிலாகிய நமது வேலையின் பயன் எழுத்தும் வாசகமுமட்டு மல்ல. "உலக வாழ்க்கைக்குத் துணையாகவும் இனி அடைய விருக்கும் மோக்ஷ சாதனத்துக்குத் துணையாகவும் அமையும் படிப்பே நமது வேலையின் முக்கிய பலனும்: ஆகவே, ஒவ்வொரு மாணவரையும் சன்மார்க்க முடையவராக்க அல்லும் பகலும் அயராது உழைக்கவேண்டும்.

'நான் பிறருக்கு நன்மை செய்யும் பொருட்டு சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறேன்' அப்படி நன்மை செய்யாது வீணாய் இருந்தேனானால் நான் பிறந்ததினால் பயனொன்றுமே யில்லை. ஆகையால் என்னால் கூடியமட்டும் பிறர் நன்மைக்காக (பொதுநன்மைக்காக) எனது ஆயுள் முழுமையும் செலவழித்தல் கூடாதாயினும் எனது ஓய்வு நேரத்தின் சொற்ப பாகத்தையேனும் செலவிடுவேன் எனக் கங்கணங் கட்டி ஆசிரிய நண்பர்கள் முன்வருவார்களாயின் உலகத்திற்கு அவர்களால் எண்ணிறந்த நன்மை உண்டாகக் கூடும். இதனை அனைவரும் அநுஸரித்தால் எவ்வளவு நன்மை விளையுமென்று சொல்லி முடியாது. உபாத்தியாயர்களிதனை யநுஸரிக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரியுமாறு மன்றாடுகின்றோம். இவ் விஷயத்தை நன்றாய் அமர்ந்து சாவதானமாய் வாசித்து யோசித்துப் பார்க்கும்படி கோருகின்றோம். கடவுள் அருள் புரிவாராக!

M. அடைக்கல சாமி,
ஹெட்மாஸ்டர், போர்டுஸ்கூல், திருநரையூர்.



# THE FROG

## தவளையின் ஜீவிய சரித்திரம்

இது ஒரு விசித்திரமான பிராணி. இது ஜலத்திலும் பூமியின் மேலும் ஒரே விதமாகக் கஷ்டமின்றி வசிக்கும்.

தவளை முட்டையிடும் — இம் முட்டையின் உள்ளிருக்கும் கரு, தன்னைச் சுற்றிலுமிருக்கும் ஒரு வகையான மஞ்சள் பிசினைச் சாப்பிட்டுக் குஞ்சாகும். இதற்குச் சாதாரணமாக 10 நாள் செல்லும். தவளை ஜலத்தில் முட்டைகளைக் கோழையுடன் சேர்ந்து இடும். அவை சுமார் கடுகளவாக ஜலத்தின்மேல் மிதக்கும். முட்டையின் மேல்பக்கம் கறுப்பாயும், அடிப்பக்கம் மஞ்சளாயும் இருக்கும். மேல்பக்கம் கறுப்பா யிருப்பதால் முட்டை சீக்கிரம் சூரிய வெப்பத்தைக் கிரகித்துக் குஞ்சாக மாறும். முட்டையை வழவழப்பான பிசின் சூழ்ந்திருப்பதால் அது எதிரிகளின் கைக்கும் வாய்க்கும் அகப்படாமல் நழுவித் தப்பித்துக் கொள்ளும். முட்டை பரிசத்திற்கு வேகவைத்த ஜவ்வரிசியைப்போ லிருக்கும்.

பத்து நாட்களுக்குப் பிறகு சூரிய வெப்பத்தினால் முட்டைகள் குஞ்சுகளாக மாறி வெளிப்பட்டு நீரில் நீந்தும். இதற்குத் தலையும் வாலுமட்டும் இருக்கும். இப்படி இருப்பதால் இதைத் தலைப்பிரட்டை அல்லது டாட்போல் என்று சொல்வது வழக்கம். இவைகள் பல நீர்ச்செடிகளைத் தங்கள் வாய்போன்ற கருவியால் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளும். அக்காலத்தில் அவை தங்களுடம்பிலிருக்கும் மீதி மஞ்சட் கருவை யுண்டு ஜீர்ணித்துக் கொள்வதால் வேறு வெளித்தீனியை உண்ணா. இப்பருவம் நீங்கும் பொழுது குஞ்சின் இரு புறத்திலும் இரு ஜதை செவுள்கள் வெளியே நீண்டு நிற்கும். அவைகளின் உதவியால் ஜலத்தில் கரைந்திருக்கும் வாயுவை கிரகித்து இரத்தத்தைச் சுத்தி செய்து கொள்ளும்.

வெளியிலிருக்கும் செவுள்கள் உள் அழுந்திக்கொண்டு வரும் பொழுதே வாலில் துடுப்பு ஒன்று ஏற்படும். அத் துடுப்பினால் அது ஜலத்தில் நன்றாக நீந்தும். இப்பொழுது இவை தீனியைத் தேடிச் செல்ல முடியுமாதலால் முன் வாயைப்போ லிருந்த பாகமானது வாயாக மாறும். இப் பருவத்தில்தான் இரு சிறு கண்கள் தோன்றும். வாயின் மேல்பக்கம் சொர சொரப்பா யிருப்பதால்

நீர்ப் பூண்டுகளின் குழுத்துக்களையும் பாசிகளையும் சுரண்டி விழுங்கும். இப் பருவத்தில் மீனைப் போலவே செவுள்களின் உதவியால் சுவாசித்து, துடுப்பினால் நீந்தி, வாயினால் தாவர வஸ்துக்களைச் சுரண்டிச் சாப்பிட்டு ஜீவிக்கிற தாகையினால், இதை மீன் 'போன்ற தவளைக் குஞ்சு என்று சொல்லலாம்.

முன் பருவத்திலிருந்த மீன் போன்ற தவளைக் குஞ்சு 30, 40 நாட்கள் வரையிலும் தாவர வஸ்துக்களையே உண்டு வளரும்.

அக் காலத்தில் அதன் துடுப்பு குறுகிக்கொண்டே வரும். ஆனால், உடம்பின் பின் பக்கத்தில் சிறிய முளைகள் தோன்றி கால்களாக வளரும். பின்னங் கால்கள் பாதி வளர்ந்த பிறகு, செவுள்களுக் கருகே இரு சிறு முளைகள் தோன்றி, அவைகள் முன்னங் கால்களாக மாறும் இக் கால்கள் வளரும்போது செவுள்கள் கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து, சுவாசப் பைகளும் மூக்குத் துவாரங்களும் உண்டாகும் இப் பருவத்தின் கடைசியில் பார்வைக்கு இது சிறிய வாலுள்ள தவளையைப் போல் தோன்றும். சொரசொரப்பான மேல்வாயில் பற்கள் தோன்றி வளர்ந்திருக்கும். கண்களும் பெரிதாகி தலையின் மேல்மட்டத்தில் பிதுங்கி நிற்கும்.

இதற்குப் பிறகு 10, 15 நாட்கள் வரையிலும் ஜலத்திலேயே புதிதாக ஏற்பட்ட தோலடிப் பாதத்தினால் நீந்தும். செவுள்கள் அடைபட்டுப் போனதினால் அடிக்கடி ஜலத்தின் மேல்மட்டத்தில் வந்து சுவாஸிக்கும். முன்புறத்தில் தோன்றிய நாக்கு நீண்டு வளரும். அதனால் செடியையும் பாசியையும் தின்ன முடியாமல்வரவரக் குறுகிக்கொண்டே வரும். அதன் வாலானது அதன் பசியை ஒருவாறு தணிக்கும் பசி அதிகரிக்க ஜலத்தை விட்டு நிலத்துக்குத் தாவி தாய்த் தவளைகளுடன் சென்று நாக்கினால் பூச்சிகளையும் புழுக்களையும் பற்றித் தின்னும். இப்போது பூச்சிகள் இவற்றின் ஆகாரமாக இருக்கிறபடியால் முன் சாகபக்ஷணிகளாயிருந்த தவளைக் குஞ்சுகள் சரியான தவளை உருவம் அடைந்தபொழுது மாம்ச பக்ஷணிகளாக மாறிவிட்டன. மேல் சொன்ன பல காரணங்களினால் தவளையை என் விசித்திர பிராணி என்று சொல்லக்கூடாது.

**தவளையின் வகைகள்** — 1. வீட்டுத் தேரை 2. செடித் தேரை 3. சூரிநாம் தேரை முதலியன.

S. PONNAMBALAM
*Student,*
*Govt. Training School, Dindigul.*



# A. REVIEW

## மதிப்புரை

தஞ்சை தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் L. உலகநாத பிள்ளையவர்கள் இயற்றிய **'கன்றும் கனியுதவும்'** என்னும் நூலைப்பற்றி கரந்தைத் தமிழ்ச் **சங்கத்தினர்** கூறியது.

ஆராய்ச்சி உரை எழுதுவதிற் கைதேர்ந்த, தஞ்சைக் கலியாணசுந்தரம் உயர்தரப் பாடசாலைப் பண்டிதர் ஸ்ரீமான் L. உலகநாத பிள்ளை அவர்கள் **'கரிகாலன் ஆராய்ச்சி'**யின் பின் இரண்டாவதாக வெளியிட்டிருக்கும் **'கன்றும் கனியுதவும்'** என்னும் உரை நூலினைப் பார்த்துப் பெருமகிழ் வடைந்தேம். இந்நூல் பண்டிதர் அவர்களின் பன்னூற் பயிற்சியையும், நினைவு மாட்சியையும், நன்கு புலப்படுத்துகின்றது. தொன்னூல்களில் ஆங்காங்கு அழகுபெற அமைந்து கிடக்கும் சொற்களும், சொற்றொடர்களும், பொருளமைதிகளும் தன்பாற் கொண்டு, தனித் தமிழ்ச் சொற்களே பெரிதும் பயின்று, இழுமென்ற இனிய உரை நடையில் கற்போர் நெஞ்சங் காமுற அமைந்துளது. பண்டைக் காலத்திருந்த பாரி, பாரிமகளிர்களின் சரித்திரத்தினை விரித்துரைத்து, இடையிடையே நன்னன் முதலிய சிலரோர் செய்திகளையுங் காட்டி விளங்குகின்றது. கல்வி, கற்பு, நட்பு, அஞ்சாமை, அரசியல் முதலியவற்றின் அருமை, பெருமை, இன்றியமையாமை, சூழ்ச்சிகளை எடுத்துக் காட்டுகின்றது. மிண்டன், அக்கா, அல்லோல கல்லோலம் முதலிய திருத்தமான சொற்களையும், சில சொற்றொடர் பழமொழிகளையும் காட்டுகின்றது. பழைய காலத்துப் பழக்க வழக்கங்கள் பலவற்றைத் தெரிவிக்கின்றது.

2. இந் நூலில் ஆங்காங்குக் காணப்படும் சோலை, நிலவு முதலியவற்றின் அணியுரைகளும், நூலாசிரியர் தாமே யியற்றியும், முன்னூல்களிலிருந்து எடுத்தும் பெய்தும் வைத்துள்ள அருமைச் செய்யுட்கள் கண்டார் மனங் கவருங் காட்சியே.

3. இதிலுள்ள 'மூவேந்தரும் இரவலராய்ச் சென்று பாடிப் பாரியை வஞ்சித்தது' முதலிய சில சரித்திரப் பகுதிகள், முன்னையோர் எழுதியுள்ள சில குறிப்புக்களை யாதரவாக் கொண்டு அநு-

மித் தொழதப்பட்டனவாகத் தெரிகிறது. அவை பின்னும் ஆராய்தற் குரியவே. பாரி மகளிர் மணம்பற்றிக் கூறப்படும் தெய்விகச் செயல்கள் உண்மைச் சரிதங்க ளாகா வெனினும் முன்னுளோர் பாடல்களைக் கருவியாக் கொண்டு கதைச் சுவை நனி பயப்ப எழுதப்பட் டிருத்தலின் அவையும் விரும்பற்பாலவே.

4. ஆங்காங்குக் காணப்படும் சில அருஞ் சொற்களுக்கு உரை யெழுதி இறுதியிற் சேர்ப்பது நலமாகும்.

5. இந் நூலினைப் பாரி யிருந்து காண்பனேல் எஞ்சிய உயிரையும் அளித்துச் சிறப்பிப்பானென் றெண்ணலாம். இத்தகைய அருமைகள் வாய்ந்த நூலின் பிரதி யொன்றை இதன் ஆசிரியர் ஆறே யணுவிற்கு ஒப்ப மதிப்பிட் டிருப்பது நமக்கு வியப்பைத் தருகின்றது. யாம் இதனைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பெற்றுப் படித்து மகிழவும், பன்னூற் கழகத்தார் (University) நடுத்தர (Intermediate) வகுப்பிற்குப் பாடமாக அமைக்கவும் தகுதி யுடையதென மதிக்கின்றோம்.

தி.வி. உமாமகேசுவரம் பிள்ளை,
சங்கத்தலைவர்.

# SCHOOL GARDEN

## பாடசாலைத் தோட்டமும், அதன் சம்பந்தமான வியவசாய விஷயங்களும்


1. பாடசாலைத் தோட்டம் என்பது என்ன? எலிமெண்டரி முதல் ஹைஸ்கூல் வகுப்புகள் வரையில் டிரில், தேஹாப்பியாசங்கள் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு, பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த தோட்டத்தையும் அதன் வியவசாய கோரிக்கைகளையும் நன்றாய் கவனிப்பதும் அவசியம். பாடசாலைத் தோட்டமென்பது மூன்று வகைப்படும்:—

(*a*) புலங்களின் விருத்தியைத் தேர்ச்சி செய்வதற்காக ஏற்படும் பொதுத்தோட்டம். இதில்லாத, கிரஹங்களும், அவைகளைச் சுற்றிலும், அநேகரூபங்களும், வர்ணங்களும்,, வாஸனை



முதலான அநேகவிஷயங்களை, கற்பிக்கக்கூடிய மனசுக்கு ரமணீயமானதும், தாவரசாஸ்திரத்தை (Botany) போதிக்கக்கூடியதுமான தோட்டம். இதைப்பற்றி ஜர்மனியா தேசத்தில் பாலவித்யா விஷயத்தைப்பற்றி அநேககாலமாய் ஆலோசித்து, கடைசியாய், தீர்மானித்து எழுதிய, மஹா வித்வத் சிரோமணி யாகிய (ப்ரோபெல்) என்பவருடைய கிண்டர்கார்டன், முறையும் இதை உத்தேசித்தேதான். கிண்டர்கார்டன் என்னும் பதத்துக்கு அர்த்தமே குழந்தைகளது தோட்டம் என்பதேயாம்.


(*b*) பாடசாலை இருக்கும் கிராமத்தில் பயிரிடப்படும் பல பயிர்களை சிறு சிறு, பாத்திகளில் பயிரிட்டுக்காட்டுவது.





(*c*) மேற்கண்ட வியவஸாயத்தை அப்போதைக்கப்போது கற்றுக்கொண்ட நூதன விஷயங்களாலும் விசேஷ எருமுதலானதுகள் சேர்த்தும் சோதிக்கவேண்டிய பரீக்ஷாதோட்டம். மேலே சொல்லிய (*b*, *c*,) தோட்டங்கள், அடுத்தடுத்தாவது, எதிர்த்தாவது, இருக்கலாம்.

2. இந்த மூன்று தோட்டங்களும், கால்நடை முதலான ஜெந்துக்கள் பிரவேசிக்க முடியாமல் சாசுவதமான சுவர்கட்டிடமாவது, அல்லது, மண்சுவராவது, அல்லது, நல்ல செடிகளாலான வேலியாவது வைத்து, காப்பாற்றப்படவேண்டும். இந்த மூன்று தோட்டங்களும், பள்ளிக்கூட கட்டிட விஸ்தீரணத்திற்கு சமமாக அளந்து அமைக்கவேண்டும். இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற படத்தைப்போல் அமைப்பது மிகவும் நலம்.

ஆனால் பள்ளிக்கூடத்துக்குச் சுற்றுப்பக்கத்தில் இருக்கப்பட்டதும் தோட்டத்திற்காகக் கிடைக்கக்கூடிய இடத்தைப் பொருத்ததாகவிருக்கிறது. தோட்டத்திற்காகக் கிடைக்கக்கூடியதுமான இடத்தை, நீள, அகலம், அளந்து, நடுவில், 2 அல்லது 3 அடி அகலத்தில், பாதை ஒன்றும், ஆரம்பிக்குமிடத்திலிருந்து, அதே அடி, அகலத்தில், நாலுபக்கத்திலும், சுற்றுப்பாதையும், ஏற்படுத்தவேண்டும். தேவையானால் இதன்மத்திகளிலும், சுமார் 2 அல்லது 15 அடிக்கு, குறுக்குப்பாதையும், ஏற்படுத்திக்கொள்ளலாம். மேற்கண்ட பாதைகள் எல்லாம், பள்ளிக்கூடத்திற்கு சமதூரத்தில், எடுத்துக்கொண்ட கோட்டுக்கு சமகோணத்திலேயே இருக்கவேண்டும். நேர்கோணங்கள் புலங்கள் அளக்கும் சங்கிலி, டேப், கயிறு, இதுகளால் ஒருபக்கம் 15, மற்றொரு பக்கம் 25-மாக அடியில் காட்டியபடி, புலத்தின் நான்கு மூலைகளிலும் நேர்கோணங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.




பிற்பாடு வரும், அளவுகளெல்லாம், சமமான தூரத்திலிருக்க வேண்டும். இப்படியே (b, c) தோட்டங்களில் கண்ட பாத்திகளை, 4 அடி நீளம் 3 அடி அகலத்தில் பிரித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாத்தியின் ஓரத்தில், நடபாதைகள் தவிர மற்ற இரண்டு பக்கத்திலும் ½ அடி அகலம் வரப்புப் போடவேண்டும். இப்படியே பள்ளிக்கூடங்களில் 3-வது ஸ்டாண்டர்டு முதலும், நார்மல் ஸ்கூலாயிருந்தால் மற்ற பள்ளிப்பிள்ளைகளையும், கணக்கிட்டு, ஒவ்வொரு பிள்ளைக்கு 4 அடி நீளம் 3 அடி அகலம் கொண்ட இரண்டு பாத்திகள் ஒன்று சாதாரண வியவசாயத்துக்கும் மற்றொன்று, பரீக்ஷைக்கும், கொடுக்கவேண்டும்.



இந்த தோட்டத்திற்கு ஜலதாரம், கிணறாயிருந்தால், ரோதைமுதலானது போட்டும், தொட்டி கட்டியும் அதிலிருந்து, தங்கள் பாத்திகளுக்குப் பாய்ச்சும்படியாய்த் தகரத்தினால் கெண்டி மாதிரியாய் மூக்கில் ஜல்லடைக் கண்களுடன் அமைக்கப்பட்ட, பாத்திரங்களால் தண்ணீர் பாய்ச்சவேண்டும். அல்லது ஜலாதாரக் குழாயாயிருந்தால், நீர்ப்பாய்ச்சும் கால்வாய்கள் ஏற்படுத்தி ரஸ்தாக்களுக்கு குறுக்கில் 4 அங்குலம் மண்குழாய்களை அமைக்கவேண்டும். ரஸ்தாக்களின் ஓரங்கள் இருபக்கத்திலும் கரணடித்து புல்வளர்ப்பதும் அடிக்கடி வெட்டிவிடுவதும், தோட்டத்திற்கு அந்தமாயிருக்கும். (இன்னும் வரும்)

S. RAGHAVA IYENGAR, D. A.
*Agriculture Instructor,*
*G. T. School,*
*Dindigul.*

# THE RED CROSS OUR DAY SONG

## (12-12-'17)

## நமது நாள் 'ரெட்க்ராஸ்' பாடல்

(எண்சீர் ஆசிரியம்)

நமதுநா ளிந்நாளே நமதுநாட்டின்
நலநாடிப் போரவோடி நலிந்தோர்க்கீயும்
நமதுநா ளிந்நாளே நமது வீரர்
நாடுநலந் தேகசுகம் நாடா தெற்றும
நமதுநா ளிந்நாளே 'ரெட்க்ராஸ்'வேலை
நடத்துபவர்க் குதவிசெயும் நலத்தைப்பெற்ற
நமதுநா ளிந்நாளே, வேறெந்நாளே
நமக்கிதுவே நன்னாளே நமதுநாளே.

## கீர்த்தனம்

பைரவிராகம் — அடதாளம்

(பல்லவி)

நமது நாளிந் நாளே - வேறெந் நாளே
நமக் கிது நன்னாளே - நமது நாளே (நமது)

(அநு பல்லவி)

நமதுநா ளுதவியை - நாடுவீர் தேடுவீர்
நமதுநா ளிதுவென்றே - நலஞ்செய்யக் கூடுவீர் (நமது)

(சரணங்கள் - 5)

1. நமதுநா ளென்றைக்கு - நமதுநா ளின்றைக்கு
நமதுநா ளேதுக்கு - நலிவுறல் போதற்கு
நமதுநாள் ரெட்க்ராஸர் - நடத்தலுக் குதவற்கு
நமது போர் வீரர்க்கு - நாம் பொரு ளீதற்கு (நமது)

2. நமது நாள் அதிருஷ்ட - நற்சீட்டை வாங்கற்கு
நமது நாள் கொடிகளை - நமதென்றே தாங்கற்கு
நமது நாள் ரெட்க்ராஸர் - நாட்டநன் கோங்கற்கு
நமது நாள் நம்மவர் - நலிவெலாம் நீங்கற்கு (நமது)

3. நமது தேச க்ஷேமம் - நாடிப் பாடு பட
நமது வீரர் சண்டை - நடத்தித் தம் சுகம்கெட
நமது மன மிரங்கி - நம்மவர்க் குதவிட
நமக் கொரு நாளேது - நமது நாளிதை விட (நமது)

4. நமது நாள் உதவியை - நாடுங்கள் தேடுங்கள்
நமது நாள் கொண்டாட - நாடெல்லாங் கூடுங்கள்
நமது நாள் சிறப்புற - நல்ல கூத் தாடுங்கள்
நமது நாள் நமது நாளு - நம தென்றே பாடுங்கள் (நமது)

5. நமது நாள் என் நாளே - நமது நாள் உன் நாளே
நமது நாள் முன் நாளே - நமது நாள் பின் நாளே
நமது நாள் தன் நாளே - நமது நாள் நன் னாளே
நமது நம தென் றெங்கும் - நாடுவது மிந் நாளே. (நமது)

---

இது, பள்ளிக் கூடப் பிள்ளைகள் பாடிக் கொண்டாடும்படி திருவள்ளூர் செஷனல் ஸ்கூல் மாஸ்டர் கீ. வே. சண்முக முதலியார் பாடியது.

THE REGISTRAR ... OFFICE ... 28 JAN 1918 ... MADRAS.


# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1917ஆ டிஸெம்பர்மீ | மாதம் 7


## A GARLAND OF VERSES

### செய்யுள் மாலை

அங்கும் இங்கும் எங்கும் ஆகித்
தங்கும் சர்வ சாட்சி யான

ஒருபெரும் பொருளே உண்மைப் பொருளே
பெருகிய கருணைப் பிழம்பாம் பொருளே

உலகிற் காணும் ஒவ்வொரு பொருளினும்
இலகும் அதனதன் இயல்பாய் நிற்கும்

சார மாகுந் தத்துவப் பொருளே
தேருதற் கரிய சின்மயப் பொருளே

மன்னுயி ரிடத்துநீ வைத்த பேரருளை
என்னென் றுரைப்பேன் என்னென் றுரைப்பேன்

எல்லாம் நிலைக்க இந்நில வீட்டை
வல்லதோர் வகையால் வகுத்தனை யதற்கே

பகலில் வெங்கதிர்ப் பரிதியும் இரவில்
நிகரில் தண்கதிர் நிலவும் தந்தனை

நிலைநீர்க் கடலை நீர்க்குட மாக்கினை
உலையா முகிலை ஒருசெம் பாக்கினை

அவ்வவ் வுயிரின் அமைதியை யுன்னி
செவ்விய உணவும் செறித்தனை இன்னும்

உள்ளமும் உதவினை உணர்வும் உதவினை
எள்ளள வேனும் இவ்வுயிர் தம்மால்

நினக்கிங் கேதும் நிகழ்பய னுண்டோ
தனக்குத் தானாய்த் தயங்கிய பொருளே

பத்திராதிபர்.

# SCHOOL GARDEN

## பாடசாலைத் தோட்டமும், அதன் சம்பந்தமான வியவசாய விஷயங்களும்

(முன்தொடர்ச்சி பக்கம் - 143)

3. தோட்டத்தைக் குச்சிகளாலும், கயிற்றினாலும், டேப்பினாலும், அளந்து பாத்திகள் ஏற்படுத்திக்கொண்ட பிற்பாடு, வியவசாயத்துக்கு வேண்டிய கருவிகளைப்பற்றி கவனிக்கவேண்டும், அவையாவன: கை மண்வெட்டி அல்லது களைதோண்டி, பின்னும், ஆழமாய் வெட்ட கவர்முட் கருவி (Digging fork). இது தோட்ட வேலை செய்கிற ஒவ்வொருவருக்கும், வேண்டியது அவசியம். பள்ளிக்கூடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முட்கருவிகள் இருந்-



தால் போதுமானது. இப்படியே பெரிய மண்வெட்டியும், ஆனால் கை மண்வெட்டி அல்லது களைதோண்டி மட்டும், ஒவ்வொரு பள்ளிப்பிள்ளைக்கும் இருக்கவேண்டியது அவசியம். நமது பள்ளிக்கூடங்களில் சாதாரணமாய்த் தோட்டவேலை செய்வதை மனவுல்லாசத்துடன் செய்வதில்லை. மண்வெட்டி முதலான கருவிகளால் வேலைசெய்வதை மிகவும் இழிவாகவும் நினைக்கிறார்கள். தேக உழைப்பின் மேன்மையை (Dignity of labour) தெரிந்த ஜாஸ்திப் படிப்புக்காரர்கள் தவிர மற்றவர்கள், வேலைகள் செய்வதனால் உண்டாகும் தேகப்பயிற்சியும், அதனாலுண்டாகும் கைப்பழக்கமும், வஸ்துவின் சுபாவங்களை நன்றாய் ஆராயும் சக்தியும், தெரிந்துகொள்ளுகிறார்களில்லை. ஆகையால், அந்தந்த வகுப்பு உபாத்தியாயர்கள் தாங்களே நேரில் தோட்டவேலையைப் பிள்ளைகளுடன், விளையாட்டாய்ச் செய்துகாட்டி, வேலையின் மேன்மையையும், அதன் பிரயோஜனத்தையும், அடிக்கடி எடுத்துக்காட்டி பிள்ளைகளால் செய்விக்க வேண்டும். "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" என்னும் பழமொழியைப் பிள்ளைகளுக்குப் பிரத்தியக்ஷமாயும், கதைகளாலும் போதிக்கவேண்டும்.

4. நிலத்தைப் பண்படுத்தும் விதம் — எந்தவிதமான நிலமாயிருந்தபோதிலும் அதற்குத் தகுந்த, முயற்சி எடுத்து, அதை விளைநிலமாக்கலாம். கூழாங்கற்கள் நிறைந்த நிலத்தைப் பார்க்கிலும், வியவசாயத்திற்குக் கெடுதியானது ஒன்றும் காணமுடியாது. அது நாளடைவில் சுபாவமாய் விளைநிலமாக்கலாம். கொஞ்சகாலத்திலேயே அக்கற்களை உடைத்துப் பொடியாக்கி, தக்க எருச்சேர்த்து நல்ல நிலமாக்கக்கூடும். [இதைக் கோயம்புத்தூர் ஜில்லாவில் அநேக இடங்களில் உக்கிலிய கவுண்டர்கள் எவ்விடங்களில் குடியிருக்கிறார்களோ அவ்விடத்தில் காணலாம். சென்ற பத்து வருஷத்துக்கு முன்பு ஒன்றுக்கும் பயன்படாத கல்லாந்தரிசில் வாரிகைப்புல் கூட முளையாதயிடத்தைக் கவுண்ட ஜாதியார்கள் தங்கள் முயற்சியாலும் ஊக்கத்தாலும் பெரிய கற்களாயிருந்தால் அதைச் சுவருக்கு உபயோகப்படுத்தியும், சிறு சிறு கற்களை உடைத்தோ அல்லது அப்படியே சுபாவத்திலேயே கரையும்படி விட்டோ 10-வருஷத்திற்குள் விளைநிலமாக்கி நாளடைவில் தோட்டநிலத்திற்கும் லாயக்கு செய்கிறார்கள்] என்பதைப் பாடசாலைத் தோட்டத்தில் செய்து காண்பிக்கவேண்டும். இயற்கையிலே வாய்க்கும் நல்ல

நிலங்கள் தவிர, மற்றவைகளைப் பின் வருமாறு சரிப்படுத்தலாம். பாத்திகளில் கவர்முட் கருவிகளால் ½ அடி ஆழம் அளந்து தோண்டி மேற்படி மண்ணை ஒரு குவியலாகக் குவித்து, அந்தக் குவியலுக்கு மேல்மண் என்று பெயர்கொடுத்து, அடையாளம் செய்து, பிற்பாடு பாத்திகளில் மேலேகண்டபடியே ½ அடி ஆழம் தோண்டி, அதையும் வேறுகுவியலாகக் குவித்து அதற்கு நடுமண் என்று பெயர்கொடுத்து அடையாளமிட்டும், இவ்விதமே மேற்படி பாத்திகளில் ஓரடி ஆழத்திற்குக் கீழிருக்கிற நிலத்தை மறுபடியும் ½ அடி ஆழம் தோண்டி அதை மூன்றாவது குவியலாகக் குவித்து அந்தக் குவியலுக்கு அடிமண் என்று பெயர்கொடுத்து அடையாளமிட்டும், அதன் பின்னர் மேற்படி மூன்று குவியல்களையும் பரீக்ஷிக்கவேண்டும். அதாவது, முதலாவது குவியலைச்சோதித்து, கல்லுகளை உடைத்துப் பொடியாக்கியோ, அல்லது அப்புறப்படுத்தியோ, நன்றாய் புரட்டிக்கொடுத்து, பாத்தியின் அடி மண்ணைப் போடவேண்டும். பிற்பாடு மூன்றாவது குவியலைச்சோதித்து மேற் சொன்னபிரகாரம் புரட்டிக்கொடுத்து, கொஞ்சம் எருவாவது, நல்ல மண்ணைக் கலந்தாவது, இரண்டாவது வரிசையாகப் பாத்தியில் போடவேண்டும். அதன் பிற்பாடு இரண்டாவது குவியலைச்சோதித்து மிகவும் நன்றாய் காற்று உலாவும்படி புரட்டிக் கொடுத்து, சரியானபடி எருச்சேர்த்து, பாத்தியின்மேல் மட்ட மண்ணைப் போடவேண்டும். இப்படிச் செய்வதனால் எப்பேர்பட்ட கெட்டமண்ணும், நல்ல விளைநிலமாய்விடும். சுபாவத்திலேயே பாத்திகளில் நல்ல மண்ணாகவிருந்தால், அதை அநேக தடவை ¾ அடி, ஆழம்வரையில் வெட்டிக் கிண்டுவதினாலேயே, சாரமாய்விடும். இதனால் காற்றோட்டம் பூமிக்கு வேண்டுமென்பதையும், பூமியிலிருக்கிற அநேக இந்திரியவஸ்துக்களும், செடியுணவுகளும் பயிர்களுக்குச் சரியான உணவைக் கொடுக்கும்படிச்செய்யும் என்ற வியவசாய ரகஸியத்தையும் தோட்டவேலை செய்யும் ஒவ்வொரு மாணாக்கனும் அறிவான்.

5. பயிர் செய்யும் விதம் — பாத்திகள் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு மாணாக்கனும், மேற்சொன்னவிதமாய் தங்கள் தங்கள் பாத்திகளைத் தயார்செய்துகொண்டு, இரண்டு பாத்திகளில் ஒரு பாத்தியை பள்ளிக்கூடமிருக்கும் ஊரிலுள்ள பயிர்களைச் சாதாரண குடித்தனக்காரன் செய்வதுபோலப் பயிரிட்டும், மற்-



றொன்றை தான் வியவசாய விஷயமாய் உபாத்தியாயரால் கற்றுக்கொண்டதைத் தானேசெய்துபார்த்தும், இவ்விரண்டையும், அடிக்கடி தான் கவனித்தும், இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை தனக்குக், கொடுக்கப்பட்டிருக்கிற அன்றாடம் எழுதவேண்டிய டைரி என்னும் புஸ்தகத்தில் குறிக்கவும்வேண்டும். டைரி எழுதுவதைப்பற்றி பின்னால் சொல்லப்படும். தோட்டவேலைக்கு ஏற்படுகிற ஒவ்வொரு மாணாக்கனுக்கும், வேறு வேறு பயிரைச் செய்யும்படிக்கு ஏற்பாடு செய்யவேண்டும். தோட்டவேலையும் வகுப்பில் உட்கார்ந்து படிப்பதுபோல ஒழுங்காயும், கிரமசிட்சையோடும் கூட செய்யவேண்டும். மேற்படி தோட்டவேலையை மேல் பார்க்கிற உபாத்தியாயர், மாணாக்கர்கள் வேலைக்கு ஆரம்பிக்குமுன் பாத்திகளைச் சுற்றிப்பார்த்து, குற்றம் குறைகளைக் கவனித்து, அந்தந்த மாணாக்கரிடத்தில் எடுத்துரைத்து நிவர்த்தி செய்தும், மேல்செய்யவேண்டிய முறைகளைக் கற்பித்தும், எரு, தண்ணீர், பூச்சி முதலானவைகளைக் கொல்ல ஏற்பாடு செய்தல், இவைகளெல்லாம் போதிக்கவேண்டும். ஒவ்வொரு பயிரின் விதைமுதல், செடிகள் விதை அல்லது பலன்கொடுக்கும் வரையில், அதனுடைய சரித்திரங்களை நன்றாய்க்கவனித்து ரிக்கார்டு செய்யவேண்டும். இப்படி ஒவ்வொரு மாணாக்கனும், தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும், இரண்டு பாத்திகளின் சரித்திரத்தை எழுதுவதுடன்கூட, தன் தோழமாணாக்கர்கள் செய்திருக்கும் தோட்டத் தொழிலைப்பற்றி குற்றங் குறைகளைக் கண்டு, பயிர்களைப்பற்றி மாத்திரம் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு வியாசம் எழுதும்படி செய்யவேண்டும். மேற் சொல்லியவைகளின் விஷயத்தை நேராகவே சோதிக்கப் பரிக்ஷா பாத்திகளில் கம்போடியாப்பருத்தி போடவும், நெற்பயிர்களின் நாற்றைக்கலப்பாய் ஒத்தை நாற்றாய் நடவும், வேர்கடலை போடும்படியான நிலமுண்டாக்கவும், கரும்பு உயர்ந்த ஜாதி, கலப்பாய் நட்டுப்பார்க்கவும், காற்றினால் தள்ளப்படாத மோரிஸ் வாழை பயிர் செய்யவும், இன்னும் உருளைக்கிழங்கு, இஞ்சி, சேனைக்கிழங்கு, இவைமுதலானவைகளை வியவசாய சாஸ்திரப்படிக்கும், அநேக தினுசான எருவிட்டுப் பயிர்செய்து பரீக்ஷித்தும் அறியலாம்.

எருவைப்பற்றி முக்கியமாய் போதிக்கவேண்டிய அம்சங்கள் இருவகைப்படும்.

## General manure.

(a) புலங்களில் பயிர் விளையவேண்டிய எல்லா இந்திரிய உணவுகளையும் கொடுக்கக் கூடியது. இது நமது கொல்லையில் அன்றாடம் சேர்க்கப்படும் சாணி, குப்பை முதலான உரம்.

## Special manure.

(b) சில விசேஷப்பயிர்கள் விளைவிக்கத்தக்க ஆங்கீக உணவுகளைக் கொடுக்கக்கூடியதான இதற்கென்று தயார் செய்யப்பட்ட எரு.

(c) நமது தேசத்தில் எருவைப் பெரும்பான்மையும் தமக்கு ஆஸ்தி என்றே கவனிக்காமல், ஏதோ கேவலம் குப்பை, சாணி என்று, அலக்ஷியமாய்க் கண்டபடி விட்டுவிடுகிறார்கள். ஜப்பான் தேசத்தில், தங்கள் வீட்டுக்கு வரும் விருந்தினர்கள், தங்கள் வீட்டிலேயே மல ஜலபாதியைக் கழிக்காமலிருப்பதைக் குற்றமாக எண்ணுகிறார்கள். இவர்கள், வியவசாயத்தின் மேன்மையையும், எருவின் உபயோகத்தையும், எவ்வளவு நன்றாய் அறிந்திருக்கலாம் என நாம் யோசிப்போம். ஆகையால் ஒவ்வொரு வீட்டிலுமுண்டாகும், எருவின் சாரத்தை வெயிலால் கிரஹிக்கப்பட்டு மழைத்தண்ணீர் ஓட்டத்தால் அடித்துக் கொண்டுபோக இடங்கொடுக்காமலும், எருவின் சாரம் போகாமலும், காப்பாற்றும் முறையையும், அதை ஒன்றுக்கு இரண்டு பங்கு விருத்தி பண்ணும் முறையையும், மாணாக்கர்களுக்குக் கற்றுக்கொடுப்பது அத்தியாவசியம். இதற்காகவே மாணாக்கர்கள் செய்யும் தோட்டத்தின் ஒரு கடைசியில் எருவுக்கென்று குழிகள் ஏற்படுத்தி பின் சொல்லுகிற எருக்களை சேகரித்துப் பயிர்களுக்கு உபயோகப்படுத்தி பரீக்ஷைசெய்யவேண்டும். ஒவ்வொரு குழியும் சுமார் 4 அல்லது 6 அடி நீளமும், 3 அல்லது 4 அடி அகலமும், 3 அடி ஆழமும் இருக்கலாம். இந்தக் குழிகளில் முறையே, கால்நடைச் சாணி முதலானதுகளை ஒன்றிலும், குதிரை எருவை ஒன்றிலும், பசுந்தாள் உரத்திற்கான பயிர்களைச் செய்து அதைத் தினுசுக்கு ஒவ்வொரு குழியிலும், பொதுவாய் சம்பாதிக்கக்கூடிய காட்டுத்தழைகளை ஒரு குழியிலும், விசேஷ உப்புமண் அல்லது தெலுங்கு தேசத்தில் அகப்படுகிற பாடிமண்ணு இன்னும் விசேஷ எருக்களையும், சுலபமாய் சம்பாதிக்கக்கூடியவைகளையும், மேற்படி குழி-



களில் சேகரித்து, குவியலாய்ப் போடாமல், பரவலாய்ப் போட்டு அதற்குமேல் தழைகளால் மூடி, கூடுமானால் இந்தக் குழிகள் மழைகளினின்றும் காப்பாற்றுவதற்கு பந்தல் முதலானவைகள் ஏற்பாடு செய்யலாம். பசுந்தாள் உரத்திற்கான பயிர்கள் அவுரி, கொளிஞ்சி, சணல், கொள், தக்கைப்பூண்டு (Daincha) அல்லது ஆவாரை, முதலியவைகள் சாதாரணமாய்த் தோட்டங்களில் பரீக்ஷிக்கக்கூடிய பயிர்கள். பங்குநெல்லு, கம்போடியா பருத்தி, கம்பு, டிரான்ஸ்வால்கம்பு, பெரியமஞ்சள், சோளம், புகையிலை, மோரிஸ்வாழை, மணிலாக்கொட்டை, மக்காச்சோளம், சில கிழங்கு தினுசுகள், அநேக காய் கறிகள், இவைகளைப் பயிர் செய்து பரீக்ஷிக்கும்படி செய்யலாம்.

மேற்படி விஷயங்களை, பாலர், 1, 2, வகுப்புகளுக்குத் தோட்டப்பாடமென்று, அழைத்துக் கொண்டுபோய் காட்டிக் கவனிக்கும்படி செய்யலாம்.

6. **அன்றாடம் டைரி எழுதும் விதம்** — இதற்கென்று ஒரு சிறிய நோட் புக் ஏற்படுத்தி அதில் தான் புலப்பிரவேசமுதல், அன்றாடம் செய்கிற வேலையை ஒரு பக்கத்திற்கு அதிகப்படாமல், ஒரு வியாசம் எழுதவும். மற்றொரு பக்கத்தில், தான் செய்யும் இரண்டு பாத்திகளிலுள்ள, முளை, செடி, பயிர், இவைகளில் ஒவ்வொரு பாத்தியிலும் ஒரு செடியை முதலிலேயே குறிப்பிட்டு, அதில் விதை முதல் பலன் கொடுக்கும்வரை ஒவ்வொரு நாளும் வளர்ச்சியை சித்திரம் எழுதக்கூடுமானால் ப்ரஷ்வொர்க்கு செய்து, அன்றாடம் உபாத்தியாயரிடம் காண்பித்து, வியாசத்திலும், சித்திரத்திலும், தப்புகளிருந்தால் திருத்துப்பாடு செய்வித்தும் உபாத்தியாயரின் சிறு கையெழுத்தும் வாங்கவேண்டும். இந்த வேலை, காலை 7-மணிக்குள்ளாவது அல்லது மாலை 5-மணிக்குள்ளாவது தினம் ½-மணி நேரத்திற்கு அதிகப்படாமல், பாத்தி-வேலையுடன் சேர்த்து, டைரியும் எழுதவேண்டும். ஒவ்வொரு வாரமுடிவிலும், தன் பாத்திகள் தவிர, மற்ற இதர மாணாக்கர்களுடைய பாத்திகளை (கோடைகால மாரிகால ஸ்கூல்ரஜாக்கள் விடுமுன் எல்லா மாணாக்கர்களுடைய பாத்திவேலையை கவனிக்கும்படியாக) ஒவ்வொரு வாரத்துக்கும் பாத்திகளைப் பகுந்து தானும் பாத்திகளுக்குச் சொந்தமாணாக்கர்களைக் கேட்டும், மொத்தமாய்

அவரவர்கள் பரீக்ஷித்த விஷயங்களையும், தன்னுடைய ஆராய்ச்சியையும் சுருக்கமாய் ஒரு வியாசம் வார டைரியில் எழுதவேண்டும். ஆகவே இவ்விரண்டு டைரிகளையும் உபாத்தியாயர் அடிக்கடி கவனித்துவரவேண்டும்.

7. இவ்விதமாய்த் தோட்டவேலை செய்வதனால் 2-வது பாராவில் கண்டபடி பாத்திகளை ஏற்படுத்துவதில் க்ஷேத்ர கணிதமும், கணக்குகளும், அன்றாடம் டைரி எழுதுவதனால், சித்திரம் வரைதலும், தமிழ் வாசகம் எழுதலும், அடிக்கடி செடிகளை உற்றுப் பார்ப்பதினால் அவற்றின் வளர்ச்சி முதலானவைகளை குறிக்கிற தாவர சாஸ்திரமும், கற்றுக்கொள்ளும்படியாக உதவுகிறது.

S. RAGHAVA IYENGAR, D. A.,
*Agriculture Instructor,*
*G. T. School, Dindigul.*

## NATURE STUDY — ANIMAL LIFE

## இயற்கையறிவு — பிராணி சாஸ்திரம்

### கோழி முட்டை

1. **வெளித்தோற்றம்** — கோழிமுட்டையின் நிறம் எப்படியிருக்கிறது? அதன் வடிவம் எப்படியிருக்கிறது? பிள்ளைகள் விளையாடும் பந்தினின்றும் எப்படி வித்தியாசப் படுகின்றது? அது உருண்டையாயிருந்து ஒரு பக்கத்தில் வர வர கொஞ்சங் கொஞ்சமாக சிறுத்துக்கொண்டே வருகிறது. ஆனால் அது கடைசியில் கூர்மையாக முடியவில்லை. அதன் அதிக நீளத்தையும், அதிக அகலத்தையும், அதிக சுற்றளவையும் ஒரு நூல் எடுத்துக்கொண்டு அளந்து பார். முட்டையின் வடிவம் இப்படியிருப்பதினால் அதற்கு என்ன சௌகர்யங்கள் ஏற்படுகின்றன? ஒரு முட்டைக்குக் கூர்மையான மூலைகள் இருக்கும்பக்ஷத்தில் கோழி கஷ்டமின்றி அதன் பேரில் உட்கார்ந்து அடைகாக்க முடியுமாவென்று எண்ணிப்பார். ஒரு முட்டையை மேஜையின்பேரில் வைத்து மெதுவாய் உருட்டு. அது உருண்டு வருமிடம் ஒரு நேர்க்கோடாகவிருக்கிறதா வென்று பார். முட்டை யிப்படி நேர்க்கோட்டுடன்



வழியாய் உருண்டு வாராமலிருப்பதினால் அதற்கு ஏதாவது சௌகர்யங்கள் உண்டா? முட்டை யுருள்வதை ஒரு பந்து உருள்வதுடன் ஒப்பிட்டுப்பார். என்ன வித்தியாசம்?

2. ஓட்டின் உறுதி — ஒரு முட்டையை நீட்டுப்போக்காக வைத்துக் கட்டை விரலினால் மேற்பக்கத்தையும், ஆள்காட்டி விரலினாலாவது அல்லது நடுவிரலினாலாவது அடிப்பக்கத்தையும் பிடித்துக்கொண்டு, உன் பலத்தையெல்லாம் வைத்து அமிழ்த்திப்பார். ஓட்டை உன்னால் உடைக்க முடிகின்றதா?

அமைப்பு:—

(a) ஓடு — முட்டையை ஓடு உடையும்படி மத்தியில் ஓரிடத்தில் ஒரு சிறிதளவு கீறு. அப்பால் ஜாக்கிரதையாக ஓட்டுச்சில்லுகளை யெடுத்துவிடு. பிறகு சிறிது கெட்டியாக ஓட்டின் உட்புறமாக ஓட்டுடனே ஒட்டிக்கொண்டிருக்கும் தோலைப்பார். அத்தோலை மத்தியில் ஓரிடத்தில் சிறிது கிள்ளிப்பார். அதில் காற்றுப் போவதற்குரிய ஒரு சிறிய அறைபோன்று ஒன்று காணப்படும். பிறகு முட்டையின் உட்புறத்தையும், காற்றறையையும் பிரிக்கும்படியான உட்புறத்தோலையும் பார். அது எவ்வளவு மெல்லியதா யிருக்கிறது? ஓட்டுச் சில்லுகளில் ஒன்றை யெடுத்து வெளிச்சத்தில் பிடித்துப்பார். அதில் என்ன காண்கின்றன? அதில் சிறிய புள்ளிகள் காணப்படுகின்றன. அவ்வோட்டின் வழியாக யாதேனும் ஒரு வஸ்துவைப் பார்த்தால் அது நமது கண்ணுக்குப் புலப்படும். இம் மேல் ஓடானது காற்றை உள்ளே விடும்பொருட்டு பூதக்கண்ணாடியின்றி பார்க்கக்கூடாத சிறிய துவாரங்களையுடைத்தா யிருக்கிறது.

(b) வெள்ளைக்கரு — முட்டையின் ஓடு கொஞ்சங்கொஞ்சமாக விரிந்து ஓட்டுச்சில்லுகள் கீழே விழுந்துவிடும்படி, கீழே நிலத்தில் முட்டையை மெதுவாய்த்தட்டி உடை. ஒட்டிக்கொண்டிருக்கும் பாக்கிச் சில்லுகளையும் ஜாக்கிரதையாய் எடுத்து எறிந்துவிடு. பிறகு ஒரு மெல்லிய தோலிருக்கும். இந்தத்தோலைக் கிழித்துக்கொண்டேவா. பிறகு காலியிடமில்லாமல் ஓட்டுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தோலுக்கடுத்தாற்போல்தா னிருக்கிறது வெள்ளைக்கரு. மேல்பாகத்தை யெல்லாம் தனியாகப் பிரித்தெடுத்துவிட்டு *கருவிருக்கு மிடத்தையும் அதன் உருவத்தையும் உற்றுப்பார். பிறகு அத்திரவத்தை மெதுவாய் ஒரு பாத்திரத்தில்

ஊற்று. அதன் வடிவம் எப்படியிருக்கின்றது? நிறம் என்ன? அதற்குப் பிம்பம் காட்டும் சக்தி யிருப்பதைப் பார்.

(c) மஞ்சட்கரு — பாத்திரத்திலிருக்கும்போது காணும் மஞ்சட் கருவி னுருவம், வெள்ளைக்கரு சுபாவமாய் மஞ்சட் கருவுடன் சேர்ந்து முட்டையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது ஏற்படா நின்ற உருவத்தினின்றும் எப்படி வித்தியாசப்படுகின்றது? இதன் மேற்பரப்பில் மத்தியில் சிறிது வெளுத்து ஒரு சிறிய தக்கை போட்டது போன்ற ஒரு பதார்த்த மிருப்பதைப் பார். கருவுடைய லேசான பாகம். கோழி அடைகாக்கும்போது, முட்டை எப்பக்கத்தில் திரும்பி யிருந்தபோதிலும், கரு இந்த மேற்பரப்பை நோக்கியே யிருக்கிறது. இப்படி யிருப்பதினாலிந்தப் பக்கத்திற்குக் கோழியினுடைய உஷ்ண மதிகமாயும் நன்றாயும் படுகின்றது.

**வேகவைத்த முட்டை** — ஒரு முட்டையை ஐந்து நிமிஷம் ஜலத்தில் வேகவைத்து எடுத்து, ஒரு கூரிய கத்தியால் அதன் மேலோட்டை யெல்லாம் எடுத்துவிட்டு, அதை நீட்டுப்போக்காக இரண்டு பாகங்களாக அறு. இப்பொழுது மேலோடு, ஓட்டுடன் ஒட்டிய மெல்லிய தோல் காற்றறை, வெள்ளைக்கரு, மஞ்சட் கருவுகளெல்லா மிருக்கும் நிலைமையை நன்றாய் பார். வெள்ளைக்கரு வேக வைத்தபிறகு திரவமாயும், பிம்பத்தைக் காட்டக் கூடியதாயும் காணப்படவில்லை. ஆனால் அது முன்போலவே வெளுப்பாயிருந்து, பிம்பம் காட்டக்கூடாததாய் இளகக்கூடிய கனபதார்த்தமாய் மாறி யிருப்பதைக் காண்கிறோம். அந்த வெள்ளைப் பாகத்தைத் தகடு தகடாக எடுப்பதற்குப் பிரயாசைப்படு அவைகளும் கூடியமட்டும் தகடு தகடாகவேதான் வரும். அவைகள் மஞ்சட் கருவைச்சுற்றி வட்டமாகத் தகடு தகடாக ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டவை யென்று தெரிகின்றதல்லவா?

**கோழிமுட்டை** — ஒரு சிறிய வித்து ஒரு விருக்ஷத்திற் கெப்படி யாதாரமா யிருக்கின்றதோ அதுபோலவே, இனிமே லுண்டாகப்போகிற ஒரு கோழிக்கு ஆதாரமாயிருக்கின்றது. எப்படியென்றால், (1) முட்டையில் ஜீவனுடன் கூடியதாயும், சிறிது சிறிதாக வெவ்வேறு ரூபத்துடன் வளர்ந்துகொண்டே கடைசியாக பல உறுப்புகள் பெற்ற ஒருஜந்துவாவதற்குரிய ஒரு சிறிய பதார்த்தம் ஒன்றிருக்கிறது. (2) சிறிய குஞ்சு பலவீனத்தாலும், ஆசையின்மையினாலும் தானே யாகாரத்தைத் தேட முடியாததினால் செத்துப்போய்விடும். அப்படி யிறக்காம லிருப்பதற்கென்றே முட்டையில் வேண்டியமட்டும், பின்னுக்கு வேண்டிய ஆகாரம் முன்னாகவே சேகரித்து வைக்கப்பட்டிருக்கிறது. முட்டை இனிமே லுண்டாகப்போகிற பக்ஷியினுடைய பலத்தைக் காப்பதற்கும், க்ஷேமத்தைக் குறித்துமே, தகுந்த உணவுகளைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிற தென்பது நன்றாய் நமக்கு இங்கு விளங்குகிறது. முட்டை இன்னவடிவமென்று நாம் முன்னமே சொன்னோம். இப்படிப்பட்ட வடிவமதற் கிருப்பதால் அதற்கொரு சௌகர்ய மேற்படுகிறது. முட்டை சிறிது சாய்வான விடத்தில் வைத்தால் உருண்டு கீழே விழாமற்படிக்குத் தடுக்கப்படுகின்றது. சாதாரணமாய் சில பறவைகள் செங்குத்தான பாறைகளிலும், வெட்ட வெளியிலும் முட்டையிடுகின்றன. காற்றடித்தால் அம் முட்டைகள் கீழே வுருண் டுடைந்துபோகும். அப்படி உருண்டு உடையாமலிருப்பதற் கென்றே இம் முட்டைகள் அதிக நீட்டுப் போக்காக விருக்கின்றன. அதிக காற்றடித்த போதிலும் ஒரு சுற்றுச் சுற்றி தன் நிலைக்கே வந்துவிடும். கிண்ணம்போ லிருக்கும் கூடுகளிலிருக்கும் முட்டைகள் எப்பொழுதும் அகன்ற பக்கம் கீழ்ப்புறமாகவும், சிறுத்த பக்கம் மேற்புறமாகவு மிருக்கும். இப்படி யிருப்பதினால் தாயினிடத்திலிருந்து அதிக உஷ்ணம் முட்டைக்குக் கிடைக்கின்றது. ஓட்டில் ஒரு வகையான சுண்ணாம்பு கலந்திருக்கின்றது. ஓட்டில் கண்ணுக்குப் புலப்படாத சிறிய துவாரங்க ளிருக்கின்றன வென்று முன்னமே சொன்னோம். அவைகளின் வழியாகத் தான் உள்ளே யிருக்கும் ஜீவன் வெளியிலிருந்து பிராணவாயுவை யுட்கொண்டு உள்ளிருந்து கொண்டு கரியமலவாயுவை வெளியே விடுகின்றது. ஒரு சிறிய மேலோட்டுச் சில்லு சுலபமாய்ப் பொடியாய்ப் போய்விடுகிறது. ஆனால், முட்டையின் முழு ஓட்டுக்கு வெளியில் அமிழ்த்தும் சக்தி யேற்பட்டிருக்கிறது. அதிலும் நீட்டுப் போக்கிலும் அதிகமா யிருப்பதினால் அதை உடைப்பதற்கு அதிக கஷ்டமாயிருக்கிறது. ஓட்டுக்குப் புறமாக ஒரு மெல்லிய தோலிருப்பது முன்னமே நமக்குத் தெரியும். இந்தத் தோல் முட்டையின் அடிப்புறத்தில் இரண்டாக ஒன்றின்மேலொன்றாக இருந்து கடைசியில் பிரிந்து ஒரு சிறிய காற்றறையை யுண்டாக்கியிருக்கிறது.

ஓட்டுடன் இருக்கிற மெல்லிய தோலுக்கப்புறம் வெள்ளைக்கருவும் மஞ்சட்கருவும் இருக்கிறதென்று சொன்னோம். அந்த வெள்ளைக்கரு நிகழ்ச்சிச் சக்தியுடையதாயும், பிம்பம் காட்டக்கூடியதாயு மிருக்கிறது. இதனுடைய உட்புறம் பாக்கியிருப்பதைவிட கெட்டியாயும் மஞ்சட்கருவைச் சுற்றிக்கொண்டிருந்தும் இரண்டு பக்கத்தில் திரித்த கயிறுபோலத் தொங்கிக்கொண்டிருக்கிறது. மஞ்சட்கரு உருக்கி வார்த்த தங்கம்போல் பளபளவென் றிருந்துகொண்டு நிகழக்கூடிய ஒரு மெல்லிய தோலும் திரவமும் கூடிய பதார்த்தத்தின் நடுவேயிருக்கிறது. அது அங்கு அப்படி யிருப்பதினால்தான் உருண்டை வடிவமாய்க் காண்கிறது. இதற்கு மேற்பரப்பில் வெள்ளைத்தகடொன் றிருக்கிற தென்று சொன்னோமல்லவா? அதுதான் கருவின் முகம். இது அரைக்கால் அங்குல நீளமுடையது. இதுதான் இனிமேலுண்டாகப்போகிற குஞ்சுக்கு மூலமாகிய பொருள். இதைத்தவிர பாக்கியிருக்கும் மஞ்சட்கரு, வெள்ளைக் கருவுகளெல்லாம் வளர்ந்துகொண்டு வரும்படியான குஞ்சுக்கென்று சேகரித்து வைக்கப்பட்ட ஆகாரமே. நாம் மேலே சொல்லிய வெள்ளைத்தகடுபோன்ற ஜீவன் சிறிது சிறிதாக வளர்ந்து ஒரு குஞ்சாவதற்கு அது கூடாய் வைக்கப்பட வேண்டும். சாதாரணமாய்க் கோழி, முட்டையின்பேரி லுட்கார்ந்து அடைகாத்துத் தன்னுடைய தேகத்தின் உஷ்ணத்தினால் குஞ்சுபொரிக்கின்றது. இப்படி சூட்டைக்கொடுப்பதிலும் முட்டையின் மேல்பாகத்துக்கு, பாக்கியிருக்கும் பாகத்துக்குக் கொடுப்பதைவிட அதிகமாய்க் கொடுக்கின்றது. முட்டைக்குள்ளிருக்கும் ஜீவன்மேல் அதிக உஷ்ணம் படவேண்டு மாகையினால் அப் பக்கம் தாய்ப்பறவையின் உடம்புக்குப் பக்கத்திற்கு எவ்வளவுக் கெவ்வளவு பக்கத்திலிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நலமே இப்பதார்த்தம் உள்ளுக்குள்ளிருக்கும் பதார்த்தங்களைக் காட்டிலும் மிகவும் லேசானது. ஆகையினால் அது மேற்புறமாகவே யிருக்கிறது. முட்டையைச் சிறிது தலைகீழாகத் திருப்பினாலும் அது வலதுகைப்புறமாகத் திரும்பி மேற்பக்கத்துக்கே வந்துவிடுகிறது. அவசரமாய்த் திருப்பினாலோ அது சீக்கிரத்தில் உருண்டுகொண்டு மேற்புறத்திலிருக்கும் தன் சுய நிலைக்கு வந்துவிடுகின்றது. கோழி அடைகாக்கும்போது முட்டையின் எல்லாப்பக்கத்திற்கும் சம உஷ்-



ணம் படுவதற்கென்று கோழி தன்னுடைய மூக்கினால் முட்டையை அடிக்கடி திருப்பித் திருப்பி வைத்துக்கொள்கிறதென்று சிலர் நினைக்கிறார்கள். அது அப்படியல்ல. ஆனால் உள்ளேயிருந்து வளர்ந்து கொண்டுவரும் ஜீவன் அடிக்கடி தன் நிலையை மாற்றிக்கொள்வதற்கும் யாதேனும் ஓர் அங்கம் ஊனமாய்ப் போகாமலிருப்பதற்குமே முட்டையைக் கோழி யடிக்கடி திருப்பித் திருப்பி வைத்துக்கொண்டு அடைகாக்கின்றது.

R. A. SRIKANTAN.

## STORY TELLING

## ஏழு பொற்கொல்லர்கள்

ஓர் ஊரில் பொன்வேலை செய்வதில் கைதேர்ந்து புகழ்பெற்ற ஏழு பொற்கொல்லர்கள் ஒன்றுகூடி வியாபாரஞ் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் கைத்தொழிலில் சிறந்தவர்களா யிருந்தமையின் அவர்கள் புகழ் எங்கெங்கும் பரவியது. அந் நகரமாந்தர்களே யன்றி ஏனைய நகரமாந்தர்களும் அவர்களிடம் வந்து நகை செய்துகொண்டு போவார்கள். அவர்கட்கும் ஏராளமாய் வருவாய் கிடைத்துக்கொண் டிருந்தது. இது இவ்வாறிருக்க, அவர்கள் வசிக்கும் ஊருக்குச் சமீபத்தில் இருக்கும் ஆரணியத்தில் பெரிய உப்பரிகை கட்டிக்கொண்டு பிரபு ஒருவர் வாசஞ்செய்துகொண்டிருந்தார். அவர் ஒருநாள் அந்த ஏழு பொற்கொல்லர்களையும், ஆபரணங்கள் செய்யும்பொருட்டு, தன் அரண்மனைக்கு அழைத்து வரும்படி தன் வேலைக்காரன் ஒருவனுக்குக் கட்டளையிட்டனர். வேலைக்காரனும், அப் பொற்கொல்லர்கள் வசிக்கும் ஊருக்குச் சென்று அவர்களைத் தன் எஜமானன் அரண்மனைக்கு வரும்படி வேண்டினான். பொற்கொல்லர்கள் மிகுந்த பணம் கிடைக்கும் என்னும் ஆவலால், அந்த வேலைக்காரனுடன் சென்றார்கள். அவர்கள் நெடுந்தூரம் காட்டுமார்க்கமாய்ப் போக நேர்ந்தது. அவர்கள் அவ்வாறு பிரயாணஞ் செய்து அந்தக் கனவான் வசிக்கும் மாளிகையைப் போய்ச் சேர்ந்தார்கள். பொற்கொல்லர்கள் தன் மாளிகையை நோக்கி வருவதை அறிந்த அவ்வரண்மனை அதிகாரியாகிய பிரபு வெளியே வந்து முகமன்கூறி

அவர்களை அன்புடன் வரவேற்றார். அந்தக் கனவானின் தோற்றத்தையும் நடை உடை பாவனைகளையும் கண்ட அளவில் அவர் மனிதர் வகுப்பைச் சேர்ந்தவர் அல்ல என்றும் பூதகணத்தைச் சேர்ந்தவரைப் போலத் தோன்றுகின்றதே என்றும் ஐயுற்றார்கள். அவர்கள் தயங்குவதைக்கண்ட அவ்வரண்மனை அதிகாரி, 'ஐயன்மீர்! நீங்கள் என் வேண்டுகோட்கு இரங்கி இவ்வளவு தூரம் வந்ததற்காக மிகவும் நன்றியறித லுள்ளவனாக இருக்கிறேன். என்னுடைய மனையாளுக்கு வேண்டிய ஆபரணங்களைச் செம்மைபெறச் செய்து கொடுப்பீர்களாயின் உங்கட்கு நிரம்பப் பணம் தருவேன்' என்றார். 'அரண்மனையில் வசிக்கும் பிரபு மனிதனல்ல, ஆதலின் நாம் இங்கே தங்குவது உசிதமல்ல' என்று எண்ணிய பொற்கொல்லர்கள் பொருளின்மீதுள்ள பேராசையினால் அங்கே தங்கி நகைகளைச் செய்வதற்கு இசைந்தார்கள்.

2. பிரபு பொற்கொல்லர்கள் வேலை செய்வதற்கு வேண்டிய வசதியான இடமும் அவர்கள் தொழிலுக்கு வேண்டிய கருவிகளையும் சேகரித்து வைத்திருந்தார். அவர்கள் இரவில் படுத்துறங்குவதற்கு வசதியான அறை ஒன்றும் திட்டஞ்செய்து வைத்திருந்தார். அதில் கட்டில் ஒன்று போடப்பட் டிருந்தது. அக் கட்டிலின் கால்கள் ஒன்றினில் பெண் ஆடு ஒன்று கட்டியிருந்தது. கனவான் இவர்களைத் தன்னுடன் அழைத்துச்சென்று, 'நீங்கள் வேலை செய்யவேண்டிய இடம் இது. அதற்கடுத்தாற்போல் இருக்கும் அறையில் நீங்கள் ஒழிந்தவேளையில் தங்கியிருக்கலாம். அங்கே போடப்பட்டிருக்கும் கட்டிலில் நீங்கள் படுத்துக்கொள்ளலாம். கட்டில் சிறியதாகக் காணப்படினும் நீங்கள் யாவரும் படுத்துறங்குவதற்கு வேண்டிய இடம் கொடுக்கும். கட்டில் கால்களில் ஒன்றில் கட்டியிருக்கும் ஆட்டின் பால்தான் உங்கட்கு உணவு. அந்தப் பாலைக் குடித்துவிட்டு எவ்வாறு பசி தணிவது என்று எண்ணவேண்டாம். அந்தப் பால் உங்கள் தேகத்தைத் திடப்படுத்தி அறிவைக் கூர்மையாக்கும். நீங்கள் உங்கட் கிட்ட வேலையை ஏழு நாட்களுக்குள் செய்து முடிக்க வேண்டும். ஆகலின் உங்கள் வேலையை உடனே ஆரம்பஞ் செய்யுங்கள்' என்றான்.

3. பொற்கொல்லர்கட்கு அக் கனவான் சொல்லிய வார்த்தைகளில் அவ்வளவு திருப்தி யுண்டாகவில்லை. அவர்கட்காக ஏற்படுத்திய படுக்கையறையும் அவர்கட்கு சம்மதமாக இருக்க-



வில்லை. ஆயினும் அவர்கள் தங்கட்கிட்ட வேலையைக் குறித்த கெடுவிற்குள் கொடுத்துவிட வேண்டும் என்னும் எண்ணத்துடன் விரைவாக வேலையைச் செய்யத் தொடங்கினார்கள். பொழுது சாய்ந்ததும் வேலையை நிறுத்திவிட்டுத் தங்கட்கென ஏற்படுத்தியிருக்கும் அறைக்குட் சென்றார்கள். இரவு சாப்பிடவேண்டிய நேரம் வந்ததும் அங்கே கட்டியிருக்கும் ஆட்டின் பாலைக் கறந்து எல்லோரும் அருந்தினார்கள். அந்தப் பால் இவர்கள் எந்நாளும் புசித்தறியாத சுவையுடன்கூடி இருந்தது. கனவான் சொல்லியது உண்மை என்றே நம்பினார்கள். பாலைக் குடித்த உடன் இவர்கட்கு ஒருவித மயக்கம் உண்டாயிற்று. அனைவரும் தூங்கிவிட்டார்கள். அந்த அறையில் இருந்த கட்டிலில் அறுவர்தான் படுத்துறங்க இடம் இருந்தது. அவர்களில் ஒருவன் தறையின்மீதும் மற்ற அறுவரும் கட்டிலின்மீதும் படுத்து நித்திரை செய்தார்கள். இரவு பன்னிரண்டு மணி யானவுடன் அங்கே கட்டியிருந்த ஆடானது தறையில் படுத்துறங்கும் பொற்கொல்லன் காலை நக்கத் தொடங்கிற்று. சிறிது சிறிதாக நக்கி அப் பொற்கொல்லனின் தேகத்திலுள்ள இரத்தத்தை எல்லாம் உறிஞ்சிவிட்டது. அவன் இறந்துபட்டான். சிறிதுநேரத்திற்கெல்லாம் மின்னலைப்போன்ற ஒருவிதமான ஒளி அந்த அறையில் உண்டாயிற்று. உடனே வீட்டுக்காரன் உள்ளே வந்து அவ்வாட்டை நோக்கி 'தங்காய்! நீ சௌக்கியமாக இருக்கின்றனையா? உன் பசி அடங்கிற்றா?' என்று வினவினான். அதற்கு அந்த ஆடு, 'சோதரரே! நீர் சௌக்கியமாக இருக்கும்படி என்னை நடத்துகிறவரையில் எனக் கென்ன குறை இருக்கின்றது. மனிதர்களுடைய உதிரம் எனக்கு உணவாகக் கிடைக்கும் நாட்களில் எல்லாம் நான் பசியாறியே இருக்கிறேன்' என்று சொல்லிற்று. சிறிது நேரத்திற்கெல்லாம் முன் தோன்றியதுபோல் மின்னலோடு கூடிய ஒளி மீட்டும் தோன்றிற்று. உடனே பிரபு உயிர்துறந்த பொற்கொல்லனின் தேகத்தை எடுத்துக்கொண்டு அவ்வறையினின்றும் போய்விட்டார்.

4. பொழுது விடிந்தது. கட்டிலின்மீது உறங்கிக்கொண்டிருந்த அறுவரும் நித்திரைவிட் டெழுந்தார்கள். தறையில் படுத்துறங்கிய நண்பன் காணவில்லை. அவன் எங்கே சென்றான் என்று அவனைத் தேடப் புறப்பட்டார்கள். தாங்கள் தங்கியிருக்கும் அரண்மனை முழுவதும் தேடினார்கள். நண்பன் புலப்படவில்லை. எங்கே போயிருப்பான் என்று நெடுநேரம் ஆலோசித்-

தார்கள். இவர்கட்கு ஒன்றும் விளங்கவில்லை. தலைவன் இவர்களை வேலையை விரைவில் முடிக்கும்படி துரிதப்படுத்தினான். வேலையை செய்யத் தொடங்கிய அறுவரும் நேற்று செய்ததைவிட இன்று துரிதமாகச் செய்தார்கள். வேலை செய்பவர்களில் ஓர் ஆள் குறைந்துவிட்டமையால் முன் நாள் செய்த அவ்வளவு வேலை அன்று செய்து முடிப்பது அசாத்தியமாகத் தோன்றிற்று. எனினும், அந்த அறுவரும் சிறிது நேரமும் ஓய்வில்லாமல் சூரியன் அஸ்தமனமாகும் வரையில் வேலை செய்தார்கள். பொழுது சாய்ந்ததும் வேலையை நிறுத்திவிட்டுத் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றார்கள். வழக்கம்போல ஆட்டின் பாலைக் கறந்து சாப்பிட்டார்கள். பாலைக் குடித்த உடன் அவர்கட்குப் படுத்துறங்க வேண்டும் என்னும் எண்ணம் உதித்தது. நேற்றுப் படுத்துறங்கிய கட்டிலில் அறுவரும் படுக்கச் சென்றார்கள். அது அவர்கள் ஆச்சரியப்படும்படி ஐவர்தான் படுக்க இடங் கொடுத்தது. தூக்கக் கலக்கத்தினால் அதைப்பற்றி நெடுநேரம் யோசிக்க அவர்கட்கு இடமில்லாமற் போயிற்று. ஐவர் கட்டிலில் படுத்துக் கொண்டார்கள், ஒருவன் கீழே படுத்துக் கொண்டான். அன்றிரவும் அந்த மாய ஆடு கீழே படுத்திருந்தவனைக் காலில் நக்கி அவன் இரத்தத்தை யெல்லாம் உறிஞ்சிவிட்டது. அவனும் இறந்துபட்டான். ஜமீன்தாரரும் வந்து இறந்தவன் தேகத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டார். (இன்னும் வரும்)

ஒரு தமிழ்ப் புலவர்.

# ELEMENTARY SCHOOL ORGANIZATION

## கீழ்தர கிராம பாடசாலை ஏற்பாடு

### I

### பாடசாலை இடம், பிளான், விஸ்தீர்ணம், வெளிச்சம், காற்றோட்டம்

1. பாடசாலைக்கு ஏற்ற இடம் — பாடசாலை கட்டவேண்டிய இடம் ஊருக்குச் சமீபத்தில் நல்ல காற்றோட்டமுள்ள மேடான இடத்தில் இருக்கவேண்டும். பாடசாலை கிராமத்துக்கு வெகு தூரத்தில் இருந்தால் குழந்தைகளைப் பெற்றோர்கள் அங்கு அனுப்பப் பயப்படுவார்கள். போர்டு பாடசாலைகள் விஷயத்தில் அதிகாரிகள் தாமே விதிகளின்படி இடம் பார்த்துக் கட்டடம் கட்டிக் கொடுக்கிறார்கள். சொந்தமாகப் பாடசாலை ஏற்படுத்தும் உபாத்தியாயர்கள் இதை நன்றாக ஞாபகத்தில் வைக்க வேண்டும்.



ஜன நெருக்கமுள்ள சந்தை கூடுமிடங்களுக்குச் சமீபத்திலாவது, கடைத் தெருவின் மத்தியிலாவது பாடசாலை வைத்தால் படிப்புக்கு அடிக்கடி இடையூறுகள் உண்டாகும். சிறு கிராமத்தின் தெரு மத்தியில் கீழே சொல்லப்படும் நிபந்தனைகளுக் கிணங்க கட்டப்படும் வீடு ஒன்றில் பாடசாலை வைப்பது பிசகன்று. கள்ளுக் கடை, குப்பை மேடு, அபாயகரமான குளம், ஏரி, கிணறு முதலிய இடங்களுக்குச் சமீபத்தில் பாடசாலை கட்ட இடம் தேர்ந்தெடுப்பது கூடாது. பாடசாலை கட்ட வேண்டிய இடம் சற்று மேடாக இருந்தால், மழை பெய்ததும் தண்ணீர் தங்காமல் வடிந்துவிடும். கீழ்த் தரை அதிக களிப்பா யிருந்தால் மழைத் தண்ணீர் பூமிக்குள் சுவறாமல் மேலேயே தங்கி அதில் வசிப்பவர்களுக்கு சுகக் கேடு உண்டாக்கும். அதிக மணற்பாங்கா யிருந்தால் பக்கத்துத் தண்ணீர் உள்ளே கசிந்து கட்டடம் பலமா யிராது. மண் மணல் சமமாக கலந்த தரையே பாடசாலை கட்ட ஏற்ற இடமாகும்.

2. பிளான் — விஸ்தீர்ணம்: ஒரே ஒரு உபாத்தியாயரும், முதல் வகுப்பிலிருந்து, 4-வது வகுப்பு வரையில் சுமார் 30 பிள்ளைகளும் உள்ள ஒரு (கீழ்தர) எலிமென்டரிப் பாடசாலையில் ஏககாலத்தில் ஒரே உபாத்தியாயர் எல்லா வகுப்புக்களையும் போதிக்க வேண்டியிருப்பதால் ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனி யறை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனி உபாத்தியாயர் இருந்தால் தனித்தனி அறையும் பொதுவாக எல்லாப் பிள்ளைகளும் கூடுவதற்கு ஒரு விசாலமான ஹாலும் வேண்டியது அவசியமாகும்.

ஒரே ஒரு உபாத்தியாயர் உள்ள மேற்சொன்ன பாடசாலையில் ஒரே ஒரு அறை போதுமென்று சொன்னோம். இந்தக் கட்டடம் ஒரு நீண்ட சதுர வடிவமாக இருக்கவேண்டும். சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட வித்யா இலாகா விதிகளில் ஒவ்வொரு பிள்ளைக்கும் 8 அடி விஸ்தீர்ணமும் 80 கன அடி காற்றோட்ட இடமும் வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. 30 பிள்-

ளைகளுக்கு 240 சதுர அடி விஸ்தீர்ணம் வேண்டும். கட்டடத்தின் அகலம் 8 அடி ஏற்படுத்தினால் நீளம் 30 அடி வேண்டும். 30 அடி நீளமும் 8 அடி அகலமுமுள்ள ஒரு நீண்ட சதுர வடிவமான அறையொன்று பாடசாலை வைக்கப் போதுமான விஸ்தீர்ணமாகும். இதைப்போல் 5 மடங்கு விஸ்தீர்ணமுள்ள காலி இடம் பாடசாலைக் கட்டடத்தைச் சுற்றி யிருக்கவேண்டும். இந்தக் காலியாக விட்டிருக்கும் இடத்தில் பாடசாலைத் தோட்டமும் விளையாட்டிடமும் ஏற்படுத்த வேண்டும். இதைப் பற்றிப் பின்னால் விஸ்தரிப்போம். (இன்னும் வரும்)

P. C. KRISHNA AYYAR, B. A., L. T.,
*I Assistant, Govt. Trg. School,*
*Dindigul.*

## ATTENTIVENESS OF TEACHERS

### உபாத்திமார்களின் சிரத்தை

சென்ற மே மாதத்திய 'விவேக சிந்தாமணி' சஞ்சிகையில் 'உபாத்தியாயருக்கு இருக்கவேண்டிய இலக்ஷணங்கள்' என்ற தலைப்பின் கீழ் 'தன் வேலையிற் சிரத்தை' என்பதை விவரிக்குங்கால் 'பிள்ளைகளின் அபிவிருத்தியை அலக்ஷியஞ் செய்து மணியடித்த பின் பள்ளிக்கூடத்திற்கு வருவதும் மணியடிக்கு முன் வீட்டுக்குத் திரும்பிப்போகச் சித்தமா யிருப்பதும் லீவு நாட்கள் முதல் தேதி எப்பொழுது வரப்போகிறதென்று மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதும் இவர்களுக்குச் சுபாவம். தாங்கள் செய்யும் வேலையைப்பற்றி யாரிடத்திலாவது பிரஸ்தாபம் வந்தால், ஆமாம்! இங்கே கொடுக்கிற சம்பளத்திற்கு நான் செய்கிற வேலை போதாதா! என்று இவர்கள் சொல்வார்கள். இவ்விதமான அபிப்பிராயங்களை யுடையவர்கள் நம்முடைய பாடசாலைகளில் அநேக ரிருக்கிறார்கள். அவர்களெல்லாரையும் களை பிடுங்குவதுபோல் சுத்தமாய் நீக்கி, இந்த வேலையில் உற்சாகத்துடன் உழைத்துக் கீர்த்திபெற வேண்டுமென்று எண்ணங்



கொண்டவர்களை மாத்திரந்தான் இந்த வேலைக்கு நியமிக்க வேண்டும்' எனப் பிரசுரித்திருப்பதையும்; சென்ற பிப்ரவரி மார்ச்சு மாதங்களின் 'சற்குரு' சஞ்சிகை 129-ம் பக்கத்தில் பிரசுரித்திருப்பதையும் கவனியாதவர் இரார் என எண்ணுகின்றேம்.

என்னே! 'காசுக் கொரு குதிரையும் வேண்டும் காற்றைப்போல் பறக்கவும் வேண்டும்' என்றால் எங்ஙனம் முடியும்? 'தீனி வேண்டாததாயு மிருக்கவேண்டும், தினந்தவறாது வேலை செய்யக்கூடியதாயு மிருக்கவேண்டும்' என்றால் முடிகிற காரியமா? உபாத்திமார்களின் வேலையைக் கவனிப்பவர்கள் அவர்களின் சௌகரியா சௌகரியங்களையும் கவனித்தல் வேண்டாவோ? இவர்களின் சம்பளமோ ரூபாய் பத்து. செலவோ (கிராமங்களில்) புருடன் மனைவி ஆகிய இருவருக்குமட்டும் குறைந்தது சராசரி —

| | | | | |
|---|---|---|---|---|
| அரிசி (படி 37½க்கு) | ரூ. | 9 | 6 | 0 |
| விறகு ... ... ... ... | ,, | 1 | 0 | 0 |
| மிளகாய் பருப்பு காய்கறிகள் முதலியவை | ,, | 2 | 0 | 0 |
| நெய் ... ... ... ... | ,, | 1 | 0 | 0 |
| எண்ணெய்... ... ... ... | ,, | 0 | 8 | 0 |
| வீட்டு வாடகை ... ... ... | ,, | 0 | 8 | 0 |
| வண்ணான் ... ... ... | ,, | 0 | 6 | 0 |
| நாவிதன் ... ... ... ... | ,, | 0 | 4 | 0 |
| ஆக | ரூ. | 15 | 0 | 0 |

ஆகிறது இவையன்றி பால் மோர் முதலிய இதர வஸ்துக்களும் தேவையா யிருக்குமாயினும், இது கிராமவாசச் செலவென்றால் நகரவாசங்களின் செலவைச் சொல்ல வேண்டியதில்லை. இவ்விருவருக்கு மேலும் பிள்ளை குட்டிகளும் அநேகமாய் இராம லிரார். அப்போது உபாத்தியாயர் பாடு பின்னும் திண்டாட்டமே! 'எலியொன்றும் கிட்டாத காலத்தில் பூனை விரதங் கொண்டே னென்னுமாம்' என்பதற் கிணங்க இவர், இல்லாத பல விரதங்களையும் ஏற்படுத்திக் கொண்டால்தான் கௌரவமா யிருக்கும். ஏற்படுத்தாவிட்டாலோ அஷ்ட (அஷ்டம் = 8 = அ) கௌரவங்களும் வந்து சேரும். இச் செலவையோ மிகச் சுருக்கமாகச்

செய்ய வேண்டியிருக்கிறது. அல்லது மீதித் தொகைக்கு வேறு வகையில் சம்பாதிக்க வேண்டி யிருக்கிறது. சுருக்கமாகச் செலவு செய்யின் தேகதிடமும் புத்திக் கூர்மையும் வேலையிற் சிரத்தையுமுள்ள உபாத்தியாயர் எங்ஙனம் அகப்பட முடியும்? தேகதிடமும் வேலையிற் சிரத்தையும் புத்திக் கூர்மையும் வேண்டின் ஆகாராதிகளின் அளவைக் குறைக்காதிருக்க வேண்டுமாதலின், அதிகப்படும் தொகையை வேறு வகையில், எவ்விதத்தில் சம்பாதிக்கலா மென்றும் எங்கே செல்லலாமென்றும் யோசிக்கவும் செல்லவும் வேண்டியிருக்குமன்றோ? ஆதலின், பிள்ளைகளின் அபிவிருத்தி விஷயத்தில் அலக்ஷியமும், மணி யடித்தபின் பள்ளிக்கூடத்திற்கு வருவதும், மணி யடிக்கு முன் வீட்டுக்குத் திரும்பிப் போக இஷ்டமா யிருப்பதும், லீவுகள் முதல் தேதி எப்பொழுது வரப்போகிற தென்று மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதும், இங்கே கொடுக்கிற சம்பளத்திற்கு நான் செய்கிற வேலை போதாதா என்பதும் சொல்ல நேரிடுவதில் என்ன குற்றமிருக்கிற தென்பது தெரியவில்லை. கொடுக்கிற பத்து ரூபாய் சம்பளந்தான் அடுத்த மாதம் முதல் இரண்டாம் வாரத்தில் கிடைக்கிறதோவெனில், இல்லையெனவே திண்ணமாகச் சொல்லலாம். ஒரு மாதச் சம்பளம் 3-4 மாதங்கள் சென்று கிடைப்பின் எங்ஙனம் ஜீவனஞ் செய்வது?

லீவுகளைக் கவனிப்பின் வெயிற்கால விடுமுறையோ வித்தியா இலாகாதாரரால் ஒரு மாதம் குறிக்கப்பட்டிருப்பினும் $\frac{3}{4}$ மாதமே கொடுக்கப்படுகிறது. வெயிற் காலத்தில் வேலை செய்யவோ மிக்கக் கஷ்டமா யிருப்பதோடு வெய்யலின் கொடுமையாலுண்டாகும் சோம்பலும் அசௌகரியங்களும் அனந்தம்.

ஒரு வருஷத்திற்கு ஒரு மாதம் பிரிவிலேஜ் லீவு ஏற்பட்டிருந்தும் ஒரு நிமிஷமும் உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. எத்தனை வருஷங்கள் வேலை செய்திருப்பினும், அது முக்கியமான காரியங்களுக்கேனும் திடீரென வேற்படும் தேக அசௌகரியங்களுக்கேனும் கொடுக்கப்பட வேண்டாமோ? நம் சொற்படி ஆடு மாடுகள்போல் நடந்துகொள்ள வேண்டியவர்கள்தானே! என்பது கொடுக்கப்படாததற்குக் காரணம்போலும்! தேக அசௌக்கிய மேற்பட்டு கிராம வைத்தியரிடமிருந்தும்



கிராம முனிசீப்பிடமிருந்தும் சர்ட்டிபிகேட்டுகள் வாங்கி அனுப்பியும் சிக் லீவ் கொடுப்பதுமில்லை. அந்த நாளைப் பிரிவிலேஜ் லீவாகவேனும் அங்கீகரிப்பது மில்லை. கிராம உபாத்திமார்கள் எந்த நகரத்திற்குச் சென்று (சர்க்கார்) ஆஸ்பத்திரிகளிலுள்ள டாக்டரிடத்தில் சர்ட்டிபிகேட் வாங்குவார். அவ்விதம் அதிகச்சிரமப்பட்டும் செலவு செய்துகொண்டும் நகரடைந்து ஆஸ்பத்திரி சென்று சர்ட்டிபிகேட்டு கேட்டாலோ உடனேதான் கொடுக்கப்படுகிறது! அதற்கும் சிரமபரிகாரமும் கூலியும் கொடுக்கவேண்டியிருக்கிறது.

ஐயகோ! சாப்பாட்டுக்கும் சம்பளத்துக்கும் திண்டாடும் உபாத்திமார்கள் இதற்கு வேறு எங்கே செல்வார்கள்! கடன் வாங்கிக்கொள்ளலா மெனினும், திருப்பிக் கொடுக்க சம்பளம் சாப்பாட்டுக்கே போதாதிருக்கிறதே! அன்றியும் இவர்களை 4-மாதங்களுக் கொருதரம் 6-மாதங்களுக் கொருதரம் ஊரூராய் சர்க்கியூட்டுக்கு மாற்றிவிடுகின்றனர். சம்பளமோ சீக்கிரம் கிடைக்கிறது! ஊரார் எவ்விதம் இவர்களை நம்பிக் கடன் கொடுப்பார். அல்லலிலும் தொல்லையிலும் அவதிப்பட வேண்டியதுதான். இவ்வளவு இக்கட்டில் இவருடைய சம்பளமோ பிடித்தம் செய்யப்படுகிறது. நீ அங்கட்டும் நானிங்கட்டும் நடுவே தொங்கட்டும் என்ற மொழிப்படி இவருடைய தொழிலோ சொல்ல வேண்டியதில்லை. இதை யெல்லாங் கவனியாது 'களைபிடுங்குவதுபோல் சுத்தமாய் நீக்கிவிட்டாலோ! விலச்சுவான்தார்கள்தான் இனி 10-ரூபாய் சம்பளத்துக்கு வர வேண்டும்'.

உபாத்திமார்களுடைய இவ்வளவு கஷ்டத்தையுங் கவனியாது 'வரும்படி குறைவென்று சிறிதுங் கவலைப்படாமல் கல்விப் பெருமைக்குச் செல்வம், ஈடாகா தென்பதைமட்டும் மனத்திற்கொண்டு சலியாத நெஞ்சமும் ஊக்கமும் விடாமுயற்சியும் உடையவர்களாய்ச் சந்தோஷத்துடன் தேசத்தின் பொதுநல விருத்தியை யுன்னிப் பாடுபடுவீர்களானால்.........இத்தேச முதல்வர்களுக்கு திருப்தியாகும்' என்று உபாத்திகளுக்குப் புத்திமதி கூறுங்கால், ஜில்லா நியாய வதிகாரி யொருவரும்; 'உபாத்திமைத் தொழில் ஜீவனோபாயத் தொழிலாக மாறியிருப்பினும் அதற்குள்ள மகிமையும் முக்கியப் பொருப்பும் குன்றவில்லை யென்பதையும்; தாங்கள்

சொற்ப சம்பளத்தினரேயாயினும் தாங்கள் ஆசான் குரு என்னும் ஸ்தானத்திலிருப்பவர்களென்பதையும் நன்குணர்ந்து, அதன்படி நடப்பதற் கிடையூறாக, என்ன இக்கட்டுகள் ஏற்படினும் அதைப் பொருட்படுத்தாது தங்கள் கடமையைச் செய்யத்துணிந்து, அதற்குள்ள சிரமத்தையும் வகிப்பார்களென்று நம்புகிறோம்' என உபாத்திமைத் தொழிலில் நன்கு அனுபவமுள்ள ஒருவரால் நடத்தப் பெறும் பத்திரிகையொன்றும் கூறுவதைக் கேட்க, மேற்கூறிய காரணங்களை யுணர்ந்தவர் விசனியாமலிரார் என எண்ணுகின்றோம்.

தீனி போட்டு வேலைவாங்கவேண்டுவதே முறையாதலால், சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுத்துக் கண்டிப்பாய் வேலை வாங்குதலே முறையாகும். இவர்கள் ஏழைதானே! இவ்வேலைக்கு வருகிறவர்கள் அதிகப் படித்தவர்களும், நிலச்சுவான்தார்களுமல்லவாதலால், இவ் 'வகதிசொல் அம்பலமேறுமோ?' கவனிப்பார் யார்? இதுவு மொரு திருவிளையாடல் போலும்.!

P. பரிமணப்பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டுஸ்கூல், உத்தமசேரி,
திருவளர்சோலை போஸ்டு, திருச்சி ஜில்லா.

குறிப்பு :

மேல் வியாசத்தில் காட்டிய செலவுகளில் அரிசிச் செலவு கொஞ்சம் அதிகமாகக் காண்கின்றது. எப்படிப்பட்ட குக்கிராமத்தில் வசித்தாலும் புருஷன் பெண்சாதி இருவருக்கும் 15-ரூபாய் பற்றாது. சம்பளம் பற்றாமையால் உபாத்தியாயர்கள் வேறு வரும்படிக்கு இடந் தேடுகின்றனர். நல்ல படிப்பாளிகளும் வித்தியா இலாகாவில் பிரவேசிக்க முன்பின் பார்க்கின்றனர்.

பத்திராதிபர்.



# THE 'DURBAR' OUR DAY SONG

( 12 - 12 - '17 )

## நமது நாள் 'தர்பார்' பாடல்

( எண்சீர் ஆசிரியம் )

நமதுநா ளிந்நாளே ஜார்ஜூ மன்னன்
நமையாள மகுடாபி ஷேகங் கொண்ட
நமதுநா ளிந்நாளே நமக்கு டில்லி
நகர்தலைமைப் பட்டணமாய் நன்க மைந்த
நமதுநா ளிந்நாளே நமது கல்வி
நலமுறவைம் பதுலட்சம் நமக்குத் தந்த
நமதுநா ளிந்நாளே வேறெந் நாளே
நமக்கிதுவே நன்னாளே நவிலுங் காலே.

### கீர்த்தனம்

ஆரபிராகம் - அடதாளம்

(பல்லவி)

நமதுநா ளிந்நாளே - வேறெந் நாளே
நமக்கிது நன்னாளே - நவிலுங் காலே. (நமது)

(அநுபல்லவி)

விமல குண விசேஷ - விபுதரே சபையோரே
அமல குண வசேஷ - னும் ஜார்ஜூக் கபயரே (நமது)

(சரணங்கள் - 5)

1. 'திருவுடை மன்னரைக் - காணில்' நம்மாழ் வாரே
திருவாய் மொழியில் 'திரு - மாலைக்கண்டேன்' என்றாரே
திருவுடை மன்னன் நம் - ஜார்ஜன்றி வேறாரே
திருவும் நம்முட லாவித் - திரனு மவனென் பாரே.
(நமது நாளிந் நாளே)

2. 'நாவிஷ்ணுః ப்ருத்வீப - திః' நவிலுரை யாலே
நமக்கிறை ஜார்ஜென்னும் - நரபதி யொரு காலே
ஆவலா யவனிந்தி - யாவிலே மூன் ஞலே
அபிஷேக மகுடமிந் - நாள ணிந்த - தாலே

(நமது நாளிந் நாளே)

3. ஜார்ஜெனும் பெயருக்கே - ஜகத் ஆர்ஜித னென்றே
தாத்பரியம், ஐந்தாயிஞ் - ஜகம்பிரிந் துள தன்றே
ஆச்சப் பிரிவைந்திலும் - அவனுக் காளுகை நின்றே
அதனல் ஐந்தாம் ஜார்ஜென் - றமைந்ததப் பெயர் நன்றே.

(நமது நாளிந் நாளே)

4. ஐந்தாம்ஜார் ஜிறையவன் - அமர்வ தாங்கில நாடு
அவனுக்கும் நமக்கும் - ஆறுயிர மைல் பாடு
அந்த ஊர்க்கும் நமக்கும் - அமையும் தபால் ஏடு
அலதில் தெனில் சொல்'ஆங் - கிலம் ஈங்குளம்' ஈடு.

(நமது நாளிந் நாளே)

5. அத்தினபுரி டெல்லிக் - கரி யாசனம் உற்ற
அரசரே றைந்தாஞ் ஜார்ஜ் - ஆளுகை யினில் முற்ற
அத்தியும் சிங்காமும் - அரிய நேசம் பற்ற
ஆனநல் லாட்சியாய் - அமைந்து வாழப் பெற்ற

(நமது நாளிந் நாளே)

இஃது, 'நமது நாள்' கொண்டாட்ட ராஜ விசுவாசத்தை நாடி திருவள்ளூர் செகூனல் ஸ்கூல் மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ, சி. வே. சண்முக முதலியார் அவர்கள் 'நல்லாசிரியன்' பத்திரிகையிற் பிரசுரிக்கப் பாடியது.




# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

## மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1918ஆ ஜனுவரிமீ | மாதம் 8


## THE PONGAL FEAST

### பொங்கற் புதுநாள்

பொங்கற் புதுநாள் போந்தது நண்பீர்
பொங்குமிந் நாளின் புகழோ பெரிதால்

என்றே இந்நாள் ஏற்ற மென்னின்
பன்னாள் உழுததன் பயனைப் பெற்ற

மருத நிலத்து மாந்தரா மெவரும்
பெருகுதம் மகிழ்வைப் பெறுநாள் இதுவே

காருடல் மள்ளர் கழனியைத் திருத்தி
நேரிய நாளில் பொன்னேர் நிறுத்தி

உழுதனர் விதைத்தனர் உறுகளை யெடுத்தனர்
பழுதில் நாளால் பாய்ச்சினர் நீரும்
பொற்கதிர் போலும் நெற்கதிர் போற்றினர்
பற்பலர் கண்ணேறு பாயா வண்ணம்
புல்லுறு அமைத்தனர் பொருந்து நாளில்
நல்லவர் தம்மை நாடினர் கூடினர்
கூனிரும் பதனைக் கொண்டனர் கையில்
தேனினும் இன்மொழி தம்மிற் செப்பினர்
அரிந்தனர் அரியை அமைத்தனர் சும்மையாப்
புரிந்தனர் களத்திற் பொதிந்தனர் போரா
அடித்தனர் தெழித்தனர் அருமணி குவித்தனர்
பிடித்தனர் அளவைப் பேசினர் தொகையைப்
பாணர் கூத்தர் பலர்க்கும் உதவினர்
மாணுறு தங்குடி மக்கட் கீந்தனர்
பண்டியிற் தொகுத்தனர் பகடு நடத்தினர்
அண்டிய களிப்பால் அகத்திற் செறித்தனர்
மக்களும் ஒக்கலும் மனமகிழ் பூத்தனர்
தொக்கதம் பைங்கூழ் துலங்கி விளைதரக்
உதவிய கார்முகில் ஒண்கதிர் கால்நடைக்
கிதமுறச் சிறப்புகள் இன்புட னியற்ற
எண்ணின ரதனால் எழிலிக் கிறையா
நண்ணிய தேவ நாயகற் குறித்துப்
போகிப் பண்டிகை புரிந்தனர் முன்னாள்
மாகத் துறுகதிர் மகரத் தமரும்
உத்தரா யணமா ஓங்குதை நாளில்
உத்தம வோரையில் ஒருபெரும் பானையில்
பெய்தனர் தீம்பால் பெய்தனர் அரிசியும்
எய்திய தீமேல் ஏற்றினர் ஏத்தினர்
பொங்குதல் கண்டே பொங்கினர் மகிழ்ந்தனர்
பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கலென்



றில்லத் துள்ளோர் எவரும் இசைந்தே
வல்லதோர் வகையின் வாய்விட் டார்த்தனர்
முதிரையும் காயும் முழுத்த நெய்யொடு
மதுரக் கிழங்கும் வகைவகை செய்தனர்
கதிரவன் றனக்குக் காட்டிப் படைத்தனர்
எதிரிற் கண்டே இன்னிசை யெழுப்பினர்
அனைவரும் மகிழ்வோ டமர்ந்திருந் தொருதம்
வினையிற் கிடைத்த விருந்தமு தருந்தினர்

மறுநாள்

ஏரினை யிழுத்தும் எருவினை யளித்தும்
சீரிய பால்முதற் றீம்பொருள் உதவியும்
அரும்பய னளித்த ஆடுமா டுகளைத்
திருந்திய வகையிற் சிறக்கச் செய்வான்
விழைந்தாங் கவற்றை விளக்கினர் தூய்தா
அழகுற ஒலையின் அணிபல ஆற்றினர்
பண்ணியம் பலப்பல பழுதையிற் கோத்தனர்
நண்ணிய கழுத்தில் நான்றிட யாத்தனர்
கோடி யுடையதன் கொம்பிற் புனைந்தனர்
ஓடிய விட்டனர் ஒள்ளிய மாலையில்
எல்லோர் தாமும் இப்படிச் செயவே
பல்லோர் அந்தப் பண்ணியங் கொள்ளப்
பற்றித் தொடர்ந்தனர் பற்றிப் பறித்தனர்
சுற்றிச் சுற்றிச் சோர்வுங் கொண்டனர்
கூற்றுவன் மீசை குழைந்தா லன்ன
ஏற்றின் மருப்பில் எய்திய வுடையை
கொள்வே மெனச்சிலர் குழுமி யோடினர்
ஒள்வே லென்ன ஓங்கிய கொம்பால்
விழுப்புண் பட்டே விழுந்தனர் சில்லோர்
கழுத்தினைப் பற்றிக் கவிழ்ந்தனர் சில்லோர்

வாலினைப் பற்றி வலித்தனர் சில்லோர்
காலிற் சிக்கிக் கவிழ்ந்தனர் சில்லோர்

இன்னணம் பல்லோர் இரிந்தனர் நீங்கினர்
பின்னும் பண்ணையர் பெரும்பறை கொட்டி

வெள்ளிடை தன்னில் மேவிக் கூடினர்
மள்ளரும் மகிழ்ந்து மாட்டினை ஓட்டினர்

கால்நடை யனைத்தும் களிப்புறக் கண்டே
பால்பொங் குகவென பன்னிப் பாடினர்

கதிரவன் மலையிற் கரந்த பின்னர்
அதிரும் பல்லியம் ஆர்ப்பத் திரும்பிக்

கோயிலுட் சென்றனர் கும்பிட் டேத்தினர்
மேயதம் இன்பம் மிக்குற வேண்டினர்

தத்தம் அகத்தைச் சார்ந்தனர் இருந்தனர்
சித்தம் மகிழ்ந்தே சிறக்க அமர்ந்தனர்
பின்னாள்

கன்றுகா லிகளைக் களிக்கச் செய்வான்
துன்றிய அவற்றைத் துலங்கச் செய்தனர்

பெரியார் சிறியார் பிள்ளைகள் ஆனோர்
அரியநல் லாடை அணிந்தே ஆங்கண்

உற்றார் நண்பர் ஊரிற் பெரியார்
கற்றார் தமையும் காணச் சென்றனர்

பால்பொங் கிற்றோ என்னப் பகர்ந்தனர்
மேலாண் டிற்கும் மேவுக என்றனர்

மற்றும் நல்லுரை மகிழ்ந்து வழங்கினர்
பற்றுறப் பெரியார் பயன்மொழி கொண்டனர்

அரும்பொங் கலென அனைவரும் போற்றும்
பெரும்பொங் கலினாட் பெற்றியீ தாமே

இதனைத் தொடர்ந்தே இன்னுமொன் றுளதால்
அதனின் சீர்த்தி ஆற்றவும் பெரிதே



பத்தாம் நாளாப் பயின்ற நாளில்
சித்திர மயிலைச் சேவித் திடுவர்

அதுதான்

மயிலே றென்னும் மாண்புறு நாளாம்
அயில்வேல் முருகற் கன்புறு நாளாம்

செந்தமிழ் நிலக்குச் சீரிய கடவுளா
முந்துறும் அவனை முன்னி

அந்தமி லின்பம் அடைகுவர் மாதோ.

---

1 என்னரு நண்பீர் என்னரு நண்பீர்
கண்ணிற் கருமணி யன்னவென் நண்பீர்

2 உள்ளும் புறமும் ஒத்த பண்பின்
விள்ளருங் கேண்மை விளங்கிய நண்பீர்

3 உத்தரா யணமா வோங்குமிந் நாளில்
நித்திய இன்பம் நிலவிய மகிழ்வொடு

4 பொங்குக நாளும் பொங்குக நாளும்
பொங்குக ஆயுள் பொங்குக வன்மை

5 பொங்குக பொருளும் பொங்குக அறமும்
பொங்குக ஞானம் பொங்குக நேயம்

6 பொங்குக மக்கட் பேறும் புகழும்
பொங்குக நல்லன எல்லாம் பொங்குக

7 பொங்குக பொங்கல் பொங்குக பொங்கல்
பொங்குக பொங்குக பாலும் பொங்குக

8 பொங்குக பொங்குக இவணே
பொங்குக பற்பல் லாண்டுபொங் குகவே.

பத்திராதிபர்.

# STORY TELLING

## கதை சொல்லல்

(முன்றொடர்ச்சி பக்கம் - 160.)

### ஏழு பொற்கொல்லர்கள்.

5. மூன்றாம் நாள் காலையில் கட்டிலின்மீது படுத்துறங்கிய ஐவரும் நித்திரையை விட்டெழுந்து கீழே படுத்திருந்த நண்பனைத் தேடினார்கள், காணவில்லை. ஐவரும் வேலையை விட்டுவிட்டு ஓடிப்போக எண்ணினார்கள். ஓடிப்போனால் என்ன கெடுதி நேரிடுமோ என்று பயந்து, தங்கள் வேலையைச் செய்யத் தொடங்கினார்கள். பொழுது சாய்ந்ததும் வேலையைவிட்டு தங்கள் இருப்பிடம் சென்று, ஆட்டின் பாலை அருந்திப் படுக்கும்படி கட்டிலண்டைப் போனார்கள். அந்த மாயக் கட்டில் நால்வருக்குத்தான் படுக்க இடங் கொடுத்தது. ஒருவன் கீழே படுக்க நேர்ந்தது. அவன் கதியும் ஏனைய இரண்டு நண்பர்களின் கதியைப்போல ஆயிற்று. இவ்வாறாக, வந்த ஏழு பொற்கொல்லர்களில் ஐவர் மாயமாய்க் காணாமற் போய்விட்டார்கள். ஆறு நாள் எஞ்சிய இரண்டு பொற்கொல்லர்களும் இதன் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அன்று இரவு படுக்கச் சென்றபோது கட்டில் ஒருவர் படுக்கத்தான் இடங்கொடுத்தது. ஒருவன் கட்டில் மேலும் மற்றொருவன் தரையிலும் படுத்துக் கொண்டனர். உண்மையை அறியவேண்டும் என்னும் எண்ணம் கொண்டவர்களாகையால், அவ்விருவரும் தங்கள் தலைமயிரை ஒரு கயிற்றினால் முடிந்துகொண்டார்கள். இரவு பன்னிரண்டு மணி ஆயிற்று. மாயத் தகர் கீழே படுத்துறங்கும் பொற்கொல்லனை காலில் நக்கத் தொடங்கிற்று. ஆட்டின் பரிசத்தினால் உறங்குபவன் தரையின் மீதே புரளத் தொடங்கினான். அவன் புரண்டமாத்திரத்தில் கட்டிலின் மீது படுத்திருப்பவனது குடுமியை யாரோ வலிப்பதுபோல் தோன்றிற்று. அவன் உடனே விழித்துக்கொண்டு அங்கே நடந்தவைகளைக் கண்டான். அப்போது அவனுக்கு உண்டான பயமும் திகிலும் இவ்வளவென்று எவ்வாறு சொல்வது! அவன் தான் அரக்கர் மத்தியில் இருப்பதை உணர்ந்து கொண்டான். அவர்கட்கு மனிதர்களைக் கொன்று தின்பதே தொழிலாயிற்றே,



அவர்களினின்றும் எவ்வாறு தப்பித்துக் கொண்டு செல்வது என்பதே அவனுக்கு ஒரு பெரிய யோசனையாக இருந்தது. இந்த பயங்கரமான நிகழ்ச்சியைக் கண்ட பிறகு அவன் அன்று இரவு நித்திரை செய்யவில்லை. சூரியன் உதயமான உடன் அவன் நித்திய கருமங்களை முடிப்பதற்குச் செல்பவன்போல் அந்த அரண்மனையை விட்டு வெளியேவந்து தன்னூர்க்கு ஓடத் தலைப்பட்டான். அவன் ஓடுவது அந்த மாய ஆட்டிற்கு எவ்வாறோ தெரிந்துவிட்டது. உடனே அந்த ஆடு யவ்வனமும் அழகும் உள்ள ஓர் பெண் வடிவம் எடுத்துக்கொண்டு, 'நாயகனே! நீ என்னைத் தனியே விட்டுச் செல்வது நியாயமோ. என்னையும் உடன் அழைத்துக்கொண்டு போகப்படாதா' என்று இனிய குரலுடன் பேசிக்கொண்டே பொற்கொல்லன் பின் ஓடிவந்தது. பொற்கொல்லனுக்கு இவ்வாறு கூவிக்கொண்டு வருபவள் இராக்ஷசி என்று தெரியும். அவன் அவளைத் திரும்பிப் பாராமலே விரைவாக ஓடத் தொடங்கினான். பொற்கொல்லன் முன்னும், இராக்ஷசி பின்னுமாக நெடுநேரம் ஓடினார்கள். வழியில் பெரிய ஆலமரம் ஒன்று அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. உடனே பொற்கொல்லன் அதன்மீது விரைந்து அதன் உச்சியில் ஏறிக்கொண்டு 'எல்லாம் வல்ல இறைவனே! இவ்வரக்கியின் மாயச் செய்கையினின்றும் என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று கடவுளை நோக்கி தோத்திரஞ் செய்வானாயினான். இராக்ஷசியும் பொற்கொல்லனை விடாமல் பின் பற்றிச் சென்று அவன் ஏறிக்கொண் டிருக்கும் ஆலமரத்தை அடைந்தாள். அதன்மீது ஏற யத்தனித்தாள். அது சாத்தியப்படவில்லை. அதன் கீழேயே நெடுநேரம் வரையில் புலம்பிக்கொண்டிருந்தாள். பிறகு அம்மரத்தடியி னின்றும் நீங்காமல், 'இரக்கம் என்பது சிறிதும் இல்லாத நாயகனே! என் என்னைப் புறக்கணிக்கின்றீர்? யான் என்ன குற்றம் புரிந்தேன்? நீர் மரத்தின் மீது ஏறிக்கொண் டிருப்பதனால் அங்கே வருவதற்கு எனக்குப் பயமாக இருக்கிறது. எனக்கு மரம் ஏறுவதற்குத் தெரியாதே, என் இன்னுயிரன்ன நாயக! தயவு கூர்ந்து இறங்கி வந்து என் துன்பத்தை அகற்ற வேண்டுகின்றேன்' என்று பலவாறாய் பிதற்றிக்கொண்டேயிருந்தாள். இவள் கூவும் கூச்சல் காடெங்கும் பரவியது. பொற்கொல்லன் மரத்தை விட்டு இறங்கவேயில்லை.

6. இது இவ்வாறிருக்க, அரசகுமாரன் ஒருவன் அந்த ஆரணியத்தில் வேட்டையாட வந்திருந்தான். அவன் காதில் இந்த

அரக்கி கூவிய கூச்சல் விழுந்தது. இந்தச் சத்தம் எங்கே இருந்து வருகின்றது என்றும் யாருடைய சத்தம் என்று கண்டறிய வேண்டும் என்னும் எண்ணத்துடன் அச் சத்தம் வரும் வழியே வந்தான். அது அவனை ஆல மரத்தண்டை சேர்த்தது. கண்டோர் காமுறும் அழகுள்ள பெண் ஒருத்தி அந்த மரத்தின் கீழ் தனியே அழுதுகொண்டிருப்பதைக் கண்டான். அவளுக்குத் தேறுதல் சொல்லி, அழ வேண்டியதற்கு காரணம் என்ன என்று அவளைக் கேட்டான். பெண் வேடம்பூண்ட அரக்கி, 'பெருந்தகையே, இம்மரத்தின்மீது ஏறிக்கொண்டிருப்பவர் என்னுடைய கணவர். நாங்கள் கல்யாணஞ் செய்துகொண்டது முதல் ஒற்றுமையாக நெடுநாள் வாழ்ந்துகொண்டிருந்தோம். நான் என் தாயார் வீட்டில் இருக்கும் சமயம் பார்த்து என்னைத் தனியே விட்டுவிட்டு ஓடி வந்துவிட்டார். யான் எந்தக் குற்றமும் செய்யாதிருக்க, ஏன் என்னைப் புறக்கணிக்கின்றீர் என்று கேட்டால் அவர் அதற்குப் பதில் சொல்லாமல் இருக்கிறார். தாங்கள் எப்படியாவது அவரை என்னிடம் சேர்ப்பிக்க வேண்டும்' என்று சொன்னாள். அரசன், மரத்தின் மீது ஏறி இருப்பவனைப் பார்த்து 'ஐயா, கண்டோர் காமுறும் அழகும் யவ்வனமும் உடைய உன் மனைவியை ஏன் இவ்வளவு கொடுமையாய் நடத்துகின்றீர். மரத்தினின்றும் இறங்கி வந்து உம்முடைய மனைவியை வீட்டுக்கு அழைத்துச் செல்லும்' என்றான். பொற்கொல்லனுக்கு யாது சொல்வது என்று விளங்கவில்லை. உள்ளதை உள்ளபடி சொல்லின் அவன் நம்பமாட்டான் என்று ஆலோசித்து, 'அரசே தங்கட்கு விருப்பமாயின், இப் பெண்ணைத் தாங்கள் அழைத்துக்கொண்டு செல்லலாம். அவள் எனக்கு வேண்டியதில்லை. அவளுக்கும் எனக்கும் இனி யாதொரு சம்பந்தமுமில்லை' என்று மறுமொழி பகர்ந்தான். இதைக்கேட்ட அரசன் பெரு மகிழ்ச்சி யடைந்து 'அரசர்கள் குடிகளிடத்தினின்று வெகுமதி பெறும் வழக்கம் இல்லை. நாங்கள் எங்கட்கு வேண்டும் பொருள்களை விலை கொடுத்து வாங்குவதே வழக்கம். ஆதலின் இவளுக்கு விலையாக இரண்டு லக்ஷம் ரூபாய் கொடுக்க எண்ணுகிறேன். மரத்தினின்றும் இறங்கி வந்து இந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்' என்றான். பொற்கொல்லன், 'அரசே! இவள் என் கண்ணுக்குப் புலனும் வரையில் மரத்தினின்றும் இறங்குவதில்லை என்று சபதம் செய்துகொண்டிருக்கின்றேன். தாங்கள் கொடுக்க எண்ணிய பணத்தை மரத்தின் கீழே வைத்து



விட வேண்டுகிறேன்' என்றான். அரசன் பணத்தை மரத்தடியில் வைத்துவிட்டு, மாயப் பெண்ணை அழைத்துக் கொண்டு தன்னூருக்குச் சென்று, அவளை வெகு சிறப்பாய் மணஞ்செய்துகொண்டான்.

7. அரக்கியை மணந்துகொண்ட மன்னவன் அவள் மீது மிகவும் காதலுள்ளவனாய் அவள் விருப்பத்திற்குச் சிறிதும் கோணாமல் நடந்து வந்தான். அவ்வரசன் குதிரை ஒன்றை மிகவும் பக்ஷமாய் வளர்த்து வந்தான். ஒரு நாள் இரவில் அவ்வரக்கி அக் குதிரையைக் கொன்று தின்றுவிட்டு, அதன் எலும்புகளை அவ்வரசனுடைய மனைவியர்களாகிய பட்ட மகிஷிகள் எழுவர் வசிக்கும் அரண்மனைக்குள் எறிந்துவிட்டாள். மறுநாள் காலையில் குதிரைக்காரர்கள் குதிரை காணாமற்போன சங்கதியை அரசனுக்கு அறிவித்தார்கள். அரசன் மிக்க மனவருத்தத்துடன் தன்னுடைய புதிய மனைவி வசிக்கும் அரண்மனைக்குச் சென்று குதிரை காணாமற் போனதைப்பற்றி அவளிடம் சொல்லி விசனப்பட்டான். அரக்கி, 'அரசே! குதிரையைத் தங்களுடைய பட்ட மகிஷிகள் வசிக்கும் அரண்மனையில் தேடிப்பார்த்தீர்களா?' என்றாள். அரசன் உடனே பட்ட மகிஷிகள் வசிக்கும் அரண்மனைக்குட் சென்று அங்கே தேடியபோது, அக் குதிரையின் எலும்புகள் ஒருபுறத்தில் கிடப்பதைக் கண்டான். அவைகளைக் கண்டவுடன், அரசனுக்குத் தன் பட்ட மகிஷிகள் மீது கடுங்கோபம் உண்டாயிற்று. உடனே அவன் அவர்களை வரவழைத்து, அவர்கள் செய்ததாகப் புலப்படும் குற்றத்திற்காக அவர்கள்மீது மிகவும் சினந்து கொண்டான். பட்ட மகிஷிகள் எழுவரும் தாங்கள் குதிரையைக் கொல்லவேயில்லை என்றும் அக் குற்றத்தைத் தங்கள்மீது அபாண்டமாய்ச் சுமத்துவது அடாதென்றும் பணிவுடன் மொழிந்தனர். புதிய மனைவியின் மீதுள்ள விருப்பத்தால் அவர்கள் சொல்லியவைகள் ஏதும் அரசன் செவியில் ஏறவில்லை. அரசன் அன்று முதல் அவர்களைக் கொடூரமாக நடத்த ஆரம்பித்தான். சிலநாள் கழித்து அரசனுடைய வேட்டை நாய் ஒன்று காணாமற் போயிற்று. அதற்கும் காரணம் பட்ட மகிஷிகளே என்று அரக்கி அரசனுக்குப் போதித்தாள். மறுநாள் அவன் அருமந்த புதல்வன் மாயமாய்ப் போய்விட்டான். அக் குற்றமும் பட்ட மகிஷிகள் மீதே சுமத்தப்பட்டது. அரசனுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. அவன் உடனே தன் சேவகர்களை வரவழைத்து பட்ட மகிஷிகள்

எழுவரையும் சிரச்சேதம் பண்ணும்படி கட்டளை யிட்டான். அக் கடுங் கட்டளையைக் கேட்ட நகர மாந்தர் எல்லோரும் நடுக்கம் எய்தினர். மந்திரி அரசனிடம் பட்ட மகிஷிகட்காகப் பரிந்து பேசி, அவர்கட்கு விதித்த மரண தண்டனையை அகற்றி, அவர்களைக் கடுங்காவலில் வைக்கும்படி ஏற்பாடு செய்தான். அதனால் பட்ட மகிஷிகள் எழுவரும் இருட்டு மாளிகையில் அன்ன ஆகாரமின்றி இருக்க நேர்ந்தது.

ஒரு தமிழ்ப் புலவர்.

# SOME CHANGES IN THE EDUCATIONAL DEPARTMENT

## வித்யா இலாகாவிற் சில மாறுதல்கள்

சென்ற 1917ஆம் அக்டோபர்மீ 23உ பிரசுரமான போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் எடுகேஷனல் ரூல்ஸ் (Educational Rules) என்னும் வித்தியா இலாகா சட்ட திட்டங்களின் மாறுதல்கள் பிரசுரமா யிருக்கின்றன. அவற்றுள் கீழ்தரப் பாடசாலை சம்பந்தமான மாறுதல்களை மட்டும் சுருக்கிச் சொல்லுவோம்.

பாடசாலைகள் எலிமென்டரிக் கீழ்தரப் பாடசாலை என்றும் மிடில் ஸ்கூல் என்றும் ஹை ஸ்கூலென்றும் மூன்று பிரிவாகப் பிரித்து எண்ணப்படும். எலிமென்டரி ஸ்கூல் என்கிற கீழ்தரப் பாடசாலைகளில் பாலர் வகுப்பு என்பதை முதல் வகுப்பென்றும் முதல் வகுப்பை இரண்டாம் வகுப்பென்றும் மற்றைய வகுப்புகளையும் முறையே மூன்றும், நான்காம், ஐந்தாம், ஆறும், எழாம், எட்டாம் வகுப்பென்றும் சொல்ல வேண்டும். மிடில் ஸ்கூல் என்பதில் முதல் கிளாஸிலிருந்து ஐந்தாம் கிளாஸ் வரையிலும் முதல் பாரத்திலிருந்து மூன்றும் பாரம் வரையிலும் இருக்கும். ஹை ஸ்கூல் என்பதில் முதல் கிளாஸ் முதல் ஐந்தாம் கிளாஸ்வரையிலும் முதல் பாரத்திலிருந்து ஆறும் பாரம் முடியவும் இருக்கும். ஆதலால் கீழ்தரப் பாடசாலை உபாத்தியாயர்கள் இனி தங்கள் பாடசாலைகளில் முதல் வகுப்பு முதல்,வகுப்புகளுக்குப்பெயர் கொடுக்க வேண்டும். கீழ்தரப் பாடசாலையில் வைக்கவேண்டிய முக்கியமான ரிஜிஸ்தர்களோடு, (அட்மிஷன் ரிஜிஸ்தர், தினசரி ஆஜர் பட்டி, உபாத்தியாயர் தினசரி ஆஜர் பட்டி, பிள்ளைகள் தேர்ச்சி நடத்தை ரிஜிஸ்தர், இன்ஸ்பெக்ஷன் புஸ்தகம்) ஒரு விஸிடர்ஸ் புஸ்தகமும் வைக்க வேண்டும். அதன் தலைப்பில் பாடசாலைப் பெயரும் உட்புறத்தில் தேதி, பார்த்தவர் பெயர், அந்தஸ்து, ரோலிலுள்ள பிள்ளைகள், ஆஜரான பிள்ளைகள், உபாத்தியாயர்களின் சங்கியை, உபாத்தியாயரில் ஆஜரானவர்கள், பார்த்தவர்கள் விசேஷக் குறிப்புகள் பதியவேண்டும்.



### உபாத்தியாயரின் யோக்யதா பத்திரம்

போதனைமுறைப் பாடசாலையில் பயின்று வரும் ஒவ்வொரு மாணாக்கரும் 2 அணா செலுத்தி ஒரு சர்ட்டிபிகேட் புஸ்தகம் வாங்கவேண்டும். இதற்கு டிரெயினிங் ஸ்கூல் லீவிங் ஸர்ட்டிபிகேட் என்று பெயர். போதனைமுறைப் பாடசாலையில் இருக்குங் காலத்தில் மாணாக்கருடைய தேர்ச்சி முழுவதும் இப் புத்தகத்தில் பதியப் பெற்றிருக்கும். இப் பரீட்சை மார்ச்சுமீ 3 ஆவது வாரம் நடக்கும். அவ்வப்போது இது கெஜட்டில் பிரசுரமாகும். அப் பரீட்சைக்கு ஆஜராகித் தேறினபிறகு பதினெட்டு மாத காலம் அங்கீகாரமான ஏதாவது ஒரு கீழ்தரப் பாடசாலையில் உபாத்தியாயர் வேலை பார்த்து வரவேண்டும். சப் அஸிஸ்டண்டு இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத ஒரு பரீட்சாதிகாரியிடம் திருப்திகரமாக வேலை பார்த்ததாக அப் புத்தகத்தில் பதிவு செய்துகொண்டு இருக்கவேண்டும். பிறகு ஸர்க்கில் இன்ஸ்பெக்டராவது, அந்த ஜில்லா அஸிஸ்டண்டு இன்ஸ்பெக்டராவது மேலே சொன்னபடி பூர்த்தி செய்து வைத்திருக்கும் உபாத்தியாயர்கள் இருக்கும் பாடசாலைக்கு வந்து பரீட்சித்து அந்த சர்ட்டிபிகேட்டிலேயே முழுவதும் தேறின உபாத்தியாயரென்று பதிவு செய்து கொடுப்பார்கள். இதுவரையில் உபாத்தியாயர்கள் கடைசிப் பரீட்சைக்கென்று 1 ரூபாய் பணங்கட்டி புதிய இடத்தில் போய், ஒரு புதிய பாடத்தை அரை மணியில் தயார் செய்து பரீட்சாதிகாரிகளுக்கு முன்னிலையில் பாடம் போதித்து இந்த யோக்யதையை அடையவேண்டி யிருந்தது. இவ்வளவு கஷ்டங்களையும் நிவர்த்தி செய்து ஏழை உபாத்தியாயர்களின்மீது கருணை கூர்ந்து, பரீட்சாதிகாரிகளே போய்த் தேடி யோக்யதா பத்திரம் கொடுக்க வேண்டுமென்று விதிகளை மாற்றிய வித்யா இலாகா தலைமை அதிகாரிகளுக்கு உபாத்தியாயர்கள் மிகவும் நன்றி யுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

P. C. KRISHNA AYYAR, B. A., L. T.,
*I Assistant, Govt. Trg. School,*
*Dindigul.*

# THE TEACHING NOTES

## போதனைக் குறிப்பு

பிள்ளைகள் உபாத்தியாயர் கற்பிப்பதை கவனிக்காவிடின் அது போதகரின் தப்பேயன்றி பிள்ளைகளின் பிழையன்று. ஏனெனில், அப் போதனையில் ஏதோ குறை இருக்கவேண்டு மென்பது நன்கு விளங்குகிறது. அக் குறையை நிறைவாக்கவேண்டும். உபாத்தியாயர் அலுவல் சாமான்யமானதன்று. பஞ்சேந்திரியங்களும் மற்றும் மனமும் தேக அவயவங்களும் மிகச் சுறுசுறுப்பாக இருக்கவேண்டுவது அதி முக்கியம். கண்ணையுங் காதையும் மனத்தையும் சுறுசுறுப்பாய் வைத்துக்கொண்டு சுலபமாயும் பக்ஷமாயும் சந்தோஷமாயும் இருந்து, கோபமென்பதைக் கனவிலுங் கருதாது, பிள்ளைகளுக்கு உபயோகமுள்ள பாடத்தைத் தகுதியான முறையில் கற்பித்தால் பிள்ளைகள் கவனிப்பார்கள்.

பிள்ளைகள் பிரம்புக்குப் பயப்படுவார்களே யொழிய பாடத்திற்குப் பயப்பட மாட்டார்கள். எல்லாப் பிள்ளைகளுக்கும் நூதன விஷயங்களைப் பார்ப்பதிலும் கேட்பதிலும் கையாடுவதிலும் இயற்கையாக இஷ்டமுண்டு. ஓராண்டு பிள்ளைகூட ஒரு வஸ்துவைக் கொடுக்கின் அதை உற்று நோக்குவதும் அதைக் கீழே தட்டுவதும் அதை வாயில்வைத்து ருசித்தலும் அதைப்பற்றி நாம் ஏதாவது சொன்னால் அவ்விஷயம் தனக்குத் தெரியாவிடினும் ஊம், ஆம் எனச் சப்தித்தலும் நாம் கண்கூடாகக் காணும் விஷயம்.

அதனால் உபகரணங்களின்றி உபாத்தியாயர் வகுப்பிற்குச் செல்லல் உசிதமன்று. எப்பாடத்தை எவ்வகுப்பில் கையாளினும் தான் போதிக்கவேண்டிய பாடத்தை முன்னதாகத் தயார்செய்துகொண்டு போனாலொழிய அப் பாடம் பயன்படாது. அப்படிச் செய்யாது வகுப்பிற்குச் சென்று யோசிக்கின், வேண்டிய உபகரணங்களின்றியும் தகுதியான திருஷ்டாந்தங்கள் தன் மனத்தில் தோன்றாமலும் யுக்தியுள்ள கேள்விகள் கேளாமலும் தட்டுத்தடுமாறி பாடத்தைக் கெடுத்துவிட நேரிடுமென்பது திண்ணம். தாம் எடுத்துக்கொண்ட சிரமமும் வீணாகும். சிரத்தையுள்ள உபாத்-



தியாயர் என்னும் பெயர் அவருக்கு வாராது. பிள்ளைகளுக்கும் அவரிடத்து மதிப்பு உண்டாகாது.

இத்தகைய கஷ்ட நஷ்டங்களினின்றும் தன்னை விலக்கிக்கொண்டு சாமர்த்தியமுள்ள உபாத்தியாயர் எனும் பெயர்பெற வகுப்பிற்குப் போகுமுன் பாடம் தயார் செய்துகொண்டு அப்பாடத்திலுள்ள முக்யாம்சங்களை எவ்விதமாக எவ்வுபகரணங்கள் அல்லது உபமானங்களைக்கொண்டு கற்பிக்கலாமெனத் தோற்றுகின்றனவோ அவைகளை ஞாபகார்த்தம் ஒரு நோட்டுப் புத்தகத்தில் சுருக்கமாகக் குறித்துக்கொண்டு போகும் குறிப்பே பாடக் குறிப்பாகும். எவ்வளவு சிறு வகுப்பாயினும் பாடக்குறிப்பின்றி வகுப்பினுள் நுழைகிற உபாத்தியாயர் சரியான உபாத்தியாயராகார். பாடக்குறிப்பு தயாரிப்பது பலவகைப்படும்; அதை விரித்துக் கூறல் வீணே ஆயினும், ஒரு பத்ததியை இங்கு எனக்குத் தெரிந்தவரை குறிக்கின்றேன். இதை யநுசரித்துப் பல்வேறு வகையாக பாடக்குறிப்பு தயாரித்துக் கொள்ளலாகும்.

### பாடக்குறிப்பு.

| | |
|---|---|
| 1. உபாத்தியாயர் | 3. கிரமசிக்ஷை |
| 2. பாடம் | 4. முறை |

முறையின் கீழ் —

| | |
|---|---|
| 1. பீடிகை | 4. விடை |
| 2. சு. பலகை | 5. திருஷ்டாந்தம் |
| 3. கேள்வி | 6. உபகரணம் |

போதிக்கையில் —

1. தெரிந்ததைக்கொண்டு தெரியாததைக் கற்பிக்கவேண்டும்.

2. சுலபமானதைக் கொண்டு கஷ்டமானதை போதிக்க வேண்டும்.

3. உபமானத்தைக் கொண்டு உபமேயத்தை விளக்க வேண்டும்.

உபமானமெனில் வாய்மொழியான கதை முதலியன.

உபகரணமெனில் வஸ்துவை நேரில் காட்டுதல்.

## 1. உபாத்தியாயர்

குணங்கள் — பக்ஷமாயும், கோபத்தைக் கனவிலும் நினையாமலும், சுலபமாயும், கஷ்டமில்லாமலும், சந்தோஷமாயும் போதிக்கும் குணங்கள்.

வழக்கம் — சொன்னதைத் திருப்பித் திருப்பிச் சொல்லல். பிள்ளைகளை அவ்வாறு சொல்லி உருப்போடச்சொல்லல் அல்லது அப்பிள்ளைகளே சொல்லிச் சொல்லி மனப்பாடம் செய்தலைக் கண்டியாமலிருத்தல் பொருத்தமில்லா வருத்தத்தைத் தரும். இதைத் திருத்திக்கொள்ளல் வேண்டும். இது பாடம் என்னும் தலைப்பின் கீழ் இடம்பெறும்.

ஆளுகை — ஒவ்வொரு பாடத்தையும் நன்றாய்க் கவனிக்குமாறு டிரில் செய்தல், வெளிக்கு விடல் முதலியன.

பாடவரிசைக் கிரமம் — வரிசைக்கிரமமாயும் கஷ்டமில்லாமலும் வகுப்பிற்கு ஏற்றதாயும் சரியான முறையோடு உபாத்தியாயர் முன்னதாக தயாரித்ததாயும் பாடம் அமைந்திருத்தல் அவசியம். சிறுவகுப்பிற்கு வினாவிடைக் கிரமத்தைக் கையாள்வது தகுதி.

இவ்விரண்டும் அதாவது ஆளுகை பாடவரிசைக் கிரமம் என்பன கிரமசிக்ஷையின் கீழ் கொள்ளற் கேற்றவை.

முறை — ஒரு பாடத்தை அநேக திருஷ்டாந்தங்கள் அதாவது உபமானங்களைக் கொண்டும் உபகரணங்களைக் கொண்டும் கற்பிக்கும் வகுப்பிற் கேற்ற சுலப நடையில் பிள்ளைகள் மனத்தில் நன்றாய்ப் பதியும்படி சொல்லிக்கொடுக்க வேண்டும்.

க. ப. — ஒவ்வொரு பாடத்திற்கும் முக்யாம்சங்களை எழுதுவதற்கே க. ப. வை உபயோகிக்கவேண்டும். பாடமுடிவில் அவ்விஷயங்களைப் பிள்ளைகள் நோட்டில் வரைந்துகொள்ளுமாறு செய்தல் வேண்டும்.

விவரிப்பு — ஒரு கதை சொன்னாலுங்கூட அதை எளிய நடையில் திருத்தமாகவும் வகுப்பிற்கு பொருத்தமாகவும் விவரித்துச் சொல்லவேண்டும். உடனுக்குடன் பிள்ளைகள் கவனிக்கிறார்களா



என கவனிக்க உபாத்தியாயர் சில கேள்விகள் கேட்டு விடைபெற வேண்டும்.

கேள்வி — சுருக்கமாகவும் சுலபமாகவும் இருத்தல் வேண்டும். ஆம், இல்லை எனும் விடை கூறக்கூடிய கேள்விகள் கேட்கப்படாது. பிள்ளைகள் யோசனை சக்தியை விருத்தி செய்யக்கூடிய கேள்விகளே சிறந்த கேள்விகளாகும். உத்தேசமாய் சொல்லிப் பார்க்கலாம் என விடைபெறக்கூடிய கேள்விகள் கேள்விக ளாகா.

1. யானை பெரிய மிருகந்தானே ? என (ஆம், இல்லை, என்று விடை சொல்லக்கூடிய) கேள்வி கேட்கக்கூடாது.

2. கோளரியின் நேத்திரங்கள் எவ்வாறுள ? என அர்த்தம் விளங்காதவாறு கடின வார்த்தைகளோடு கேள்விகள் கேட்கப்படாது.

3. புத்தகத்திலேயே இருக்கும் சொற்களை உபயோகித்து கேள்விகள் கேட்கலாகும். ஏனெனில், வேறு பதங்களை உபயோகித்து வினவினால் விடை சொல்லத் தெரியாது பிள்ளைகள் விழிப்பார்கள். பிரதமத்தில் இவ்வாறு செய்து பிறகு சொந்த மொழிகளைக்கொண்டும் சிறிது மாற்றியும் கேட்கின் பதில் சொல்ல பழகிவிடுவார்கள். கேள்விகள் சிறியதாகவும் நீண்ட பதங்களோ அல்லது வாக்கியமோ இல்லாமல் சுருக்கமாக இருக்கவேண்டும்.

விடை — பிள்ளைகள் சொன்னதைச் சரி அல்லது தப்பு என உபாத்தியாயர் கவனித்துச் சொல்லவேண்டும். அப்போதுதான் பிள்ளைகட்கு உற்சாக முண்டாகும்.

உபமானம்
உபகரணம்
அபிப்பிராயம்

எவைகளுக்கு உபமான உபமேய திருஷ்டாந்த தாஷ்டாந்தங்கள் சொல்லவேண்டுமோ அல்லது காட்டவேண்டுமோ அவைகளை பிள்ளைகளுக்குத் தெரிந்ததைத் தேர்ந்தெடுத்து உதாகரிக்கவேண்டும். உபகரணங்கள் உபயோகிக்கையில் ஒரு மிருகத்தின் பருமனைக் குறித்துப் போதிக்கையில் படத்தைக் காட்டாது களிமண் உருக்கொண்டும் உருவத்தை எழுதச்செய்யும்போது படத்தைக் காட்டாது களிமண் உருவையும் உபயோகிக்காது எச்சமயத்தில் எதை உபயோகிக்க வேண்டுமோ அதை நன்கு ஓர்ந்து தேர்ந்து செய்தல் வேண்டும்.

சோதர உபாத்திமார்களே ! இனி அடுத்த முறை உபகரணங்கள் என்னும் மகுடத்தின் கீழ் ஏதோ என் அநுபவத்திற் கண்ட விடயங்களைக் குறித்துச் சிறிது வரைவேனாக.

C. V. DURAISINGA MUDALIAR,
*Head-master, Corporation Model School,*
*Vasapmodu, Madras, E.*

# MOSQUITOES

## கொசுக்கள் உற்பத்தியும் அவைகள் செய்யும் கெடுதியும் : ஒரு சம்பாஷணை.

மாணிக்கம் — மாமா இங்கே வந்து பாருங்கள் இப் பீப்பாயில் கணக்கற்ற புழுக்கள், உலவுகின்றனவே ! இவைகள் என்ன புழுக்கள் ?

மாமன் — இப் புழுக்கள்தான் கொசுக்களின் குழந்தைகள்.

மாணிக்கம் — கொசுக்களின் குழந்தைகளா ! அப்படியானால், கால்கள், இறக்கைகள், மீசைகள், முதலிய உறுப்புகள் காணவில்லையே, புழுவாகத்தானே இருக்கின்றன.

மாமன் — மாணிக்கம் இதோ பார் 2 கொசுக்கள் பறந்து வந்து தண்ணீரின் மேற்பரப்பில் உட்கார்ந்து கொண்டன, அவைகள் என்ன செய்கின்றன ? இக் கண்ணாடியின் மூலமாக நன்றாய்ப் பார் ?

மாணிக்கம் — மாமா, ஆஹா ஆச்சரியத்திலும் ஆச்சரியம் ! இவ்வளவு சிறிய கொசு இக் கண்ணாடியால் பார்க்க, ஒரு வண்டின் அளவினதாகத் தோற்றுகிறதே !

மாமன் — ஆமாம் சிறிய வஸ்துக்களைப் பெரியனவாகக் காட்டும் கருவி,இதற்கு அணுதரிசினி யென்று பெயர். இருக்கட்டும், வந்த கொசுக்கள் என்ன செய்கின்றன, பார்த்துச் சொல்.



மாணிக்கம் — வந்த கொசுக்கள் முதலில் கூனிக் கூனி மிகவும் வருத்தப்படுகின்றன. ஹோ, ஹோ, தண்ணீரில் தம் எச்சங்களை ஏராளமாய் விடுகின்றன.

மாமன் — மாணிக்கம், கொசுக்கள் வருத்தப்பட்டு இடுவது எச்சங்களல்ல, அவைகள்தான் கொசுக்களின் முட்டைகள், இவை குளம், குட்டைகள், கிணறுகள், வாய்க்கால்கள், சாக்கடைகளில் நிலையாகத் தங்கிநிற்கும் தண்ணீரில் இவை தங்கள் முட்டைகளை இட்டுவைகின்றன.

முட்டைகளினின்றும் 24 மணி நேரமுதல் 48 மணி நேரத்திற்குள் குஞ்சுகள் வெளிப்படுகின்றன. இத்தருவாயில் குஞ்சுகள், புழு வடிவமாகத்தா னிருக்கும், இவ்விதப் பருவமடைந்த குஞ்சுகள்தான் இத் தொட்டியில் இருப்பவை.

இதோ இப் புழுக்களைப்பார், இவைகள் என்ன செய்கின்றன? நீரின் அடி மட்டத்திலிருந்து, மேல் பரப்பிற்கு வருவதும், மேற்பரப்பிலிருந்து அடி மட்டத்திற்குத் துள்ளிச் செல்லுவதுமே ஒரு பெரிய வேலையாகக் கொண்டிருக்கின்றன. இவைகள் ஏன் அப்படிச் செய்கின்றன தெரியுமா?

நீர்மட்டத்திற்குக் கீழுள்ள ஆகாரங்களைப் பசியாற உண்பதற்கும், உண்டபின் மேற் பரப்பிற்கு வந்து சுவாசம் விடுவதற்குமே அப்படிச் செய்கின்றன. இல்லாவிட்டால் முழுகி இறந்து போகுமல்லவா? இதோ பார் நீரின் மேல்பரப்பிற்கு வந்த புழுக்கள், தங்கள் வால் நுனிகளை, நீரின் மேற்பரப்பிலும், மற்றப் பாகங்களைத் தண்ணீருள்ளும், வைத்துத் தலை கீழாகத் தொங்குவது போல் மிதக்கின்றன. அது ஏன்? அப்படிச் செய்யக் காரணம் என்ன? உமது கையிலுள்ள கண்ணாடியால் அவைகளின் வால் நுனியைக் கவனித்துப் பார்த்துச் சொல்,

மாணிக்கம் — ஒன்றும் தெரியவில்லையே. ஆ, ஆ, மாமா பொறும் பொறும், சொல்லுகிறேன், இவைகளின் வால் நுனியில் குழாய் போன்ற அவயவங்க ளிருக்கின்றன. அவைகளின் வாய்கள் மூடவும் திறக்கவுமாக இருக்கின்றனவே.

மாமன் — ஆம், ஆம், அவைகளின் மூலமாகத்தான் இப் புழுக்கள் சுவாசிக்கின்றன. இதற்காகத்தான் புழுக்கள் தலை கீழாக மிதக்கின்றன.

மாணிக்கம் — சரி, சரி, நன்றாய்த் தெரிந்துகொண்டேன். இனி முட்டையிலிருந்து வெளிப்பட்ட புழுக்கள், எவ்விதமாய் வளர்ந்து, பூர்ணமான கொசுக்களாகின்றன? சொல்லுங்கள்.

மாமன் — மாணிக்கம், கவனமாய்க் கேள், இப் புழுக்கள் 5 நாள்முதல் 10 நாட்களுக் குள்ளாக, தங்களுக்குக் கிடைக்கும் ஆகாரங்களை, ஆவலோடு தின்று, பூரணமான புழுத்தன்மையை அடைந்தவுடன், தன் தோலை யொருமுறை உறித்துக்கொள்ளும். தோலுறித்த 2 அல்லது 4 நாட்கள் வரை, வெகு சுறு சுறுப்போடு அங்கு மிங்கும் துள்ளித் திரியும். இத்தசையில்தான் இவற்றிற்கு, (ப்யூப்) Pupx அல்லது, (Nymphs) நிம்புகள் என்று பெயர்.

பிறகு அசைவற்றுத் தண்ணீரின் மேற் பரப்பில் மிதந்து கொண்டிருக்கும் இத்தருவாயில் இவை மெல்லிய காகிதம் போன்ற ஓர் பையில் அடைபட்டு மயங்கிக் கிடப்பதால், இவற்றிற்கு ஆகாரம் அவசியமில்லை. பிறகு, இரண்டொரு நாளில் அடைபட்டிருந்த பையாகிய தோலைக் கிழித்துக்கொண்டு, கால்கள் இறக்கைகள், மீசைகள், கண்கள், தலை முதலிய அங்கங்களோடு சரியான கொசுவாக வெளிப்படுகின்றன. பிறகு, ஆகாரம் தேட ஆரம்பித்து, இரவில் மனிதர்கள் உறங்கு மிடங்களைத் தேடிச் சென்று இரத்தத்தை உறிஞ்சுகின்றன. அப்பால் தன் இனத்தை விருத்தி செய்யத் தொடங்கி 2 அல்லது 3 நாட்களுக் குள்ளாகத் தனக்கு வசதியாகத் தேங்கி நிற்கும் தண்ணீரில் முட்டைகளை யிட்ட வண்ணமாகவே யிருக்கும். முட்டையிடுவதால், தனக்குண்டாகும் பலவீனத்தை மனிதர்களின் இரத்தத்தை அருந்தியே தேகத்துக்குப் பலத்தை யுண்டுபண்ணிக்கொள்ளும்.

மாணிக்கம் — மாமா, கொசுக்கள் எப்படி நம்மைக் கடித்து விடுகிறது, அவைகளுக்குப் பற்களுண்டா?

மாமன் — ஆஹா அதற்கென்ன தடை, நீ இக் கேள்வி கேட்பா யென்றுதான் முன்னமே யொரு கொசுவைப் பிடித்து வைத்திருக்கிறேன்.

கண்ணாடியால் பரிசோதித்துப் பார், தலையில் 2 மீசைகள் மாதிரி யிருக்கின்றனவே, அவைகள்தான் அவற்றின் ஸ்பரிச வுறுப்புகள், இவற்றால்தான் எப்பொருளையும் தொட்டுப்பார்த்து இன்னதென்று தெரிந்துகொள்ளும், வாயில் ஏதோ ஊசிபோல நீண்டு இருக்கிறதல்லவா, இவைகள், மேலுதடும் கீழுதடும் சேர்வ-



தால் உண்டாகும் ஒரு குழாய் போன்ற, தும்பிக்கையைச் செலுத்தி நம் இரத்தத்தை உறுஞ்சும், இறக்கைகளைப் பார், நன்றாய்ப் பறந்து, திரிவதற்கேற்ற வண்ணம், அமையப்பெற் றிருக்கின்றன.

கால்களின் நுனி என் இவ்வளவு மெலிந்தும் மெதுவாயுமிருக்கிறன்றது தெரியுமா? மனிதர்களின் தேகத்தில் உட்காரும்போது, அவனறியா திருக்கும் பொருட்டே யிவ்வாறு அமைந்திருக்கின்றன. ஆனால், கொசுக்கள் நம்மைக் கடிக்கும்படி விடக்கூடாது,

மாணிக்கம் — என் மாமா?

மாமன் — மலேரியா என்னும் விஷ ஜ்வரத்தை சுலபமாய் மனிதர்களுக்குத் தொத்தும்படி கொசுக்கள் செய்துவிடுகின்றன.

இது மிகவும் ஆச்சரியமான விஷயம், 'மலேரியா கொசுக்களா லுண்டாகிறது, மூளைக்கிருமிகள் பலவித அசுத்தங்களினின்றும் உண்டாகின்றன. கொசுக்கள் அவ்வசுத்தங்களில் தங்குவதினாலும் அவைகளின் சத்தை உறுஞ்சுவதினாலும் அசுத்தத்திலுள்ள கிருமிகள் அதன் வயிற்றிலும் உமிழ் நீரிலும் கலந்து விடுகின்றது. கொசு ஆகாரத்தின் பொருட்டு பல மனிதர்களைக் கடித்து இரத்தத்தை உறுஞ்சுகையில் உமிழ் நீரிலுள்ள கிருமிகள் சுலபமாய் மனிதன் இரத்தத்தில் கலந்து, ஒன்றுக் காயிரமாகப் பெருகி, விஷ ஜ்வரத்தை யுண்டுபண்ணிவிடுகிறது. இவ்வாறு விஷ ஜ்வரத்தால் பிடிக்கப்பட்ட மனிதன் இரத்தத்திலிருந்து, முன் சொன்னவாறே இலகுவில் கொசுக்கள் மலேரிய வியாதியை மற்றவர்களுக்கும் பரவும்படி செய்துவிடுகின்றன. (குலிஸைன்ஸ்) கொசு மலேரிய ஜ்வரத்தை, பரவச் செய்வதில்லை யென்றாலும், யானைக்கா லுண்டாகும்படியான, ஓர் வித கொடிய ஜ்வரத்துக்குக் காரணமான, (பிலேரியா) என்னும் கிருமிகளை ஒருவரிடத்திலிருந்து, மற்றொருவருக்குத் தொத்தும்படி செய்கின்றன.

மாணிக்கம் — இவ்வியாதி பரவாமலிருக்க ஏதாவது உபாயம் உண்டா? மாமா

மாமன் — ஆஹா, பலவித உபாயங்களால் தடுக்க முடியும். அவைகளையும், சீக்கிரம் சொல்லிவிடுகிறேன் கவனமாய்க் கேள்.

1. நாம் வசிக்கும் வீடுகளுக்குப் பக்கத்தில் கொசுக்கள், முட்டை யிட்டுக் குஞ்சு பொரிப்பதற் கேதுவான, தண்ணீர்த் தேக்கங்களைத் தூர்த்துவிடல் வேண்டும்.

2. வீட்டுக்குப் பக்கத்திலுள்ள, சாக்கடை ஜலதாரை பொதுக் கக்கூசுகள் முதலியவற்றைச் சுத்தமாய் வைத்திருப்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும்,

3. வீட்டினின்று உபயோகப்படா தெறியும், மட் பாண்டங்களையாவது மற்றப் பாத்திரங்களையாவது ஊரைவிட் டப்புறப் படுத்துவதுடன், அவைகளில் மழைத்தண்ணீர், தங்கி நிற்காமல் உடைத்து விடவோ அல்லது குப்புறக் கவிழ்த்து விடவோ வேண்டும்.

4. ஊரிலுள்ள பொதுக் கிணறுகள், குளங்கள், குட்டைகளிலுள்ள தண்ணீரில் வாரமொருமுறை கொஞ்சம் மண்ணெண்ணெயை விட்டு வைப்பது நலம்.

5. வீட்டின் கூரைகளில் வசிக்கும், தூரிஞ்சல்களைக் கொல்லாமலும் அவைக ளிருப்பிடத்தை அடைக்காமலு மிருக்கவேண்டும் (தட்டாரப் பூச்சியையும் காப்பது நலம்)

6. மலேரியா விஷ ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டவர்கள் வசிக்கும் ஊர்களிலோ அல்லது பிரதேசங்களிலோ, இரவில் தங்கக் கூடாது. அவசியம் தங்கவேண்டி வரின், கொசு வலை போட்டு நித்திரிப்பதில் கவனம் செலுத்தல் வேண்டும். பிரதேசத்தை விட்டு நம் சொந்த ஸ்தலம் வந்தவுடன், குறைந்தது, ஒரு மாதமேனும் அதற்கு மேற்பட்டேனும், க்வினைன் மருந்தைச் சாப்பிட்டு வருவது உத்தமம்.

7. விஷ ஜ்வரம் வாஸ்தவமாய்க் காணும்போது 3 மாத காலம் தினந்தோறும் ஒரு தடவை (க்வினைன்) சாப்பிட்டு வருதல் வேண்டும். வயது வந்தவர்கள், மக்னீஸியம் ஸல்பேட் ட்ராமும், க்வினின் ஸல்பேட் ஏறக்குறைய 10 க்ரெயின் சேர்த்துச் சாப்பிட்டு வருவது உத்தமம்.

8. விஷ ஜ்வரக் கட்டி யுண்டாயிருக்கும் குழந்தைகளும், பெரியோர்களும், 3 மாத காலம், தினந்தோறும், க்வினைன் சாப்பிட்டுவருதல் அவசியம்.

**மாணிக்கம்** — மாமா, கொசுக்களின் ஜீவிய சரிதத்தையும் அவைகளா லுண்டாகும் கெடுதிகளையும் அவற்றைத் தடுக்கும் விதங்களனைத்தையும் தெளிவாய் எனக்குச் சொன்னபடியால், தங்களுக்கு, என் மனமுவந்த வந்தன மளிக்கிறேன், நேரமாய் விட்டது வீட்டுக்குப் போவோம் வாருங்கள்.

THIRUVAI, N. CHIDAMBARA GOUNDAR,
*Board Elementary School,*
*Thuduppathi.*



# BOTANY

## தாவர நூல்


அநேகமாய் தாவரங்கள் தங்கள் வர்க்கவிர்த்தியை, விதை நடுவதாலும், அடியிலிருந்து வரும் கன்றை வெட்டி நடுவதாலும், கிளைகளைப் பதி போட்டு நடுவதாலும் உண்டாக்குகின்றன.

தாவரங்களில் வர்க்க விர்த்தியின் பொருட்டு வேலை செய்யும் பாகம் புஷ்ப மெனப்படும். புஷ்பங்கள் காயை உண்டாக்குகின்றன. காய் விதையை யடக்கிக்கொண் டிருக்கிறது. ஆகையால் தாவரங்களின் வர்க்க விர்த்திக்கு மிகவும் அவசியமானது புஷ்பம்.

### புஷ்பத்தின் பாகங்கள் (Parts of flower)

1. புஷ்பக் காம்பு (Peduncle). 2. புறவிதழ் அல்லது புஷ்பகோசம் (Calyx) 3. பூவிதழ் அல்லது தளவட்டம் (Corralia). 4. பூந்தாள் அல்லது கேசரம் (Stamens). 5. மகரந்தப் பெட்டி (Anther). 6. கேசாக்ரம் (Stigma)

7. கீலம் (Style), 8. விதைப் பெட்டி அல்லது அண்டாசயம் (Ovary) } அண்டகோசம் (Pistil)



பூரண புஷ்பத்தின் நீள வெட்டுமுகம்

### புஷ்பத்தின் வேலைகள் (Functions of flower)

புஷ்பக் காம்பு — புறவிதழாகிய கிண்ணம் அமைந்திருக்கும்படியான காம்புக்குப் புஷ்பக் காம்பு (Peduncle) என்று பெயர். இது புஷ்பத்தின் எல்லாப் பாகங்களையும் தாங்கிக்கொண் டிருக்கிறது.

புறவிதழ் அல்லது புஷ்பகோசம் (Calyx) புஷ்பத்தின் வெளிப் பாகமாகிய சொற சொறப்பான ஐந்து பசுமை இதழ்களால் அல்லது ஒரே வட்டமான இதழால் ஆகியது. முதலில்

புஷ்பத்தின் மற்றப் பாகங்களை அடக்கிக்கொண் டிருக்கிறது. அப்பொழுது அதற்கு மொக்கு அல்லது அரும்பு என்று பெயர்.

பூவிதழ் அல்லது தளவட்டம் (Corrolia) உள் பாகமாகிய மிருதுவான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இதழ்களாலானது. இது 4 முதல் 8 வரையிலுள்ள பாகங்கள் பக்குவததை யடையும் வரையிலும் பாதுகாக்கிறது.

பூந்தாள் அல்லது கேசரம் (Stamens) தளவட்டத்திற்கு மத்தியில் சில நுண்ணிய கம்பிபோன்ற உறுப்புகளாக இருக்கின்றன. ஒவ்வொரு கேசரத்தின் நுனியிலு முள்ள உருண்டையான பாகத்திற்கு மகரந்தப் பெட்டி (Anther) என்று பெயர் சொல்லப்படும்.

மகரந்தப் பெட்டி (Anther) இதற்குள் கர்ப்பதானத்திற்கு அவசியமான ஒருவகை மஞ்சள் நிறம் பொருந்திய தூள் இருக்கிறது. இது (Protoplosm) ஜீவ அணுக்களாலானது.


அண்டகோசம் (Pistil) தளவட்டத்திலுள்ள கேசரங்களை நீக்கிப் பார்த்தால் மத்தியில் ஒரு தடித்த கம்பிபோன்ற வஸ்து தோன்றும். இது மிகவும் முக்கியமான பாகமாக இருப்பதால் இதை மற்றப் பாகங்கள் மூடிக்கொண் டிருக்கின்றன. இது கீலாக்ரம், கீலம், விதைப்பெட்டி (Stigma, Style, Ovary) ஆகிய இவைகளால் ஆனது.

1. கீலாக்ரம் (Stigma) இது அண்டகோசத்தின் நுனிப் பாகம். இந்தப் பாகத்தில் எப்பொழுதும் பசை இருந்துகொண் டிருக்கும், கேசரத்திலிருந்து வரும் மகரந்தத் தூளை இந்தப் பாகம் பிடித்துக் கொள்ளுகிறது.

2. கீலம் (Style) இது அண்டகோசத்தின் மத்திய பாகம். இதற்குத் துவாரமுண்டு. கீலாக்ரத்திலிருந்துவரும் மகரந்தத் தூள் இவ்வழியாக அடிப் பாகமாகிய விதைப் பெட்டிக்குப் போகிறது.

3. விதைப் பெட்டி (Ovary) இந்தப் பாகந்தான் விருட்சத்தில் முக்கியமான பாகம். இதுவே பிற்காலத்தில் விதைகளை உண்டு பண்ணும். கேசரத்திலிருந்து வரும் மகரந்தத் தூள் கீலாக்ரம் நுனிப் பாகத்தில் விழுந்தவுடனே அங்கிருந்து கீலம் வழியாக வந்து இந்த விதைப் பெட்டியில் தங்கி விதைகளுண்டாகின்றன. ஷெ மகரந்தத் தூள் இந்த விதைப் பெட்டியில் வாராவிட்டால் ஒருபோதும் விதை உண்டாகாது. இது காரணம் பற்றியே புஷ்பங்களிலும் ஆண் பெண் என இருவகையுண்டு.






ஆண் புஷ்பத்தின் நீள வெட்டுமுகம்

ஆண் புஷ்பம் — இதைப் பரிசோதித்தால் கட்டாயமாய் (Stigma Style Ovary) என்று கீலாக்ரம் கீலம் விதைப் பெட்டி சொல்லப்படும் அண்டகோசம் (Pistil) நீங்கலாக கேசரமும் (Stamen) நுனிப் பாகமாகிய மகரந்தப் பெட்டியும் (Anther) மற்றும் சில பாகங்களும் காணப்படும். இது குறைபொருந்திய கேசரப் புஷ்பம் (Incomplete Staminate flower) எனப்படும்.

1. புஷ்பக் காம்பு. 2 புஷ்ப கோசம். 3. தளவட்டம் 4. கேசரம். 5. மகரந்தப் பெட்டி.

பெண் புஷ்பம்—இதைப்பரிசோதித்தால் கட்டாயமாக கேசரமும் (Stamen) அதன் நுனிப்பாகமாகிய மகரந்தப் பெட்டி (Anther) நீங்கலாகக் கீலாக்ரம் கீலம் விதைப்பெட்டி (Stigma Style Ovary) என்று சொல்லப்படும் அண்டர்சயமும் (Pistil) இன்னும் சில பாகங்களும் காணப்படும் இது குறைபொருந்திய அண்டகோச புஷ்பங்கள் (Incomplete Pistillate flowers) எனப்படும்.



பெண் புஷ்பத்தின் நீள வெட்டுமுகம்

பூரண புஷ்பம் (Complete flower) இதில் மேல் சொன்ன ஆண், பெண், புஷ்பங்களில் இருக்கும் உறுப்புகளையும் மற்றும் சில உறுப்புகளையும் காணலாம்.

(முதல் படத்தைப் பார்க்கவும்.)

1. புஷ்பக் காம்பு. 2. புஷ்பகோசம். 3. தளவட்டம் 4. கீலாக்ரம். 5. கீலம். 6. விதைப் பெட்டி.

(Note) பூவரசு வேறு சில புஷ்பங்களின் அடிப் பாகத்தில் ஒரே ஒரு வட்டமான பசுமை நிறம் பொருந்திய கிண்ணம் அல்லது புஷ்பகோசம் (Calyx) உண்டு. ஊமத்தை பூசனி முத-

லிய புஷ்பங்களின் அடிப்பாகத்தில் 5 இதழ்களா லாகிய புஷ்ப கோசம் உண்டு. தளவட்டங்கள் (Carrolia) மாத்திரம் ஒன்று-முதல் நூற்றுக்கணக்காக இருக்கின்றன. (உ-ம்) தாமரை, ரோஜா.

புஷ்பகோசம் (Calyx) ஒன்று முதல் 5 வரையிலுள்ள இதழ்கள் அல்லது ஒரே கிண்ணத்தால் மாத்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆண், பெண், புஷ்பங்களுக்கு குறை பொருந்திய புஷ்பங்கள் (Incomplete flowers) என்றும் இரண்டும் பொருந்திய புஷ்பங்களுக்கு பூரண புஷ்பங்கள் (Complete flowers) என்றும் சொல்லப்படும். கீலாக்ரம், கீலம், விதைப் பெட்டி (Stigma, Style, Ovary) ஆகிய இம் மூன்று பாகமும் சேர்ந்தது அண்டாசயம் (Pistil) எனப் படுகிறது.

மகரந்தத்தூள் கீலாக்ரத்தில் பட்டு கற்பமாகி விதை பிடிக்க இரண்டு வழிகளுண்டு.

1. தங்களாகாரத்தின் பொருட்டு தேனீ, வண்டு, வண்ணத்திப் பூச்சி இவைகள் வாசனையும் நிறமும் பொருந்திய சில புஷ்பங்களின் அடியில் உள்ள மதுரம் அல்லது பூந்தாள்களைக் கிரஹிக்கப் பிரவேசிக்கையில் புஷ்பம் அசைந்து கேசரத்தின் நுனியில் உள்ள மகரந்தப் பெட்டி உடைந்து அதிலிருக்கும் தூள்கள் இவற்றின் சிறகுகளில் ஒட்டிக்கொள்ளுகின்றன. இப்படியே ஒவ்வொரு புஷ்பத்திலும் நுழைந்து மதுவைக் கிரஹிக்க ஆரம்பிக்கும் பொழுது அதின் சிறகுகளில் தங்கியிருக்கும் மகரந்தத்தூள் (Anther) கீலாக்ரத்திலிருக்கும் (Stigma) பசையிலொட்டிக் கொண்டு கீலம் வழியாக விதைப் பெட்டிக்குப் போய் விதை விர்த்தியாகிறது. இக்காரணம் பற்றியே இராக்காலங்களில் பூக்கும் புஷ்பங்களை வண்டுகள் தெரிந்துபோய் மதுவைக் கிரஹிக்க கடவுள் சிருஷ்டியால் அம்மலர்கள் வெள்ளை அல்லது வெளிறின நிறம் பொருந்தி இருக்கும் (உ-ம்) அல்லி, மல்லி.

2. நிறம் வாசனையற்ற புல்லுருவி போன்ற சில புஷ்பங்களில் ஏராளமாக மகரந்தத் தூள் இருக்கின்றன. அவைகள் காற்றினால் கொண்டு போகப்பட்டுப் பரவுகின்றன.

இவ்விதமாக ஒரு பூவின் மகரந்தமானது வேறு பூவில் பட்டு விதை பிடிக்க வேண்டிய சாதனங்கள் இயற்கையாக ஏற்பட்டிருக்கின்றன.

M. DURASWAMI CHETTY,
*Headmaster,*
*C. Coomarasawmy Naidu Free Ely. School,*
*Cheyyur.*




மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1918ஆ பெப்ருவரிமீ | மாதம் 9

## GARLAND OF VERSES

### செய்யுள் மாலை

பறவையும் — பையனும்

பறவையென் றென்னைப் பழித்துப் பார்க்கும்
சிறுவனே யானும் சிறியதோர் பறவையே

உருவினும் சிறியேன் உணர்வினும் சிறியேன்
மருவிய உலக வாழ்வினும் சிறியேன்

காண்போர் கண்ணைக் கவருமோர் வனப்பும்
மாண்புறப் பெறுதவம் வாய்த்தே னில்லை

எனினும் இறைவன் என்னிடம் காட்டிய
கனிவு தனக்கோர் கரையும் உண்டோ

கடவுள் என்பால் காட்டிய அருளை
அடைவுடன் கூறுவேன் அன்புடன் கேளாய்

சிறியஎன் உடலின் சிறுமையை உன்னிச்
சிறகினால் ஓர்உடை சிறக்க அருளினன்

இவ்வுடை ஒன்றே எப்பரு வத்தினும்
செவ்விய உடையாச் சிறந்து விளங்குறும்

இயற்கை அழகே எவர்க்கும் அழகாம்
செயற்கை அழகாற் சிறப்பும் உண்டோ

உன்னைப் போல்நான் உலகில் இறங்குவேன்
என்னைப் போல்நீ வானிலே றுவையோ

என்னொரு நாளெலாம் இன்புறு நாளே
அன்பின் சிறப்பை அறிந்தவன் யானே

என்ன எவரும் இசைத்திட வாழ்வேன்
இன்னும் எனக்கிங் கின்னலும் உண்டோ

அன்றன் றிறைவன் அன்புட னளித்ததை
அன்றன் றுண்பேன் அகமகிழ்ந் திருப்பேன்

இன்றென் செய்வது நாளையென் செய்வதிங்
கென்றே வருந்தும் இயல்பெனக் கில்லையே

செல்வச் சிறுவ இவ்விதச் செல்வம்
நல்மெய்ஞ் ஞானியர் நாடினும் கிடைத்தல்

அருமையே யென்ன அறிவுள மாந்தர்
பெருமையா வுமக்குட் பேசுவ துண்மையோ

யானிங் கதனை யறிய
ஊன மின்றி உரைத்திடு வாயே.

பத்திராதிபர்,



# ELEMENTARY SCHOOL ORGANIZATION

## கீழ்தர கிராம பாடசாலை ஏற்பாடு

(முன்தொடர்ச்சி பக்கம் - 162)

பிளான் — ஒரே உபாத்தியாயர் உடையதும் சுமார் 30 பிள்ளைகள் உள்ளதுமான பாடசாலையின் படம் நீண்ட சதுரமாக விருக்கும். அதிக பிள்ளைகள் வாசிக்கவேண்டி யிருந்தால் நடுவில் சதுரமாக ஒரு காலி இடம் விட்டு நாலு பக்கங்களிலும் முன்னே கூறியபடி அகலமும் தேவையான நீளமும் வைத்துக் கட்டடம் அமைக்க வேண்டும். அப்படிச் செய்வதால் ஒரு வகுப்புக்கும் மற்றொரு வகுப்புக்கும் சப்தத்தால் வேலையில் இடையூறுகள் நேரா.

மேலே சொன்ன ஓர் உபாத்தியாயருள்ள பாடசாலையில் நீளப்பக்கம் ஒவ்வொன்றிலும் நடுவே ஒரு வாசற்படியும் இரண்டு விசாலமான ஜன்னல்களும் அவசியம் வேண்டும். அகலப் பக்கங்கள் வீடுகளால் தடுக்கப்படாமல் திறந்த வெளியில் இருந்தால் அப் பக்கங்களில் ஒவ்வொரு ஜன்னலும் வைக்கவேண்டும். கட்டடத்தின் இரு அகலச் சுவர்களிலும் மேல்பாகம் முக்கோண வடிவமாக மேற்கூரை தகுந்த வாட்டமுள்ளதாயும் இருக்கவேண்டும். வைக்கோல் தென்னங்கீற்று, பனையோலை முதலியவை தீப்பிடிக்கக் கூடியவை யாதலால் நீக்கத்தக்கவை. ஓடு போடுவது நலம். உட்புறம் பலகை யடித்து மேலே கள்ளிக்கோட்டை ஓடு போடுவதும் சிலாக்கியமானதே. கட்டடத்தின் சுவர்களை அதிக உயரமாக எடுத்தால் காற்றோட்டத்துக்கு அதிக உதவியாய் இருக்கும்.

இக் கட்டடத்தின் இருபுறத்திலும் தாழ்வாரம் மிகவும் அவசியம். சாஸ்திரோக்தமாகக் கட்டப்பட்டிருக்கும் சில சர்க்கார் கட்டடங்களிலும் தாழ்வாரமின்றி கட்டி முடிக்கிறார்கள்; பிறகு ஜன்னல்களுக்கு மாத்திரம் மறைவு ஏற்படுத்துகிறார்கள். இந்த மறைவுகள் வெயில் மழைகளைத் தடுக்கிறதில் அவ்வளவு விசேஷமில்லை. தாழ்வாரங்களோ வெயிலின் கொடுமையைத் தடுப்பதோடு மழைச் சாரலையும் அறைக்குள் வாராமல் தடுக்கின்றன. தாழ்வாரத்தின் பரப்பும் ஒவ்வொரு பிள்ளைக்கும் 8 சதுர அடி வேண்டுமென்ற கணக்குக்குச் சேரும். 30 அடி நீளமுள்ள

அறைக்கு இரு பக்கத்திலும் 5 அடி அகலத்தில் தாழ்வாரம் ஏற்படுத்துவோமானால் 300 சதுர அடி இடம் கிடைக்கிறது. இது சுமார் 30 பிள்ளைகளுக்கு இடம் கொடுக்கும். அறையினுள்ளே வாசிக்கும் 30 பிள்ளைகளைத் தவிர தாழ்வார இடத்தில் இன்னும் 30 பிள்ளைகள் அதிகமாகிறவரையில் இப் பாடசாலை இடந்தரும்.

இங்கு விவரிக்கப்போகும் வெளிச்சம், காற்றோட்டம் என்பதை யனுசரித்து தென்னிந்திய பாடசாலைகள் எல்லாம் தெற்கு முகமாக கட்டப்படுவதே நலம். 'வடக்குப் பார்த்த மச்சுவீட்டை விடத் தெற்குப் பார்த்தக் குச்சு வீடு சிறந்தது' என்ற பழமொழி தமிழ் நாடுகளில் வழங்கி வருகிறது. ஏனெனில் தெற்குப் பார்த்த வீடுகளுக்கு எப்போதும் காற்றும் வெளிச்சமும் சுமாராக இருக்கும். டிசம்பர் ஜனவரி மாதங்களில் வடக்கிலிருந்து அடிக்கும் காற்றையும் தடுத்துக்கொள்ளக் கூடும். கிழக்குப் பார்த்த வீடுகளில் காலை வெயில் நேராக அடிக்கும் அதன் குணத்தைப்பற்றி நாம் இங்கு விவரிப்பது அவசியமில்லை. மேற்குப் பார்த்த வீடுகளோவென்றால், மணி மூன்றிலிருந்து அஸ்தமனம் வரையில் வெயிலின் கொடுமையால் உள்ளே தங்கியிருக்க ஏற்றவையாகா. தெற்குப் பார்த்த வீடுகளின் தாழ்வாரங்களில் காலை மாலை நேரங்களில் வேலை செய்வது மிகவும் சந்தோஷம் கொடுக்கும்.

3. **வெளிச்சம்** — வாசிப்பதற்கும், எழுதுவதற்கும் பாடசாலையில் போதுமான வெளிச்சம் வேண்டுமென்று சொல்லவும் வேண்டுமோ? இதற்கென்றே வகுப்பறைக்கு அதிகமான ஜன்னல்கள் வைக்கவேண்டு மென்று முன்னே சொன்னோம். இத்துடன் மேற்கூரையில் சில இடங்களில் கண்ணாடி வைத்தால் அறைக்குள்ளே வேண்டிய வெளிச்சம் இருக்கும். சிற்சில சமயங்களில் தாழ்வாரங்களில் குழந்தைகளைக் கற்கும்படி செய்தால், அவர்களை அதிக வெளிச்சத்தில் இருக்கும்படி செய்கிறோம். அப்போது எழுதுவது, ஏதாவது தொழில்கள் செய்வது மட்டும் வைத்துக்கொள்ள வேண்டும். வெளிச்சம் குறைவான இடத்தில் பிள்ளைகளை வாசிக்கச் செய்தால் அவர்கள் கண் வலி யெடுக்கும். அதிக வெளிச்சமும் வெளிச்சக் குறைவைப் போலவே கண்ணுக்கு கெடுதி யுண்டாக்கும். அதிக வெளிச்சத்தைப் பார்த்தால் கண் கூசும். ஆதலால் வெளிச்சம் தகுந்த அளவு பரவி யிருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். பிள்ளைகளை வகுப்பில் உட்கார வைக்-



கும்போதும் வெளிச்சம் இடதுகைப்புறத்திலிருந்து வரும்படி செய்ய வேண்டும். வலதுபக்கத்திலிருந்து வெளிச்சம் வந்தால் செய்யும் வேலையை கை நிழலே மறைக்கும். இராப் பள்ளிக்கூடங்களில் விளக்கு வெளிச்சம் மேலே தொங்க விட்ட விளக்கிலிருந்து வாசிக்கும் அல்லது எழுதும் பலகையின்மீது விழவேண்டும். கண்ணுக்கு நேரே வெளிச்சம் இருந்தால் கண்ணுக்குக் கூச்சம் உண்டாகும். விளக்கை நேரே வைத்துப் படிக்க நேர்ந்தால் வெளிச்சம் மட்டும் புஸ்தகத்தின்மீது விழும்படியும் கண்ணுக்கு நேரே வெளிச்சம் விழாமலும் மறைவு உண்டாக்கவேண்டும்.

திருடர் பயத்திற்காக சில இடங்களில் அறைகளுக்கு ஜன்னல் இல்லாமலே வீடு கட்டுவது வழக்கம். நமது கிராமாந்தர பாடசாலைகளில் அவ்வித பயத்திற்கு ஏது இல்லை. ஆதலால் வேண்டிய அளவு ஜன்னல்கள் பயமின்றி வைக்கலாம். ஜன்னல்கள் இருந்தும் சில உபாத்தியாயர்கள் அவைகளைத் திறந்து வையாமலே இருந்துவிடுகிறார்கள். ஏதோ அஜாக்கிரதையால் அப்படிச் செய்கிறார்களே தவிர வேண்டுமென்று செய்வதல்ல. முதல் முதல் வகுப்பிற்குள் வந்ததும் ஜன்னல்கள் சரியாக திறக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்ப்பது ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் முதற் கடமையாகும்.

வகுப்பு அறையின் சுவர்களில் வெள்ளை யடித்திருந்தால் உள்ளே விழும் வெளிச்சம் அதிக பிரகாசமாய் பரவி பிரதிபலித்து கண்ணுக்குக் கெடுதி செய்யும். சற்று மங்கலான வெள்ளை நிறமே வகுப்பறைச் சுவர்களுக்கு பூசுவது உத்தமம். இதைப் பற்றி வெள்ளை யடித்தல் என்ற தலைப்பின் கீழ் விவரிப்போம்.

P. C. KRISHNA AYYAR, B. A., L. T.
*I Assistant, Govt. Trg. School,*
*Dindigul.*

# STORY TELLING

## கதை சொல்லல்

### ஏழு பொற்கொல்லர்கள்

(முன்தொடர்ச்சி பக்கம் - 173.)

8. பட்டமகிஷிகள் எழுவரும் தங்கட்கு நேர்ந்த விதியை நினைந்து வருந்திக்கொண்டிருந்தார்கள். உண்பதற்கு உணவு இல்லாமையால் அவர்களில் ஒருவரை ஒருவர் பசியின் கொடுமையால் சில நாட்களுக்குள் கொன்று தின்றிருப்பார்கள். அவ்வாறு நடைபெறாதிருக்கும்படி சம்பவம் ஒன்று நடைபெற்றது. சிறையிலிடக் கட்டளையிட்டபோது பட்டமகிஷிகள் எல்லோரும் கர்ப்பிணிகளாயிருந்தார்கள். சிறையிலடைப்பட்ட சில நாட்களுக்குள் எழுவரில் மூத்தவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பசியின் கொடுமையால் அக் குழந்தையைக் கொன்று எழுவரும் சம பாகமாய்ப் பகிர்ந்து கொண்டார்கள். சிலநாட் கழித்து இரண்டாவது பட்டமகிஷிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதையும் அவ்வாறே கொலை செய்துவிட்டார்கள். ஆறு பட்டமகிஷிகள் பெற்ற குழந்தைகள் எல்லாம் இவ்வாறே கொலை செய்யப்பட்டன. ஏழாவது பட்டமகிஷிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஏனைய அறுவரும் வழக்கம்போல் அக் குழந்தையைக் கொலை செய்து புசிக்கவேண்டும் என்றார்கள். குழந்தையின் தாய் அதற்குச் சம்மதிக்காமல், "தமக்கைமார்களே உங்கட்கு வேண்டியது ஆறு பங்கு மாம்சமல்லவா. நீங்கள் எனக்குக் கொடுத்த ஆறு துண்டு மாம்சங்கள் இதோ இருக்கின்றன. அதை உண்டு உங்கள் பசியை அகற்றிக்கொள்ளுங்கள். என் குழந்தையைக் கொல்ல யான் உடன்படேன்" என்று சொல்லி தான் உண்ணாது சேமித்து வைத்திருந்த ஆறு மாமிசத் துண்டுகளையும் கொடுத்தாள். ஏழைக் கிரங்கும் கடவுளுக்கு நிரபராதியாய் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிற இவர்கள்மீது இரக்கம் உண்டாயிற்று. உடனே அவர் ஏழாவது பட்டமகிஷியின் தந்தையினது வடிவந் தாங்கி அவர்கள் அடைபட்டிருக்கும் சிறைக்களத்துட் பிரவேசித்தனர். தந்தையைக் கண்ட குமாரத்திக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. தந்தை வேடம் பூண்ட இறை-



வன் "என் அருமைப் புதல்வியே! உனக்கு நேர்ந்த இடுக்கண்களை எல்லாம் யான் முன்னமே கேள்வியுற்றேன் ஆயினும் உன்னை வந்து நேரில் பார்ப்பதற்கு சமயம் வாய்க்கவில்லை. நீ யாதொன்றிற்கும் கவலைப்படவேண்டாம். இன்று முதல் நீங்கள் எல்லோரும் புசிப்பதற்கு வேண்டிய உணவு பிறர் அறியாவண்ணம் இங்கே வந்து சேரும்படி செய்கிறேன் உன்னுடைய குழந்தையை கவனமாய்ப் பார்த்துக்கொள் அவனால் உனக்கு நன்மை உண்டாகும்" என்று சொல்லி மறைந்து விட்டனர். அன்று முதல் எழுவர்கட்கும், குழந்தைக்கும் வேண்டிய உணவு சிறைக்களத்திற்கு தினந்தோறும் தவறாமல் வந்துகொண்டேயிருந்தது. பட்டமகிஷிகளும் அவ்வுணவை உண்டு காலங் கழித்து வந்தனர்.

9. மேற் சொல்லிய வண்ணம் ஒரு வருஷம் நடைபெற்று வந்தது. எல்லாம் வல்ல இறைவனால் கொடுக்கப்பட்ட உணவின் மகத்துவத்தினால் அதை உண்டு வளர்ந்த குழந்தைக்கு ஒரு வருடம் நிரம்பிய உடன் இருபது வயதுள்ள வாலிபனுக்குள்ள வளர்ச்சியும், தோற்றமும், ஆண்மையும் அக்குழந்தையினிடம் காணப்பட்டன. தாய்மார்களும் சிறுவனின் பொலிவைக் கண்டு வியப்பெய்தினர். சிறுவன் தன் அன்னையை நோக்கி, "அன்னாய், எனக்குத் தந்தை, சிற்றப்பன், அம்மான், பாட்டன் முதலிய யாவரும் கிடையாதா? இருப்பின் அவர்கள் எங்கே?" என்று வினவினான். தாய் தனக்கு நேர்ந்திருக்கும் கஷ்ட தசையை நினைந்து வருந்தி, "என் அருமந்த புதல்வனே. உனக்குத் தந்தை இல்லை. என்னைப் பெற்ற பாட்டனார் உண்டு. அவர் தச்சு வேலை செய்து வயிறு வளர்ப்பார். அவர் இந் நகரத்தில் ஓர்புறத்தில் வாசஞ் செய்துகொண்டு இருக்கிறார்" என்று விடை யளித்தனள். இதைக் கேட்ட சிறுவன், "அன்னையே, யான் வெளியே செல்ல உத்தரவு கொடு. என் பாட்டனாரைத் தேடிப் பிடித்து இச் சிறைச்சாலையினின்று உங்களை எல்லாம் வெளிப்படுத்த முயலவேண்டும்" என்றான். பிள்ளையைத் தனியே அனுப்பத் தாய்க்குச் சிறிதும் சம்மதமில்லை. தனியே வெளியே போகக் கூடாதென்று தன்னாலியன்றவரையில் தன் குமாரனுக்குப் போதித்தாள். சிறுவன் ஒரே பிடிவாதமாய்ப் போகவேண்டும் என்றான். கடைசியாகத் தன் புத்திரனுக்கு அனுமதி கொடுத்-

தாள். சிறுவனும் அன்னையை வணங்கி விடை பெற்றுத் தன் பாட்டனார் இருக்கும் இடத்தைத் தேடத் தலைப்பட்டான்.

10. சிறுவன் தன் தாய் சொல்லிய மார்க்கத்தின்படியே சென்று தன் பாட்டனார் வீட்டையடைந்து தனக்கும் தன் தாயாருக்கும் நேர்ந்திருக்கும் கஷ்டத்தை அவருக்குப் பகர்ந்தான். அவர் தன் பெண்ணிற்கு நேர்ந்திருக்கும் கஷ்ட தசைக்காக மிகவும் வருந்தினார். அவளைச் சிறையினின்றும் நீக்க தன்னாலாக வேண்டியது யாதாயினும் செய்யத் தடையில்லை என்று தன் பௌத்திரனிடம் சொன்னார். இதைக் கேட்ட சிறுவன், "பாட்டனாரே, வேண்டியபோது ஆகாயத்தில் பறக்கவும் ஏனைய காலங்களில் பூமியில் வேகமாய் ஓடவும் வல்லதாகிய ஆற்றல் அமைந்த மாயக் குதிரை ஒன்று எனக்குத் தாங்கள் செய்து கொடுப்பின் அதனால் எண்ணிறந்த நன்மைகள் எனக்கு எய்தும்" என்றனன். பாட்டனாரும் அத்தகைய மாயக் குதிரை செய்யத் தனக்கு ஆற்றல் உண்டென்றும் ஏழு நாட்களுக்குள் அதை சித்தப்படுத்திக் தர இயலும் என்றும் பகர்ந்தனர். பாட்டனார் பகர்ந்ததைக் கேட்ட பேரனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. பாட்டனார் ஏழாம் நாள் காலையில் மாயக் குதிரையைப் பேரனுக்குக் கொடுத்தார். பேரனும் குதிரையைப் பெற்று களிகூர்ந்து அதன் மீது ஏறிக்கொண்டு அவ்வூரை யரசாளும் அரசன் அரண்மனையை அடைந்தான். அடைந்த உடன் மாயக் குதிரையினின்றும் இழிந்து அரச சபையை அடைந்து அரசனைக் கண்டு வணங்கித் தன்னை வேலையில் அமர்த்துமாறு இரந்தனன். சிறுவனின் அரோக திடகாத்திரத்தையும் பொலிவையும், வல்லமையையும் கண்டவுடன் அரசனுக்கு அவனிடத்தில் பிரியம் உண்டாயிற்று. உடனே அவனைத் தன் சேனைகட்கெல்லாம் தலைவனாக நியமித்து தன் புதிய மனைவியாகிய அரக்கி வசிக்கும் மாளிகைக்குக் காவலாக இருக்கும்படி கட்டளை யிட்டனன். சிறுவன் அக்கட்டளையை வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டு அரக்கி வசிக்கும் அரண்மனையை யடைந்தான். நகர மாந்தர்களும் அரண்மனையில் முன்னமே காவற்றொழில் பூண்டிருப்பவர்களும் சிறுவனையும் அவன் ஏறி வரும் மாயக் குதிரையும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். சிறுவனும் அரண்மனையை அடிக்கடி சுற்றி வெகு பராக்கிரமத்துடன் தனக்கிட்ட வேலையைச் செய்துவந்தான். சிறுவன் வரவினால் உண்டாகிய குழப்பத்தினால் அரக்கியும் புதிதாய் வந்தவன் யாவன் என்று அரண்மனையினின்றும் பார்த்தனள். அவள் சிறுவனைக் கண்டதும் அவன் புரவலனின் புத்திரன் என்றும் சிறைச்சாலையில் பிறந்தவன் என்றும் அவன் முகச் சாயலினாலேயே அறிந்துகொண்டாள். இவனை எவ்விதத்திலாகிலும் கொல்லவேண்டும் என்னும் தீர்மானம் அவட்கு உடனே உண்டாயிற்று.



(இன்னும் வரும்)

ஒரு தமிழ்ப் புலவர்.

# HOW TO PROHIBIT COPYING IN THE CLASS

## வகுப்பில் பிள்ளைகள் ஒருவரைப் பார்த்து ஒருவர் எழுதுவதைத் தடுக்கும் முறை

சாதாரணமாகப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் முக்கியமாய்க் கணக்கிற்றான் ஒருவரைப் பார்த்து ஒருவர் போடுவது வழக்கமாய்ப் போய்விட்டது என்பது சிற்சில உபாத்திமார்களின் கொள்கை. கீழ்வகுப்புகளில் சொல்வதெழுதல் கதையெழுதல், கேள்விகளுக்கு விடையெழுதல் முதலியவைகளில் ஒருவரைப் பார்த்து ஒருவர் எழுதுவதும் இப்பொழுது சகஜமாய்ப் போய் விட்டது. இதற்குக் காரணம் பலவுண்டு. முற்காலங்களில் கீழ் வகுப்புப் பிள்ளைகளைச் சொல்வதெழுதச் சொல்லும்போதும் மற்றச் சமயங்களிலும் ஒருவர் முகம் ஒருவர் பார்க்கும்படி நிற்க வைத்து எழுதச்சொல்வார்கள். அப்படியெழுதும்போது அவர்களுக்கு காப்பியடிப்பதற்கு ஹேதுவின்றி யிருந்தது. அப்படியிருந்தும் ஒரு பிள்ளையேனும் காப்பியடியாம லிருந்தாரோ என்று கேட்பீர்களல்லவா? ஆம், சிலர் காப்பி அடித்ததுண்டு. அதற்குக் காரண மென்னவென்றால் அவர்களுக்கு வகுப்பில் கவனக் குறை ஏற்படுவதினாலும் அதனால் புத்தி யதிகரிக்காமற் போனதினாலுமேயாம். உபாத்திமார்கள் அப்பொழுது சிறிது பிள்ளையைத் தட்டிக்கொடுத்து கவனிக்கச் சொல்லியிருப்பாரேயாகில் அப்படிச் செய்ய யாதொரு வகையுமிருந்திராது. இப்பொழுதென்றாலோ பிள்ளைகளுக்கு எழுதத் தெரிந்திருந்தபோதிலும் பக்கத்திலிருக்-

கிறவன் எப்படி யெழுதுகிறானென்பதைப் பார்க்கவேண்டுமென்கிற ஒரு கெட்ட அவாவினாற்றானே பார்க்கிறான். இப்படிப் பார்ப்பதற்குக் காரணமென்னவென்றால், இவர்கள் நின்றுகொண்டு எழுதுகிறதில்லை; அதுவுமன்றி சாய்வு பெஞ்சியினுட்கார்ந்துகொண்டு சார்வுமேஜையின்பேரில் வைத்துக்கொண்டு வெகு உல்லாசமாய் எழுதுகிறார்கள். இப்படி யெழுதுவதினால், ஒருவனைப்பார்த்து ஒருவன் எழுதமுடியாம லிருக்கவில்லை. இப்பொழுது சொல்வது சாய்வு பெஞ்சியும் சார்வு மேஜையும் வேண்டா மென்பதல்ல — அவைகளை யுபயோகிப்பதனால் எழுத்து நன்றாய்ப் படியுமென்னு முத்தேசத்தோடு போடப்பட்டிருக்கிறபடியால் நின்றுகொண்டு எழுதச் சொல்லாமலே வேறுவழி யாதொன்றினால் அவர்களைத் தடுப்பது நலமெனக் கருதப்படுகிறது. அவ்வழிகள் உபாத்தியாயர்கள் கையில்தா னிருக்கின்றன. சர்வ சாதாரணமாய்ப் பிள்ளைகளில் மந்தர புத்தியுடையவன் நுட்ப புத்தியுடையவன் என்று உண்டு என நாமாகவே ஏற்படுத்திக் கொள்வது. சிறுவயதில் பிள்ளைகளின் புத்தியெல்லாம் ஒரே மாதிரியாய்த்தா னிருக்கிறது. ஆனால் அப்புத்தி எவ்வகையில் பிரவிர்த்திக்க ஆரம்பிக்கிறதோ வம்மாதிரியே மாறிவிடுகின்றது, ஆகையால் அதைப்பற்றி உபாத்தியாயர் சாலவும் கவனிக்கற்பாலது. வகுப்பில் உபாத்தியாயர் ஒரு புதிய மாதிரிக் கணக்கு ஒன்று சொல்லிக்கொடுத்த பிற்பாடு அதே மாதிரியில் வேறொரு கணக்குக் கொடுத்துப் பிள்ளைகளைப் போடச்சொல்லுகிறார்கள். உபாத்தியாயர் சொல்லிக்கொடுக்கும்போது கவனித்த பிள்ளைகள் அந்தக் கணக்கைப் போட்டுவிடுகின்றார்கள். அதைத் தாமே கவனிக்காமலிருந்த பிள்ளைகள், பக்கத்திலிருக்கும் பிள்ளையைப் பார்த்துப் போட்டுவிடுகின்றார்கள். இது கவனக்குறைவாலன்றி வேறொன்றாலு மேற்படுவதன்று. ஆகையால் உபாத்தியாயர்கள் தெரியாதவர்கள் யாரென்றும் சந்தேக மிருப்பவர்கள் யாரென்றும் கேட்டுத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு ஒருதரத்திற் கிரண்டுதரம் சொல்லிக்கொடுக்கும் பக்ஷத்தில் அவர்கள் மனத்தில் நன்றாய் ஊன்றி விடுகிறது. மறுபடியும் அம்மாதிரியான ஒரு கணக்கு கொடுக்க நேரிட்டால், பிள்ளைகள் தங்கள் உதவியாலேயே போடாமலிருக்க மாட்டார்கள்; சரித்திரம் முதலிய பாடங்களில் கேள்விகளுக்கு விடை யெழுதும்போது காப்பியடிப்பது, அவர்கள் வகுப்பில் கவனியாம லிருப்பதினாலும் உபாத்தியாயர் எழுதிக்கொள்ளச்



சொல்வதை எழுதாது அதனால் படிப்பதற்கு வீட்டில் ஒன்றுமில்லாததினாலுமேயாம். ஆகையால் உபாத்தியாயர்கள், தாங்கள் சொல்வதைப் பிள்ளைகள் சரிவர எழுதுகிறார்களா வென்றும் அதை வீட்டில் நன்றாகப் படிக்கிறார்களா வென்றும் பார்த்துக்கொண்டு வரவேண்டியது. மேலும் காப்பியடிப்பதைப் பற்றியும் அதனாலுண்டாகும் தீமைகளைப்பற்றியும் வகுப்பில் சிற்சில சமயங்களில் உபாத்தியாயர்கள் சிறிதுநேரம் பிரசங்கித்தலும் வேண்டும். இப்பொழுது காப்பியடிக்க நேரிடுவது, பரீக்ஷையிலுங்கூட அடிக்க நேரிடும். ஆனாலோ அப்பொழுது சரியான சாதனங்கள் ஏற்படா. ஆகையினால் பிள்ளைகள் தங்களைத் தாங்களே கெடுத்துக்கொள்ளுகிறார்கள். பெரிய பெரிய பரீக்ஷைகளில் ஒருவனைப் பார்த்து ஒருவன் எழுதமுடியாது என்று ஸ்பஷ்டமாகத் தெரியவே பிள்ளைகள் பரிக்ஷைக்கு வரப்போகும் முக்கியமான கேள்விகளுக்குப் பதில் வீட்டில் காகிதங்களில் எழுதிக்கொண்டு எழுதாத காகிதங்களுடன் சேர்த்து வைத்துக்கொண்டு பள்ளிக்குச் சென்று அங்கே பரிக்ஷை நேரத்திற்றானே கேள்விக்காகிதத்தில் தாங்கள் எழுதிவந்தவைகளில் ஏதாவது வந்திருக்கிறதாவென்று பார்த்து, அதை யெடுத்துக்கொண்டு வாராததை வரும்பொழுது எடுத்துக்கொண்டு வந்துவிடுவார்கள். இதற்கென்றே சில பாடசாலைகளில் தாங்களே விடையெழுதக் காகிதம் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுத்தும் அவர்கள் கொடுக்கும் மாதிரியான காகிதத்தில் வீட்டில் முக்கியமாய் வரப்போகும் கேள்விகளுக்குப் பதில் எழுதிக் கொண்டு தாங்கள் பரீக்ஷையில் எழுதுவதுடன் கொண்டுவந்ததைச் சேர்த்து வைத்துவிடுகிறார்கள். பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவரும்பொழுது பார்த்து விடமாட்டார்களாவென்று கேட்பீர்கள். யாராலும் பார்க்கமுடியாதபடி சட்டைக்குள் மார்பின்பேரில் வைத்து மறைத்து வைத்துக்கொள்ளுகிறார்கள். அப்படிச் செய்தும் சிக்கிக்கொண்டாலோ ஆந்தைபோலும் விழிக்கின்றார்கள். ஆகையால் ஆரம்பத்திலேயே தக்க முயற்சி யெடுத்துக்கொண்டு உபாத்தியாயர்கள் பிள்ளைகளைக் காப்பியடிப்பதினின்றும் தப்பித்து விடுவார்களே யாயின் பிள்ளைகளும் நல்லொழுக்கம் கடைப்பிடித்து புத்திசாலியாவார்களென்பதில் சிறிதும் ஐயமில்லை.

R. V. SRIKANTAN,
*Teacher, S. S. V. Sala, Kodumudi.*

# DEVOTION TO GURU

## குரு பக்தி

குரு பக்தி என்பது—குரு + பக்தி என இருபதங்கள் அடங்கியுள்ளன. அது குருவுக்குச் செலுத்தும் பக்தி என்று பொருள் படும். குரு என்பது மானிடர்க்கு வீடுவிருப்பம் வந்தபோதும் தத்துவம் தெரியாது தயங்கும் போதும் அறிவு கொளுத்தி யாதரிக்கும் ஆளனுக்குப் பெயரா யிருந்து இப்பொழுது போதகாசிரியரைக் குறிக்கிறது. பக்தி என்பது அன்பு எனப் பொருள்படினும் கடவுளிடத்துக் காட்டும் அன்பைக் குறிக்கும். அது இங்கு குருவிடத்துக் காட்டும் அன்பிற்கு ஆயிற்று. இவரிடம் அன்பு காட்டுவது இந்தியராகிய திராவிட ஆரியர்களுக்கு பழமையான வழக்கமே.

இதற்கு திருஷ்டாந்தம் திராவிட மொழியில் குருவுக்கு அநேக பெயர்கள் வழங்கி வந்திருப்பதே சான்று. அவையாவன :— வள்ளுவன், பண்டாரம், ஓதுவார், இறைவன்.

ஒருவரிட முள்ள அரிய பொருளுக்கு அநேக பெயர் வழங்கும் உதாரணமாக: அருமையாக வளர்த்துவரும் குழந்தைக்கு 'ராஜா, துரை, கண்மணி' முதலிய பெயர்கள் வழங்குவது தெரிந்த விஷயம். திராவிடர்களும் அதே மாதிரி குருவிடத்துள்ள அன்பால் அநேக பெயர்கள் வழங்கினார்கள். அப் பெயர்களும் அவர்களிடம் உள்ள குணங்களைக் காட்டி நிற்கின்றன.

வள்ளுவன் — வளப்பமான அறிவை யுடையவன் என்று பொருள்படும்; அதாவது பல நூல்களிலும் பயின்று சம்பாதித்த மிகுந்த அறிவுடையவன் என்றும், வண்மையடியாகப் பிறந்ததாகக் கொள்ளின் யாவர்க்கும் அவர்கள் தன்மைக் கேற்றபடி அறிவைக் கொடுப்பவன் — அதாவது அறிவை கல்வி, கேள்வி, செய்கை யிவற்றால் விருத்தியாக்குவிப்பவன் என்றும் பொருள் படும். இது முக்கியமாக குரு (வீட்டையச் செய்யும் குலகுரு)வுக்கு வழங்கி வந்திருக்கிறது. இப்பொழுதும் பறையரிடத்தில் அதே பொருளில் வழங்கி வருகிறது. அதாவது 'வள்ளுவன்' என்னும் சாதியான் அவர்களின் வைதீக சடங்குகளை நடத்தி வருகிறான்.



பண்டாரம் — என்பது பொக்கிஷம், களஞ்சியம் எனப் பொருள்படும். இதிகாச புராணங்களில் உள்ள சாராம்ச பொக்கிஷமுடையவன் என்று பொருள்படும். இவர்கள் உலகியல் அறிவை இல்லறத்திருந்து அடைந்து சன்னியாசம் கொள்ளுவார்கள். இது நோக்கியே மடாதிபதிகளுக்குப் 'பண்டாரச் சந்நிதிகள்' என்று பெயர் வழங்கி வருகிறது.

ஓதுவார் — ஆகமங்களை பழுதற ஓதியும் ஓது வித்தும் வருபவர்கள். இவர்கள் பண்டாரங்களிடம் பயின்று சாதாரண மனிதர்க்கும் பயன்படத் தேவாலயங்களி லிருந்துகொண்டு புத்தி புகட்டி வந்தார்கள். அவ்வழக்கம் இன்றும் பண்ணுடன் தேவாரம் ஓதுவதுடன் நின்று விடுகிறது.

இறைவன் — இரட்சிக்கிறவன் எனப் பொருள்படும். அதாவது அறிவை வளரும்படி கல்வி கேள்விகளால் காப்பாற்றுகிறவன். மேலும் அண்ணாவி என்றும் ஒரு பெயர் வழங்கிவருகிறது. அதற்கு அறிவில் சிறந்தவன் என்பது பொருள்.

ஆகவே இவரிடம் பக்தி செய்வதை நமக்கு உபதேசிக்க வேண்டிய அவசியமில்லை. ஆயின் குரு எப்படியிருந்தால் பக்தியைப் பெறுவர் என்பதை மேல் எடுத்துக் காட்டப்பட்ட பெயர்களினால் ஒருவாறு அறியலாம். அதாவது பல நூல்களிலும் பயின்று மிகுந்த அறிவு பெற்று உலகியல் உணர்வு முடையராகி மாணாக்கன் தன்மைக் கேற்ப மறைக்காமல் விருப்போடு வரையாது கொடுக்கும் தன்மையாரா யிருக்கவேண்டும் பொருள் வருவாய் குறைந்த விடத்தும் கல்வி யளிப்பதிற் றும் குறையலாகாது. அப்படிப்பட்ட குருக்கள் இல்லாததாலும் முன்போல் ஒவ்வொரு குடும்பத்தாரும் தங்கள் வைதீக கருமங்கள் செய்விக்கக் குருக்களை தனித்தனியே விரும்பாததாலும் உபாத்தியாயர்கள் பாலர்களுக்குப் போதிப்பதில் ஊக்கமுள்ளவராக இருப்பதால் அவர்களே இப்பொழுது குருக்கள் எனப்படுவர். ஆயின் அவர்களிடம் படிக்கும் பாலர்கள் பக்தி என்பதை அறியும் சக்தியற்றிருப்பதாலும், அவர்களிடமும் பக்தியை உண்டாக்க வேண்டியது அவ்வாசிரியர்கள் கடமையா யிருப்பதாலும் தற்காலத்திற் கேற்பக் குருவினது பக்தி எனக்கொண்டு ஆராய்வாம்.

இனி குருவிடத்துப் பக்தி வேண்டியது அவசியமா? எத்தகைய பக்தி அவரிட மிருக்கவேண்டும். அதன் பிரிவு எத்தனை?

அதன் பலன் என்ன? அது செய்யப்படும் விதம் என்ன? என்பனவற்றை ஆராய வேண்டும்.

முதலாவது குருவிடத்து பக்தி யிருக்க வேண்டும் என்பதைவிளக்குவாம். பக்தி என்பது அன்பின் முதிர்ச்சி. அது கடவுளிடத்துக் காட்டப்படும் பொழுது அப் பெயர் பெறும் முற் கூறியது எதுபற்றி எனின் கடவுளிடத் தன்றி மற்றப் பொருள்களிடத்தும் அன்பு முதிர்ச்சி யடையினும் அதுவும் கடவுள் இடத் தன்பே. ஆயின் அவ்வன்பு செலுத்தும் பொருளை தன் உபயோகத்தி னிமித்தம் அன்பு செலுத்தாமல் அப் பொருளும் கடவுளால் உண்டாக்கப்பட்டு சில காரியங்களைச் செய்யவந்திருக்கிறது. அப்படி வந்த அது, நமக்கு உதவுவதுபோல் அதற்கும் மற்றப் பொருள்களுக்கும் உதவவேண்டியது. அப்படிச் செலுத்தி வந்தால் கடவுளும் திருப்தியடைவர் என்பதை 'படமாடு கோவில் வழிபாட்டினால் அவ் வீசனுக்கு மாத்திரம் விருப்பும், நடமாடு கோவில் வழிபாட்டினால் அடியாரும் ஈசனும் விருப்பும் அடைவார்கள்' என்று நம் முன்னோரால் பணிக்கப்பட் டிருக்கிறது. ஆகவே மற்ற உயிர்களுக்கு உபதேசிக்க வரும் இவர்களிடம் பக்தி யவசியம் இருக்கவேண்டும்.

இனி எத்தகைய பக்தி யவரிட மிருக்கவேண்டும் என்பதை யாராய்வாம். அவரிடத்துள்ள அன்பால் அவ் வூரார் மதிப்பும் மாணவரது பக்தியும் ஒருங்கு அடைய எதுவானதா யிருக்கவேண்டும். அதாவது தான் அநுபவிக்கும் ஒவ்வொரு இன்பமும் பாலர்களை யனுபவிக்கச் செய்யவேண்டும். அன்பு காட்டி ஆட்கொள்ளும் அருள்வடிவம் என்று அவ்வூரார் சொல்லும் வண்ண மிருக்கவேண்டும். அதற்கு அவர்கள் **கோபத்தை விடவேண்டும்.** 'ஆறுவது சினம்' என்ற அமுதவாக்கை அநுதினமும் காலையில் கருத்தில் தரிக்கவேண்டும். பிறர் செய்யும் காரியங்களில் தப்பு வந்தவுடன் அல்லது கண்டவுடன் 'தப்பிதம் செய்வது மனித யியற்கை என எண்ணி தந் நலம் கருதாது அதாவது புகழ், அதிகாரம், அகங்காரம் கொள்ளாமல் இனிய சொல்கூறி திருப்ப வேண்டும்.

சந்தோஷமா யிருக்க முயலவேண்டும் — இதற்குத் தானங்களில் விசேஷமான வித்தியாதானம் செய்கிறோம். அதற்குத் தகுந்தபடி உபயோகம் இல்லாவிட்டாலும் 'தனிமுதல் தகுதி



யுடையாரைத் தவிக்க விடான்' என்று எண்ணி தகுதியுடையவராக முயலவேண்டும்.

ஒழுங்கேற்படுத்தி காரியம் நடத்தவேண்டும். தினந்தோறும் காலை, மாலை தெய்வம் தொழவேண்டும் இவைகளை சிறிது சிறிதாக அப்பியாசம் செய்து பழக்கத்தில் கொண்டுவர வேண்டும்.

அவ்விதப் பக்தி தேசபக்தி, பாஷை பக்தி, பெரியோர் பக்தி, பாலர் பக்தி, தெய்வ பக்தி, எனப் பிரிவுபடும். பேர் மாத்திரமாக இவை பிரித்து எண்ணப்பட்டாலும் ஒன்றிற்கொன்று சம்பந்தமும் நெருக்கு முள்ளன. ஒவ்வொரு உபாத்தியாயரும் தன்னுடைய சொந்தவீட்டை அதாவது மனைவி மக்களை உண்மையாய் நேசித்தால் அது மனைவியின் பெற்றோர் அவர்களின் உறவினர் முதலியவரையும் நேசிக்கச் செய்து அன்பாகி தொழிலாளிகள் தங்களுக்கு உபயோகமான சாமான்கள் செய்து தருவதால் அவர்களிடம் இரக்க முண்டாக்கி ஒவ்வொருவரும் சுகமே யிருக்கத் தக்க வழியில் முயற்சிக்கச் செய்யும். இவ்வித பக்தி யுண்டானால் தன்னிடத்துப் படிக்கும் பாலர்கள் என்றும் பாலர்களாயிராமல் நாட்டின் நன்மக்களாவார்கள். ஆகையால் அவர்க்குச் சொல்லிக் கொடுப்பதால் அளவிட முடியாத தேச காரியம் செய்கிறோம். அதில் வஞ்சனை கூடாது என்று எண்ணி ஊக்கத்தோடு உழைப்பான். அப்படி உழையாதவர்கள் உண்மையில் தன்னையும் தன் மனைவியையும் நேசிக்கவில்லை. ஆகவே அவர்கள் உண்டு, உறங்கி, வாழும் மிருகமே யாவர். பாஷையில் பக்தியாவது நமது பாஷையில் உள்ள அரும் பெரும் விஷயங்களால் நம் அறிவு விருத்தியாவதுடன் நல்வழி நடத்த ஓர் வழிகாட்டியா யிருப்பதால் அதனிடத்துச் செலுத்தும் அன்பு இவ்வன்பு இல்லாத காலத்து அவன் ஒரு புஸ்தகத்தையும் தொடான், ஆகவே நூதன அறிவு ஏற்படாது அதனால் தன் தொழிலில் சித்தியடையான். அதன் பயனாக ஊதியம் குறையும்; கடைசியில் அவனும் தொழிலை வெறுத்துவேறு வழியின்றி நடத்திவருவான். அப்பொழுது 'தன் நெஞ்சறிந்து பொய்த்தவனாகிறான்' அதனால் சமாதான மில்லாமல் கஷ்டமுறுகிறான்.

மற்றவைகளைப் பின்னால் ஆராய்வாம். (தொடரும்.)

P. R. PARAMASIVA MUDALIAR,
*Student, G. T. S., Dindigul.*

# ZOOLOGY

## பிராணி சாஸ்திரம்

### தவளை — Frog

(முன் தொடர்ச்சி பக்கம் - 27)

### மேற்புறத் தோற்றம்

தலை, மூக்கு, கண், காது, வாய் —

முன்பு, தவளையின் நிறத்தைப்பற்றிச் சொல்லி முடித்திருக்கிறோம் இனி, அதன் தலையையும், தலையில் அமைந்துள்ள முக்கியமான உறுப்புக்களைப்பற்றியும் சொல்லுவோம் :

தலை — தவளையின் தலை தட்டையாகவும் மேற்புறம் அகன்றும் அடிப்புறம் (வாய்ப்புறம்) கொஞ்சம் குறுகியும் சற்றேறக் குறைய ஆலிலை வடிவமாக இருக்கிறது. தவளைக்குத் தலை வேறாகவும் உடல் வேறாகவும் பிரிந்து காட்டாமல், மீனைப்போலவே, ஒன்றாகவே இணைந்திருக்கிறது. அதனால் தவளையும் தன் தலையை மட்டும் திருப்பி பக்கங்களிற் பார்க்கமுடியாது. தலைக்கும் உடலுக்கும் இடையே கழுத்து என்னும் உறுப்பு அமையப்பெறாத பிராணிகள் எல்லாம் தலையைத் திருப்பி பக்கவாட்டமாகப் பார்க்க முடியாது. மீன், தவளை, பன்றி, யானை முதலிய ஜந்துக்களுக்குக் கழுத்து என்னும் உறுப்பு இல்லாமையால், தம் தலையை மட்டும் திருப்பிப் பக்கவாட்டமாகப் பார்க்க முடியாது.

மூக்கு — மீனுக்கும் மூக்குத் தொளை உண்டு. ஆனால் அது சுவாசிப்பதற்கு உபயோகப்படுவதில்லை என்னும் விஷயம் முன்பு கூறியிருக்கிறோம். தவளைக்கும் மூக்குத் தொளை உண்டு. தவளை தன் மூக்குத் தொளையின் வழியாகவே சுவாசிக்கின்றது. ஆனால் தவளையின் மூக்குத் தொளை அதிக விசித்திரமாக அமைந்திருக்கிறது. தவளைக்கு வாயின் நேர் மேலாக இரண்டு மூக்குத் தொளைகள் இருக்கின்றன. அவற்றிற்குச் சரியாக மேல் வாயிலும் இரண்டு தொளைகள் இருக்கின்றன. நமக்கும் மூக்குத் தொளைகள் அப்படியே அமைந்திருக்கின்றன. ஆனால் தலைக்கு மேல் மூக்குத் தொளைக்கும் கீழ் மூக்குத் தொளைக்கும் மத்தியில் காற்றுப்பை ஒன்று அமைந்திருக்கிறது. தவளைக்குத் தன் மூக்-



குத் தொளைகளைத் திறக்கவும் மூடவும் சக்தி உண்டு. அது மேல் மூக்குத் தொளையைத் திறந்து அதன் வழியாக வாயுவை இழுக்கும். அப்போது கீழ்மூக்குத் தொளை மூடிக்கொண்டு இருக்கும். மேல்மூக்கு வழியாக இழுக்கப்பட்ட வாயு இடையில் உள்ள காற்றுப்பையில் நிறைந்தவுடனே, தவளை மேல் தொளையை மூடிக்கொண்டு, கீழ்த் தொளையைத் திறந்து அந்த வாயுவை சுவாசக் கருவிக்கு கொண்டுபோகும். (இந்த விஷயத்தைத் 'தவளை சுவாசிக்கும் விதம்' என்னுமிடத்தில் கூறுவோம்).

இதனால் தவளைக்கு மேற்புறமாக இரண்டு மூக்குத் தொளைகளும் உட்புறமாக இரண்டு மூக்குத் தொளைகளும் அந்தத் தொளைகளுக்கு இடையே வாயு தங்குவதற்கான ஒருவகைப் பையும் அமைந்திருக்கின்றன என்னும் விஷயம் விளக்கமாகத் தெரிந்துகொள்ளுகிறோம்

தவளையின் மூக்கில் வாசனையை யறியும் உணர்ச்சிநரம்பும் அமைந்திருப்பதனால், அது மூக்கின் மூலமாகவே வாசனையையும் உணர்ந்துகொள்ளுகிறது.

கண் — தவளைக்குக் கண்கள் மிகப் பெரியவை. இரண்டு கண்களும் அதன் தலையில் சற்றேறக்குறைய முக்கால் பாகத்தைக் கவிந்துகொண்டு இருக்கின்றன. அந்தக் கண்கள் மேல் எழுந்து பிதுங்கி வட்டமாக இருக்கின்றன. தவளைக்கு மேல் இமை, கீழ் இமை என இரண்டு இமைகள் அமைந்திருப்பதேயன்றி, விழியை ஒட்டினாற்போல் கண்படலம் என்னும் மூன்றாம் இமையும் அமைந்திருக்கின்றன. தவளைக்கு, மேற்புறமாக உள்ள இரண்டு இமைகளால் அதிகமும் உபயோகம் இல்லை. கண் படலமாகிய மூன்றாவது இமையினால்தான் அது தன் கண்ணைப் பாதுகாத்துக்கொள்ளுகிறது இந்த மூன்றாம் இமை மூக்கின் புறத்திலிருந்து காதின் புறமாக அசையக்கூடியது. நாம் கண்ணை இமைக்கும் வேகத்தைப்போல் தவளை அந்தக் கண் படலம் என்னும் இமையினால் அதி விரைவாக இமைக்கும் சக்தியுடையது. அதற்கு அனுகூலமாகத் தவளையின் கண்ணில் ஒருவகை நெய்ப்பசையும் அமைந்திருக்கிறது. மற்றப் பிராணிகளுக்கும் இவ்வித நெய்ப்பசை இருந்தாலும் தவளைக்கு அது கொஞ்சம் அதிகமாக அமைந்திருக்கிறது.

தவளையின் விழி அதிக அற்புதமானது. தவளையின் விழியை ஒருவிதமாக மயிலின் தோகையில் உள்ள கண்ணுக்கு ஒப்பிடலாம். நடுவில் கருவிழியும் அதைச் சுற்றிலும் நீல நிறமும் பொன்னிறமும் கலந்த ஒளியும் அமைந்திருக்கின்றன.

தவளை மிகவும் கூர்மையான பார்வையுடையது. அதிக விரைவாகப் பறக்கும் மிகச் சிறிய ஜந்துவையும் தட்டாமல் பார்க்கக்கூடிய சக்தியுடையது. அவ்வளவு கூர்மையான பார்வையில்லாவிட்டால் தவளை தன் இரையைச் சுலபமாக அடைய முடியாது.

பத்திராதிபர்.

## MONTHLY GRANTS FOR ELEMENTARY SCHOOLS

### எலிமென்டரி ஸ்கூல்களுக்கு மாதக் கிராண்டு

சென்னைக் கவர்ன்மென்டார் ஏழை எலிமென்டரி உபாத்திமார்களின் கஷ்டத்தை அறிந்து செங்கற்பட்டு ஜில்லா முதலிய சில ஜில்லாக்களுக்கு வருஷம் கிடைக்கும் கிராண்டை மாதம் மாதம் மாற்றிக் கொள்ளும்படி 1915ம் வருஷம் முதல் 1916ம் வருஷம் வரையில் இரண்டு வருஷம் அனுப்பிவந்தார்கள். 1917ம் வருஷம் ஏப்பிரல் முதல் அதை நிறுத்திவிட்டார்கள். அதற்குக் காரணம் சில மானேஜர்கள் வருஷத்தில் வருகிறது நல்லதென்றும் சில உபாத்திமார்கள் சீட்டுகளை போக்கடித்து விடுகிறார்கள் என்றும் சொல்லுகிறதாகத் தெரிகிறது. மாதக் கிராண்டு வந்தது, பண்டு இல்லாத ஸ்கூல்களுக்கும், பிள்ளைகள் சம்பளம் மூன்று மாதம் நான்கு மாதம் சேர்த்து வசூலாகிற பள்ளிக்கூடத்திற்கும், பள்ளிக்கூடத்திற்கு மாதம் பணம் உதவி செய்கிறவர்கள் இரண்டு மூன்று மாதம் சேர்த்துக் கொடுக்கிற ஸ்கூல்களுக்கும் எவ்வளவு பேருபகாரமாய் இருந்தது. போன வருஷம் இனிஸ்பெக்டர் உபாத்திமார்கள் பள்ளிக்கூடத்தை விட்டு வாராமல் அந்தக் கிராம முனிசிப்புகளிடத்தில் மாற்றிக்கொள்ளப் பணம் இருக்குமா என்று டிப்டி தாசில்தார்களைக் கேட்டதாகவும் அவர்கள் ஜனவரி முதல்



ஜூலைவரைக்கும் கிராம முனிசிப்புகளிடத்தில் பணம் இருக்கும் என்று எழுதினதாகத் தெரியவருகிறது.

மாதக் கிராண்டு பில்களை அந்தந்தத் தாலுக்கா ஸ்கூல் இனிஸ்பெக்டர்கள் பேருக்கு அனுப்பி அவர்கள் கஜானாவில் மாற்றி அந்தந்த ஸ்கூல் மானேஜர்களுக்கோ உபாத்திமார்களுக்கோ மணியார்டர் கமிஷன் பிடித்துக்கொண்டு அனுப்பினால் எவ்வளவோ பேருபகாரமாயிருக்கும். மணியார்டர் கமிஷனது ஒரு அணா முதல் நாலு அணாவுக்குமேல் ஆகாது. அந்தச் செலவினால் உபாத்திமார்களுக்கோ மானேஜர்களுக்கோ கஷ்டமிராது. ஏன் என்றால், உபாத்திமார்களோ மானேஜர்களோ மாதம் பில் மாற்றிவரச் சென்றால் இரண்டணா முதல் எட்டணா வரையில் செலவாகிறது. இவ்விஷயத்தைக் கவர்ன்மென்டார் கவனித்து நன்மை பிறக்கும்படி செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

பாஷ்ய முதலியார்,
மானேஜர், எலிமென்டரி ஸ்கூல்,
மணிமங்கலம்.

## WHAT IS A BIRD?

### பக்ஷி என்பது என்ன?

பக்ஷி என்பது இன்னதென்று எவருக்கும் தெரியும். பாலர் முதல் விருத்தர் ஈறாக எவரும் பக்ஷியை விரும்புவர். பக்ஷிகள் தம் அழகிய உருவத்தினாலும் இனியகுரலினாலும் மனிதர்க்குச் சந்தோஷம் உண்டாக்குகின்றன. பக்ஷியைப் பாராதவர் ஒருவரும் இலர். சிலர் பலவகைப் பறவைகளைப் பார்த்திருப்பர், சிலர் சிலவகைப் பறவைகளைப் பார்த்திருப்பர். வீடுள்ள இடங்களிலும் காடுள்ள இடங்களிலும் பக்ஷிகள் உண்டு. இப்படி எவருக்கும் எளிதாகத் தெரியக்கூடியது பக்ஷி. ஆனால் பக்ஷி என்பது என்ன? என்று கேட்டால் அதற்கு ஏற்றபடி விடைகூறக் கூடியவர்கள் வெகு சிலரே.

உபாத்தியாயர் — பக்ஷி என்பது என்ன? சொல், பார்க்கலாம்.

மாணாக்கன் — பக்ஷி என்பது பறக்கும் தன்மையுள்ள ஒரு ஜந்து.

உபா — அப்படியா? வௌவால் பறக்கிறது, அது பக்ஷியாகுமா? யோசித்துப் பார், பறப்பதெல்லாம் பக்ஷியாகுமா என்பதை.

மாண — பறப்பதெல்லாம் பக்ஷியாகாது; முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பது பக்ஷி என்னலாம்.

உபா—முட்டையிடுவது பக்ஷியா—பல்லி முட்டையிடுகிறது, மீன் முட்டையிடுகிறது. பல்லியும் மீனும் பக்ஷியாகுமா? யோசித்துப் பார்.

மாண — ஆம் ஐயா, முட்டையிட்டால் பக்ஷியாகாது. கூடு கட்டிக் கொண்டு வசிப்பது பக்ஷியாகும்.

உபா — பேஷ், நன்றாயிருக்கிறது. எலியும் கூடுகட்டுகிறது. எலி பக்ஷியாகுமா? எண்ணிப் பார்த்து விடைகூறு.

மாண — எது சொன்னாலும் சரிப்பட்டு வரவில்லையே இரண்டு காலுடையது பக்ஷி என்னலாம், ஐயா.

உபா—இரண்டு காலுடையது பக்ஷியா—உனக்கும் இரண்டு காலிருக்கிறது, எனக்கும் இரண்டு காலிருக்கிறது. நீயும் நானும் பக்ஷிதானோ? நன்றாய் யோசித்துச் சொல்.

மாண — இல்லை, ஐயா. தெரியாமல் சொல்லி விட்டேன். கூர்மையான நகங்களை உடையதைப் பக்ஷி என்னலாம்.

உபா — பூனைக்குக் கூர்மையான நகம் இருப்பது உனக்குத் தெரியுமே, பூனையும் பக்ஷிதானோ?

மாண — அது என்னவோ, எனக்குத் தெரியவில்லை. பக்ஷி எனக்கு நன்றாய்த் தெரிந்த பொருளானாலும் அது இன்னதென்று விவரித்துச் சொல்ல எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து தாங்களே விளக்க வேண்டும்.

உபா — பிள்ளாய் அதைரியப்படாதே! நான் சொல்லுகிறேன் கேள்: நீ சொல்லிவந்த விஷயங்களை எல்லாம் ஒன்றாகச்



சேர்த்து எண்ணிப்பார். அதாவது பக்ஷி என்றால் பறக்கும் தன்மை உள்ளது. கூடுகட்டி முட்டை இட்டு குஞ்சு பொரிக்குந் தன்மை உள்ளது. இரண்டு கால்களால் கிளைகளைப்பற்றி உட்காரும் சக்தியுடையது. கூரிய நகங்களும் முன்புறம் மூன்றும் பின்புறம் ஒன்றும் சிலவற்றிற்கு முன் இரண்டும் பின் இரண்டுமான விரல்களும் உள்ளது. இவ்வளவும் சேர்த்துச் சொன்னால்தான் பக்ஷி என்பதின் விவரம் ஏற்படும். பக்ஷிகளின் முக்கியத் தன்மைகள் சிலவற்றை இன்னும் சொல்லுகிறேன் கேள். பக்ஷியின் உடல் முழுதும் இறகுகள் மூடிக்கொண்டு இருக்கின்றன. அதற்கு கூர்மையான பலவித அலகு உண்டு.

பக்ஷிகள் எல்லாம் ஒரே உருவம் உடையவையல்ல. சில பெருத்தும், சில சிறுத்தும் இருக்கும். கோழி, காக்கை, ஊர்க்குருவி முதலியவற்றை எண்ணிப்பார். அவை ஒன்றுக்கொன்று உருவத்தில் எவ்வளவு வித்தியாசப் படுகின்றன. தீப்பறவை பக்ஷிகளில் மிகப்பெரியது. அது ஒரு மனிதனை விட அதிக உயரமான உருவமுள்ளது. ஊங்காரப் பறவை பக்ஷிகளில் எல்லாம் மிகச் சிறியது. அது ஏறக்குறைய ஒரு பெரிய தேனீயளவு இருக்கும்.

பக்ஷிகளின் இறகுகள் பலவகை நிறங்களால் பேதப்பட்டு இருக்கின்றன. சில பக்ஷிகளுக்கு வெண்மையான இறகுகளும், சில பக்ஷிகளுக்கு கருமையான இறகுகளும், சிலவற்றிற்கு சாம்பல் நிறமான இறகுகளும், சிலவற்றிற்கு பலவகை நிறம் வாய்ந்த இறகுகளும் அமைந்திருக்கின்றன. கொக்கு, குயில், காட்டுப் புறா, பஞ்சவண்ணக் கிளி முதலியவற்றைக் கவனித்துப் பார்.

பக்ஷிகளின் பாதங்களும் பலவகையாக மாறுபடுகின்றன. சில பக்ஷிகளுக்கு நடக்க அனுகூலமான பாதங்களும், சில பக்ஷிகளுக்கு மரக்கிளைகளைப் பற்றித் தொங்குவதற்கான பாதங்களும், சிலவற்றிற்குத் தண்ணீரில் நீந்த அனுகூலமான பாதங்களும், அமைந்திருக்கின்றன. இவையே பக்ஷி என்றால் இன்னது என்பதற்கு ஏற்ற விவரமாகும்.

பத்திராதிபர்

# THE TEACHING OF POETRY IN THE ELEMENTARY SCHOOLS

## எலிமென்டரிப் பாடசாலைகளில் செய்யுட் பாட போதனை

1. முற்காலத்தில் தமிழ் கற்கப்புகும் மாணாக்கர் அனைவரும் எழுத்துக் கூட்டி வாசிக்கக் கற்றபின்னர் செய்யுட் பாடங்களையே பயின்றுவந்தனர். வசன பாடங்கள் உரை நூல்களில் அன்றி தனிப்பாடமாக பயின்று வந்ததேயில்லை. அந்த முறை சமீப காலவரையில் தெருப்பள்ளிக் கூடங்களிலும் வழங்கி வருவதாயிற்று.

2. தெருப்பள்ளிக் கூடங்களில் நெடுங்கணக்கு (எழுத்துகள்) பயின்றபிறகு பேர்ச்சுவடி என்னும் சிறு பதங்கள் அமைந்த ஒரு புஸ்தகத்தைப் பாடமாகக் கொள்வர். பிறகு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை முதலிய செய்யுள் நூல்களே பாடமாக அமைந்து வந்தன.

3. துரைத்தனத்தாரால் ஆதரவு பெற்று நடத்தப் பெறும் எலிமென்டரிப் பாடசாலைகளில் பெரும்பாலும் வசன பாடங்களும் சிறு பான்மை செய்யுட் பாடமும் இக்காலத்தே நடைபெற்றுவருகின்றன. அந்தந்த வகுப்புகளுக்கென்று ஏற்பட்டுள்ள பாட புஸ்தகங்களில் வகுப்புக் கேற்றவாறு செய்யுட் பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் பழைய வழக்கங்களைத் தழுவியே ஆத்திசூடி முதலிய நூல்களினின்றும் திரட்டப் பெற்றனவாகும்.

4 இச்செய்யுட் பாடங்கள் பெரும்பாலும் நீதிவாக்கியங்களாகவே இருத்தலின் அவை சிறுவர்களுக்கு இன்பமாய் இருக்கமாட்டா என்பதை உணர்ந்து, இனியகதைகளும் இயற்கைப் பொருள் விஷயங்களும் விநோதக் கூற்றுகளும் அமைந்துள்ள செய்யுள் பாடங்களே சிறுவர்களுக்கு ஏற்ற பாடங்களாகுமெனப் பாலபோதகாசிரியர்கள் இக்காலத்தே அபிப்பிராயப்படுகின்றனர். அதை மேற்கொண்டு சில ஆசிரியர்கள், உபாத்தியாயர்கள் முதலாயினோர் இனிய எளியபாடல்களை இயற்றத் தலைப்-



பட்டனர். இவ்வகைப் பாடல்கள் சிறுவர்களுக்குப் பெரிதும் பயன் படக்கூடியவையே. இது நிற்க, சில உபாத்தியாயர்கள் தம்தம் பாடசாலைகளுக்கென இவ்வகைப் பாடல்களை இயற்றிச் சிறுவர்களுக்குப் பாடமாக அமைக்கின்றனர். அந்தப் பாடல்களைச் சிறுவர்கள் மனப்பாடம் செய்து ஒப்பிக்கின்றனர். எளிய பாடல்களாக இருத்தலின் சிறுவர்கள் இப்பாடல்களைச் சுலபமாக பாடம் செய்து விடுகின்றனர். இத்தகைய நன்மை பயக்கும் பாடல்கள் இலக்கண வரம்பு கடந்து, சொற் பிழைகள் மலிந்து கிடப்பின் அவற்றை மனப்பாடம் செய்யும் சிறுவர்களுக்கு எவ்வளவு தீமைகள் விளையுமென்பதை, ஆசிரிய நேசர்களே, சற்றே நினைத்துப் பாருங்கள்.

5. ‘தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்’ என்பது ஓர் அனுபவ சித்தமான பழமொழியாகும். சிறுவயதில் இளைஞர்கள் இலக்கணப் பிழையும் சொற்பிழையும் மலிந்துள்ள செய்யுட் பாடங்களை மனப்பாடம் செய்வாராயின் அக்குற்றத்தை அவர்கள் மனத்தினின்று நீக்க எந்தத் தெய்வத்தினால்தான் கூடும்.

6. செய்யுள் இயற்றும் திறமை சிலருக்கே அருமையாக அமைவதாகும். சிறிது கல்விகற்றவர்களுக்கும் செப்பமான செய்யுள் இயற்றும் திறம் அமைவதுண்டு. நல்ல புலமை வாய்ந்தவர்களுக்கும் செய்யுள் இயற்றும் வன்மை அமையாமல் போவதும் உண்டு. ஆதலின் ஒவ்வொருவரும் தாம், தாமே செய்யுள் இயற்றித் தம் மாணாக்கர்களுக்குப் போதிக்க வேண்டுமென்னும் விருப்பம் சரியானதன்று. தக்க தமிழ் நடை வாய்ந்த செய்யுட்களையே சிறுவர்களுக்குப் போதிக்க வேண்டும். அவ்வாறின்றிக் ‘காரும்’ ‘கோரும்’ முதலியவற்றைப்போன்ற பிழையான சொற்கள் அமைந்த செய்யுள்களைப் போதிப்பது என்றும் தீமையே பயப்பதாகும்.

பத்திராதிபர்.

## CHILDREN OF DISTANT LANDS

### தூரதேசத்துக் குழந்தைகள்

ஜப்பான் சிறுவர் - சீனச் சிறுவர்

சில வருஷங்களுக்கு முன் ஜப்பான் சிறுவர்களைப்பற்றிச் சில விஷயங்கள் நமது நல்லாசிரியனில் வெளிவந்த விஷயம் பலர் நன்கு உணர்வார்கள். அவற்றை விரைவில் முடிக்குமாறு நண்பர் பலர் விரும்பினர் அதனால் ஜப்பான் சிறுவர்களைப் பற்றியும் சீனச்சிறுவர்களைப் பற்றியும் பல அரிய விஷயங்கள் விளங்குமாறு இனிய புஸ்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கின்றோம். இதை வாசிப்பதனால் சிறுவர்களுக்குப் பூகோள விஷயமும் சரித்திர விஷயமும் நல்லொழுக்க விஷயமும் நன்கு புலனாகும். இது தாயார் குமாரனுக்குக் கதை சொல்லும் விதமாக மிக எளிய நடையில் அநேக சித்திரப் படங்களுடன் பெரிய எழுத்தில் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது. சிறுவர்களுக்கு இன்பமூட்டும் இனிய கதைப் புஸ்தகம் போல்வது. இதனை ஒவ்வொரு பாடசாலையிலும் தவறாமல் உபயோகிப்பார்கள் என்று நம்புகின்றோம். விலை அணா 6.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெருவு, சென்னை.

நூதனமான பிரசுரம்

## வஸ்து சித்ர லேகனம்

அல்லது

## மாடல் ட்ராயிங்

சைதாப்பேட்டை கவர்ன்மென்ட் டிரெயினிங் ஸ்கூல் சித்ர லேகன உபாத்தியாயர் A. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் இயற்றியது.

இதில் வஸ்துக்களை நேரில் பார்த்து அவற்றின் சித்திரம் வரையும் விதம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. வித்தியார்த்திகள் தாங்களே வஸ்து சித்திரம் வரையும் முறைகளை சுலபமாக அறிந்துகொள்ளக் கூடியபடி, நல்ல திருஷ்டாந்தங்களோடும், பற்பல படங்களுடனும் தகுந்த அப்பியாசங்களுடனும் நன்றாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இது ஒவ்வொரு எலிமென்டரி ஸ்கூல் உபாத்தியாயருக்கும் அவசியமானது. விலை அ. 12.

Apply to—C. COOMARASAWMY NAIDU & SONS, Madras, E.






உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1918ஆ. மார்ச்சுமீ | மாதம் 10


## BOTANY

### தாவர சாஸ்திரம்

வேர் நீரைக் கிரகிக்கும் விதம்

(முன் தொடர்ச்சி, பக்கம் - 131)

ஒரு தம்ளரில் கொஞ்சம் டர்ப்பன்டைன் என்னும் கற்பூரத் திராவகத்தை விட்டு, அதில் நீளமான ஒரு பிரப்பங் கழியை நாட்டிவைத்து, மேற்புறத்தில் தீக்குச்சியைக் கிழித்துக் காட்டினால், பிரம்பின் மேற்புறம் பற்றிக்கொண்டு எரிய ஆரம்பிக்கும். இது எப்படி எரிகிறது?

பிரம்புக் கழியில் சிறு துவாரங்கள் இருப்பது உங்களுக்குத் தெரியுமே, அந்தத் துவாரங்களின் மூலமாகத் தம்ளரின் அடியில்

உள்ள கற்பூரத் தைலம் ஏற ஆரம்பிக்கிறது. அதனால், கழியின் மேலே தீயைக் காட்டியவுடன் பற்றிக் கொண்டு எரிய ஆரம்பிக்கின்றது. இதனால் நுட்பமான துவாரமுள்ள பொருள்களில் திரவ பதார்த்தம் பாய்ந்து செல்லுகிறது என்பது விளக்கமாகும்.

மேற்கண்ட திருஷ்டாந்தத்தினால் வேர் நீரைக் கிரகிக்கும் விதம் நமக்கு விசதமாகும். வேரின் முனையில் அதிநுட்பமான துவாரம் பொருந்தியிருக்கிறது. அந்தத் துவாரத்திற்கும் வேரின் முனைக்கும் யாதொரு கெடுதியும் நேரிடாதபடி அவ் வேரின் முனையில் கவசம் (Root Cap) ஒன்று ஏற்பட்டிருக்கிறது. நாம் வேரண்டை நீரை ஊற்றுகிறபோது, அந்த நீர் பூமியில் உள்ள மர உணவைக் கரைத்துத் திரவரூபமாகச் செய்கிறது. அந்தச் சாரத்தை வேர் தன் நுட்பமான தொளைகளின் மூலமாகக் கிரகித்து மரத்திற்கு உணவாக அளிக்கிறது. மரத்திற்கு வேண்டிய உணவை வேர்தான் கிரகிக்கிறது என்னும் விஷயத்தை மற்றொரு உதாரணத்தினால் விளக்குவோம்.

முன்பு ஒரு தம்ளரில் முக்கால் பாகத்திற்குத் தண்ணீர் நிரப்பிக்கொள். பிறகு அந்தத் தம்ளரின் மேல் ஒரு அட்டையை மூடி இடையில் ஒரு துவாரஞ் செய்து கொள். அதன் பிறகு ஏதேனும் ஒரு சிறு செடியை வேர்கள் கொஞ்சமும் அறுந்து போகாமல் பிடுங்கிக்கொள். அந்தச் செடி பிடுங்கின சிறு நேரத்திற்குள் வாடி வதங்கி விடும். அந்தச் செடியை எடுத்து, தம்ளரின்மேல் மூடியுள்ள அட்டையின் துவாரத்தில் நுழைத்து, இலையுள்ள பக்கம் மேலாகவும் வேருள்ள பக்கம் கீழாகவும் வைத்து, வேர் தண்ணீரில் முழுகும்படி செய்து சூரிய வெளிச்சம் படும்படி வைதது, கொஞ்சநேரம் பொறுத்துப் பார். வாடிய செடி உயிர் பெற்றது போல் தழைத்து நிற்கும். இதனால் வேர்தான் உணவைக் கிரகித்துச் செடிக்குத் தருகிறது என்பது விளங்கும். இன்னும் சந்தேக முண்டானால் அந்தச் செடியையே திருப்பி தழையுள்ள பக்கத்தைத் தண்ணீரிலும், வேருள்ள பக்கத்தை வெளியிலும் வைத்துப் பார். முன் செடி தளிர்த்தது போல் தளிர்க்கிறதா? இல்லையே. இதனால் வேர்தான் உணவைக் கிரகித்துச் செடிக்குக் கொடுக்கிறது என்பது உண்மையாகும். இதை இன்னும் தெளிவாக விளக்குமாறு மற்றொரு திருஷ்டாந்தம் கூறுவோம்.



மேல் தோல் மெல்லியதாயுள்ள ஏதேனும் ஒரு செடியை எடுத்துக்கொள். தண்டு வெண்மை நிறமுள்ளதாக இருப்பது நலம். கரிசித்தும்பை அல்லது வெள்ளைக் கீரைத்தண்டை எடுத்துக்கொள்ளலாம். இந்தச் செடிகளில் ஒன்றை வேருடன் பிடிங்கி எடுத்து வைத்துக்கொள். பிறகு ஒரு தம்ளரில் கொஞ்சம் தண்ணீர் விட்டு ஏதேனும் ஒரு சிவப்பு வர்ணத்தைத் தண்ணீரில் கலந்து விடு. சிவப்பு இங்கியைச் சேர்த்தாலும் போதும். பிறகு, முன்பு பிடுங்கின செடியை எடுத்து, அதன் வேர் தம்ளரில் உள்ள தண்ணீரில் முழுகும்படி வைத்துப் பார். என்ன உண்டாகிறது. அந்த வெள்ளைத் தண்டு சிவப்பு நிறமாக மாறுவதைக் காணலாம். அந்தத் தண்டை உடைத்துப் பார்த்தால் உள்ளேயிருக்கிற சிறு அறைகளில் சிவப்பு நீர் நிரம்பி யிருப்பதைக் காணலாம். எப்படிச் சிவப்பாயிற்று. செடியின் வேர் தம்ளரில் உள்ள சிவப்பு நீரைக் கிரகித்து மேலே கொண்டு வந்தது. அதனால் வெண்மையான அதன் அடிப்புறம் சிவந்து காட்டுகிறது. இதனாலும் வேர் நீரைக் கொடுக்கும் விதம் விசதமாகும். இங்கே,

> நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
> என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
> தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
> தலையாலே தான் தருத லால்

என்னும் பாடலிலுள்ள பின் இரண்டடிகளை உன்னிப் பார்க்க.

பத்திராதிபர்.

## ANIMAL DOCTORS
## பிராணி வைத்தியர்கள்

'நோயற்ற வாழ்வே வாழ்வு' செல்வமிருந்தும் நோயினால் வாழ்வு இழந்தவர் பலர். தங்களுடைய வாழ்நாளில் வைத்தியருடைய உதவியைப் பெரும்பாலும் நாடாமலிருப்பவர்கள் பாக்கியசாலிகளே. பாலியர்களுக்குப் பிரதிதினமும் வைத்தியருடைய உதவிவேண்டியிருக்கிறது. மாந்தம், சுரம், சிரங்கு, அம்மை, கக்குவான் முதலிய வியாதிகள் வருடந்தோறும் சிறுவர்களைப் பீடிக்காமலிருப்பதில்லை. வைத்தியருடைய உதவி நீ வேண்டா-

மலே இருந்தாலும், உனக்கு உடம்பில் ஏதாவது உபத்திரவம் இருந்தால், உன்னுடைய தாயார் மருந்துக் கடைக்கு சென்று மருந்து வாங்கிக் கொடுத்து உன்னுடைய வலியை நீக்குகிறாள்.

நாம் வீட்டில் செல்வமாய் வளர்க்கும் பிராணிகளுக்கு அசௌக்கிய முண்டானால் அவை தாமே தக்க சிகிச்சை செய்து கொள்ளும் விதத்தை இப்போது கவனிப்போம். பிராணிகள் நோயடைகிறதா என்று நீ கேட்கலாம். பூனை, நாய் வளர்க்கிறவர்களைக் கேட்டால் உடனே பதில் அளிப்பார்கள். உன்னுடைய நாய் நோயடைந்தபோது, உற்சாகமற்று, ஆடி ஓடித் திரியாமல், இயற்கை சுபாவமாறி சங்கடப்படுவதை நீ பார்த்திருக்கலாம்; அந்த நாய் மிக்க சாந்தமுள்ளதா யிருந்தாலும் அப்போது உறுமிக்கொண்டும் ஊளை யிட்டுக்கொண்டிருக்கும். மானிடர்களைப்போலவே பிராணிகளும் வியாதியால் வருந்துங் காலமுமுண்டு. நமக்கு உடம்பு சரியா யில்லாவிட்டால், சௌஸ்தமடைவதற்கு வேண்டிய பரிகாரம் தேடத் தெரியும்; பிராணிகளும் நம்மைப்போலவே நடந்துக்கொள்ளுகின்றன; தகுந்த ஔஷதிகளைத் தேடுவதில் மிக்க சாமார்த்தியமும் திறமையு முண்டு. அவைகளுக்கு வேண்டிய பேதிமருந்து புல் பூண்டுகளி லிருந்து கிடைக்கின்றது. நமக்கும் அப்படியே.

இப்படிச் சொல்வது சரியல்ல; வைத்தியரிட மிருந்து கிடைக்கும் ஔஷதம் திரவரூபமாயிருக்கிறது; "அம் மருந்தில் புல்லையுங் காணோம் பூண்டையுங் காணோம்" என்று நீ சொல்லலாம்; அப்படிச் சொல்வது தவறே. அநேக விதப் பூண்டுகள் ரசாயன சாஸ்திரியின் பக்குவ முறையால் நல்ல மருந்தாகின்றன.

பண்டைகாலத்து பெரியவர்கள் நாநாவிதமான மூலிகைகளையும் அம் மூலிகைகளின் இலட்சணங்களையும் தன்மைகளையும் நன்றாய் அறிவார்கள். கடைத்தெருவில் பச்சிலை மூலிகைகளை விற்பதை நாம் பார்த்திருக்கிறோம். நன்னாரிவேரிலிருந்து நல்ல கஷாயம் இறக்குகிறார்கள்; சின்கோனாப் பட்டையிலிருந்து 'குயினா' என்னும் சுரமருந்து செய்யப்படுகின்றது.

உன்னுடைய நாயோடு நீ வெளியே உலாவப் போகும்போது, வழியிலுள்ள புற்களில் தனக்கு இஷ்டமானதை மிக்க சாக்கிரதையாகப் பொறுக்கி யெடுப்பதை நீ பார்க்கலாம். தனக்-



குச் சௌகரியமான புல் கிடைக்கிறவரைக்கும், புற்களை எல்லாம் மூக்கினால் உறிஞ்சிக்கொண்டும் வாசனை பார்த்துக்கொண்டும் போகும். நாய் நாடியதைக் கண்டதும், வேரோடு பசும்புல் தாளை ஆவலாய் விழுங்குகின்றது; இதுதான் "நாய்ப்புல்" என்று சொல்வதுண்டு; நாய்கள்தான் இப்புல்லை உண்ணுகிறதென்று நினைக்கவேண்டாம்; ஆடு, பன்றிகளும் இப்புல் இருக்குமிடத்தைத் தேடி, கிழங்கோடு சாப்பிடாமல் இரா. மிருகங்களுக்கு சிகிச்சைசெய்யும் வைத்தியரும் இப்புற்களின் கிழங்குகளிலிருந்து, குதிரைக்கும் பசுவுக்கும் சிறந்த உணவை தயாரிக்கிறார். நேர்வாளக் கொட்டையிலிருந்து செய்யப்பட்ட பேதி மாத்திரை நமக்கு உதவுவதுபோல, இப்புல் ஆடுமாடுகளுக்குச் சிறந்த பேதி மருந்தாகிறது.

தங்களுக்கு வேண்டிய உணவை தேர்ந்தெடுப்பதில், நாயின் இயற்கை அறிவு நன்றாய் விளங்கும். நோய்நொடி இல்லாதிருக்கும்போது, கொழுத்த இறைச்சியையும் சதைபற்றில்லா எலும்பையும் உண்ணும்; மற்றவேளையில் கொழுப்பும் நெய்ப் பற்றுமுள்ள உணவுகளைத் தவிர வேறொன்றையும் தொடாது.

நாயின் பேரில் கல்லைவிட்டு எறிவது உம்மைப்போல சிறுவர்களுக்குப் பெரிய விளையாட்டு. கல்லால் அடிப்பட்டு கால் நொண்டுவதை நீங்கள் பார்த்திருப்பீர்களல்லவா. ஒற்றைக்காலை மடக்கிக்கொண்டு மற்ற மூன்று காலால் நொண்டி நடப்பதையும் பார்த்திருக்கலாம். சிறிதுதூரம் நடக்கும், நடக்க முடியாமல் படுக்கும்; இப்படியே செய்துகொண்டிருக்கும்; காயம்பட்ட காலை நக்கும்; குணமடைகிறவரைக்கும் நக்கிக்கொண்டே இருக்கும். தன் பாதத்தில் முள் தைத்துக்கொண்டாலும், கெட்டியான ஒரு கல்துண்டு பாதத்தில் இருந்தாலும், தன்னால் எடுக்க முடியாமையைக்கண்டு, மனிதர்களுடைய உதவியை நாடும். அதனுடைய குறைகளைக் கவனிக்கும் நம்மிடத்தில் காட்டும் நன்றியறிவுக்கு கணக்குண்டா. வாலைக் குழைத்துக்கொண்டு, சந்தோஷத்தால் குரைக்கும்; நன்றி செய்தவருடைய கையை நக்கும்.

என்னுடைய சிநேகிதரிடத்தில் அழகான வேட்டை நாய் ஒன்று இருந்தது. ஒரு தடவை எஜமானனோடு காட்டுக்குள் போகும்போது, ஒரு கண்ணில் குண்டுபட்டது; நாய் மிக்க உபத்திரவமடைந்தது. கண்ணிலிருந்து குண்டு எடுபட்டபோதிலும்,

வலி நீங்கின பாடில்லை. இருட்டிலிருந்தால், வலியும் நீங்கும் காயமும் ஆறும் என்று தெரிந்துக்கொண்டு, வெளிச்சத்திலேயே வாராமல் இருண்ட இடங்களுக்கெல்லாம் நகர்ந்துக்கொண்டே சென்றிருந்து ; இவ்விதமாய் நாலைந்து வாரமானதும் பூரண சுகமடைந்தது.

ஜீவவர்க்கத்தில் மேலான வகுப்பைச் சேர்ந்த வானரங்களும் காயமடைந்தபோது, இயற்கையாயுள்ள நுண்ணறிவை காட்டுகின்றன. ஒரு தடவை, ஒரு வாலில்லாக் குரங்குக்கு விலாவில் பலத்த காயமுண்டாயிற்று ; காயத்திலிருந்து இரத்தம் அதிகமாய் வடிந்துக்கொண்டேயிருந்தது. அது ஒரு ஓடையை அடைந்து, சேற்றை எடுத்துப் பிசைந்து, பச்சிலைகளைச் சேர்த்து, கெட்டியான பசைபோல் சாந்துசெய்து, இரத்தம் வடிவாயில் வைத்து அழுத்திக்கொண்டேயிருந்து, இரத்தம் வடிவது நிற்கும் வரைக்கும் கையை எடுக்காமலிருந்தது.

ஒரு எறும்புக் கூட்டத்தில் அநேக இனங்களுண்டு. வைத்தியம் செய்யும் எறும்புகள் சில; சவந்தூக்கும் எறும்புகள் சில. ஒரு எறும்பு இறந்ததும், சவம்தூக்கும் எறும்புகள் ஓடிவந்து தூக்கிக்கொண்டுபோய், புற்றிலுள்ள மசானக்கரையில் சேர்த்து அடக்கஞ்செய்கின்றன. உயிர்நூற் புலவர் ஒருவர் எறும்பின் உணர்ச்சிக் கருவிகளை கத்திரித்து விட்டதும், வைத்திய எறும்புகள் உடனே சென்று வாயிலிருந்து வருகிற பசையாயுள்ள தங்கள் எச்சிலை வெட்டின முனையில் தடவி, காயத்தை ஆற்றின. தாய் எறும்பு தன் குழந்தைகளுக்கு வேண்டிய உணவை கொணர்ந்து போஷிக்கின்றது. நல்ல காற்றுக்காக குழந்தைகளோடு உலாவுவதையும், சூரிய வெளிச்சத்திற்கு வெளியே வருவதையும் அநேகர் பார்த்திருக்கிறார்கள்.

பிராணிகள் கையாடும் மேலான சிகிச்சை தங்களுடன் பரிசுத்தமாய் வைத்துக்கொள்ளும் வழக்கமே. பூனை தன் குட்டிகளை அடிக்கடி நக்குவதைப் பார்க்கலாம்; நாய் நீராடுவதில் மிக்க ஆனந்தம். இந்த விஷயத்தில் பிராணிகள் உம்மைப்போலச் சிறுவர்களுக்கு நல்ல படிப்பினை கற்பிக்கவில்லையா. அழுக்குப் படிந்த சிறுவர்களுக்கு அடிக்கடி சுரம் வருவதுண்டு. ஆதலால் தங்கள் தேகத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். தங்கள் உடம்பில் படிந்த அழுக்கை, எண்ணிறந்த கிருமிகள்



தின்னுகிறதென்றும், இந்தக் கிருமிகள் உடம்பில் படிவதால், அநேக வியாதிகள் உண்டாகின்றனவென்றும், சிற்சில பிராணிகளுக்குத் தெரியவரும். சிறுவர்களும் இதை அனுதினமும் மறவாமல் காலையில் நீராடுவது முக்கிய கடமையாக பாவிக்க வேண்டும்.

M. S. SABHAPATHY MUDALIAR,
*Govt. Panchama Training School, Madras.*

## WHO ARE RESPONSIBLE FOR NON-IMPROVEMENT OF BOYS AND GIRLS OF INDIA IN THEIR EDUCATION?

### இந்தியச் சிறுவர்களின் கல்வி அபிவிருத்தி அடைந்ததற்குக் காரணம் யார்?

1. யார்மேல் தப்பிதம் இருந்தாலும் இருக்கட்டும் 'உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்' என்றபடி யாரும் உண்மையையே உரைக்கவேண்டும். (Truth can lead a man in a right path) உண்மை சரியான வழியில் நடத்தும். உண்மை யுரைப்பதில் யாதொரு பயமுமில்லை நமது ஜன்ம பூமியாகிய இந்து தேசத்தில் (Primary Education) ஆதாரப்படிப் பின் நிலைமையானது மிக்க விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. அதாவது 100-க்கு 3-பேர் தேறுவது அசாத்தியம் என்று தெரியவருகிறது. இதற்குக் காரணம் உபாத்தியாயரா? பெற்றோர்களா? அல்லது கவர்ன்மெண்டாரா? என்பதுதான் இப்போது தெரியவேண்டியது அவசியமான விஷயம்.

2. உபாத்தியாயருக்கு ஒரு கிராமத்தில் ஜீவனம் சரிவர நடக்கிறதில்லை. அவர் திக்கற்றவர், வருகிற வரும்படி போதாது என்றால் ஊரார் கொடுப்பார்களா? அல்லது சர்க்காரார் கொடுப்பார்களா? ஊராரும், சர்க்காராரும் கொடுத்துத்தான் வருகிறார்கள். அது போதுமானதாயில்லையே, என்ன செய்யலாம். ஆனால் பள்ளிக்கூடவேலை விட்டுவிடட்டும். விட்டுவிட்டால் ஜீவனத்திற்கு வேறு வழியில்லையே? என்ன செய்வது? "நீ அடிக்கிறமாதிரி

அடி, நான் அழுகிறமாதிரி அழுகிறேன்". என்னும் பழமொழியைப்போல ஏதோ உபாத்தியாயரின் ஜீவனத்துக்காகவும், மாணவர்கள் தெரிந்துகொண்டவளவுக்குமே இதுவரையில் போதனை ஏற்பட்டு வந்திருக்கிறதே யல்லாமல் சிரத்தையுடன் பள்ளிக்கூடங்கள் நடைபெறுவதற்குத் தகுந்த பரிகாரங்கள் செய்யப்படவில்லை.

3. இந்தியாவின் ஜனத்தொகை யென்ன? பள்ளிக்கூடங்கள் எவ்வளவு இருக்கின்றன? 100-க்கு எத்தனை பேர் படிக்கிறார்கள்? என்ற கணக்குப் பார்ப்போமேயானால் மேலே சொன்ன 100-க்கு 3 பேர் சுதேச சமஸ்தானம் நீங்கலாக ஏற்படுவது அசாத்தியமா யிருக்கிறது. இந்த தேசத்திலோ பெரும்பான்மையோர் ஏழைக் குடிகள். ஆனால் வித்தை வேண்டாமோ? வேண்டும். என்ன செய்வார்கள்? சுவர் இருந்தாலல்லவா சித்திரம் எழுதலாம். ஜீவனம் செய்கிறதே கஷ்டம், அதிலும் உபாத்தியாயருக்குச் சம்பளம் எங்கிருந்து கொடுப்பார்கள். உபாத்தியாயரோ சம்பளம் கொடாத பிள்ளைகளைக் கனவிலும் கருதுகிறவராயில்லை.

4. கொஞ்சம் பூஸ்திதியை யுடையவர்களுக்கு இரண்டு மூன்று ஆண்மக்கள் இருப்பார்களே யாகில் படிப்பதிலும் பண்ணயம் பார்ப்பதே உத்தமமென்று நினைத்து வித்தையின் அவசியத்தைக் கருதுகிறதில்லை. ஏனெனில் இக்குமாரர்கள் படிக்க வந்துவிட்டால் இவர்கள் செய்யும் வேலைக்கு சுமார் 8, 10 ரூபாய் கொடுக்கவேண்டியதா யிருப்பதும் தவிர இவர்களுக்குச் சம்பளமும் கொடுக்கவேண்டும். மீதி அன்னவஸ்திரத்துக்குப் போதுமானதாக இல்லை. இவர்களுக்கு வித்தையில் பிரியம் எப்படி யுண்டாகும்? கூலிக்காரப்பிள்ளைகள் கூலி செய்தாவது ஜீவனம் செய்வார்கள். பள்ளியில் படித்தால் ஆகாரம் எங்ஙனம் கிடைக்கும்? ஆகையால் இவர்களுக்கு வித்தையில் எவ்வாறு பிரியம் ஏற்படும்?

5. தனவந்தர்களின், சிறந்த வியாபாரிகளின் குழந்தைகள்தான் படிக்கக்கூடும். அதிக தனவந்தர்களுக்கு அதிக படிப்பு அவசியமில்லை. தொழில் வியாபாரிகள் முதலானவர்கள் தான் ஏகதேசம் ஊக்கத்துடன் படிக்கிறார்கள். ஆகையால்தான் இந்தியாவின் நிலைமை இவ்வாறு இருக்கிறது. ஏதோ லட்சத்தில் ஒரு பங்கு தேசாபிமானிகளும் மதாபிமானிகளும் எங்கோ ஒவ்வொரு ஸ்கூல் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தியச் சிறுவர்களுக்குத் தன-



வந்த இந்தியர்கள்தான் தாய்போலவும் நமது காருண்ய கவர்ன்மெண்டார் தந்தை போலவும் இருக்கிறார்கள். ஆகையால், தாயானவள் குழந்தைக்கு நன்றாகக் குளிப்பாட்டி உடம்பு சுத்தம் செய்வதும் அன்னம் ஊட்டுவதும்தான் அவளுக்கு ஏற்பட்ட கடமையாகும். இதைவிட அதிகம் எதிர்பார்ப்பது முடியாத காரியமாம். குழந்தைக்கு வித்தை முதலானவை கற்றுக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டியது தந்தையின் கடமை யல்லவா?

6. தந்தை வித்தை சொல்லிக் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்யவில்லையா என்று கேட்டால் அதனால்தான் 100-க்கு 3 பேராவது படிக்கக்கூடிய அந்தஸ்து ஏற்பட்டது. இல்லாமற் போனால் 1000-ல் 3 தேறுவதே அருமையா யிருக்குமென்று நம்புகின்றோம். 'வித்தை வித்தை யென்று கூக்குரலிட்டால் வித்தை எப்படி வரும்' தந்தை கவனித்தாலல்லவா வித்தை ஏற்படும். ஆனால் தந்தைக்குத்தற்காலம் கவனிப்பது கஷ்டமான காரியம். நாமும் இப்போது வற்புறுத்திக் கேட்பது அழகல்ல. தாய்தந்தைகளுக்கு கஷ்டம் சம்பவித்த காலத்தில் குழந்தைகளுக்குச் சௌகரியம் ஏற்படுமா? ஏற்படாது. குழந்தையின் சௌகரியத்தின் பொருட்டு தாய்தந்தைகள் ஒத்துழைப்பார்களானால் குழந்தையின் தேக சௌக்கியத்தைப்பற்றிச் சொல்ல வேண்டியது அவசியமின்று. இப்போது தந்தைக்கு ஏற்பட்டிருக்கும் வியாகூலத்தினால் தாய் குழந்தை ஆகிய இருவருக்கும் அத்தியந்த கஷ்டம் ஏற்பட்டு, தாங்கொணா வறுமையை யடைந்து வருகிறார்கள்.

7. யுத்தம் ஆரம்பித்து சுமார் 3 வருஷகாலத்துக்கு மேல் ஏற்படுகிறது. அகவிலையோ சொல்லி முடியாது. காலத்திற்கேற்றவாறு வருணபகவானும் காலாகாலங்களில் அநுக்ரஹம் செய்கிறதில்லை. வேளாண்மையும் அதற்குத் தக்கவாறு இருக்கிறது. இதேமாதிரி இன்னும் கொஞ்சகாலம் இருக்குமானால் ஜனங்கள் மடிந்து போவார்களென்பதில் சிறிதும் ஐயமின்றாம். இவ்வளவு கஷ்டதசையில் வித்தையில் ஆசைப்பட இந்தியர்கள் கல்வியை எவ்வாறு சம்பாதிப்பார்கள்? ஏதோ எம் போலியர்களால் யாதொரு சகாயமில்லா விடினும் கல்வியின் அவசியமும், ஜனங்களின் விருப்பத்தையுமாவது அடிக்கடி பத்திரிகையில் தெரிவித்தால் வித்தியா இலாகா அதிகாரிகளும் ஜனத்தலைவர்களும் கண்டு இரக்கங்கொண்டு தகுந்த முயற்சி எடுத்து வித்தியாபி விருத்திக்கு

ஏற்றவழி செய்யமாட்டார்களா என்ற நம்பிக்கைகொண்டு எழுதத் துணிந்தோம்.

8. மைசூர், திருவாங்கூர், பரோடா முதலான சம்ஸ்தானங்களில் கட்டாயமான படிப்பு விஷயமாய் லக்ஷக்கணக்கான திரவியம் செலவு செய்திருக்கிறார்களென்று கேள்விப்பட்டு சந்தோஷ மடைகின்றோம். கோலாப்பூரில் கூட ஒரு ஊர் அரசர் வித்தையின் அவசியத்துக்காக ஏழைகளுக்கு மனமிரங்கி லக்ஷரூபாய்க்கு மேல் நன்கொடை யளித்திருப்பதாய்த் தெரியவருகிறது. இதுபோலவே நாமும் கொஞ்சங் கொஞ்சமாக அடிப்படையை ஆரம்பித்துவிட்டோமானால் யுத்தத்தில் நமது காருண்ய கவரன்மெண்டாருக்கு ஜயம் கிடைத்ததன்மேல் தானாகவே நாம் கோறியபடி ஈடேறும் வண்ணம் சர்வேச்சுரனைத் தியானம் செய்துகொண்டே யிருக்கவேண்டும்.

## A REMARKABLE PROGRESS ON EDUCATION AT SRIVILLIPUTTUR

### ஸ்ரீ வில்லிப்புத்தூரில் படிப்பின் அபிவிருத்தி

9. ஸ்ரீ வில்லிப்புத்தூரில் 10 எலிமெண்டரிப் பாடசாலைகள் இருக்கின்றனவாம். அதில் 8 பையன்கள் பள்ளிக்கூடமென்றும் 2. பெண்பாடசாலைகளென்றும் தெரியவருகின்றன. ஆண் பிள்ளைகள் சங்கியை 100க்கு 90 பிள்ளைகள் படிக்கிறதாயும், பெண் பிள்ளைகள் 100-க்கு 25 என்றும், கேள்விப்பட்டு அதிக திருப்தியடைகிறோம். இதுபோலவே எல்லா ஊர்களிலு மிருக்கவேண்டுமானால் நமது கவர்ன்மெண்டாருடைய உதவியால் தான் நடக்கவேண்டும் என்று எண்ணுகிறேன். அவர்களுடைய உதவி இவ்வாறு ஏற்படும் பக்ஷத்தில் எல்லாத் தேசங்களைவிட நமது இந்துதேசம் மிக்க முற்பட்டு நிற்குமென்பது நிச்சயம்.

10. பம்பாய் மாகாணத்தில் அம்மாகாணத்து முனிசிபல் வரும்படியிலிருந்தே (Free and Compulsory Education) கட்டாயப் படிப்பு சம்பள மில்லாமல் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதென்றும் கேள்விப்பட்டு அதிக ஆனந்த மடைகிறோம். இவ்வாறே ஒவ்வொரு முனிசிபல் வரும்படியிலிருந்தும் அந்தந்த முனிசிபாலிடிகளுக்குட்பட்ட இடங்களில் கட்டாயப் படிப்பு ஏற்படுத்தப் பட்டால் சர்க்காருக்கும் யாதொரு பாதகமுமில்லை.



செல்வுக்குப் போதுமானதா யில்லாவிடில் ரிவினியூ செஸ் வரிகளை இன்னும் கொஞ்சம் உயர்த்தியாவது அல்லது அதற்குத் தகுந்த வருமானங்களைக் கவரன் மெண்டார் ஏற்படுத்திக் கொடுத்தாவது வித்தையை முன்னுக்குக் கொண்டுவரும் பக்ஷத்தில் கவரன் மெண்டாருக்கு இந்தியர்கள் எப்போதும் நன்றி யறிவுள்ளவர்களா யிருப்பார்கள்.

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறை யென்று வைக்கப்படும்"

என்றபடி முதலில் கடவுள், அடுத்தபடி ராஜாவே கடவுளாயிருப்பதால் ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும் சௌக்கியங்களையும் உண்டுபண்ணக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் பிரஜைகள் நல்ல புஷ்டியடையும்வரை குடிகளால் நன்மையை எதிர்பார்க்கவும், திரவிய சகாயத்தை எதிர்பார்க்கவும் முடியாத காரியமாம். அதுவரையில் கவரன்மெண்டாரால்தான் நமக்கு நன்மைகள் ஏற்பட வேண்டியது அவசியமா இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. (தொடரும்)

G. HANUMANTHA RAO,
*Secretary to the Teachers' Association,*
*Sellappanpalayam, Pollachi Range.*

## READING OF JOURNALS BY TEACHERS

### உபாத்தியாயர்கள் பத்திரிகை வாசித்தல்

அறிவின் அபிவிருத்திக்கு ஆதாரமாய் ஆங்காங்குப் பல பத்திரிகைகள் நடைபெறுவதும் அவற்றை அடையப்பெற்று அறிவை வளரச் செய்வதும் இக்காலத் தியலுக்குச் சாலச் சிறந்ததே. அத்தகைய பத்திரிகைகளில் பல திறத்தனவாயும் அவ்வவருக்கு அவாவுள்ளதும் அதி முக்கியமானதுமாயும் உள்ளவற்றையே அடையப் பெறுவர். உபாத்திமார்களின் அபிவிருத்திக்காகவே விவேகசிந்தாமணி, நல்லாசிரியன், சற்குரு ஆகிய இம் மூன்று பத்திரிகைகளும் தமிழில் மாதந்தோறும் உலவி வருகின்றன, மற்றுமுள்ள விவேகபோதினி, ஜனாபிமானி போன்றவை-

களில் உபாத்திமார்களுக்காக இரண்டொரு பக்கங்களாயினும் வெளி வந்துகொண்டிருக்கும். இவைகளில் உபாத்திமார்களுக்காக ( * * * * ) இவ்வட்டத்திற்கென விவேக சிந்தாமணி, விவேகபோதினி, ஜனோபிமானி ஆகிய இம்மூன்று மாதாந்த சஞ்சிகைகளை பரீக்ஷாதிகாரியால் வரவழைக்கப்பெற்று, அவர் மூலமாய் ஒவ்வொரு பாடசாலைக்கும் முறையே சுற்றுப் பத்திரிகையாக அனுப்பப்பட்டும் வருகின்றது. நல்லாசிரியன், சற்குரு இரண்டும் ஏதோ ஒவ்வொரு (உபாத்திமச்) சங்கங்களில் தருவிக்கப் படுகிறதாக அறிகிறோம்.

இச் சஞ்சிகை ஒன்று ஒரு நாளைக்கே ஓர் உபாத்தியாயர் வசமிருக்கலாம். ஒரு சஞ்சிகையை ஒரு உபாத்தியாயர் ஒரு நாளையிற் பாடசாலை நேரங் கழிந்த ஒழிந்த நேரத்திற் பார்த்து முடிக்க முடியா தென்பது அனைவரும் அறிந்ததே. இவ்விதமிருக்க 2-3 சஞ்சிகை (பிரதி)களை அனுப்பி ஒரு நாள்மட்டுமே ஓர் உபாத்தியாயர் வைத்திருக்கலா மென்றால், சஞ்சிகை இன்ன விதமாக அமைக்கப்பட்டிருக்கிற தெனப் பார்ப்பதா? சஞ்சிகையிலுள்ள விஷயங்களைப் பார்ப்பதா?

இஃதிங்ஙன மிருக்க, ஒரு சஞ்சிகையில் 3-4 பிரதிகள் விதம், 2-3 வித சஞ்சிகைகளில் 7-8 பிரதிகளிலுள்ள விஷயங்களை ஒரு நாளையில் ஒருவர் எங்ஙனம் பார்த்துவிடமுடியும்? முழுமையும் பார்த்து அனுப்பினாலோ காலதாமத மேற்படுகிறது — ஏற்படும். இதனால், ஒருநாளைக்குமட்டும் வைத்திருக்கலா மென்ற உத்திரவின்படிக் கீழ்ப்படியாத குற்ற மேற்படுகிறது. உத்திரவிற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமானாலோ குறித்த காலத்தில் அவசியம் அனுப்பவேண்டியதே. அவ்விதமானால் சஞ்சிகைகளின் அமைப்பையும் விஷய அட்டவணைகளையு மட்டுமே பார்க்கக் கூடும்! ஆகவே விஷயங்களைப் பார்க்காமலே அனுப்ப நேரிடுகிறது. இதனால் உபாத்திமார்களுக்கு என்ன பிரயோஜனம்? பத்திரிகைகள் பார்க்கிறார்கள் என்ற பெயர் மட்டுமேயன்றி, அதனால் யாதொரு பிரயோஜனமு முண்டாகாததை யாவரும் உணர்ந்திருக்கலாம் — உணரலாம் — உணரவேண்டுவ தவசியம்.

உபாத்திமார்கள் பத்திரிகைகளா லாய பயனை யடைய முயலுங்கால், இரு விஷயங்களைக் கவனித்தல் வேண்டியிருக்கின்றது. ஒன்று, உபாத்தியாயர் பத்திரிகையை உபயோகிக்கும்



காலத்தை அதிகப்படுத்துவது. இரண்டாவது, வரவழைக்கும் பத்திரிகை ரேஞ்சிற்கு ஒன்றென்பதை, ரேஞ்சிற்குட்பட்ட (உபாத்திமைச்) சங்க மொன்றிற்கு ஒரு பத்திரிகையாகத் தருவித்து அவ்வச் சங்கத்தைச் சேர்ந்த பாடசாலை (உபாத்தியாயர்) கட்குச் சங்க காரியதரிசியால் சுற்றுப் பத்திரிகையாக அனுப்ப ஏற்பாடு செய்வது.

முதலாவது ஏற்பாட்டில் பொருட்செல வின்றியே யன்றி, காலத்தி னதிகம் வீணே மிகுதியாகிறது. இரண்டாவதிலோ அதிககாலம் குறைந்து சொற்பப் பொருட்செலவு ஏற்படுகிறது.

ஆதலால் மேலே கூறிய அசௌகரியத்தை அகற்றி உபாத்திமார்கள் பத்திரிகைகளாலாய பயனை யடையுமாறு பரீக்ஷாதிகாரிகளும் ஏனையோரும் சிரத்தை யெடுத்துக்கொண்டு பெரும் புண்ணியத்தை வகிக்கும்படி வேண்டுகின்றேன்.

P. பரிமணப் பல்லவராயர்.

# ELEMENTARY SCHOOL SYLLABUS

## எலிமென்டரிப் பாடசாலைகளின் பாடஜாபிதா

1. 'நுண்ணியகருமமும் எண்ணித் துணி' என்னும் வாக்கியத்தின்படி, முன்யோசனையோடு செய்யப்படும் காரியங்கள் இனிது முடிகின்றன. ஆகையால் உபாத்தியாயரும் தன் தொழிலுக்கிணங்க, கற்பிக்கவேண்டிய பாடங்கள் இன்னதின்னதென்றும், ஒவ்வொரு பாடத்திலும் கற்பிக்கவேண்டிய விஷயங்கள் இன்னதின்ன தென்றும், முன்னமே ஆராய்ந்து எழுதி வைத்துக்கொள்வது அவசியமாகும். அவ்விதம் எழுதி வைத்துக்கொள்ளப்படுகிற ஜாபிதாவுக்குப் பாட ஜாபிதா (Syllabus) என்று பெயர்.

2 சென்ற சில வருஷங்களாக, ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயராலும் அந்தந்தப் பள்ளிக்கூடத்துக்குத் தகுந்தபடி, ஒரு பாட ஜாபிதா தயாரிக்கப்பட்டு வித்தியாதிகாரிகளின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்படவேண்டு மென்றும், அவர்கள் அதனை அங்கீகரித்ததின்மேல், அப்பாட ஜாபிதாவி

துள்ள விஷயங்கள் ஒழுங்காகப் போதிக்கப்பட்டு வரவேண்டுமென்றும், ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தப்படி ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பெரும்பாலும் நடந்து வருகிறது.

3. 'எலிமென்டரி பாடக்கிரமம்' என்று ஒரு சிறு புத்தகம் கவர்ன்மென்டாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒவ்வொரு பாடத்திலும் கற்பிக்கவேண்டிய விஷயங்கள் இன்னதின்னதென்று விவரிக்கப்பட்டிருக்கிறது, இதைத்தவிர வித்தியாதிகாரிகளும் 'பாட ஜாபிதா' தயாரித்தல் விஷயமாய்த் தங்களுடைய அபிப்பிராயங்களை, அநேக 'சர்க்குலர்கள்' மூலம் தெரியப்படுத்தி யிருக்கிறார்கள். இவை உபாத்தியாயர்களுக்கு விஷயங்களைப் பொருத்திக் கொள்ளத் துணைக்கருவியாகப் பயன்பட்டு வருகின்றன.

4. ஆனால், ஒவ்வொரு எலிமென்டரி ஸ்கூலிலும் பிரதி வருஷமும், வகுப்புவாரியாய், ஒவ்வொரு பாடத்திலும், கற்பிக்கவேண்டிய விஷயங்கள் இன்னதின்னதென்று திட்டமாய் வெளியிடாததற்கும், வித்தியாதிகாரிகள் ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் 'பாடஜாபிதா' தயாரிப்பது அந்தந்தப் பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயருடைய கடமை என்று ஏற்படுத்தி யிருப்பதற்கும் காரணங்கள் அடியிற்கண்டவை போலும்.

(a) எந்தத் தொழிலும் அதனை அடிக்கடி செய்யும் பழக்கமுடையாருக்கே அத்தொழிலுள்ள கடினம் அல்லது சுலபம் தெற்றென விளங்குகிறது. அவ்வனுபவத்தால் அத்தொழிலை இலகுவாய்ச் செய்து அதிக பலனை அடையத்தக்க நூதன வழிகளைக் கண்டு பிடிப்பதில் முயன்று அவ்வாறே சித்தியடைகின்றனர். மாட்டுவண்டி, குதிரைவண்டி, துவிசக்கரவண்டி, மோட்டார் வண்டி, ஆகாயவிமானம் முதலிய வாகனங்களும்; சாதாரண விளக்கு, குளோப் விளக்கு, சிம்னி விளக்கு, பவர்லைட்டு, காந்த விளக்கு, காஸ்லைட்டு முதலிய ஒளிதரும் வஸ்துக்களும், இன்னும் இவைபோன்ற கைத்தொழில் இயந்திரங்களும், மேற்கூறிய அனுபவத்தால் கண்டுபிடிக்கப்பட்டவைகளே. தூக்கணாங்குருவியின் கூடு, தேனீக்களின் கூடு, குளவிக்கூடு முதலிய இதர பிராணிகளால் செய்யப்படும் பொருள்கள் ஆச்சரியப்படும்படியாயும், அவைபோல் பிறரால் செய்யக்கூடாதபடியாயும் அமைந்திருந்தாலும், அவை யனைத்தும் தொன்று தொட்டு ஒரே நிலைமையி



லிருக்கின்றன. நாளுக்குநாள் விருத்தியாயும் வியக்கத் தக்கதாயும் தொழில்களைச் செய்யும் சக்தி, மனித யினத்துக்குமட்டுமே கடவுளால் அளிக்கப்பட்டிருக்கிறது! வித்தியாதிகாரிகள் முதலாக மற்றவர்களைக் காட்டிலும், உபாத்தியாயர்களே மாணவரோடும் பாடங்களோடும் நெருங்கிய சம்பந்தமுடையவராய் இருக்கிறார்கள். ஆதலால் அவர்களால் சிரத்தையுடன் தயாரிக்கப்படும் பாட ஜாபிதாவே ஏற்றதாய் அமையும்.

(b) எலிமென்டரிப் பாடசாலைகளில் வேலை பார்க்கும் உபாத்தியாயர்கள், மெட்ரிகுலேஷன் வகுப்புவரையில் படித்தவராயும், லோயர் செகெண்டரி பரீட்சையில் தேறியவராயும், 5, 6 வகுப்புவரையில் படித்தவராயும் நான்காவது வகுப்பு அல்லது செஷனல் ஸ்கூல் ஸர்டிபிகேட்டு உடையவராயும், டிரெயினிங் ஸ்கூலில் பயின்றவராயும், பயிலாதவராயும், பலவகையா யிருக்கின்றனர். ஆகையால் மேற்கூறிய உபாத்தியாயர்களின் கல்வியறிவின் போதனைசக்திக்குத் தக்கபடி பாட ஜாபிதா அவர்களே ஏற்படுத்திக்கொள்ள வேண்டி யிருக்கிறது.

(c) பட்டணவாசிகள் பெரும்பாலும் நாகரிகமுடையவரா யிருத்தலால் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காக அனுப்பாமையால் உண்டாகுங் கெடுதிகளை யுணர்ந்து, தங்கள் மைந்தர்களைக் காலந்தவறாமல் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவருகிறார்கள். கிராம வாசிகளில் சுமார் பாதிபேர் தங்கள் பிள்ளைகளை, உழவு காலம், பயிரிடுங்காலம், அறுவடைக்காலங்களில் தங்கள் உதவிக்கு வைத்துக்கொண்டு மற்றக் காலங்களில் தான் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறார்கள். ஆதலால் பட்டணத்துப் பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் அளவு கிராமப் பள்ளிக்கூடங்களில் போதிக்க இயலாது. மேற்கூறிய பாடசாலைகளின் நிலைமைக்குத் தகுந்தபடி பாட ஜாபிதா மாறவேண்டியதா யிருக்கிறது.

5. பாட ஜாபிதா தயாரித்தல் விஷயமாய் கவனிக்கவேண்டியவை — உபாத்தியாயர் தனக்குத் தெரிந்தவற்றை யெல்லாம் மனம்போனவாறு எழுதி வைத்துவிடாமல் கூடியமட்டும் ஒரு வருஷ காலத்தில் கற்பிக்கச் சாத்தியமான விஷயங்களை மட்டும் எழுதி வைக்கவேண்டும். விஷயங்கள் குறைவா யிருத்தலுங் கூடாது. அதிகமாய் இருத்தலும் ஆகாது. கால அட்டவணை யின் உதவியால் ஒரு வாரத்தில் ஒவ்வொரு பாடமும் எத்தனை

வேளைகள் (Periods) வருகிறதென்றும், ஒருமாதம் அல்லது ஒருவருஷத்துக்கு சுமார் எத்தனை பீரியட்டுகள் வரக்கூடும் என்றும் அறிந்து அதற்குத் தகுந்தபடி பாட ஜாபிதா அமைத்துக் கொள்ளவேண்டும். மாதவாரியாய் பாடங்களைப் பிரித்து எழுதி வைத்துக்கொள்வது சிலாக்கியமானது. ஒரு தொழிலிலுள்ள குறைவுகள் அதனை அனுபவத்தில் செய்து பார்க்கும் பொழுதுதான் விவரமாய்த் தெரியும். ஆகையால் மேற்சொல்லிய விதமாய் தயாரிக்கப்பட்ட பாடமோ ஜாபிதாவின்படி கற்பித்துவரும்போது தோன்றும் குறைவுகளை உடனுக்குடன் குறித்துவைத்திருந்து வருஷக்கடைசியில் சரியானபடி புதுப்பித்துக் கொள்ளவேண்டும். அவ்விதம் குறித்து வைத்துக்கொள்ளவேண்டிய விஷயங்களாவன —

(a) அதிகமெனத் தெரிந்து நீக்கவேண்டியதற் குரியவை.
(b) போதாதெனத் தெரிந்து சேர்க்க வேண்டியவை.
(c) முன் பின்னாக மாற்றப்பட வேண்டியவை.

6. பாட ஜாபிதாவானது காலத்தை வீணாக்காமல் உபாத்தியாயர்களைத் திட்டமான வேலையில் அமர்த்துகிறது. மாதவாரியாய்ப் பிரித்து எழுதப்பட்ட பாட ஜாபிதா, அந்தந்த மாதத்தில் குறிக்கப்பட்ட விஷயங்களை அந்தந்த மாதத்திலேயே கற்பிக்கக்கூடிய மட்டும் முயலும்படி உபாத்தியாயரைத் தூண்டுகிறது. மேலும் உதவி உபாத்தியாயர்கள் அந்தந்த மாதத்திய விஷயங்களுக்குப் பாடக்குறிப்பு (Notes of Lesson) தயாரித்து ஒழுங்காரக் கற்பித்துவரும்படி தலைமை உபாத்தியாயருக்கு மேல் விசாரணை செய்யும்படி உதவிசெய்கிறது. மராமத்து இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு அவர்களால் முன்னமே தயாரித்து வைத்துக் கொள்ளப்படும் எஸ்டிமேட்டு எவ்விதம் பயன்படுகிறதோ அவ்விதம் உபாத்தியாயர்களுக்கு பாட ஜாபிதா உதவுகிறது.

S. KRISHNAN,
*Headmaster, Board Elementary School,*
*Karungalakudi.*



# STORY TELLING

## கதை சொல்லல்

### ஏழு பொற்கொல்லர்கள்

(முன்தொடர்ச்சி பக்கம் - 201.)

11. அரக்கி தான் கொண்ட எண்ணத்தை எவ்வாறு நிறைவேற்றுவது என்று பலபல எண்ணினாள். முடிவாகத் தன் உறவினராகிய அரக்கர் வாழும் இடத்திற்கு இச் சிறுவனை அனுப்பின் அவர்கள் அவனைக் கொலை செய்து விடுவார்கள் என்று ஒருவாறு தேறினாள். உடனே தான் அணிந்து கொண்டிருந்த ஆபரணங்களையும் உடுத்திக்கொண்டிருந்த உடைகளையும் கழற்றி எறிந்துவிட்டு மிக்க துயரத்துடன் தரையின்மீது புரண்டு அன்று முழுவதும் அழுதுகொண்டே யிருந்தாள். அரச சபை கலைந்த உடன் மன்னவன் அந்தப்புரத்திற்குத் தன் அன்புள்ள காதலியைக் காணுமாறு சென்றனன். அரசன் வருகையைக் கண்ட தோழியர்கள் அரசனை அடைந்து "அரசே, தங்கள் உயிர்க்காதலி இன்று பிற்பகல் தொடங்கி மிகுந்த வருத்தத்துடன் அழுதுகொண்டே யிருக்கின்றாள்" என்றார்கள். இதைக் கேட்ட அரசன் தன்னுயிர்க்காதலி தங்கியிருக்கும் அறைக்குட் சென்று "என் இன்னுயிரன்ன காதலியே, நீ ஏன் வருந்துகின்றனை" என்று அதிவிநயத்துடன் கேட்டனன். அதைக் கேட்ட அரக்கி "என்னை மிருகஜாதிகளில் ஒன்றாகவா மதித்திருக்கின்றனை? எனக்கு என் பந்துக்களிடத்தில் விருப்ப மில்லையா? என் தந்தையின் க்ஷேமத்தை உடனே அறிய விரும்புகிறேன். அவருடைய க்ஷேமலாபத்தைப்பற்றிக் கேள்வியுற்று நீண்ட நாட்க ளாகின்றன. யாரையாவது உடனே அனுப்பி என் தந்தையின் க்ஷேமத்தையறிந்து வருவதோடு, கேட்போர் யாவரும் ஆனந்திக்குமாறு தானே பாடும் தண்ணீரையும், தன்னை யடைந்து உணவு வேண்டியவர்கட்கு அவர்கள் விருப்பத்திற் கதிகமாக உண்டியை அளிக்கும் போஜனகற்பக விருக்ஷத்தையும் கொண்டுவரக் கட்டளையிடவேண்டும்" என்றாள். மீட்டும் அவைகளை எல்லாம் உடனே வரவழைக்க வேண்டும், அவைகளைக் கொண்டு வருவதற்கு ஏற்றவன் புதிதாய் நியமிக்கப்பட்ட சிறுவன்தான் என்றும் அபிப்பிராயப்பட்டாள். அதைக் கேட்ட அரசன் தன் குமாரனாகிய

புதிய சேவகனை விளித்து, "பராக்கிரமசாலியே! என் மனைவி கொடுக்கும் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு அவள் தந்தைபால் சென்று அவர் க்ஷேமத்தை அறிந்துகொள்வதோடு பாடுந் தண்ணீர் போஜனவிருக்ஷம் ஆகிய இரண்டு விநோதப் பொருள்களையும் கொண்டு வரவேண்டும்" என்று கட்டளை யிட்டனன்.

12. அரச குமாரன் மன்னவன் கட்டளையைச் சிரமேற் கொண்டு அரக்கர் வாழும் இடத்தை நோக்கிச் செல்வானாயினன். நெடுநாட்கள் பிரயாணஞ் செய்தான். ஒரு நகரமும் அவன் கண்ணுக்குப் புலப்படவில்லை. மேலே போகப் போக மரங்கள் அடர்ந்த காடொன்று இவனுக்குப் புலப்பட்டது. அக் காட்டில் நெடுந்தூரம் சென்ற பிறகு, மிருகேந்திரனாகிய சிங்கம் ஒன்று இவனெதிரே வருவதைப் பார்த்தான். அந்த பயங்கர ரூபமுள்ள சிங்கத்தைக் கண்ட மாத்திரத்தில் மன்னவன் மகனுக்கு அம் மிருகம் தன்னைக் கொன்றுவிடுமோ என்னும் பயம் உண்டாயிற்று. எனினும் "ஊக்கமது கைவிடேல்" என்றபடி அவன் சிறிதும் தைரியத்தைக் கைவிடாது சிங்கத்தினருகே சென்று "மாமா! மாமா! மருகன் நமஸ்கரிக்கிறேன். தாங்கள் க்ஷேமந்தானே?" என்று கேட்டான். காட்டிற்குள் வந்த வழிப் போக்கனைக் கொன்று தின்று பசியாறலாம் என்னும் எண்ணத்துடன் வந்த சிங்கம் புரவலன் புதல்வன் கொண்டாடிய முறையைக் கேட்டு சிறிது நேரம் யோசித்து இவன் உண்மையாகவே நமது தங்கை மகனாக இருக்கலாம் என்று ஆலோசித்துத் தன் மருகனை அன்புடன் வரவேற்றது. பிறகு "அப்பா மருகனே, இந்தக் குகைக்குள் உனது பாட்டியார் இருக்கிறாள். அவளைக் கண்டு உன் க்ஷேமலாபங்களைச் சொல்" என்று மிருகேந்திரன் சொன்னான். அரச குமாரன் தான் சமயோசிதமாகக் கொண்டாடிய முறை பலித்துவிட்டதென்று களிகூர்ந்து குகைக்குள் சென்று பாட்டியைக்கண்டு வணக்கஞ் செய்தான். குகைக்குள் இருந்த பெண் சிங்கமும் இவன் வருகையை அன்புடன் கொண்டாடியது. அங்கே சில தினம் கழித்து அரசகுமாரன் மேலே செல்வானாயினன். வழியில் ஓநாய் கரடி முதலிய துஷ்டமிருகங்கள் இவனுக்கு எதிர்ப்பட்டன. ஒவ்வொன்றையும் புதிய முறை கொண்டாடி ஏமாறப்பண்ணி நெடுந்தூரம் பிரயாணஞ் செய்தான். நாள் பல கழிந்தனவேயன்றி தான் தேடிச் செல்லும் இடம் எங்கே இருக்கின்றது என்பது அவனுக்குச் சிறிதும் புலப்படவில்லை. காட்டைக் கடந்து வெளியே



வந்த மாத்திரையில் ஓலையாற் கூரை வேய்ந்த வீடு ஒன்று அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. அதனுட் சென்றபோது யோகி ஒருவர் தன்னை மறந்து கண்களை மூடிக்கொண்டு தவஞ் செய்துகொண்டிருப்பதைப் பார்த்தான். இப் பெரியோராலே தான் தேடிச் செல்லும் வஸ்துக்களைக் கைப்பற்றலாம் என்று எண்ணினான். அவர் நிஷ்டைக்கு யாதொரு பங்கமும் நேரிடப்படாது என்று எண்ணி கைகட்டி வாய் புதைத்து ஒரு புறமாக நின்றுகொண்டிருந்தான். நிஷ்டை கலைந்து பெரியவர் கண்களைத் திறந்து அச்சிறுவன் அதிவிநயத்துடன் நின்றுகொண்டிருப்பதை நோக்கினார். இராஜகுமாரன் உடனே அடியற்ற பனைமரம் போல் அவர் காலில் விழுந்து வணங்கி "தவச் சிரேட்டரே! எனக்கு உதவிபுரியுமாறு தங்களை மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். பாடும் தண்ணீரும், போஜன விருக்ஷமும் எங்கே கிடைக்கும் என்பதையும், என்பாலுள்ள கடிதத்திற் குரியவள் எங்கே வாசஞ்செய்கிறாள் என்பதையும் அறிய விரும்புகிறேன்" என்று பணிவாய்ப் பகர்ந்தனன். தவச் சிரேட்டர் "நீ இற்றைய இரவை என்னுடன் கழிப்பையாயின் அவைகளைச் சேகரிக்கும் உபாயத்தை நான் உனக்குப் போதிப்பேன்" என்றார். இராஜகுமாரனும் அவர் விருப்பத்தின்படி அவ்விரவு அங்கேயே தங்கினான். யோகி அவன் அயர்ந்து உறங்கும் சமயம் பார்த்து அவன் சட்டைப் பையிலுள்ள கடிதத்தைப் பிரித்து வாசித்துப் பார்த்தார். அதில், "இக்கடிதம் கொண்டுவரும் ஆளை உடனே கொன்றுவிட வேண்டியது" என்று எழுதியிருந்தது. அக்கடிதத்தை நெருப்பில் எரித்துவிட்டு "இக்கடிதம் கொண்டுவரும் சிறுவன் எனது குமாரனும் உங்கட்கு மருமகனும் ஆவன். இவனைப் பக்ஷமுடன் பார்த்து இவனுக்கு வேண்டியவைகளை எல்லாம் தவறாமல் கொடுத்தனுப்புங்கள்" என்று வேறொரு கடிதம் எழுதி அவன் சட்டைப் பையில் வைத்துவிட்டார். பொழுது விடிந்தது; புரவலன் புதல்வன் நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு தவச்சிரேட்டரை யடைந்து தான் போகவேண்டிய மார்க்கம் எதுவென்று பணிவாய்க் கேட்டான். தவசியும் அவன் செல்ல வேண்டிய அரண்மனை யிருக்கும் இடத்திற்கு வழியைக் கூறி "மைந்தனே, உன்னுடைய காரியங்கள் முடிவெய்தி நீ வீட்டிற்குத் திரும்பும் போது அங்கே உள்ள எலும்புகளை எல்லாம் ஒரு சிறிதும் விடாமல் கொண்டுவா" என்று கட்டளை யிட்டார். அரச குமாரன் அவர் கட்டளையை ஏற்று அரண்மனையைத் தேடிச் சென்றான்.

13. நெடுநாள் கழிந்தது. அரச குமாரனுக்குத் தான் தேடிச் செல்லும் இடம் புலப்படவில்லை. அவன் மனோதைரியத்தைச் சிறிதும் விடாமல் மேன்மேலும் பிரயாணஞ் செய்தான். நெடுநாள் சிரமப்பட்ட பிறகு அரக்கர் வாழும் அரண்மனை அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. அம்மாளிகை வாயிலில் காத்துக் கொண்டிருக்கும் சேவகன் கையில் தான் கொண்டுவந்த கடிதத்தைக் கொடுத்தான். அக்கடிதம் அவ்வரண்மனை அதிகாரிக்கு எழுதப்பட்டிருந்தமையின் சேவகன் ஓடோடியும் சென்று அக்கடிதத்தை அதிகாரிகையில் சேர்ப்பித்தான். அவ்வரண்மனை அதிகாரியும் மாயப்பெண்ணின் தமையனுமான பெரிய அரக்கன் தன் தங்கைக் குமாரனை மிகவும் பக்ஷத்துடன் வரவேற்று வேண்டிய உபசாரங்கள் செய்தான். இதுவேயன்றி தன் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்ட அரக்கர்களை எல்லாம் ஒன்றுசேர்த்து தன் தங்கைக் குமாரன் ஏவும் கட்டளைகளை எல்லாம் தவறாமல் செய்யவேண்டுமென்று உத்தரவு கொடுத்தான். பிறகு தன் மருகனைத் தன் தாயாரிடம் அழைத்துச் சென்றான். அவள் அரச குமாரனை மார்புறத் தழுவிக்கொண்டு உச்சிமோந்து தன்னுடனே சில காலம் தங்கும்படி விரும்பினாள். இராஜகுமாரனும் அவள்கருத்திற் கிணங்கி அவ்வரண்மனையில் சிலகாலம் சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தான் எனினும் தான் வந்த காரியத்தை எப்போது முடிப்பது என்று அந்தரங்கமாக ஆலோசித்துக்கொண்டேயிருந்தான். அரக்கர்கட் கெல்லாம் தன்மீது சந்தேகம் சிறிதும் வராதபடி நடந்துகொண்டான். அரக்கர்களும் இவனை உள்ளன்புடனே நேசித்தார்கள். இது இவ்வாறிருக்க அரச குமாரன் ஒருநாள் தான் பாட்டி என்று முறைகொண்டாடும் அரக்கியினிடம் சென்று "என் அன்புள்ள பாட்டியாரே! உங்கள் மீது எனக்கு அளவிறந்த அன்பு உண்டாகிவிட்டது. உங்கட்கு ஏதாவது அபாயம் வந்தால் யான் என்ன செய்வது என்று வருந்துகிறேன். தங்கள் உயிர்நிலை எங்கே இருக்கிறது என்பதை அறிய மிகவும் ஆவல் உள்ளவனாக இருக்கின்றேன்" என்று சொன்னான். அதைக் கேட்ட அரக்கி "நாங்கள் அரக்கர்கள். நாங்கள் இறப்பதற்குப் பயப்படோம். எங்கட்கு அழிவு உண்டாவது அசாத்தியம்" என்று சொல்லி, ஒரு பெரிய அறைக்குள் அவனைக் கூட்டிக்கொண்டு சென்றாள். அங்கே மயில், குயில், கிளி, புறா, நாரை முதலிய பல பக்ஷிகள் கூடுகளில் அடைக்கப்பட்டிருந்தன. அரக்கி அவைகளைக் காட்டி "அரச குமாரனே!



இவைகள் தாம் எங்கள் உயிர்நிலைகள். இவைகள் உயிருடன் இருக்கும் வரையில் எங்கட்கு அழிவே கிடையாது. இப் பக்ஷிகளைக் கொல்ல யாவராலும் முடியாது" என்றாள். அரசகுமாரன் "பாடும் தண்ணீரும், போஜன விருக்ஷமும் பார்க்க விரும்புகிறேன்" என்றான். அரக்கி வேறொரு அறைக்குள் அழைத்துச் சென்று அவன் விரும்பிய பொருள்களைக் காண்பித்தாள். மன்னவன் மகனும் தான் வந்த காரியம் முடிவுபெற்றது என்று எண்ணிக்கொண்டு தக்க சமயம் எப்போது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தான். (இன்னும் வரும்)

ஒரு தமிழ்ப் புலவர்.

# EXCELLENCE OF FEMALE EDUCATION

## பெண் கல்விப் பெற்றிமை

(பண்டிதர் சி. வே. சண்முக முதலியார் பாடியது.)

(அறுசீர் விருத்தம்.)

1

பெண்டுகள் கலைப யின்றாற் பெற்றதஞ் சிறாருங் கல்வி
கொண்டிசை மருவி வாழுங் குணஞ்செறிந் துறுமா றன்னோர்
பண்டைநாற் பயன்பா லர்க்கும் பயிற்றிடற் பால ராவர்
எண்டகு நலத்திச் செய்கை யெங்ஙனங் கல்லார்க் கெய்தும்.

2

தையலர் கலைப யின்றால் தமக்கெலா நலனு நண்ண
வையமே லறிஞ ராற்றி வயங்குறா னுணுக்க நோக்கிக்
கையமர் நெல்லி போலுங் காண்பொருள் சுவைக்குந் தோறும்
மையறு மனத்துற் சாக மல்குவார் நல்கு மாற்றால்.

3

மங்கையர் கலைப யின்றால் மக்களுக் குற்ற நோய்க்கங்
கிங்கித லாயுர் வேத மியம்பு மோடதியி னேற்றத்
தங்களா ராய்ச்சி யின்கண் டருந்தகா தெனத்த ருக்கி
மங்களோ டதம திந்து வழங்கிநோய் மழுங்க வைப்பார்.

4

வனிதையர் கலைப யின்றால் வறுமைசேர் காலத் தந்த
வினையினை விவேகத் தாலே விலக்குவா ரன்றிக் கொண்கன்
தனையொரு போதும் நோகார் தம்பசி யடக்கி நாதற்
கினியன வருத்தி யைய மிட்டுணுஞ் சுகிர்த மேற்பார்.

5

பாவையர் கலைப யின்றால் பல்வகைச் சாத்தி ரார்த்தம்
யாவையும் பிறரு ணர்த்தா தறிகுவர் தம்வ யத்தே
தேவியர் கருப்ப மெய்தின் தேகதத் துவந்தெ ரிந்து
காவல்செய்ப் பிரசவ நூலுங் கணிக்கலாங் குணிக்க லாமே.

6

காந்தையர் கலைப யின்றால் கணவனைக் கணிகை யென்னும்
பாந்தள்வாய்த் தேரை யொத்தப் பார்வையின் வலைப டாது
தாந்தனி யன்பி னாலே தனித்தனோன் பிறன்ம னைப்பால்
போந்திழை பிழையும் போக்கிப் பொருத்துவார் திருத்துவாரே.

7

மடந்தையர் கலைப யின்றால் மற்றொரு புருடன் தம்மை
அடைந்துறுஞ் சுகத்தை வேம்புக் கனையதென் றறிந்தன் னோனை
விடந்தனை யொக்க வெண்ணி விதியினிற் கற்பைக் காக்குந்
திடந்தனை யுடைய ராவர் தீயரை விலகிப் போவர்.

8

நங்கையர் கலைப யின்றால் நல்லொழுக் கஞ்சேர் வாழ்க்கை
மங்கைய ராகுஞ் சந்த்ர மதிதம யந்தி சீதை
அங்கைசா வித்ரி கற்பி னருந்ததி நளாயி னிப்போல்
தங்களை நடத்திக் காட்டுந் தன்மைய ராதன் மெய்ம்மை.

9

கோதையர் கலைப யின்றால் குணமிகுங் குடும்பத் திற்கும்
ஆதர வாகு மேலு மன்னலை யோர கத்தி
சோதரி நாத்தி மாமி தோழியர் மற்று முள்ள
மாதரு மதிப்பார் பக்க மன்னுவார் பன்னு வாரே.



10

காரிகை கலைப யின்றால் கணவனைக் கருதி யன்னோன்
காரிய மீதனிற் றானுங் கலந்துநற் றுணைவி யாகிப்
பாரினி லொற்று வாழும் பண்பமர் பரிவு பற்றிச்
சீரிய லொழுக்க மெய்திச் சிறப்புறுஞ் சிவணுஞ் சீர்த்தி.

11

பூவையர் கலைப யின்றால் பூடண விருப்ப மெய்தா
தாவிநேர் கொழுநற் கன்பி னமைந்தவன் வருவாய்க் கேற்ப
யாவையு மில்லத் தோம்பி யகத்துள மாமி மாமற்
கோவியப் பதுமை போலு மோங்குவார் தாங்கு வாரே.

12

நாரியர் கலைப யின்றால் நாணமச் சம்ப யிர்ப்பு
சீரியல் மடமை யாதிச் சிறப்புறு முரிமை தோன்றி
கோரபா தகமைந் தென்னுங் கொலைகள வவத்த மத்தம்
ஆரிய நிந்தை யாதி யகலுமெவ் விகலு மேவா.

13

அரிவையர் கலைப யின்றா லறிவதி கரிக்கு மஃதாற்
பெரியதோர் ஞான மெய்தும் பேசருந் தெய்வ பக்திக்
குரியதே யதுவாய் நிற்கு முண்மையா ராய்ச்சி மேவும்
பிரிவுறு தொளிமு கத்திற் பிறங்கிடும் பிளிறும் பிடை.

14

பேதையர் கலைப யின்றாற் பேதமை நீங்கி ஞான
சாதன சதுஷ்ட யத்தின் தன்மைசே ருண்மை சாரும்
வேதனை யுறுமி கத்தை வெறுத்திடும் பரத்தைத் தேறும்
ஆதலால் நமது தேயத் தரிவையர் படித்தல் வேண்டும்.

*Tiruvallore,*
*Chingleput Dt.*
*10-6-'18.*

C. V. SHANMUGA MUDALIAR,
*Sessional Schoolmaster, and*
*Secretary to the Teachers' Association.*

217 முதல் 232 வரையில் பேஜ் நெம்பர்கள் 121 — 136 ஆக மாறி விட்டன. திருத்திக்கொள்க.

# VERNACULAR ATLAS GEOGRAPHY SERIES

BOOK I

MADRAS PRESIDENCY

By

K. DORAISAWMY IYENGAR

## படங்களை ஒட்டின பூகோள சாஸ்திரம்

முதற் புத்தகம்

## சென்னை இராஜதானி

இது

சென்னை வித்தியா இலாகா இன்ஸ்பெக்டர் எச். ஏ. ஹார்ட் துரையவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரால் முகவுரை எழுதப்பெற்றது.

இச்சென்னை இராஜதானி பூகோள சாஸ்திரம் எளிய நடையில் அனுபவத்தை ஒட்டி, காரணகாரிய சம்பந்த முறையில் எழுதப்பட்டுள்ளது. பூகோளமும் அதற்குதவியான படங்களும் சேர்ந்து அமைக்கப்பட்டு இருப்பதனுல், அடிக்கடி படங்களைக் கவனித்து, பூகோள சாஸ்திர விஷயங்களை பிள்ளைகள் பிரீதியுடன் ஸுலபமாய்த் தெரிந்து கொள்வது ஸாத்தியமாகின்றது. படங்களைப் படித்து இயற்கைக் காரணங்களை ஊகித்து, அவற்றினுல் உண்டாகும் பலனை கவனிப்பது பிள்ளைகளுக்கு மிக்க உத்ஸாகத்தை ஊட்டுகின்றது. காரணம் தெரியாமல் விஷயங்களைப் பதித்து வைக்கும் பொக்கிஷமாகப் பிள்ளைகளைக் கருதாமல், அவர்கள் தம்தம் மனப் பயிற்சியால் விஷயங்களைக் கண்டு கொள்ளுதலே மேலான போதனு பத்ததி.

இந்நூலாசிரியர் பல வருடங்கள் இப்பாட போதகராய் இருந்ததினுலும், இராஜதானி முழுவதும் பிரயாணம் செய்து அவ்வவ்விடத்து அந்தந்த கால நிலைமைகளைக் கவனித்துத் தெரிந்துகொண்டாராகையாலும், இப் பூகோள விஷயங்களைப் பாலர் மனப் பயிற்சிக் கேற்ப, கடினமானவற்றை நீக்கி, பிள்ளைகள் அனுபவத்தில் வருபவற்றுடன் சேர்த்து, தக்கவாறு பிள்ளைகள் அறியுமாறு இப்புத்தகத்தை எழுதியிருக்கிறுர். ஆங்காங்கு தகுதியான அப்பியாசக் கேள்விகளும் சேர்க்கப்பட்டு இருக்கின்றன.

பிரதம வித்தியா பாடசாலை உபாத்தியாயர்களும் மாணவர்களும் பூகோள சாஸ்திர விஷயங்களைக் கவனித்து நன்ருய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதே இந்நூலாசிரியரின் முக்கிய நோக்கமாகையால் அந்நோக்கம் சித்தி பெறுமாயின் இப்புத்தகம எழுதினதின் பலன் பன்முறையும் அடைந்ததாக எண்ணுவதற்கு இடமுண்டு. (விலை 8 அணு.)

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
35, சின்னதம்பி தெரு, சென்னை.




மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1918ஷ ஏப்ரல்மீ | மாதம் 11

## THE NILGIRIS

## நீலகிரி

நீலகிரி என்னும் மலையின் பெயரை எவரும் கேட்டிருப்பர்
சிலர் நேரிற் சென்றும் பார்த்திருப்பர். இம்மலையின் காட்
பார்ப்போர் கண்ணையும் மனத்தையும் கவரும் சிறப்பினை யுடை
யது. அங்கே சென்று காண்போர் தாம் தேவலோகத்தில் இருந்
இன்பங்களை அநுபவிப்பதாக எண்ணுமற் போகார். இயற்கை
யின் வனப்பையும் இறைவனது படைப்பின் ஏற்றத்தையும் அங்
தான் கண்டு மகிழலாம்போற் காண்கின்றது. மற்றும் இதக
இயற்கை நலன்களை எழுதியாகாது.

நீலகிரி என்னும் பெயர் இம்மலைக்கு எவ்வாறு ஏற்பட்டது என்பதைமட்டும் ஈண்டு ஆராய்வோம். இம்மலையின் பெயர் சிலப்பதிகாரம் முதலிய பண்டைத் தமிழ் நூல்களிலும் காணப்படுகின்றது. இதன் பொருள் என்னவென்று ஆராயப்புகுங்கால் பலர் பலவிதமாகக் கூறுவர். உண்மையை விசாரிக்குங்கால் இப் பெயர் அம்மலைமீது அதிகமாக இருந்த ஒரு செடியைப் பற்றிவந்த பெயர் என்பது விளங்குகின்றது. என் நண்பர் ஸ்ரீமான் தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்களிடம் 'குறிஞ்சி' என்னும் செடியைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் அவர்கள் குறிஞ்சிச் செடி மிகவும் சிறப்புவாய்ந்த தென்றும், அது பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு முறையே புஷ்பிக்கும் இயல்புடைய தென்றும் அம்மலர் நீலநிறமுடையதென்றும், அக் குறிஞ்சிச் செடி மலிந்துள்ள காரணம்பற்றி நீலகிரி என்று அம்மலைக்குப் பெயர் வந்ததென்றும் தெரிவித்தனர்.

இவ் விடுமுறை காலத்தே யான் நீலகிரிக்குச் சென்றிருந்தபோழ்து, அங்குள்ள என் நண்பரும் தாவர சாஸ்திரத்தில் ஆழ்ந்த அறிவுள்ளவரும் துரைத்தன உத்தியானவனத்தில் மேற்பார்வையாளரும் ஆகிய ஸ்ரீமான் ஆரோக்கியசாமிப்பிள்ளை யவர்களும் இவ்விஷயத்தை விளங்கக் கூறி நீலகிரிப் பெயரின் உண்மை நிறுவினர். அன்றியும் அக் குறிஞ்சிச் செடி நான்கு வருடங்களுக்கு முன்புதான் மலர்ந்ததென்றும் அதன் நீலநிறம் வெகு அழகாக இருந்ததென்றும் வியந்து கூறினர். நீலகிரியில் என்னை ஏற்று உபசரித்த என் ஆப்த நண்பரும் முனிசிபல் கவுன்ஸிலரும் ஆகிய ஸ்ரீமான் வி. சின்ன கிருஷ்ணப் பிள்ளையவர்கள் அம்மலையின் பல்வேறு இடங்களுக்கும் அழைத்துக்கொண்டுபோய் அம்மலைக் காட்சிகளைக் கண்டு ஆநந்திக்கச் செய்தனர். அவ்வாறு செய்துவந்த பிரயாணத்தில் மற்றும் சில உண்மைகளும் விளங்கின. அவற்றை எல்லாம் அடுத்த சஞ்சிகையில் எழுத எண்ணி இருக்கின்றேன். அதற்குள் என் நண்பரிடமிருந்து குறிஞ்சிச் செடியும் குறிஞ்சி மலரும் எதிர்பார்க்கிறேனாதலின், அவற்றின் படத்துடன் விவரங்களை எழுதுவேனாக. இந்த உண்மை தெரிதற்கும் அம்மலைக் காட்சியைக் காண்பதற்கும் காரணமாக இருந்த என் நண்பரும் சென்னைக் கவர்னர் பிரைவேட் ஸெகிரிடெரீ



ஆபீஸ் சூபரின்டென்டெண்டுமாகிய ஸ்ரீமான் சி. பார்த்தசாரதி நாயுடு அவர்கட்கு யானும் என்னுடன் வந்திருந்த நண்பர் ஸ்ரீமான் ஆதிகேசவுலு நாயுடு அவர்களும் நன்றி பாராட்டுகின்றோம்.

குறிப்பு :— தமிழ் மக்கள் பூமியை நானிலம் என்பர். நானிலம் என்றால் நான்கு விதமான நிலத்தினை உடையது என்பது பொருள். அவை — குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாம். குறிஞ்சி - மலையும் மலையைச் சார்ந்த இடமும்; முல்லை - காடும் காட்டைச் சார்ந்த இடமும்; மருதம் - வயலும் வயலைச் சார்ந்த இடமும்; நெய்தல் - கடலும் கடலைச் சாந்த இடமும் ஆகும். இந்த நான்கு நிலங்களும் அந்தந்த நிலத்திற் சிறந்து விளங்கும் மரங்களைக் கொண்டு பெயர் பெற்றன. அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இதில் குறிஞ்சி என்னும் செடியின் மலரின் காரணமாக நீலகிரிக்குப் பெயர் வந்தது காண்க.

பத்திராதிபர்.

# STORY TELLING

## கதை சொல்லல்

### ஏழு பொற்கொல்லர்கள்

(முன்றொடர்ச்சி பக்கம் - 237.)

14. ஒருநாள் அரண்மனையிலிருந்த எல்லோரும் தங்கள் பந்துக்களின் கல்யாணத்தின்பொருட்டு வெளியே சென்றிருந்தார்கள். மன்னவன் மகன் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்னும், பழமொழியை மறவாதவனாய்ப் பக்ஷிகளை அடைத்து வைத்திருக்கும் கூட்டைத் திறந்து, ஒரு பெண் மயில் தவிர எல்லாப் பக்ஷிகளையும், கொன்றுவிட்டான். உடனே அரக்கரின் பிணங்கள் கோட்டை வாயிலண்டை நிரம்பிவிட்டன. அரசகுமாரன் பெண் மயிலையும் பாடும் தண்ணீர் வைத்திருக்கும் பாத்திரத்தையும், போஜன விருக்ஷத்தில் ஒரு கிளையையும் எடுத்

துக்கொண்டு வெளியே புறப்பட்டான். அங்கே உள்ள எலும்புகளை எல்லாம் தவறாமல் கொண்டு வரவேண்டும் என்று தவச்சிரேட்டர் சொல்லியது இவனுக்கு ஞாபகம் வந்தது. மீட்டும் அரண்மனைக்குட் சென்று, எலும்புகளை எல்லாம் வாரி எடுத்துக்கொண்டு யோகி இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான். வந்ததும் எலும்புகளை எல்லாம் தவச்சிரேட்டருக்குக் கொடுத்தான், அவர் பாடும் தண்ணீரில் சிறிது எடுத்து அவ் வெலும்புகளின்மீது தெளித்தார். கண்டோர் யாவரும் வியக்குமாறு எண்ணிறந்தவர் உயிர்பெற்றெழுந்தார்கள். இவ்வாறு உயிர்பெற்றெழுந்தவர்களுள் அரக்கர் மாளிகையில், மாய ஆடு உறிஞ்சியதால் உயிர் துறந்த ஆறு பொற்கொல்லரும் காணப்பட்டார்கள். இந்த ஆறு பொற்கொல்லர்களும் தங்களை உயிர்ப்பித்த உத்தம புருஷன் யாவன் என்று உணருமாறு தவச்சிரேட்டரை உற்று நோக்கினார்கள். சிறிதுநேரம் கழித்துத் தவவடிவம் தாங்கியிருப்பவன் தங்களுடன் மாய மாளிகைக்கு வந்த தங்கள் நண்பனாகிய ஏழாவது பொற்கொல்லன் என்று உணர்ந்து கொண்டார்கள். தங்கள் நண்பன்தான் தங்களை உயிர்ப்பித்தான் என்று உணர்ந்துகொண்ட மாத்திரத்தில் இவர்கட்கு உண்டான சந்தோஷத்திற்கு வரம்பில்லை. தவசியாகிய பொற்கொல்லன் தான் அரக்கர் சூழ்ச்சியினின்றும் தப்பித்துக்கொண்டது முதல் அவர்களை உயிர்ப்பிக்கச் செய்தது வரையில் நடந்த விருத்தாந்தங்களைத் தன் நண்பர்கட்குப் பரக்கப் பகர்ந்தனன்.

15. பிறகு யோகி அரசகுமாரனுக்கு அவன் வரலாறு முழுவதும் பகர்ந்து, அவன் தகப்பனிடத்தில் புதிய அரசியாக வந்திருப்பவள் அரக்கி என்றும், அவளுடைய சூழ்ச்சியினாற்றான் அரசன் பட்டமகிஷிகள் எழுவரையும் சிறையிலிட்டான் என்றும், அவள் இறந்துபடும் காலம் நெருங்கிவிட்டதென்றும், அரசனிடத்தில் அவள் கொடுமையை வெளிப்படுத்தவேண்டும் என்றும் தீர்மானித்தனன். உடனே பொற்கொல்லர் எழுவரும், அரசகுமாரனும் அரக்கி வாழும் நாட்டை நோக்கிப் பிரயாணமானார்கள். வழியில் அரசகுமாரன் தான் முன்வந்த காட்டுக்குள் நுழைந்து அங்கே தான் முதலில் உறவாடிய சிங்கம், புலி, கரடி, யானை முதலிய மிருகங்கள் ஒவ்வொன்றினையும் பார்த்துத் தன் காரியம் முடிவெய்திய வரலாற்றைச் சொன்னான். மிருகங்கள் எல்லாம் அவன் ஆற்றலை வியந்து தங்கள் தங்கள் குட்டிகளில் ஒவ்வொன்றைத் தங்கள் ஞாப-



கார்த்தம் வைத்துக்கொள்ளும்படி அரசகுமாரனுக்குக் கொடுத்தன. அரசகுமாரன் தன் நண்பர்கள் கொடுத்த வெகுமதிகளை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு தன் தந்தை வாழும் நாட்டை வந்து சேர்ந்தனன். நாட்டையடைந்ததும் மன்னவன் மகன் செப்படி வித்தைக்காரன்போல் வேஷம் தரித்துக்கொண்டு சிங்கம், புலி, கரடி முதலிய துஷ்ட மிருகங்கள் தன்னைச் சூழ்ந்துவர அந்நகரத்துள்ள வீதிகளில் எல்லாம் திரிந்துகொண்டேயிருந்தான். பொற்கொல்லர் எழுவரும் அரசனிடத்தில் சென்று தாங்கள் ஜால வித்தை செய்வதில் வல்லவர்கள் என்றும் 'அரக்கர் வெளிப்பாடு' என்னும் ஓர் அற்புத ஆட்டத்தை ஆடிக்காட்ட விருப்பம் உண்டென்றும் அதை அரசனும் அரசியும் வந்து பார்த்துச் சந்தோஷிக்க வேண்டும் என்றும் விண்ணப்பித்துக் கொண்டார்கள். அரசன் அவர் வேண்டுகோட்கிரங்கி நாள் குறித்துப் பார்க்கச் சம்மதித்தனன். செப்படி வித்தைக்காரர்கள் வேடிக்கை காண்பிக்கப் போகிறார்கள் என்னும் சேதி நகரமெங்கும் பரவியது. செப்படி வித்தைக்காரனாகிய அரசகுமாரன் தன் மிருகங்களை எல்லாம் அழைத்துக்கொண்டு அரண்மனையை அடைந்தான். நகரமாந்தர் எல்லோரும் திரள்திரளாய் வேடிக்கை பார்க்க வந்திருந்தார்கள். எல்லோரும் ஒன்றுசேர்ந்ததும் செப்படி வித்தைக்காரன் வேய்ங்குழலை எடுத்து வாசித்தான். மிருகங்கள் எல்லாம் அவனைச் சுற்றிச் சுற்றிக் கூத்தாடின. பிறகு போஜன விருக்ஷத்தின் கிளையை எடுத்து ஓர் புறமாக நட்டான். அது உடனே பெரிய விருக்ஷமாக வளர்ந்து அங்கு ஒன்று சேர்ந்திருப்போர்கள் எல்லாம் மகிழும்வண்ணம் உண்பதற்கு உண்டியும், சிற்றுணவும் கொடுத்தது. பிறகு ஒரு பெரிய பள்ளம் வெட்டி அதில் பாடும் தண்ணீர் நிரம்பிய பாத்திரத்தை எறிந்தான். உடனே பள்ளம் முழுவதும் தண்ணீர் நிரம்பியதோடு சபையோர் எல்லாம் கேட்டு ஆநந்திக்கும்வண்ணம் பாடலைப் பாடியது. இவ்வாறு எழுநாள் நடைபெற்றது. ஏழாம்நாள் முடிவில் இனி யான் காண்பிப்பது 'மயில் ஆட்டம்' என்று சொல்லி, தன் வசத்துள்ள பெண் மயிலை ஆடும்வண்ணம் கட்டளையிட்டான். பெண் மயில் ஆடிற்று. உடனே அரசனுக்கருகே அமர்ந்திருந்த அரசியும் தன் ஆதனத்தைவிட்டெழுந்து ஆடத் தொடங்கினாள். அரசன் தன் மனைவி ஆடுவதைக் கண்டு நடுக்கமுற்றானெனினும் ஒன்றும் விளம்பவில்லை. உடனே செப்படி வித்தைக்காரன் மயிலின் ஒரு காலை முறித்து

எறிந்தான். அரசியின் காலொன்று முறிந்து வீழ்ந்தது. பிறகு மயிலின் இரக்கை ஒன்றை ஒடித்தெறிந்தான். அரசியின் கைகளில் ஒன்று ஒடிந்துபோயிற்று. கடைசியாக மயிலின் கழுத்தை முறித்துக் கொன்றான். அரசி பெருங் கூச்சலிட்டு, நாற்பது கஜம் நீளமுள்ள தன் பழைய அரக்க ரூபத்தை எடுத்து, பூமியின்மீது அடியற்ற பனைபோல் விழுந்து உயிர் துறந்தாள். அரசி, அரக்கியாக மாறி இறந்துபட்டதைக் கண்ட நகரமாந்தர் எல்லோரும் நடுக்க மெய்தினர். செப்படி வித்தைக்காரன் அரசன் திருமுன் சென்று 'அரசே! உன் அரசாட்சியைக் கெடுத்தவள் இவ்வரக்கியே' என்று சொல்லி மறைந்து போயினன்.

16. சிறிது நேரம் கழித்த உடன் ஏழு பொற்கொல்லர்களும் ஏழு பட்டமகிஷிகளையும், ஏழு அரசிளங்குமரர்களையும் அழைத்துக்கொண்டு ராஜசபையை அடைந்து, 'மன்னவர் ஏறே! தாங்கள் யாதொரு காரணமுமின்றித் தண்டித்த தங்கள் மனைவியர்கள், இவர், இவ்வேழு சிறுவர்களும் தங்களுடைய அருமந்த புதல்வர்கள் இவர்களைத் தாங்கள் அங்கீகாரம் செய்யவேண்டும்' என்று சொல்லி, நடந்த விருத்தாந்தங்களை ஆதியோடந்தமாகப் பகர்ந்தனன். இதைக்கேட்ட நகரமாந்தரும் அரசனும் அடைந்த சந்தோஷத்தை என்னென்று சொல்வது? உயிர் துறந்த அரசனுடைய குதிரையும் நாயும் அருமந்த புதல்வனும் பாடும் தண்ணீரால் உயிர் பெற்று எழுந்தார்கள். நகரம் முழுவதும் ஆநந்தமயமாய் இருந்தது.

ஒரு தமிழ்ப் புலவர்.

## ILLUSTRATIONS

### உபகரணங்கள்

உபாத்தியாயர்கள் தமது போதனைக்குச் சாதனமாகக் கொள்ளும் எவ்வகைப் பொருட்களும் உபகரணங்கள் எனப்படும்.

முற்காலத்து உபாத்தியாயர்கள் உபகரணங்கள் என்னும் இச் சொல்லையே கேட்டிருக்கமாட்டார்கள். அக்காலத்தில் அவர்களுக்கு அருத்தப் புத்தகங்களும் விஷய வினாவிடைப் புத்தகங்களுமே



உபகரணங்களாக உபயோகப்பட்டு வந்தன. அப் புத்தகங்களைப் பிள்ளைகள் உருப்போட்டு வரச் செய்தல் வழக்கமாயிருந்தது. நாளேற வேற இவ் வழக்கம் மூளைக்கேயன்றி ஏனைய இந்திரியங்களுக்கு வேலையை ஒருங்கே தராக்குறையால் அவை சோம்பிப் போதலை யுன்னி வித்தியாதிகாரிகள் அவ்வழக்கத்தை விலக்கினார்கள். அப்பால் இடைக்கால உபாத்தியாயர்கள் பொருட்பாடப் படங்களையும், பூகோளப் படங்களையுமே உபகரணங்களாக உபயோகித்து வந்தார்கள். இவர்கள் காலத்திலேயே இயற்கைப் பாடங்கள் வெளிவந்து இப்போது நலை காட்டிச் சிறந்து பரந்து விளங்கா நிற்கின்றன.

இக்காலத்து உபாத்தியாயர்கள் நூதன போதனை முறையைச் சாதனமாக அநுசரித்து எவ்வகைப் பாடமாயினும் அதை உபகரணங்களோடு போதிக்கவேண்டிய இன்றியமையாப் பொறுப்புக்கிணங்கி அவ்வாறே யியற்றிப் பாடம் பாலர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதியப்பார்க்கும் தயாநிதிகளாய்த் தயங்குகின்றனர். உபகரணங்களோ எண்ணிறந்தன. ஒவ்வொரு பாடத்திற்கும் ஒன்றல்ல இரண்டல்ல பல உபகரணங்களைக் கையாண்டு பயன் படுத்தவேண்டி யிருக்கின்றன. அவ்வுபகரணங்கள் எவை என்பதை இனி இதனடியி லியன்றவாறு இணக்கிக் கூறுவோம் —

'எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்' என்னும் வாக்கியத்தில் முன்னர் எண்ணைக் குறித்து இயம்பியிருக்கிற முறையில் நாமும் முந்தி அதைக் குறிக்க முந்துவோம்.

இதுகாறும் கணிதமெனும் பெயரால் வழங்கிவந்த கணக்கை இப்போழ்து இட எண்வேலை (Space and Number Work) என வித்தியாதிகாரிகள் பெயரை விளக்கியிருக்கின்றனர். இம் மாற்றுப் பெயராலேயே இப் பாடத்தை உபகரணங்க ளின்றி உணர்த்த இயலாதென்பதை ஊகித்தறியலாகும். எவ்வாறு பெயர் மாறியுளதோ அவ்வாறே போதனையும் மாறியுளது. இடம்+எண்+வேலை — இடத்தைக்கொண்டு எண்ணைக் கற்பிக்கும் வேலை எனினும் பொருந்தும். உதாரணமாக ஒரு சிறு கணக்கை உரைப்போம்—ஓரடிச் சதுரக்கல் போடவேண்டிய இடத்திற்குக் காலடிச் சதுரக்கற்கள் எத்தனை வேண்டும்? என்று கேட்டால் பத்தில் ஒன்பதுபேர் (படித்தவர்களே) ஓரடிச் சதுரக் கல்லுக்கு

நான்கு காலடிச் சதுரக்கற்கள் வேண்டுமென்பார்கள். நான்கு பக்கங்களிருக்கின்றனவே ஓரடிச் சதுரம் என்றால் நான்கு பக்கங்களும் ஓரடி அளவைக் கொண்டுள்ள சதுரமாயிற்றே, ஒரு பக்கத்திற்கு ஓரடிக்கு 4 காலடியாகிறதே அவ்வாறு 4 பக்கங்கட்கும் $4 \times 4 = 16$ காலடி கற்களாகுமே என யோசித்துச் சொல்லார்கள். இத்தகைய சுலப விஷயங்களுக்குக்கூட விடைகூறச் சக்தியற்றவர்களாகப் படியாதவர்களன்றிப் படித்தவர்களும் தவறிப்போவதை நோக்கியே இவைபோன்ற கணக்குகளைப் பிணக்கின்றிப் போதிக்கச் சதுரக் கட்டங்களமைந்த போர்டுகளைத் துரைத்தனத்தார் நகரங்களுக்கேயன்றிக் குக்கிராம பாடசாலைகளுக்கும் கொடுத்து வருகின்றனர். இந்தக் கரும்பலகையின் உபயோகங்களைத் தெரிந்துகொள்ளாச் சிலரும் தெரிந்த பலரும் நாளடைவில் சிரமத்தை முன்னிட்டு அதாவது போதனை முறைப் பாடசாலையிற் பயின்று வந்த முதலில் சிலதினங்கள் டிரெயினுங்குக்குப் போகாதவரைவிடத் தாம் மேம்பட்டவர்களென நிரூபிக்கும் நிமித்தம் முடுக்கைக் காட்டி நாளடைவில் ஊக்கம் குன்றித் தூக்கம் மேலிட்டு ஒழுகுதல் பரிதாபமே. ஒரு விஷயத்தில் இவ்வுபாத்தியாயருக்கும் நாம் வந்தனஞ் செலுத்தவேண்டியுளது. அதாவது: போதனை முறைப் பாடசாலையினின்றும் வந்த முதல் மாதத்திலேனும் தம் சிறந்த தன்மையை எண்பிக்கவோ அல்லது வேறு எதற்கோ மற்றைய உபாத்திமாரைவிடத் தாம் கற்றதைக் கஷ்டப்பட்டுக் கற்பித்து டிரெயினுங்குக்குப் போகாத உபாத்தியாயர்களுக்குப் போதனை முறைப் பாடசாலையிற் பயிலுவதிற் பயனுளது என அவர்களை ஊக்கும் காரணத்தாலென்க.

சிறுவகுப்பில் இந்தச் சதுரக்கட்டங்கள் வாய்ந்த போர்டு எவ்வாறு உபயோகப்படுமெனச் சிலர் ஐயுறலாம். கூட்டலின் சுருக்கமே பெருக்கல்; கழித்தலின் சுருக்கமே வகுத்தல் என்னும் விஷயத்தை விளக்கிக் காட்டலாம். மற்றும் இது கூட்டல், கழித்தல் முதலிய பல கணக்குகளையும் ஸ்தானபேதத்தையும் சிறுவர் சிறுமியர் மனத்திற் சரிவரப் படியும்படி நன்கு போதிக்கச் சிறந்த உபகரணமாகும் —

இதுவுமன்றிச் சேர்த்தி, குச்சி, காகிதம், கொட்டை, கட்டை, அட்டை முதலிய உபகரணங்கள் மிகவும் உபயோகப்படல் உபா-



த்தியாயர்கள் யாவரும் நன்கறிந்த விஷயமென அதை விவரிக்காது இவண் விடுத்தனன்.

சகோதரர்களே! நாம் கொட்டைகளை உபயோகிக்கையில் சர்வ சாதாரணமாகப் புளியங்கொட்டை, நெருப்புக் கொட்டை (முறுக்கங் கொட்டை)களையே உபயோகிக்கிறோம். ஏனெனில், அவை சுலபமாகக் கிடைக்கும். இவைகளை உபயோகிக்கையில் உபாத்தியாயர்கள் புளியங்கொட்டையைப் பிள்ளைகள் தின்னாமலும், நெருப்புக்கொட்டையைத் தரையிற் றேய்க்காமலும் இருக்கக் கவனிக்கவேண்டும். ஏனென்றால், புளியங்கொட்டை வயிற்றில் நாகப்பூச்சிகளை உண்டுபண்ணும்; நெருப்புக்கொட்டை தரையிற் றேய்த்துப் பக்கத்து பிள்ளைமேல் வைக்கச் சுரீலென்று நெருப்பை வைத்த உணர்ச்சியை யுண்டாக்கும். இவ்வாறு செய்தல் சிறு பிள்ளைகளின் விநோத இயற்கையாகும்.

'கிண்டர்கார்ட்டன்' என்றால் சிறுவர் தோட்டம் என்பது பொருள். அதாவது பள்ளிக்கூடத் தோட்டத்தைக் கொண்டு பலவும் போதிக்கலா மென்பதாம். இதுவே நூதன போதனை முறைச் சாதனம். தோட்டத்தைக்கொண்டு என்ன போதிக்க இயலுமெனச் சிலர் எண்ணலாம். சற்றுக் கவனிக்கின் எவ்வகைப் பாடங்களையும் தோட்டத்தை உபகரணமாகக் கொண்டு போதிக்க முடியுமென்பது விளங்கும் —

தோட்டத்தில் ஓர் இடத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்துப் பின்னக் கணக்கை வெகு சுலபமாகக் கற்பிக்கலாம். $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$, $\frac{1}{3}$, $\frac{1}{6}$, $\frac{1}{12}$, $\frac{3}{4}$, $\frac{5}{8}$, ($\frac{2}{4}=\frac{1}{2}$), ($\frac{9}{12}=\frac{3}{4}$) முதலியன. 'அதைக் கொத்துவதால் என்ன பயன்? அதில் விதைக்கும் விதை நன்கு வேரூன்ற' எனத் தாவர சாத்திரத்தையும், அதில் எருப் போடுவதேன் எனச் சுகவழியையும், இவ்வகை மண்ணில் இவ்வகைச் செடிகள் பலிதமாகுமெனக் கிருஷி சாத்திரத்தையும், பள்ளிக்கூடத்திற்கு எத்திசையில் தோட்டவேலை அமைக்கப்பட்டிருக்கிறதென பூகோளசாத்திரத்தையும், அதில் பயிராகும் செடிகளைக் குறித்து (நோட்ஸ்) குறிப்பு எழுதுவதைக்கொண்டு கையெழுத்தையும் (அதில் சொல்வதெழுதல், சொற்றொடர் ஆக்கத்தையும்), செடியைப்போல் சித்திரிக்கச் செய்து அதனால் சித்திரத்தையும் கற்பிக்கத் தோட்டம் உபகரணமாகின்றது. இப்பூமியிலுள்ள மலை, ஆறு முதலியன இயற்கை உபகரணங்களாகவும், ஏரி, குளம் முதலியன செயற்கை யுபகரணங்க-

ளாகவும் பலவகையிற் பயன்படுதலைத் தோட்டத்தைக் கொண்டே விளக்கலாம். இனிச் செயற்கை உபகரணங்களைக்குறித்து ஆராய்வோமாக :

தாவர சாத்திரம், பிராணி சாத்திரம், தேகதத்துவ சாத்திரம் இம்மூன்றும் நூதன போதனை முறையிற் கூறியுள்ள புதியபாடங்கள். இவற்றில் இரண்டாவதாகச் சொன்ன பிராணி சாஸ்திரத்தை இடைக்காலத்தில் பொருட்பாடப் படங்களைக்கொண்டு போதித்து வந்தோம். தாவர சாத்திரத்தைப்பற்றி நேரில் உண்மையான மரஞ் செடிகளைக் கொண்டே போதித்துத் தீரவேண்டும். ஆயினும் பலவகை இலைகள், விதைகள், மரத்துண்டுகளைச் சேகரித்துக் கண் காட்சிச்சாலையில் வைத்துச் சில இலைகள் கொட்டைகள் முதலியன கிடைக்காதபோது அவைகளைக் குறித்துப் போதிக்க நேருங்கால் அவற்றை உபகரணங்களாக உபயோகிக்கலாம்.

பிராணி சாஸ்திரம் போதிக்கையில், பாடக்குறிப்பு என்னும் மகுடத்தின்கீழ் வரைந்தவண்ணம் தெரிந்ததைக் கொண்டு தெரியாததைக் கற்பிக்கும் முறையைக் கையாளுவது சிறந்த உபகரணமாகும். உதாரணமாகப் பூனையைக்கொண்டு, அதன் இனங்களாகிய புலி, சிறுத்தை, சிங்கம் முதலிய பிராணிகளைப்பற்றி இயம்பவேண்டும். இந்தக் காட்டு மிருகங்கள் நாட்டில் அகப்படுவது கஷ்டமேயாயினும், இச் சென்னைபோன்ற நகரங்களில் மிருகக்காட்சிசாலை யிருத்தலால் வெளிப்பாடம் (Excursion) போதிக்க அழைத்தேகி அவைகளைப் பிள்ளைகள் பிரத்தியக்ஷப் பிரமாண உபகரணங்களாகக் கண்டு கற்க இடமுண்டு. என்றாலும் பொருட்காட்சிச் சாலைக்குப் பிள்ளைகளைக் கூட்டிச் செல்லல் நினைத்தபோது சித்திபெறமாட்டாது. கிராமங்களிலோ இத்தகைய ஏற்பாடுகள் இல்லை. நமது வீட்டு மிருகங்களாகிய பூனை, நாய் முதலியனவும், நாட்டு மிருகங்களாகிய ஆடு, மாடு முதலியனவுமே சமயத்திற் கிடைப்பதரிது. நியாயமாக உயிராயுள்ள மிருகங்களை உபகரணங்களாகக் கொண்டே பாடம் போதிக்கப்பட வேண்டுமாயினும், எவ்விடத்தும் எப்போழ்தும் இவ்வாறிணங்கல் கூடாமையாகையால், அம் மிருகங்களை யொத்த உருவங்களைத் தயாரித்து உபகரணங்களாகக் காண்பிக்கலாகும். இதற்கேற்றவை களிமண் உருக்களே. இவைகளை நாமே செய்யலாகுமெனினும் இவை பல நாட்கள் கையாள உபயோகமாகாமற் போகும். அதினும்



அவைகளைச் சுட்டு வர்ணமிடல் கஷ்டசாத்தியமாகும் ஆகையால் அவைகளை விற்குமிடங்களில் வாங்கியே உபயோகித்தல் தகுதி.

இவைகளை விலைக்குச் சகாயமாய் விற்குமிடம் 'சென்னை, ஜனார்த்தனம் அண்டு கம்பெனி, 130, கோவிந்தப்ப நாயக்கன் வீதி'. இவைகளை உபகரணமாக உபயோகித்தலால் மிருகங்களின் ஆகிர்தி, இயற்கை நிறம், கையால் தொட்டுப்பார்த்து அவயவங்களின் அளவு முதலியன போதிக்க ஏற்ற சாதனமான உபகரணங்களாகும். ஆனால் அளவைப்பற்றி மாத்திரம் அவ்வளவு பெரிதாகச் செய்து கையாள முடியாமையால் அவ்வுபகரணங்களில் அளவைச் சுருக்கி இருக்கிறதெனத் திருட்டாந்தப்படுத்திக் கற்பிக்க வேண்டும். நிற்க, நமது பள்ளிக்கூடங்கட்குக் களிமண் உருக்களாலான உபகரணங்கள் நமக்கு நிஜரூபத்தில் கிடைக்காக் காட்டு மிருகங்களையே சப்ளை செய்துவருகிறார்கள். பிள்ளைகளில் அநேகர் அக் காட்டு மிருகங்களின் நிஜரூபத்தைக் கண்டிராராகையால் நமது நாட்டு மிருகங்களாகிய ஆடு, மாடுகளையும் அக் களிமண் உருக்களில் சப்ளை செய்யின், நேரிற் கண்ட மாட்டினுருவத்தை எவ்வளவு சிறிதாக அளவைக் குறைத்திருக்கிறார்களோ அதுபோலவே யானை, சிங்கம் முதலிய மிருகங்களையும அளவில் குறைத்திருக்கிறார்களெனப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினின்றும் அநுமானப் பிரமாணத்தால் விளக்கலாகும்.

தேகதத்துவ சாஸ்திரத்தைப் பற்றிப் போதிக்கையிலும் கூடுமாயின் உண்மை உருவத்தையே உபகரணங்களாகக் கொள்ளல் வேண்டும். இன்றேல் உருக்களையும் கடையியாகப் படத்தையும் உபகரணங்களாகக் கொண்டு போதிக்கலாகும். அவயவ பாகங்களைக் குறித்துக் கற்பிக்குங்கால் அப்போதைக்கப்போது போர்டில் சித்திரித்தலே உபகரணமாகும். சித்திரங்களைப் பிள்ளைகளையும் நோட்டுப் புத்தகத்தில் குறித்துக்கொள்ளச் செய்யவேண்டும்.

பூகோள சாஸ்திரம் பயிற்றுகையில் உபாத்தியாயரே பிள்ளைகளின் உதவியைக் கொண்டு இயற்கையுருவப் படங்கள் (Physical maps) தோட்டவேலை செய்யுமிடத்தி லொரு புறத்தில் தயாரித்து அதை உபகரணமாகக் கொண்டு போதிப்பது உசிதம். ஏதுவும் கிடைக்காதபோதே படங்களை உபகரணங்களாக உபயோகிக்க வேண்டும். எல்லாப் பாடங்கட்கும் படங்களையே

உபயோகித்தல் சரியன்று, படங்களை உபயோகிக்கையில் அதேபோல் கூடுமானவரையில் போர்டில் வரைதலே உபகரணமாகும். அதையும் பிள்ளைகள் நோட்டில் வரையச் செய்யவேண்டும். போர்டில் படம் வரைகையில் மற்றைய விஷயங்களைக் கவனிப்பதிலும் முக்கியமாய் அதன் அளவை அதாவது நீள அகலத்தைக் கவனித்து சுருக்கியோ பெருக்கியோ இடவிசாலத்திற்குத் தக்க ஸ்கேலின்படி வரைதல் வேண்டும். களிமண் உருக்களை கையாளுகையில் அதேபோல் உருவத்தை அதே நோத்திற் செய்ய இயலாதாகையால் கிண்டர்கார்டன் வேலைசெய்யும்போது அவ்வுபகரணங்களைக் களிமண்ணுற் செய்யச் செய்யலாம். அல்லது சித்திரமூலம் வரையச் செய்யலாம். பிள்ளைகளுக்கு எதைக் கண்டாலும் அதேபோல் சித்திரம் வரைவதிற் பிரியம் அதிகம்.

இனி போலிநாணய உபகரணங்களை (Token Coin) உபயோகித்தலைக் குறித்துக் கவனிப்போம். முன்னர் இந்த நாணயம் கிடைத்ததற்கும், பின்னர் கிடைப்பதற்கும் வித்தியாசம் உண்டு. முன்னர் கிடைத்த போலிநாணயம் சற்றேறக்குறைய சத்தமும் பளுவும் தவிர மற்றெல்லா விஷயத்திலும் உண்மை நாணயத்தை ஒத்திருந்தது. இதைக்கொண்டு பிள்ளைகள் கடைக்காரரை ஒருவாறு ஏமாற்றவும் இடமுண்டாகியிருந்தது. இதை நோக்கியே இப்போது அவ்வகை நாணயங்களை நீக்கி பார்த்தபோதே உண்மை நாணயத்திற்கும் போலி நாணயத்திற்கும் வித்தியாசம் ஏற்படும்படி செய்து விற்கின்றனர். சென்னை லாங்மென்ஸ்கிரீன் அண்டு கம்பெனியார் முதலியோர் இத்தகைய உபகரணங்களை உபயோகித்து இடர்படுவதினும் உபாத்தியாயர் ஊதியம் (சம்பளம்) வருந் தேதியில் இப்பாடத்தை உண்மையான நாணயங்களைக் கொண்டே ரூபாய், அதன் பாகங்கள் முதலியனவற்றைப் போதித்தல் நேரிது. மற்றும் உபகரணங்களாக உபயோகிப்பன — படி, குண்டு, தராசு, அளவுக்கோல் பிறவுமாம்.

இதுவரை இயற்கை உபகரணங்களென்றும் செயற்கை உபகரணங்களென்றும் இருவகையாகப் பிரித்துக் கூறினோம். இனி உபகரணங்களில் இயற்கை, கொள்கை இரண்டும் அமையப்பெற்ற உபகரணங்களைக் குறித்து ஆராய்வோம்.

சில வருடங்களாகச் சென்னையில் சமுத்திரக் கரையில் மீன் காலேஜ் (Acquarium) ஸ்தாபித்து அதில் சமுத்திரத்தில் அகப்படும் பல்வகை மீன்களேயன்றி பாம்பு, முதலை முதலியவற்றையும் வைத்து காருணிய கவர்ன்மெண்டார் வளர்த்து வருகின்றார்கள். இவ்வாறிழைற்றலின் முக்கிய நோக்கம் இயற்கைப் பொருட்களைக் கொண்டு பிரஜைகளின் அறிவைப் பரவச்செய்யும் பொருட்டே எனத் தெரிகிறது. இஃதே போன்று சிங்காரத் தோட்டத்தில் (Peoples Park) பலவகைப் பக்ஷிசாலங்களைக் காத்தலு மிதன் நிமித்தமேயாகும்.



பிராணி சாஸ்திரத்தில் அடங்கிய பட்சி, மீன் முதலியவற்றைக் குறித்து கற்பிக்கையில் மேற்கூறியபடி இயற்கைப் பொருட்களைக் கொணர்ந்து போதிக்க இயலாமையால் பஞ்சடைத்த இயற்கை உருவப் போலிப் பறவைகளைக்கொண்டு போதிப்பது நலம். 'தோலிருக்கச் சுளை விழுங்கி' என்பதுபோல் பட்சிகளின் உள்ளிருக்கும் தசையைப் பக்குவமாய் எடுத்து மேற்றோல் எலும்பு இவைகளைப் பின்னப்படுத்தாமல் நாற்றம் வீசாதிருக்க ஸ்பிரிட் சாராயத்திற் போட்டு பக்குவப்படுத்தி உண்மை உருவமாக்கல். இதில் இரக்கை, தலை, உடல் யாவும் பொருந்தி யிருக்கும். ஆனால் உயிர் இராது, உயிர் எப்போதில்லையோ அதற்கு இயங்குந் தன்மையில்லை என்பது சொல்லாமல் விளங்கும்.

இதுபோலவே மீன்களும் என்க. இதன் விலை களிமண் உருக்களைவிட சற்றதிகமாகவே யிருக்கும். ஏனெனில், ஒவ்வொன்றையும் விலை கொடுத்து வாங்கித் தயாரிக்கவேண்டி யிருத்தலால் இதில் இயற்கை செயற்கை இரண்டும் அமைந்திருக்கின்றன — இவைகள் சிறந்த போதனோபகரண சாதனங்களாகும். இத்தகைய பட்சிகள் முதலியனவும் ஜெனார்த்தனம் அண்டு கம்பெனியிலேயே பெறலாகும்.

எப்போதும் 'லோகோ பின்னருசி' என்னும் ஆரிய வாக்கியத்திற் கொப்ப பிள்ளைகட்கு பல வஸ்துக்களைக் காண்பதிலும், உண்பதிலும், உடுப்பதிலுமே மிக இஷ்டமாகையால் அப்பிள்ளைகளின் குண வித்தியாசங்களுக்கேற்ப அநேகவித உபகரணங்களை உபாத்தியாயர்கள் கையாளுவது உசிதம். உபாத்தியாயர்கள் உபகரணங்களை உபயோகிப்பதில் எவ்வகுப்பிற்கு எதை எவ்விதம் உபயோகிக்க வேண்டுமென்பதை தீர்க்கமாக யோசித்து அநுபவத்தை யொட்டி உபயோகித்தல் வேண்டும்.

கடைசியாக கடவுளால் படைக்கப்பட்டுள்ள எல்லாப் பொருள்களும் ஏதோ ஒரு உபயோகத்தின் பொருட்டே யாகுமன்றி வெறுமனே சிருஷ்டிக்கப்பட்டனவல்ல. ஆகையால் உபாத்தியாயர்களான நாம் நம் அறிவிற் கெட்டியமட்டும், கடவுள் அருளிய பொருள்களைக் கொண்டு நவீன நடையில் உபகரணங்களாக உபயோகித்துப் பிள்ளைகள் மனத்தில் நாம் கற்பிக்கும் விஷயம் சிலையிலெழுத்தே (சிலாசாசனம்) போன்று எந்நாளும் அப்பிள்ளைகளின் மனத்தினின்றும் விலகாவண்ணம் பசுமரத்தாணிபோற் பதியுமாறு பலவகையினும் உழன்று முயன்று போதித்து நாம் மேற்கொண்டுள்ள நற்றொழிலை மற்றைத் தொழில்களில் முற்றொழிலாய் முடியுமாறு சாதத்தல் வேண்டும் —

உபகரணம் அதிக முக்கியம் என்பதற்கு ஒருதாரணம் இதன் கீழ்க் கூறி இவ்வியாசத்தை முடிப்பேனாக —

வாசகபாடத்தில் 'கரதலாமலகம்' (கரம் + தலம் + ஆமலகம் = கை + இடம் + நெல்லிக்கனி அல்லது உள்ளங்கை நெல்லிக்கனி) என்னும் திருட்டாந்த வாக்கியத்தைப் பிள்ளைகள் மனத்தில் நன்கு பதியும்படி செய்ய எவ்வளவு பேசினாலும் எத்தகைச் சித்திரங்கள் வரைந்தாலும் பயன்படாமற்போம். இவ்வளவு சிரமமும் ஒரு நெல்லிக்கனியைக் கொண்டுவந்து உள்ளங்கையில் வைத்துப் பிள்ளைகளைக் கவனிக்கச் செய்யின் அதன் அகம் புறம் ஆகிய அனைத்தும் நரம்பு தசை கொட்டை முதலிய யாவும் புலனாவதைக் கண்கூடாகக் கண்ட பிள்ளைகள், ஓகோ இதேபோல் விளங்குமோ என பிரத்தியக்ஷப் பிரமாணத்தைக்கொண்டு அநுமானப் பிரமாணத்தை யூகித்தறிகிறார்கள் வீண்காலம் வீண்சிரமம் ஒன்றுமின்றி பிள்ளைகள் இஷ்டமாய்க் கற்பிக்க அநுகூலமாயுள்ள இப் பிரத்தியக்ஷப் பிரமாணமான "உபகரணங்களை ஓதுகையில் உபயோகித்தல்" என்பதை கூடுமான வரையில் நாம் கையாளுவதே சிறந்த முறையாகும். இதுவே நூதன போதன சாதனமாகும் —

C. V. DORAISINGA MUDALIAR,
*Headmaster, Corporation Model School, &*
*Secretary, Corporation Teachers' Guild,*
*Madras.*



# CIRCULATION OF WATER

## நீர்ச்சுழற்சி

சாதாரணமாய் உலகத்தில் உயிருள்ள ஜீவராசிகள் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

1. உயிருள்ளதும், இங்கும் அங்கும் நடமாடக்கூடியதும், நன்மை தீமை அறியக்கூடியதுமானவை (உ-ம்) மக்கள், தேவர்.

2. உயிருள்ளதும், இங்கு மங்கும் நடமாடக் கூடியதுமானவை. (உ-ம்) பிராணி, பறவை, மீன், ஊர்வன.


3. உயிருள்ளதும் நின்றவிடத்தை விட்டு அகலக்கூடாததுமானவை. (உ-ம்) புல், பூண்டு முதலிய தாவரங்கள்.

மேல்கண்ட ஜீவராசிகள் ஆகாயத்தை எப்படி அவஸ்யமாக விரும்புகின்றனவோ அதைப்போலவே அதற்கு இரண்டாவதாக அவற்றிற்கு ஜலமும் அவஸ்யமாக வேண்டியிருக்கிறது. சமுத்திரம், ஆறு, ஏரி, குளம், குட்டை முதலியவைகளிலுள்ள ஜலம் சில காலத்தில் குறைவாகவும் சில காலத்தில் அதிகமாகவும் இருக்கிறதைக் காண்கிறோம். இப்படிக் குறைவு படுவதற்கும் அதிகப்படுவதற்கும் காரணம் இங்குக் கூறுவோம்: மேல்சொன்ன ஜீவராசிகள் ஷை ஜலத்தைப் பானம் செய்வதாலும் வேறு சௌகரியங்களுக்கு உபயோகப்படுத்துவதாலும் குறைந்து போகிறதைக் காண்கிறோம். இஃது உண்மையே. ஆனால் சமுத்திர ஜலத்தை பறவை மீன் முதலியவைகள் தவிர அவ்வாறு உபயோகிக்க இடமிருவிடினும் உப்புப் பயிரிடும் காலத்தில் ஷை ஜலம் குறைந்துவிடுவதாக நினைக்கக் கூடும். வெளிப்படையாக உப்புப் பயிரிடும் காலத்தில் ஜலம் சுண்டி உப்பாகிறதென்று ஒவ்வொருவரும் நினைக்கக் கூடிய விஷயம். அப்படிச் சுண்டுகிற ஜலம் எங்கே எப்படிப் போகிறதென்பதை இங்கு விவரிப்போம்: அதிகப்படுவதற்குக் காரணம் மழையைத் தவிர வேறு எதையும் நினைக்க இடமில்லை.

### மழை (The Rain)

படத்தில் காட்டியபடி ஜலமுள்ள ஒரு பாத்திரம் அடுப்பில் வைத்து அனலிட்டு எரிக்கப்படுகிறது. சில நிமிஷங்களுக்குள் ஷை பாத்திரத்திலுள்ள ஜலம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து

கொண்டே யிருக்கிறது. இப்படிக் குறைகிற ஜலம் எங்கே எப்படிப் போகிறதென்று கவனித்தால் நமது கண்ணுக்குப் புலப்படுகிறதில்லை. ஆனால், புகைபோன்ற ஒரு வஸ்து மேலே கிளம்பிப் போகிறதாகத் தெரியும். ஷை பாத்திரத்தின்பேரில் ஒரு கற்பலகையை மூடிக் கொஞ்ச நேரங் கழித்துக் கற்பலகையை எடுத்துப் பார்த்தால் ஷை பலகையின் அடிப் பாகத்தில் பனித் துளிகளைப்போலச் சில நீர்த்துளிகள் கீழே சொட்டுவதைக் காண்கின்றோம். இதைப் போலவே எந்தப் பொருளையும் உஷ்ணப்படுத்தினால் காணலாம். ஈரமுள்ள ஒரு துணியைச் சற்று நேரம் வெய்யிலில் உலர்த்தினால் துணியிலிருந்த ஈரமெல்லாம் சூரிய உஷ்ணத்தால் பரிணமிக்கப்படுகிறது. இப்படிக் குறையும் ஜலந்தான் நீராவி எனப்படுகிறது, இது வாயுவைக் காட்டிலும் இலேசானது. குளிர் காற்றின் சம்பந்தத்தால் உஷ்ணத்தை இழந்து நுட்பமான ஜல அணுக்களாகவும் மேகங்களாகவும் மாறும். இந்த மேகம் பலவித நிறங்களுடன் ஆகாயத்தின் உதவியால் சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் பரவிக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். மேற்படி ஆவியின்மீது பல அம்சங்களுள்ள குளிர் காற்றுப்பட அந்த ஆவி அணுக்கள் குளிருக்குத் தக்கபடியும் இடத்திற்குத் தக்கபடியும், பனி, பனிக்கட்டி, மூடுபனி, உறைபனி, மழை, ஆலங்கட்டி மழைகளாக மாறுகின்றன. கற்பலகையில் ஜலம் சொட்டியதும் இக்காரணமே. கற்பலகையில் எப்பொழுதும் ஈரப்பசை இருந்துகொண்டிருக்கிறது.





1. விளக்கு. 2. ஜலமுள்ள பாத்திரம். 3. வெண்மையான புகை. 4. கற்பலகை. 5. ஜலத்துளிகள்.

---

N. B. அதிக உயரத்தில் தங்கி நிற்கும் மேகங்களின்மீதும் குளிர் பட்டவுடனே கனரூபத்தை யடைந்து மழையாக மாறும். அப்படி மாறிப் பூமியை நோக்கி வருங்காலத்தில் வரும் வழியில் உள்ள குளிரினால் ஆலங்-






1. சமுத்திரம். 2. நீராவி. 3. மேகம். 4. மலை. 5. மழைத்துளி 6. ஆறு.

சமுத்திரம் ஆறு, ஏரி, குளம், குட்டை முதலியவைகளிலுள்ள ஜலம் சூரிய உஷ்ணத்தினால் நீராவியாகப் பரிணமித்து ஆகாயத்தில் பரவுகிறது. ஷை ஆவியின்மீது குளிர் பட்டவுடனே நுட்பமான ஜல அணுக்களாகவும் மேகங்களாகவும் மாறி ஆகாயத்தில் மிதந்துகொண்டிருக்கிறது. இப்படி ஆகாயத்தின் உதவியால் பரவுங்காலத்தில் பெரிய மலைகளால் தடுக்கப்படுகிறது. மலைகள் உள்ள இடத்தில் அதன் உச்சியில் எப்பொழுதும் குளிர் அதிகமாக இருக்கும். ஷை குளிர்காற்றின் உதவியால் ஷை

---

கட்டி மழையாகவும் வருஷிக்கும். நீராவி அணுக்கள் மேக மண்டலம் போய்ச் சேருவதற்குள் வழியில் உள்ள குளிர்ச்சியினால், பனி, உறைபனி, மூடுபனியாக மாறிப் பூமியில் வருஷிக்கும். மழைத் துளிகளாகவும் பனியாகவும் பூமியை நோக்கி வருங்காலத்தில் உடனே உஷ்ணம் பட்டாலும் மறுபடி நீராவியாக மாறி மேலே செல்லும் வல்லமை உண்டு. இது உஷ்ணத்தினால் லேசாகும், குளிர்ச்சியினால் கனமாகும். இது நமது கண்ணுக்குப் புலப்படாது.

மப்புகள் தேன் அடையைப் பிழிந்தால் எப்படிச் சொட்டுமோ அதைப்போலவே மழைத்துளிகளாகக் கீழேவிழுந்து அருவிகளாகவும் ஓடைகளாகவும் ஆறுகளாகவும் நதிகளாகவும் ஊற்றுக்களாகவும் திரண்டு பூமி மார்க்கமாக சமுத்திரத்தில் சங்கமமாகிறது இப்படியே ஆகாய மார்க்கமாகவும் பூமி மார்க்கமாகவும் சுழன்று கொண்டே யிருக்கிறது. இக்காரணங்களால் தான் அநேகமாய் நதிகள் பெரிய மலைகளிலிருந்து உற்பத்தியாகின்றன. இது தான் நீர்ச் சுழற்சி எனப்படும்.

N. B. உயிருள்ள ஜீவராசிகள் அருந்தும் ஜலமும் கீழே விழுந்து பூமிக்குள் சிதறிப்போகும் ஜலமும் ஒரு துளிகூட அழிவின்றி மலம், ஜலம் வியர்வை, உமிழ்நீர் முதலிய கழிவுப் பொருள்களாகிப் பூமியில் சுவறிப் போகிறது. பிறகு அதுவும் உஷ்ணத்தால் பரிணமிக்கப்படுகிறது. ஜீவராசிகள் இறக்குந் தருணத்தில் அவைகளிலிருக்கும் ஈரப்பசையுங்கூட உஷ்ணத்தால் கிரஹிக்கப்படுகிறது. சமுத்திரத்திலும் மலைகளிலும் கட்டாந் தரையிலும் வெவ்வேறு வித்தியாசப்பட்டுக் குளிர் காற்றுபடுவதால் முதல் இரண்டிடங்களில் மாத்திரம் ஏராளமான மழை பெய்கிறது.

M. DURAISWAMI CHETTY,
*Headmaster, C. C. Naidu*
*Free Elementary School,*
*Cheyyur.*

## CONDITION OF THE ELEMENTARY SCHOOL TEACHERS

## எலிமெண்டரிப் பாடசாலை உபாத்தியாயர்களின் பரிதாப நிலைமை

[இவ்வியாசம் பரங்கிமலையில் கூடிய உபாத்தியாய சங்கத்திற்கு திருச்சினாப்பள்ளி ஜில்லா அஸிஸ்டண்டு இனிஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ ஜி - எஸ் - தானியேல், பீ - யே, அவர்கள் அக்கிராசனம் வகித்தபோது, சைதாப்பேட்டை வெஸ்லியன் மிஷன் இந்து பாலிகாபாடசாலையின் தலைமை உபாத்தியாயர் பீ - என். முருகேசம் என்பவரால் பிரசங்கிக்கப் பட்டது]

1. சபாநாயகரே! சகோதர உபாத்தியாயர்களே! சரீரத்திற்கு ஆகாரம் எப்படியோ அப்படியே கல்வியானது புத்திக்கு



மிகவும் அவசியமான ஆகாரமாக இருக்கின்றது. நாளுக்கு நாள் வளருகின்ற சதமல்லாத சரீரத்திற்கு ஆகாரங் கொடாவிட்டால் அது நோய் அடைந்து வளராதது போலவே, கடவுள் நம்மனைவரையும் , ஞானமுள்ளவர்களாய் படைத்தாலும், நம்முடைய சுபாவ ஞானம் போதாமல் கல்வி யென்னும் ஆகாரங் கொடுத்து புத்தியை அபிவிருத்தி செய்யவேண்டியது நமது முக்கிய கடமையாய் இருக்கிறது.

2. இதற்காக இங்கிலாண்டு தேசத்திற்கு அரசரும் பரத கண்டமாகிய இந்தியாவுக்குச் சக்கரவர்த்தியுமாகிய மாட்சிமை தங்கிய காருண்ய 5-வது ஜியார்ஜ் முடிமன்னர் அவர்களுடைய பட்டாபிஷேகத்தன்று கல்வி விஷயமாய் ரூபாய் ஐம்பது லக்ஷம் பரிசளித்து, கல்வி மேம்பட்டு வரக் கிருபை செய்தனர். இதனால் நல்ல பலமான பாடசாலைகளைக் கட்டி தேவையான உபகரணங்களையும் கொடுத்து, டிரேயின்ட் உபாத்திமார்களையும் நியமித்து சிறுவர்களை நல்வழிப்படுத்த பூர்வீகப் படிப்புபோலிராமல், பிள்ளைகளின் பெற்றோர்கள் வீடுகளில் குதூகலிப்பு அடையுமாறு நூதன போதனா சாதனத்தின் பிரகாரம் போதிக்க உபாத்தியாயர்களை நியமித்துப் பாடசாலைகளை எங்கும் தாபித்து வருகிறார்கள்.

3. கையினால் செய்யக்கூடிய தீருதியான வேலைகளும், பாஷைகளில் நல்வழி காட்டக்கூடிய பாடங்களும் அமைந்த புஸ்தகங்களும், இதில் வாசிப்பு, சொற்களை அமைத்து வாசகமாக்கவும், எழுதவும், எழுத்துக் கூட்டவும், பொருட் பாடங்களை அறிந்துகொள்ளவும், சொற்களுக்கு இலக்கணஞ் சொல்லவும் சம்பாஷணையில் பழகவும், இது மாத்திரமா? இடத்தையும் எண்ணையும் என்று குறித்து ஓரினச் சூத்திரம் நான்கும் பலவின சூத்திரங்களும், கடைக் கணக்கு முறையும், ஆங்கிலேய இந்திய கணக்கு முறை பலவும், வெகு விமரிசையாய்க் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

4. சாதாரணமாய்த் தெரிந்திருக்க வேண்டியவைகளில் அன்னிய தேசங்களின் செடி, கொடி, பிராணி, சூடு, குளிர்ச்சி, முக்கியமான விளைவு, விவசாயம், தொழில்கள், பொதுக் கட்டடங்கள், உத்தியோகஸ்தர் வேலையும், தபால், மின்சார சமாச்சாரங்களும், தேக சௌக்கிய விதிகளும், நன்னடக்கை விதிகளும், வஸ்துக்களின் தாரதம்மியங்களை ஜாக்கிரதையாய் யோசிக்க சித்திர விசித்திர பழக்கமும், தகுந்த இராகங்களோடு ஒப்பிக்க செய்யுட்பாக்க-

ளும் தேகபலத்தில் தேற, சுதேச கவாத்து, அங்கவிரிவு, நடனம் பண்ணுவது, குதிப்பது, ஓடுவது, குஸ்தி பிடிப்பது முதலிய ஆங்கிலேய இந்திய தேகபயிற்சிகளும் இங்கிலீஷ் பாஷையை சம்பாஷணை மூலமாகவும், மற்றப் பொருட்கள் மூலமாகவும் போதித்து வருவதும், மௌன வாசிப்பில் பழக்குவதும் வெகு உசிதம்

5. இன்னும் இயற்கைப் பொருள்களில் விருக்ஷவர்க்கம், ஜீவ வர்க்கம், நிலத்தின் மேற்பரப்பு, பௌதிக சாஸ்திரம், பூகோள உறுப்பிலக்கணம் முதலிய பஞ்சபூத சாஸ்திரங்களும் போதிப்பதுடன் இனிமேற்பட (Short Hand, Type - writing, Book-keeping) வியாபார அனுஷ்டான முறைகளும், தச்சுவேலை, கருமார வேலை முதலானவைகளும் போதிக்க நேரிடும். இதற்காக வேண்டி எலிமென்டரிக் கல்விச் சாலைகளும், உபாத்திமார்களை பழக்கும் கல்விச் சாலைகளும், வித்தியா விஷயமாய் பரிபாலனஞ் செய்யச் சாதனங்களும், செகண்டரிப் பாடசாலைகளும், போர்ட்டு பாடசாலைகளும், கார்பொரேஷன் மாடல் பாடசாலைகளும் சொந்த மானேஜ்மெண்டிலுள்ள பாடசாலைகளும் இவைகளைப் பார்வையிட உத்தியோகஸ்தர்களும், சாஸ்திரத் தொழிற் படிப்பும், காலேஜுகளும், இவைகளுக்கு விசாரணை அதிகாரியாக (Director of Public Instruction) வித்தியா விசாரணைத் தலைவரையும் நியமித்தும் இருக்கிறார்கள்.

6. இவர்களுக்கு உதவியாக அப்போதைக்கப்போது பாடசாலைகளைத் தணிக்கை செய்துவர, சர்க்கில் இனிஸ்பெக்டர்களையும் (Asst. Inspector) உதவி இனிஸ்பெக்டர்களையும் (Sub Asst. Inspector) சப் அஸிஸ்டன்ட் இனிஸ்பெக்டர்களையும், இவர்களுக்கும் உதவியாக சூப்பர்வைசர்களையும் நியமித்து நடத்திவரும் காரணம் யாதெனில், நம்மை ஞானாத்மாக்களாகப் படைத்து நமக்காக பூமியென்ற அழகான அரண்மனை கட்டி, ஆகாய மண்டபம் வளைத்து, நக்ஷத்திர முத்து மாலைகளைத் தொங்கவிட்டு, அதி பிரகாசமான சூரிய சந்திர விளக்கேற்றி, பச்சை ரத்தின ஜமுக்காளம் விரித்திருக்கிறாப்போல் பசும் புற்களையும், செடி, கொடிகளையும் நாட்டி, மதுரமான கனிவர்க்கங்களும், பரிமள புஷ்பங்களும், நந்த வனங்களும், சிங்காரத் தோட்டங்களும், மலைகளாகிய உன்னத சிங்காசனங்களும், நதி, ஏரி, குளம், குட்டை, தாமரைத் தடாகங்கள் முதலிய நீர்நிலைகளும் கடவுள் படைத்தார்.



7. அன்றியும் நமக்காகக் கடவுள் யானை, குதிரை, ரிஷபம் முதலிய வாகனங்களும் கொடுத்து, சமுத்திரம், மேகம் என்கிற மேள வாத்தியக்காரரும், அன்னம், மயில் முதலிய நாடகசாலைப் பெண்களும், குயில், கிளி, மைனா, புல்புல் போன்ற பக்ஷிகளாகிய சங்கீத வித்வான்களும், மேகங்களால் நீர் இறைக்கின்ற தண்ணீர்த் தொட்டிகளும், வாயுவாகிய ஆலவட்டக்காரனையும், அக்கினியாகிய சமையற்காரனையும் இவைகள் எல்லாவற்றையும் சம்பளமில்லாத ஊழியக்காரர்களாக நியமித்து, பின்னும் எண்ணி முடியாத நன்மைகளையும் நமக்குத் தந்தருளுகிற பரம தயாள கருணாகரக் கடவுளை நாம் மறக்கலாமா? மறந்தவன் கதையொன்றை இங்கே சொல்லுகிறேன் கேளுங்கள்:

8. பெரிய காட்டில் பெண் சிங்கம் ஒன்று கர்ப்பமாயிருந்து ஆட்டுக் குட்டிகளைக் கண்டு பாய்ந்த வேகத்தால் வயிற்றிலுள்ள குட்டி வெளிப்பட்டு தான் இறந்துபோனது. வெளிப்பட்ட சிங்கக் குட்டியோ ஆட்டுக் குட்டிகளுடன் சேர்ந்து புல் மேய்ந்து வந்தது. இதைக் கண்ட மற்றொரு சிங்கம் இது என்ன அதிசயம், ஐயையோ, இது இராஜ வம்சத்தில் பிறந்து தாழ்ந்த ஜாதியான ஆட்டுக் குட்டிகளுடன் கலந்து விளையாடுகின்றதே என்று கவனித்து, ஒருநாள் இந்தச் சிங்கக்குட்டி தனியே இருக்கக் கண்டு அடா வீரதத்துவமில்லாத மூடப் பயலே, உனக்கு வெட்கமில்லையா? உனக்கென்ன பைத்தியமா? நீ உயர்ந்த ஜாதியிற் பிறந்து இழிவான கேவலம் ஆட்டுக்குட்டிகளுடன் கூடி விளையாடுகிறாயே என்று கேட்க, அதற்கு மறுமொழியாக சிங்கக்குட்டி சொன்னதாவது:

9. நான் ஆடுதான் சிங்கமல்ல. நான் உயர்ந்த ஜாதியல்ல தாழ்ந்த சாதிதான் என்றது. உடனே அந்தச் சிங்கம் பேதமையான அந்த சிங்கக்குட்டியை கிணற்றண்டை கொண்டுபோய் அதன் சாயலை ஒத்திட்டுப் பார்க்கச் செய்தது. சிங்கக்குட்டி கிணற்றைப் பார்த்ததும் அதனுடைய சந்தேகம் நீங்கினது. பிறகு ஆடுகளைப்போல் கத்தாமல் சிங்கத்தைப்போல் கர்ச்சிக்கத் தொடங்கி மாமிச பக்ஷணம் செய்ய ஆரம்பித்தது. இதைப்போல், காணும் தொழிலைக் கண்செய்யினும் கண் தன்னையே காணாததுபோல, கல்வி இலாக்கா அதிகாரிகள் உபாத்திமார்களை அருட்கண்ணோடு பார்ப்பதில்லை. இன்னும் சொல்லவேண்டுமானால்

உயர்தர பரீக்ஷையில் தேறிப் பட்டம்பெற்ற உபாத்திமார்களையும் எலிமென்டரிப் பாடசாலைகளில் உபாத்தியாயரா யிருக்கும் எங்களையும் அதிகாரிகள் ஒப்பிட்டு பார்ப்பார்களே யாகில் நாங்கள் அவர்களுக்கு முன் புழுதிக்குப் புழுதியும், சாம்பலுக்குச் சாம்பலுமா யிருக்கிறோம்.

10. உபாத்திமார்களாகிய நாங்கள் நாட்டிற்கு நன்மையையும், வீட்டிற்கு நன்மையையுஞ் செய்யக் கூடியவாறு நன்னடக்கையும் நன்மையுமாய் நடக்க இளமையிற் கல்வி சிறுவர்களுக்குப் போதித்து நன்மை செய்ய, நன்மை செய்வோருக்குப் பதிலாக நடுவயதில் சாவு என்கிற நடுவனாகிய எமன் எங்களுக்கு மார்வலி, க்ஷயம், காசம், மூலச்சூடு, கண்ணெரிவு, கண்குத்தல், கண்நொள்ளை ஆசனக் கடுப்பு, சீதபேதி, மார்நோய், குலைநோய், மாரடைப்பு, குண்டிக்காய் பலஈனம், இருதயபலஈனம், இருமல், ஈளை முதலிய வியாதிகளைக் கொடுத்து கொஞ்சம் வயதிலேயே யமன் எடுத்துக்கொள்கிறான். பிறகு மனையாளும், மக்களும் வாத்தியாரைப்போல் வாயால் பிச்சை யெடுக்காமல் வாயிலில் பிச்சைக்கு வந்து விடுகிறார்கள். தாய்மார்கள் ஒன்று இரண்டு பிள்ளைகளை வளர்க்க எவ்வளவோ கஷ்டப்படுகிறதைக் கண் காண்கிறது சகஜம்.

11. உபாத்திமார்களாகிய நாங்கள் ஒரு வகுப்பில் 30, 40, 45, பிள்ளைகளை வைத்து எங்க ளாவியை தினம் தினம் தத்தஞ் செய்து வருகின்றோம். கல்வி இலாக்கா அதிகாரிகளால் ஏற்படுத்தும் நூதன போதனை முறையை நாங்கள் அனுசரித்து அதன் பிரகாரம் படிப்பித்துவந்தால் தாய்தந்தைகளோ! ஓய் உபாத்தியாயரே பிள்ளைகளுக்கு என்ன படிப்பு படிப்பித்து வருகிறீர்கள். பிள்ளைகளுக்கு ஆட்டம் என்ன? பாட்டு என்ன? கூத்து என்ன? கதை யென்ன? காரணமென்ன? கொட்டைவேலை யென்ன? ஓலைவேலை யென்ன? களிமண்வேலை யென்ன? குச்சிவேலை யென்ன? குஸ்தி என்ன? பஸ்கி யென்ன? கோல் என்ன? பாறு என்ன? டிரில் என்ன? இதுதானோ பாடம்! இதுக்குத்தானோ சர்க்காரார் உங்களுக்குச் சம்பளங் கொடுக்கிறார்கள். அடே பையா எழுந்திரு. படித்தது போதும் பி. யே. பாஸ் பண்ணிவிட்டாய் என்கிறார்கள்.

12. கல்வி இலாகா அதிகாரிகள் வருஷாந்தரப் பரீக்ஷைக்கு வந்துவிட்டாலோ என்ன உபாத்தியாயரே முதல் வகுப்பில், கணக்குப் போதாது பொருள்பாடம் சரியாய்ப் படிப்பிக்கப்படவில்லை. இரண்டாவது வகுப்பில் கைத்தொழில் அப்பியாசம் குறைவு. மற்ற வகுப்புக்களில் இயற்கைப்பாடம், சுகவழி குறைவு. தோட்டவேலைக்கு ரிஜிஸ்தர் வைக்கவில்லை. நான் இப்போது படிப்பித்துக் காட்டும் மாதிரியாக இனிமேல் சொல்லிக் கொடும் என்று புஸ்தகத்தில் குறிப்பிட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். மானேஜர்மார்களிடம் போய் ஒரு வகுப்பில் 40, 50 பிள்ளைகளை வைத்து படிப்பிக்கிறது வெகு கஷ்டமா யிருக்கிறது. கூடக் கொஞ்சம் சம்பளம் உயர்த்துங்கள் என்று கேட்டாலோ 40 பிள்ளைகள் ஒரு வகுப்பிலிருந்தால் போதும், பண்டில் பணமில்லை அடுத்த வருஷம் கிராண்டு வரட்டும் பார்ப்போம் என்கிறார்கள். உரல் ஒருபக்கம் இடிபடுகிறது, மத்தளமோ இரண்டு பக்கங்களிலும் இடிபடுகிறது என்பதுபோல் முடிகிறது.



13. ஐந்தாறுமணிநேரம் உபாத்தியாயர் கஷ்டப்பட்டுவிட்டு வெகு ஆயாசத்தோடு வீட்டுக்குப் போனாலோ சிறுபிள்ளைகள் ஓடிவந்து அப்பா பசி எடுக்கிறது ஏதாகிலும் வாங்கித் தின்ன காசுகொடு என்கிறார்கள். அவர்களைவிட்டு தலைகுட்டையை கழட்டி வைக்கிறதற்கு முந்தி பெண்ஜாதியானவளோ குழந்தைக்கு இன்றைக்கெல்லாம் ஜுரம் பேதியாகிறது பால் குடிக்கவே இல்லை. கண்ணைத் திறக்கவே இல்லை. வைத்தியரைக் கூப்பிட்டுக்கொண்டு வாரும் என்கிறாள். உபாத்தியாயர் வெகு ஆயாசத்தோடு வைத்தியரைக் கூப்பிட்டுக்கொண்டுவந்து விடுகிறார். வைத்தியரோ குழந்தையின் கைநாடியைப் பிடித்துப்பார்த்து பணங் கொடுத்தால் ஒளஷதம் வைக்கிறேன் என்கிறார். கையிலே காசு கிடையாது. சமயத்திற்குக் கடன் கொடுப்பவரு மில்லை. இப்படி இருக்கும் சமயத்தில் பந்து ஜனங்களும் விருந்துக்கு வந்து விடுகிறார்கள். வந்தவர்களுக்கு கொண்டாட்டமும் வாத்தியாருக்கு திண்டாட்டமாய்ப் போகிறது.

14. புருஷன் பெண்ஜாதி இரண்டு பிள்ளைகளுக்கு 15 ரூபாய் ஒருமாதச் செலவுக்குப் போகாது. அரிசி, மேல் செலவு, வீட்டு வாடகை, அம்மட்டன், வைத்தியர், வருவார் போவாருக்கு பிள்ளைகளின் பாடசாலை சம்பளம் இவைகளுக்கு வேண்டி எவ்வளவு சிக்கனமாய்ச் செலவு செய்தபோதிலும் போதாது. தற்காலம் அரிசியோ அகவிலை, பிரதமத்தில் நடக்கும் (English >< German)

யுத்தங்களால் மற்ற சாமான்களும் அகவிலை. எங்களுடைய பாட-சாலைகளை அப்போதைக்கப்போது மேல் விசாரணை செய்துவரும் அதிகாரிகளை எங்கள் சம்பளங்களைப்பற்றி மானேஜர்மார்களிடம் சிபார்சு செய்யுங்கள் என்று கேட்டாலோ கவனியாமல் மௌனமாயிருந்துவிடுகிறார்கள். இப்படி இருந்தால் நாங்கள் ஜீவிப்பது எப்படி?

15. ஆகையினால் எங்களுக்குக் கிடைக்கும் சொற்ப சம்பளத்தினால் எவ்வளவு சேர்த்து வைக்கிறது? என்னத்தை சாப்பிடுகிறது? எங்களுடைய சாரத்தையெல்லாம் பெற்றுக்கொண்டு சக்கையை வெளியே எறிந்துவிடும் கல்வி இலாகா அதிகாரிகளே! எங்கள் கஷ்டங்களைக் கவனித்து எங்கள் சம்பளங்களை உயர்த்துங்கள் இது விஷயம் பலமுறை எங்கள் குறைவுகளை இவ்விடத்தில் கூடிய உபாத்தியாய சங்கத்தில் பீடாதிபதிகளாய் வரும் கல்வி இலாகா அதிகாரிகள் முன்னிலையில் விண்ணப்பஞ் செய்தும் இருக்கிறோம். அவர்களும் எங்களுக்கு அச்சமயத்தில் மாத்திரம் ஆறுதல் சொல்லிவிட்டுப் போகிறார்கள். நாங்களும் 'ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு' என்பதைப்போல் காத்துக்கொண்டிருக்கிறோம். நாளது வரையில் யாதொரு பலனையும் அடையவில்லை. எங்கள் கஷ்டங்களை கவனித்து எங்கள் சம்பளங்களை உயர்த்துங்கள்.

16. மைசூர் கவர்ன்மெண்டில் எலிமெண்டரிப் பாடசாலை உபாத்திமார்களுக்குக் கிடைக்கும் சிலாக்கியத்தைப்போல் எங்களுக்கும் கிடைக்கப் பிரயாசப்படுங்கள். எங்களுக்குப் பின்னால் எங்கள் பெண்டு பிள்ளைகளுக்கு உதவியாயிருக்க (Provident Fund) பிராவிடென்ட் பண்டு ஒன்று ஏற்படுத்தினால் நலமாயிருக்கும். பீடாதிபதிகள் எங்களைத் தங்களுடைய கர்ப்பத்தில் பிறந்த பிள்ளைகளைப்போல் கரிசனையோடு கவனித்து தங்களால்தான் எங்களுடைய குறைவுகள் நிறைவாக்கும்படியாக மிகவும் வணக்கமாய் மனுவு செய்துகொள்கிறோம். இது விஷயமாய் எடுத்துக்கொள்ளும் பிரயாசத்திற்காக பரங்கிமலை சேகரத்தைச் சேர்ந்த உபாத்தியாய சங்கத்தின் அங்கத்தவர்களும் இதர எலிமெண்டரிப் பாடசாலை உபாத்திமார்களும் வித்தியா யிலகா தலைவர்களைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பீ. என். முருகேசம்.

29 JUL 1918 28 JUL 1918

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 13 | 1918வூ மேமீ | மாதம் 12

## THE LANGUAGE

## பாஷை

மானிடர் தம் கருத்தை ஒருவர்க்கொருவர் வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்ளக் கருவியாய் இருப்பது பாஷையாம். பாஷை என்னும் வடசொல்லுக்கும் பேச்சு என்பது பொருள். இதற்கு ஏற்ற தமிழ்ச் சொல் மொழி என்பதாம்.

உலகத்தில் அநேக பாஷைகள் வழங்குகின்றன. எந்தப் பாஷையும் ஆரம்பத்தில் குறிப்பு (சைகை) அளவாக ஏற்பட்டு, பின்னர், அக்குறிப்புக்கள் சொற்களாக வெளிப்படும். ஒவ்வொரு சொல்லும் முதலில் ஏதோ ஒரு காரணம்பற்றியே ஏற்பட் டிருக்கும். பின்பு, அறிஞர்கள் அந்தச் சொற்களிற் காணும் ஒலித்தொகுதிகளை வகைப்படுத்தி, சிறு ஒலிகளாக வகுத்து எழுத்துக்களாக அமைப்பர். ஒரு பாஷை நாளடைவில் விருத்தியடைந்து, பேசும் வழக்கோடு எழுதும் வழக்கை-

யும் அடையும் காலத்திற்றான், அப்பாஷைக்கு எழுத்துக்களை அமைக்க வேண்டிய அவசியம் நேரிடும்.

இக்கொள்கையை வலியுறுத்த இங்கே நிலம் என்னும் சொல்லை ஆராய்வோம். முதலில் ஏதோ ஒரு காரணம்பற்றிப் பூமிக்குத் தமிழர் நிலம் என்னும் பெயர் வழங்கினர். அப்போது அச்சொல்லை நில் என்னும் வினையை அடியாகக்கொண்டு, 'நிற்கும் இயல்புடையது' என்றாயினும், '(எல்லாப் பொருள்களும்) நிற்பதற்கு இடமாக இருப்பது' என்றாயினும் காரணம் கருதி அமைத்திருக்கவேண்டும் பின்பு மானிடர் சொல்லை எழுதிவைக்க எண்ணியகாலத்தில், நிலம் என்னும் ஒலித்தொகுதியை சிறு சிறு ஒலிகளாகப் பிரிக்க முயன்றனர். அப்போது அச்சொல்லை நி-ல-ம் என்று பிரித்தனர். அவற்றைப் பின்னும் சிறு ஒலிகளாகப் பிரிக்க முயன்றபோது, ந்+இ, ல்+அ, ம் எனப்பிரித்தனர். அதனால், நிலம் என்னும் ஓர் ஒலித்தொகை ஐந்து சிறு ஒலிகளாயின. இச் சிற்றொலி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் வரிவடிவு அமைத்தனர். இவ்வரிவடிவு எழுதுவதற்கென்றே அமைக்கப்பட்டமையால் இதற்கு எழுத்து என்று பெயரிட்டனர். இதனால் பாஷைக்கு ஆதிகாரணம் சொல்லேயாம் என்பது தேற்றம்.

தோதவர், ஏனாதியர், வேடுவர் முதலிய சில வகுப்பினர் வழங்கும் பாஷை இன்றளவும் பேசும் வழக்கைமட்டும் பெற்றிருத்தல் பலரும் அறிவர். பட்டுநூல்காரர் என்னும் வகுப்பினர் வழங்கும் பாஷைக்குச் சமீபகாலத்திற்றான் எழுத்து ஏற்பட்டமை பிரசித்தமன்றோ? சீன பாஷை ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வோர் எழுத்தைக்கொண் டிருத்தலின் அப்பாஷைக்குச் சுமார் ஆறாயிரம் எழுத்துக்கள் அமைந்திருக்கின்றனவாம். அந்த எழுத்துக்களை முற்றும் கற்றுக் கொண்டால் அப்பாஷையை முக்காற்பாகம் கற்றுவிட்டதாக முடியுமாம்.

சீன எழுத்துக்கள்



சூரியன் மலை சந்திரன் மரம் குழந்தை

பின்னர் பாஷையின் விருத்திக்குத் தக்கவாறு சொற்கள் பெருக ஆரம்பிக்கும். அரிய பொருள்களுக்கு ஒருமொழியாகவும் தொடர்மொழியாகவும் பெயர்கள் பல அமைவனவாகும். கடவுளுக்கும் பொன்னுக்கும் கங்காநதிக்கும் நந்தம் தமிழ்மொழியில் வழங்கும் பெயர்கள் மிகப் பலவாமன்றோ. இப்படியே பாஷையின் சொற்கள் பல்கும். மற்றும் ஒரு பாஷைக்கு உரியவர் மற்றப்பாஷைக்கு உரியவர்களோடு நெருங்கிப் பழகுவதாலும், மதங்களை மேற்கொள்ளுவதாலும், அயல் நாட்டு வர்த்தகத்தாலும், அரசாட்சியின் அடைவினாலும் வேறு பாஷையின் சொற்களை தம்பாஷையில் சேர்த்து வழங்கத் தலைபடுவர். அவை நாளடைவில் புகுந்த பாஷையில் நிலையான இடத்தை அடைந்துவிடும். பின்னர் அச்சொற்கள் எந்தப் பாஷையினின்று வந்தனவென்பதை அறிதல் அறிஞர்க்கும் அசாத்தியமாய் விடும்.

இவ்வாறெல்லாம் வளர்ச்சியடைந்த பாஷைக்கு ஒரு வரம்பு ஏற்படுத்த அறிஞர் நாடுவர். அவ்வரம்பிற்கு இயல் அல்லது இலக்கணம் என்று பெயர். நல்ல இயல் அமையப் பெற்ற பாஷைக்கு உரிய மாந்தர், தம் கருத்துக்களை சுருங்கச்சொல்லி விளங்கவைக்க நாடுவர். அந்த நோக்கத்தை முற்றுவிப்பதே செய்யுளாகும். ஒரு வகுப்பினர் அடைந்துள்ள நாகரிகத்தை வெள்ளிடைமலைபோல் விளக்குவது அவர்களுடைய பாஷையும் அப்பாஷையில் ஏற்பட்டுள்ள செய்யுட்களுமேயாம் என்பது கற்றுவல்ல கலைஞர் கொள்கையாம். இனி இவ்வகையில் நந்தம் தமிழ்மொழி எந்நிலையில் இருப்பதென்பதை ஆராய்வோம்.

பத்திராதிபர்.

## FROG

## தவளை

அநேகமாய் பள்ளிக்கூடத்தில் நீர்த்தாழியில் கோழை அடைந்துள்ள தவளையின் முட்டைகளை விட்டு வைத்திருப்பதுண்டு. இம் முட்டைகள் நாளாவட்டத்தில் வளர்ச்சி அடைவதைப் பார்க்க அது சின்னஞ் சிறுவர்களுக்குத் தினந்தினம் அதிக ஆனந்தத்தைக் கொடுக்கும். நன்றாய் கவனித்தால் வழுவழுப்பான வெள்ளைப் பிசினியைப்போன்ற வஸ்து அதை மூடிக்கொண்டிருக்கிறது. நாளடைவில் அது பருத்து வெடித்ததும், சிறு குஞ்-

சுகள் வெளிப்படுகின்றன. தவளைக்குஞ்சு முதலில் சிறிதேனும் தவளையின் உருவத்தை ஒத்திருக்கவில்லை; பெருந் தலையும் நீண்ட வாலுந்தான் காணப்படுகின்றன; மற்ற அவயவங்களு மில்லை. இதைத் 'தலைப்பிரட்டை' யென்று சொல்லுவார்கள்; (Tadpole) அதாவது வாலுள்ள தலை; இந்தக் குஞ்சு கடைசியில் தவளை ஆகின்றது. நாம் இன்றையதினம் எடுத்துக்கொண்ட பாடம் தவளையைப்பற்றியே. அநேகஞ் சிறுவர்களுக்கு இப்பிராணி தெரிந்திருந்தும், இப்பாடத்திற்கென்றே உயிருள்ள தவளை கொண்டு வந்து, கண்ணாடிப் பெட்டியில் அடைத்து வைக்கவும். பின்வரும் கேள்விகளைக் கேட்டு, இப்பாடத்தை ஆரம்பிக்கவும்: 'சாதாரணமாய்த் தவளைகளை எங்கே காணலாம்? அவைகளி னிருப்பிடம் சதுப்புநிலமா, வறண்ட இடமா? எக்காலத்தில் அவைகளை நாம் பார்க்க முடியும்?' பெட்டியி லடைத்திருக்கும் தவளையை வெளியி லெடுத்து விடு; மேஜையின்பேரில் தத்திக் தத்திக் குதிக்கட்டும். அது வளர்ந்திருக்கும் விதத்தை கவனிக்கவும். மாரிக்காலத்தில் அவைகளுக்கு என்ன நேரிடும்? இவ்விதமாய்க் கேள்வி கேட்டுக் கவனிக்கச்செய்து, பொதுவாய்த் தவளையின் பழக்கவழக்கத்தைத் தெரிந்துக்கொள்ளும்படி செய்யவும். வசந்த காலத்தில் குளத்திலும் குட்டையிலும் வசிக்கும்., நல்ல குளிர்காலத்தில் வெளியில் வாராமல் குட்டை குளத்தினடியில் மண்ணில் புதைந்து கிடக்கும். வசந்தகாலம் வரைக்கும் அவ்விடத்திலேயே இருக்கும்; அப்போதுதான் பெண் தவளை முட்டையிடும். பார்க்கபுகின், தவளை தரையில் வசிக்கும் பிராணியே; ஆயினும் ஜலத்திலும் சௌக்கியமா யிருக்கிறது; ஜலத்தில் நீந்துவது அழகாயிருக்கும்; தரையில் தாவித்தாவி குதித்துப்போகும்.

அதன் தேகவமைப்பைப் பொதுவாய்க் கவனிக்கச் செய்ய வேண்டியது. குட்டை உருவத்தையும் கூனல் முதுகையும் பார்ப்பாய். அதன் நாற்கால்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவும். ஒரே அளவாக இல்லை; முன்னிரண்டு கால்கள் சிறுத்தும் பின்னிரண்டு கால்கள் நீண்டு மிருக்கின்றன. பூனை, நாய், குதிரைகளின் கால்களைக் கவனித்தால், ஒரே அளவாக இருக்கும்; நடப்பதற்காகவே ஒரே அளவாக கால்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. இச் சென்னையி லிருக்கும் மிருகக்காட்சிக்குப் போய் 'கங்காரு' வைப் பார்த்தால், முன்னங்கால்கள் சிறுத்தும் பின்னங்கால்கள்



ண்டுமிருக்கும்; தாண்டித் தாண்டிக் குதித்துப் போவதைப் பார்க்கலாம்; முயல்களும் அவ்விதமாகவே போகின்றன. தவளையும் தரையில் தாவித் தாவிக் குதித்துப்போகும் பிராணியே.

தவளையின் கால்களைப் பரிசோதித்துப் பார்க்கவும்: முன் பாதங்களில் ஒவ்வொன்றிலும் நான்கு விரல்கள்; பின்காலில் ஐந்து விரல்கள்; இவ்வைந்து விரல்களும் ஜவ்வினால் பிணைக்கப்பட்டிருக்கின்றன. குள்ளவாத்தின் தோலடிப் பாதங்களோடு ஒப்பிட்டு பார்க்கவும். விரல்களை விரித்துப் பார்த்தால், ஜவ்வுபோல் மெல்லிய தோல் தோன்றும்; நீந்தும்போது இத்தோலைப் பரப்பி ஜலத்தை வேகமாய் உதைத்துப் பின்னுக்குத் தள்ளுகின்றது. ஆகையால், தவளையின் பின்கால்கள் நீந்துவதற்கு ஏற்றவாறு அமைந்திருக்கின்றன.

தேகம் ஏன் குட்டையாயும், நான்கு கால்களும் ஏன் நெருங்கியும் இருக்கின்றனவென்றும், தவளையைச் சுட்டிக்காட்டி கேட்கவும். அடிக்கடி தரையில் குதித்துப் போகவேண்டியிருக்கிறது. பெருத்த உருவமுடைய ஒரு பிராணி பூமியில் விழுந்தால், என்ன ஆகும்; திக்பிரமை அடைந்து, காயமடையும். தேகம் சிறிதாயிருந்தால், நான்கு கால்களையும் குறுக்கிக்கொண்டு தாவும்போது யாதொரு தீங்கும் அடையாது.

தலையைக் கவனித்துப் பார்க்கச் செய்யவும். வாய் பெரிதாய் அகன்றிருக்கிறது. நாசித் துவாரங்கள் மிக்கச் சிறியவை. கண்கள் பெருத்துக் குண்டு குண்டா யிருக்கின்றதைப் பார்க்கலாம். மறுபடியும் தவளையைக் கண்ணாடிக் கூட்டில் அடைத்துவிட்டு எப்படி உட்கார்ந்திருப்பதைப் பாருங்கள். அது தன் தொண்டையடியை எக்காலமும் உப்பச் செய்வதையும் குறுக்கச் செய்வதையும் கவனியுங்கள். எதையோ விழுங்குவதுபோ லிருக்கும். காற்றைத்தான் விழுங்குகிறது. வாயை மூடிக்கொள்ளும்; நாசித்துவாரங்களைத் திறந்துக்கொள்ளும். தன் வாயின் அண்ணத்தைத் தாழ்த்துவதினால், வெளிக்காற்று உள்ளே இழுத்துக்கொண்டு, சுவாசப்பைக்குள் செலுத்துகின்றது. சதாகாலமும் விழுங்கிக்கொண்டேயிருந்தாலும், அது போதுமான காற்றை உட்கொள்ள முடியவில்லை. அதன் தோல் மிக்க நுட்பமானது, மெல்லியது. மட்டற்ற துவாரங்களுண்டு. எப்போதும் குளிர்ச்சியாயும் ஈர-

மாயுமிருக்கும் வழுவழுப்பாயுள்ள பசை அதன் தோல்மேலிருக்கிறது. தோலுக்கு ஜலத்தையும் ஜலத்திலுள்ள காற்றையும் கிரகிக்கச் சக்தியுண்டு. அநேகமாய் தவளை தோலின் வழியாய் சுவாசிக்கிறது. ஆதலினால்தான் தவளையைச் சுலபமாய் ஜலத்தில் அமிழ்த்த முடியாது; அமிழ்த்தினாலும் சாவாது. மீன் சுவாசிப்பதை ஒப்பிட்டுப் பார்க்கவும்.

அதன் தோலின் நிறமென்ன? மிக்க கருநிறம்வாய்ந்த இலைகளினிடையில் தவளையை வைத்ததும், அதன் நிறத்தைக் கவனிக்கவும். அதிக வருணமில்லாத இலைகளின் மேல் வைத்ததும், அது தன் நிறத்தை மாற்றுவதைப் பார்க்கலாம். தோலின் தொழில் அதிக விந்தையானதல்லவா? தன்னைச் சுற்றிலுமிருக்கும் இடங்களுக்குத் தக்கவாறு தன்னுடைய நிறத்தை மாற்றிக்கொள்ளும் திறமைவாய்ந்தது. அதன் தோலின் மேலுள்ள நீர்க்காவி நிறமுள்ள புள்ளிகள் இருண்ட இடத்தில் பெரியனவாய்க் காணும், தோலும் கருநிறமடையும்; ஒளியுள்ள இடத்தில் தன் பழைய நிறத்தை அடையும். தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் வழி இதுவே.

தவளைக்கு ஆகாரமாகப் புழு பூச்சிகளை உயிரோடு போட்டுப் பார்க்கவும். தன் நாக்கை எவ்விதமாய் உபயோகிக்கிறதென்பதை உற்றுப் பார்ப்பாயாக. செத்த புழுக்களைப் போட்டால், தொடுவதேயில்லை. உயிருள்ள புழு பூச்சிகளைப் போட்டதும், அவைகள் இப்படியும் அப்படியும் நகரும்போது, தவளைக்கு ஓர் விதமான உற்சாகம் உண்டாகிறது. நாக்கைச் சப்தத்தோடு நீட்டினவுடனே, பூச்சி புழுக்களை காணோம். வாயினடியிலிருக்கும் நாக்கைத் தொட்டால், பிசினியைப்போல் ஒட்டிக்கொள்ளும். நம்முடைய நாக்கைப்போ லில்லாமல், தவளையின் நாக்கு வாயின் முன்பக்கத்திலிருந்து புறப்பட்டு, நீண்டு இருக்கும்; நுனியில் இரண்டு பிளவாக இருக்கும். அதிக தூரம் நாக்கு நீளும். நாக்கை வாயின் முன்னடிச்சதையில் இழுத்துக்கொள்ளும். தவளை தன்னிஷ்டப்படி, நாக்கை வெளியில் நீட்டவும் உள்ளே இழுத்துக் கொள்ளவும் சக்தியுடையது. நாக்கில் பசை யிருப்பதால், பூச்சிகள் ஒட்டிக்கொள்ளும். நாக்கு ஒரு பொறியைப் போன்றது. வாயைக் காதளவுக்கு விரித்துக் கொள்ளும். கீழ்வாயில் பற்கள்



கிடையா; மேல்வாயில் இரண்டு வரிசைப் பற்கள் இருக்கின்றன. ஒரு வரிசை வாய்க்குள்ளிருக்கிறது; மற்றொன்று தன் வாயில் அகப்பட்ட உணவை வெளிவிடாமல் வைத்துக்கொள்ள உதவுகின்றது. புழு பூச்சிகளையும் மீன் நத்தைகளையும் சாப்பிடுகிறது. தவளையினால் தோட்டக்காரனுக்கு அதிக பிரயோசனம். அனுபவம் வாய்ந்த தோட்டக்காரர்கள் தவளைகளைக் கொல்லமாட்டார்கள். பயிர்பச்சையை அழிக்கிற புழு பூச்சிகளை நாசமாக்குவதற்கு தவளைகள் இன்றியமையாதவை என்று நினைக்கிறார்கள்.

தவளையின் எலும்புக் கூட்டைப் பிள்ளைகளுக்கு காட்டி, மற்றப் பிராணிகளின் எலும்பு கூடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கச் செய்வது நலம்.

M. S. SABHAPATI,
*Ag. Headmaster,*
*Govt. Panchama Training School, Madras.*

## ELEMENTARY EDUCATION

## ஆரம்பக் கல்வி மசோதாவும் உபாத்திமார்களின் கஷ்டமும்

எலிமெண்டரிப் படிப்பைப் பிரஜைகளின் ஏழ்மையை நோக்கி இலவசமாகவும், தேச முன்னேற்றத்தை நோக்கிக் கட்டாயமாகவும் செய்யவேண்டுவது அதி முக்கியமே. தற்போது பல இனத்தவர்க்கு எலிமெண்டரிப் படிப்பின் சம்பளம் குறைவாகவும், இல்லாமலும் ஏற்படுத்தி யிருப்பினும், கல்வி கஷ்டமின்றி இலகுவில் கற்கக்கூடியவர்களுக்குச் சொற்ப சம்பளமும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இது சொற்ப சம்பளமேனும் (பெரும்பான்மையான கிராமங்களில்) கொடுக்கக் கஷ்டப்படுகின்றனர். இவர்கள் இங்ஙனமாக, உபாத்திமார்கள் இவ் விஷயத்தில் படும் உபத்திரவம் இவ்வளவு அவ்வளவு அல்ல. பள்ளிப்பிள்ளைகளின் சம்பளம், அந்தந்த மாதம் குறிப்பிட்ட இன்ன தேதிக்குள் கஜானாவுக்கு அனுப்பாவிட்டால், தாமதமான ஒவ்வொரு நாளுக்கும், ரூபாயொன்றுக்கு ஓர் அணா அபராதம் எனப் பரீக்ஷாதிகாரிகள் உத்-

திரவு பிறப்பிக்கின்றார்கள் — பிறப்பித்தும் இருக்கின்றார்களே! உபாத்திமார்களுடைய சம்பளம், கிடைக்கவேண்டிய காலத்திலேயே கிடைக்கச் செய்கின்றார்களா? கிடைக்காவிடின், கால தாமதத்தின் காரணத்தை அறிந்து தக்கது செய்கின்றார்களா? பாருங்கள். அதிகாரவர்க்கத்தினரின் அதிகாரத்தை—ஆட்சியை! இது, 'மாமியா ருடைத்தால் மண்சட்டி, மருமகள் உடைத்தால் பொன் சட்டி' என்பதற் கிணங்கவன்றோ இருக்கின்றது. நிற்க,

மேலே கூறப்பட்ட அபராத விஷயத்தைக் கிராமாந்தரப் பிரஜைகளிடம், எவ்வளவு எடுத்துரைப்பினும் அவர்கட்குத் தெரிவதே யில்லை. சம்பளங் கொடுக்குங் காலத்தைத் தாமதஞ் செய்கின்றனர். உபாத்தியாயரோ குறிப்பிட்ட தேதியில் அனுப்பாவிட்டால் அபராதம் கொடுக்கவேண்டும். என் செய்வார்! தாமே தமது கையிலிருந்து — சாப்பாட்டுக்கும் போதாத சொற்ப சம்பளத்திலிருந்து — கஷ்டத்துடன் கஷ்டமாக ஈடு செய்து அனுப்பிவிட்டு, பின் பெற்றோர் கொடுக்குங் காலத்து வாங்கிக்கொள்ளவேண்டி யிருக்கிறது. என் கையிலிருந்து ஈடு செய்யவேண்டும்? — கஷ்டப்படவேண்டும்? 'ஆதாயமில்லாமல் செட்டியார் ஆற்றோடு போவாரா?' என்னும் பழமொழியும் குறுக்கே வரும். அதற்குக் காரணம் என்னவெனில், குறித்த காலத்தில் சம்பளம் கொடுக்காத பையனைப் பள்ளியிலிருந்து நீக்கிவிடலாம் வாராதே என்று சொன்னால், உபாத்தியாயர்களிடம் பெற்றோர்கள் வந்து, தங்கள் தங்கள் கஷ்ட நஷ்டங்களைக் கூறி முறையிடுவதாகிறது. அவர்கள் குறைக்கு, இவர்கள் இரங்கவேண்டியதா யிருக்கிறது. உடனே பையனை யழைத்துவந்து பள்ளியில் உட்காரவைத்து விடுகின்றனர். அனேகமாக, சம்பளங் கொடுக்காத காரணத்தினால் பிள்ளைகளை நீக்கினாலோ, பிள்ளைகளின் மொத்தத் தொகை குறைவுபடுகிறது. குறைவுக்குக் காரணம், மேலே குறிப்பிட்ட விஷயமன்றோ? இதைக் கவனியாது, உபாத்தியாயர்களின் சிரத்தை குறைவு எனப்படுகின்றது. 'இரண்டாட்டில் ஊட்டின குட்டி' என்பதுபோல், உபாத்தியாயர் இங்கட்டும் அங்கட்டும் அவதிப்பட நேரிடுகின்றது. கிராமாந்தரங்களிலாவது சகல பிள்ளைகளுக்கும் சம்பளமில்லாத ஏற்பாடு செய்தால் மிக்க நன்மையா யிருக்கும்.

இக்குறையும் எக்குறையும் நிவர்த்திக்கப்படுவதற்குக் காரணராயுள்ளோர் பரீக்ஷாதிகாரிகளே. இவர்கள் மனம் வைத்து



உள்ள குறைகளை அறியப் பிரயத்தினப்படுவார்களேயாகில் குறை கூற இடமில்லா திருக்கும். 'சுண்ணாம்பி லிருக்கிறது சூக்ஷம், சூக்ஷத்தி லிருக்கிறது மோக்ஷம்' என்பதற்கிணங்க, நிவர்த்தியின் சூக்ஷம் உள்ளது பரீக்ஷாதிகாரிகளிடமன்றோ?

ஆகவே, காருண்ய கவர்ன்மெண்டாரவர்களின் உள்ளத்தில் கருணாநிதியாம் கடவுள் இலவசக் கல்வியையும், தேசத்தோரின் அறியாமை யென்னும் இருளைப்போக்கக் கட்டாய மென்னும் கதிரவனையும் பிரகாசிக்கும்வண்ணம் அருள்புரியுமாறு துதிக்கின்றேன்.

P. பரிமணப் பல்லவராயர்,
உபாத்தியாயர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர் சோலை, P. O., திருச்சி ஜில்லா.

# AIR

## ஆகாயம் (காற்று)

[இஃது திருவள்ளூரில் உபாத்தியாயர் சங்கத்தில் 1918ஆ ஜுலைமீ 6உ அச் சங்கவங்கத்தினரில் ஒருவரான பாண்டூர் லூத்தரன் மிஷன் தலைமை உபாத்தியாயர் மிஸ்டர் ஏ. ஆசீர்வாதம் அவர்களால் உபந்யசிக்கப்பட்டது.]

உலக வாழ்க்கைக்குரிய இவ்வுடலில் நம்முயிர் பொருந்தி வாழ்தற் பொருட்டு நமக்கு அவசியம் வேண்டிய பொருள்கள் மூன்று. அவைகளில் முதலாவது ஆகாயம், இரண்டாவது ஜலம், மூன்றாவது ஆகாரம் என்று முறைப்படுத்தி மொழியலாம். இவை மூன்றும் நம் வாழ்க்கை நலத்திற்குப் பொருந்தும் ஏற்றத் தாழ்வுகளுக் கேற்ப அணிவகுத்து உரைக்கப்பட்டனவென்று அறியத் தக்கது. போஜனமின்றிச் சில வாரங்கள் வரையிலும், பானமின்றிச் சிலநாட்கள் மட்டிலும் இயங்கத்தக்க இவ்வுயிர், ஆகாயமில்லாவிடிலோ சிலநிமிஷ நேரத்தில் நிலை தடுமாறும் ஆதலின் உயிர் வாழ்க்கைக்குரிய அம்மூவகைப் பொருள்களிலும் ஆகாயமே முதன்மையானதாகும்.

உயிர் நிலைப்பதற்கு முக்கியாதாரமாயுள்ள ஆகாயம் சுத்தமுறப் பெறின் அது ஜீவப்பிராணிகளின் சுக ஜீவனத்திற்குச்

சிறந்த சாதனமாக இருக்கும். இத்தகைய அருமை வாய்ந்த ஆகாயமாவது யாது என ஆராயப்புகின் அஃது ஏனைய உலகப் பொருள்களைப்போல் கண்ணுக்குப் புலனாகாமல் தேகபரிசத்தால் உணரத்தக்கதாயுள்ளது. ஆகாய மாகிற வாயுவுக்கு இயற்கையான நிறம் மணம் முதலிய குணவிசேஷங்கள் இல்லையாயினும், சில மாறுபாடுகள் காலோசித சமயோசித ஸ்தலோசிதங்களுக்கேற்ப செயற்கையால் உண்டாவதுண்டு. எல்லாம் வல்ல கடவுள் உருவற்ற இவ் வாயுவை மகத்தான உபகாரத்தை உயிர்கள் அடையுமாறு படைத்த அதிசயமே அதிசயம்.

I. சுகாதார சம்பந்த ஆராய்ச்சி — ஏன் ஆகாயம் நமக்கு அத்தியாவசிகமானது?

(1) ஆகாயமின்றி நமதுயிர் ஒரு நிமிஷமும் பிழைக்க முடியாதென்று முன் அறிந்துள்ளோம்.

(2) அடுப்பு, நெருப்பு, விளக்கு முதலியவைகள் ஆகாயமின்றி எரியா.

(3) நாம் ஆகாயத்தைச் சுவாசிப்பதனால் தேகத்தில் அனல் உண்டாகி உயிர்வாழ ஏதுவாகிறது.

(4) தாவரங்கள் ஆகாயத்தை உண்டு வளர்கின்றன.

ஆகாயத்திலுள்ள, பிராணவாயுவானது, மேலே சொன்னவைகளுக்கு விசேஷித்த உதவி. ஆகையால் பிராணவாயு குறைவில்லாமலுள்ள ஆகாயமே சுத்த ஆகாயமென்றும் அந்த சுத்த ஆகாயமே சுகத்திற்கு அனுகூலமானதென்றும் நாம் கவனிக்க வேண்டும்.

ஆகாயமானது பிராணவாயு, உப்புவாயு என்ற விசேஷித்த இரண்டு வாயுக்களும், கரியமிலவாயு, நீராவி, நவசாரவாயு முதலிய மற்ற வாயுக்களும் சேர்ந்திருக்கும் ஒரு கலவை என்று சொல்லலாம். ஆகாயம் சுத்தமானதாயிருந்தால் அதில் 100க்கு 21 பங்கு பிராணவாயும், $78\frac{3}{4}$ பங்கு உப்புவாயும், மற்ற வாயுக்களெல்லாம் சேர்ந்து $\frac{1}{4}$ பங்கும் உண்டு. கரியமிலவாயு அதிகப்பட்டால் சுகவீனமுண்டாகிப் பிராணமோசம் நேரிடும். பிராணவாயு குறையக்குறைய, தேகத்திலுள்ள இரத்தத்தைச் சுத்திகரிக்க இடமில்லாமல் உயிர்ச்சேதமும் நோயும் உண்டாகிறது.



ஆகாயம் சுத்தமா, அசுத்தமா என்பதை எவ்வாறு அறியலாம்? ஆகாயம் கண்ணுக்குப் புலப்படாத வஸ்துவாகையால் அதன் அசுத்தமும் கண்ணால் காண முடியாது. சுத்த ஆகாயம் வாசனையற்றது. ஆகையால் ஆகாயத்தில் எவ்வித துர்க்கந்தமேனும் வீசுமானால் அவ்வாகாயம் சுத்தமல்லவென்று வாசனையினால் அறியலாம்.

II. ஆகாயம் அசுத்தமாகும் விதம் —

(1) பிராணிகள் சுவாசிப்பதனால் மூச்சுவிடும்போது பிராணவாயுவை உட்கொண்டு கரியமிலவாயுவை வெளிவிடும். அப்படி வெளிவிடப்படும் கரியமிலவாயுவானது, சுத்த ஆகாயத்திலிருக்கும் கரியமிலவாயுவைவிட 12 மடங்கு அதிகமாகும். ஆகையால் பிராணிகள் அதிகப்படுமிடத்தில் பிராணவாயு குறைந்து கரியமிலவாயு அதிகப்படும். அப்படி அதிகப்படுவது சுகவீனத்திற்கு ஏதுவாகும். மேலும் பிராணிகள் சுவாசிப்பதனால் நீராவி வெளிப்படும். இந்த நீராவியோடு நமது தேகத்தில் அழுகிப்போன ஊன் கழிவுகளும் அசுத்த ஆகாயமும் சேர்ந்து சுவாசாசயத்தின் வழியாய் வெளிப்படும். இப்படி வெளிப்பட்ட ஊன் 'மலக்கழி'வோ மிக விஷமானது. இவ்வூன் மலக்கழிவு சுவாசாசயத்திலிருந்து மாத்திரமல்ல அழுக்கான உடம்பு, உடுப்பு, நாற்றமுள்ள வாய், பல் முதலியவைகளினின்றும் வெளிப்படும். இவ்வசுத்தமான ஊன்கழிவும் கெட்ட ஆகாயமும் அநேக வியாதிகளை உண்டாக்க ஏதுவாகிறது.

(2) செத்த பிராணிகள், குப்பை முதலியவைகள் அழுகிப்போவதினால் ஆகாயம் அசுத்தமாகும். அழுகிப்போன பதார்த்தத்திலிருந்து கரியமிலவாயும், வேறு பல விஷக்காற்றும் கிளம்பும். இவ்வித விஷக்காற்றுகள் சதுப்பு நிலம், குதிரை லாயம், கக்கூஸ், தோல் பதனிடுமிடம், சந்தை கூடுமிடம், கருவாட்டுக் கடை முதலிய இடங்களிலிருந்து விசேஷமாய் உண்டாகும். இவைகளினால் ஆகாயம் அசுத்தமாகி அவ்வாகாயத்தைச் சுவாசிப்பதினால் தலைவலி, மயக்கம், வாந்தி முதலிய கொடிய நோய்கள் உண்டாகும்.

(3) அடுப்பு, விளக்கு முதலிய நெருப்பு எரியும் இடங்களில் பிராணவாயு குறைந்து கரியமிலவாயு அதிகப்படும். நெருப்பு எரியும்போது பிராணவாயு எரியும் பதார்த்தத்தோடு சேர்ந்து

கரியமிலவாயுவை உண்டுபண்ணுகிறது. இப்படி பிராணவாயு குறைவதினால் ஆகாயம் அசுத்தமாகும்.

## III. ஆகாயம் அசுத்தமாகாமல் தடுக்கும் விதம் —

சுத்த ஆகாயம் கட்டடங்களிலும், பள்ளிக்கூடங்களிலும், வீடுகளிலும் தாராளமாய் உலாவும்படி கட்டடத்தைக் கட்டவேண்டும். ஒரு கட்டடத்தை ஜனநெருக்கமில்லாத இடத்திலும் கட்டட நெருக்கமில்லாத இடத்திலும், அசுத்த ஆகாயம் விசேஷமாய்க் கிளம்புகிற நாற்றமுள்ள இடங்களாகிய, சந்தை, கக்கூஸ், குதிரை லாயம், தோல்பதனிடு மிடங்கள் தவிர மற்ற இடங்களில் கட்டடத்தைக் கட்டவேண்டும். கட்டடத்தினுடைய விஸ்தீர்ணம் போதுமான ஆகாயத்தைக் கொள்ளக்கூடியதா யிருக்க வேண்டும். நல்ல காற்று உலாவும்படி கட்டடத்தைத் தகுந்தமாதிரி கட்டவேண்டும். கட்டடத்தின் ஒரு பாகம் மறுபாகத்திலும் காற்றை மறைக்கக் கூடாது. கட்டடத்தில் சுத்த ஆகாயம் உலவும்படி அகன்று உயர்ந்த வாயில்களும், ஜன்னல்களும் ஏற்பட வேண்டும். அவைகள் எதிரெதிரே யிருந்தால் அசுத்த ஆகாயம் வெளிப்படவும், சுத்த ஆகாயம் உட்புகவும் ஏற்றதாகும். நம்மவர் கட்டும் வீடுகளில் உயர்ந்து அகன்ற ஜன்னல்களே கிடையா. அப்படி ஜன்னல் வைத்தாலும் எதிரெதிரே யிருப்பதும் அபூர்வம். அசுத்த ஆகாயம் வெளிப்பட மேலே சுவரில் காற்றுவரிகள் இருப்பது நல்லது. கட்டடச் சுவர் 10 அடி உயர மிருக்கவேண்டும். பள்ளிக்கூடப் பிள்ளைகள் உட்கார 6 சதுர அடியும் 60 கனஅடி உயரமு மிருக்க வேண்டும். அப்படியே உபாத்தியாயர் உட்காரும் இடம் 8 சதுர அடியும் 80 கனஅடி உயரமு மிருக்கவேண்டும். கட்டடத்திற்கு உள்ளும் புறமும் உள்ள குப்பைகளைத் தினந்தோறும் கூட்டித் தூரத்தில் கொண்டுபோய்ச் சுட்டெரிக்க வேண்டும்.

மனிதர் தங்களுடைய உடுப்பு, உடம்பு முதலிய உபயோகிக்கும் கருவிகள் யாவையும் கழுவிச் சுத்தம் பண்ணிக்கொள்ள வேண்டும். வீட்டுச் சாமான்களையும் வீட்டையும் அப்படியே சுத்தம் செய்யவேண்டும். இப்படிச் செய்யப் போதுமான தண்ணீர் வேண்டும். அடுப்பு எரியும் வீடுகளில் புகை வெளியேறும்படி புகைப் போக்கிகள் இருக்க வேண்டும். இல்லாவிடில் வீட்டு ஆகாயம் கரியமில வாயுவினால் கெடும். வீட்டுக்குப் புறம்பே அசுத்தங்க ளிராதபடி தடுத்தல் நன்று: ஆடு மாடுகளை வீட்டுக்குமுன் கட்டுதல், வீட்டுக்குச் சமீபத்தில் குப்பை கொட்டி வைத்தல் முதலிய வீட்டிற்குப் புறம்பேயுள்ள ஆகாயத்தைக் கெடுப்பதினால் வீட்டிற்குள் நல்ல ஆகாயம் வருவதற்கு ஏதுவில்லாமல் போய்விடுகிறது. வீட்டிற்குள்ளே நல்ல ஆகாயம் உலாவும்படி வீட்டினுடைய வாயில்களையும் ஜன்னல்களையும் எப்பொழுதும் திறந்து வைக்கவேண்டும். அப்படித் திறந்துவைப்பதினால் சுத்த ஆகாயம் வீட்டிற்குள் ஒரு ஜன்னலின் வழியாக உட்புகுந்து அங்குள்ள அசுத்த ஆகாயத்தோடு மோதி அவ்வசுத்த ஆகாயத்தை எதிரேயுள்ள வேறு ஜன்னலின் வழியாக வெளியே தள்ளுகிறது. அல்லது அசுத்த ஆகாயத்தோடு கலந்து அவ்வசுத்த ஆகாயத்திலுள்ள விஷம் குறையச் செய்கிறது. காற்று வீட்டிற்குள் தாராளமாய் வீசாதபடி தடுக்கும் மரங்கள் சுவர்கள் முதலியவைகளை நீக்கவேண்டும். பூச்செடி முதலிய தாவரங்களை வளர்த்தால் ஆகாயம் சுத்தமாகும். அத்தாவரங்கள் சூரிய வெப்பத்தினால் கரியமிலவாயு வேறு பிராணவாயு வேறாகப் பிரித்து, கரியை (கரியமில வாயுவை) உட்கொள்ளும். அப்படி கரியமில வாயுவை உட்கொள்வதினால் ஆகாயத்தில் கரியமிலவாயு குறைந்து பிராணவாயு அதிகப்படும். பிராணவாயு அதிகப்படுவது பிராணிகளுக்கு ஏற்றது. நம்மை உண்டாக்கின கடவுள் நாம் அறியாமலே ஆகாயத்தை சுத்தம் பண்ணுகிறார். அவ்வெத்தனம் மழைதான். மழை ஆகாயத்தையும் பூமியையும் சுத்தம்பண்ணுகிறது. ஆகாயத்தில் பறந்து செல்லுகிற தூசி முதலிய அசுத்தங்களையும் விஷ அணுக்களையும் மழைத்துளி பூமிக்கு அடித்துக்கொண்டு வருகிறது. மேலும் பூமியில் விழும் மழைத் தண்ணீர் பூமியில் வழிந்தோடும்போது பூமியின் மேலுள்ள அசுத்தங்களை யெல்லாம் கழுவிக்கொண்டு போய்விடும்.



பிராணன் பிழைப்பதற்கு சுத்த ஆகாயம் அவசியம். தேகதத்துவ சாஸ்திரப்படி பிராணிகள் ஆகாயத்திலுள்ள பிராணவாயுவை உட்கொள்வதினால் அப்பிராணவாயு இரத்தத்தோடு கலந்து அதைச் சுத்திகரிக்குமென்பது தெரிந்த விஷயம். ஆகாயம் அசுத்தமாயிருந்தால் அல்லது பிராணவாயு குறைந்து, மற்ற விஷவாயுக்களும் ஊன் மலக்கழிவும் ஆகாயத்தில் கலந்து நின்றால் தேகத்தில் அசுத்த இரத்தம் சுத்தமாகிறதற்குப் போதுமான பிராணவாயு இல்லாததினால் தேகமுழுவதும் அசுத்த இரத்தமாகி விடும். அசுத்த இரத்தம் தேகத்தைப் போஷிக்கக்

கூடாதாகையால் பிராணமோசம் நேரிடும். ஆகையால் போதுமான பிராணவாயு அதாவது சுத்த ஆகாயம் ஜீவன் பிழைப்பதற்கு அத்தியாவசியமானதென்று அறிந்துள்ளோம்.

IV. சாஸ்திர சம்பந்த ஆராய்ச்சி — ஆகாயத்திற்கு நிறை அல்லது கனமுண்டென்று முன்பார்த்துள்ளோம். திருஷ்டாந்தம்: காற்றில்லாத ஒரு ரப்பர் பிளாடரை வாய்கட்டும் கயிற்றோடு தராசில்போட்டு நிறுத்துப் பார்க்கவேண்டும். பிறகு பிளாடரில் காற்றை ஊதி காற்றுவெளியே போகாதபடி வாயைக் கெட்டியாய் கட்டி நிறுத்துப் பார்க்கவேண்டும். முதல் நிறுத்துப்பார்த்த எடையைவிட இரண்டாவது நிறுத்ததில் எடை அதிகப்படும். இதினால் ஆகாயத்திற்கு நிறையுண்டு என்பதை அறியலாம். ஆகாயம் பூமியின் மேற்பரப்பில் தங்கி நிற்கிறபடியால் அம்மேல் பரப்பைத் தன்கனங்கொண்டு அமுக்குகிறது. இதற்கு ஆகாய அமுக்கமென்று பெயர். ஆகாயம் நம்மையும் அமுக்குகிறது. ஆனால் அவ்வமுக்கம் நமக்குத் தோற்றவில்லை. இவ்வமுக்கம் 1 சதுர அங்குலத்திற்கு 15 பவுன் வீதம் அமுக்குகிறது. ஆயினும் அவ்வமுக்கம் நமக்குத் தோற்றவில்லை. காரணமென்ன? ஆகாயத்திற்கு பக்க அமுக்கம், மேலமுக்கம், கீழமுக்கம் முதலிய அமுக்கங்கள் உண்டு. ஒரு மனிதனை ஒரு பக்கத்தில் மாத்திரம் அமுக்கினால் சாய்ந்து விழுந்து விடுகிறான். ஆனால் நாலுபக்கத்திலும் ஏகோபிதமாய் அமுக்கினால் தன் நிலைமாறாமல் நிற்கிறான். அவ்விதமாகவே நம்மை ஆகாயம் நாலாபக்கத்திலும் ஏகோபிதமாய் அமுக்குவதினால் அவ்வமுக்கம் நமக்குத் தோற்றவுமில்லை. நாம் சாய்ந்து விழுகிறதுமில்லை. இதுவும் கடவுளால் ஏற்பட்ட ஒரு அதிசயமே. Air Pump ஐக் கொண்டு நமது தேகத்தின் ஓரிடத்திலுள்ள ஆகாயத்தை எடுத்து விட்டால் ஆகாயம் நம்மை அமுக்குகிறது என்பது வெளியாகும். இவ்வமுக்கத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு படிப்பாளிகள் தங்கள் புத்திகூர்மையால் கருவிகளும் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவற்றில் ஒன்று ஆகாய அமுக்கத்தை அளவிடும் கருவி என்றுபெயர். அதற்கு ஆங்கிலேய பாஷையில் Barometer என்று பெயர்பெறும். இக்கருவி துவாரமெங்கும் ஒரே அளவுள்ளதும், சுமார் 36″ நீளமுள்ளதுமான கெட்டியான ஒரு கண்ணாடிக் குழாய். இதன் ஒரு முனை மூடியிருக்கும். மறுமுனை திறந்திருக்கும். இக்குழாயில் பாதரசம் நிறைய ஊற்றி பெருவிரலால் வாயை மூடிக்கொண்டே பாதரசம் இரண்டுவிரல் ஆழம் ஊற்றியிருக்கும் கோப்பைக்குள் கையை எடுக்காமல் குப்புறகவிழ்த்து செங்குத்தாய் நிறுத்தி, பிறகு விரலை எடுத்துவிடவேண்டும். அப்போது கண்ணாடிக் குழாயில் ஊற்றிய பாதரசம் கீழிருக்கும் கோப்பைக்குள் முழுவதும் இறங்கி விடாமல் கோப்பையிலிருக்கும் பாதரசத்திற்குமேல் 30″ உயரம் தூண்போல் குழாயில் நிற்கக்காணலாம். அப்பாதரசத் தூணுக்குமேல் கண்ணாடிக் குழாயின் தலைப்பில் ஏறக்குறைய 6″ காலி இடம் (ஆகாயமில்லாத காலி இடம்) இருக்கக்காணலாம். ஆகாயத்தின் அமுக்கம் 30″ உயரமுள்ள பாதரசத்தின் கனத்தைத் தாங்கக்கூடியதா யிருக்கிறபடியால் பாதரசம் கோப்பைக்குள் இறங்கிவிடாமல் தூண்போல் எழும்பி நிற்கக்காணலாம். சூரிய வெப்பத்தினால் ஆகாயம் உஷ்ணமாகி அமுக்கம் குறைந்தால் 30″ தூணைத்தாங்க முடியாது. அப்பேர்ப்பட்ட சமயத்தில் தூணின் உயரம் குறையும். இப்படிக் குறையும்போதெல்லாம் புயல்காற்று சீக்கிரம் உண்டாகுமென்று அனுமானிக்கலாம். ஆகையால், இக்கருவி புயலை முன்குறிக்க உதவும் கருவி என்று சொல்லலாம்.



Foot Ball, துவி சக்கரவண்டி, ஆகாயக்கப்பல் முதலியவைகளெல்லாம் ஆகாயத்தின் மகிமையினாலேயே நடக்கிறது.

உஷ்ணத்தினால் ஆகாயத்தில் நடக்கும் மாறுதல்கள் —

1. உஷ்ணத்தினால் ஆகாயம் அகன்று விரியும்.

2. அகன்று விரிந்த ஆகாயம் லேசாகும்.

3. லேசான ஆகாயம் மேலே எழும்பும்.

4. பக்கத்திலுள்ள கனதியான ஆகாயம் அதனிடத்தை நிரப்பும்.

5. இப்படி கனத்த ஆகாயம் இடம் பெயர்ந்து செல்லுவதினால்தான் காற்று உண்டாகிறது. ஆகாய உஷ்ணத்தையும் அளவிட ஒரு கருவியுண்டு. அதற்கு ஆகாய உஷ்ணத்தை அளவிடும் கருவி என்று பெயர். ஆங்கில பாஷையில் தெர்மாமீட்டர் என்று பெயர். சர்க்கார் உஷ்ணத்தை அளவிடுவதற்கு உபயோகிக்கும் கருவிக்குப் பாரின் ஹீட் தெர்மாமீட்டர் என்று பெயர். மற்றொன்று சென்டிகிரேட் தெர்மாமீட்டர். ' இக்கருவி ஆவினால் ஆகாயம் உஷ்ணத்தை வெகு சுலப-

மாக அறிந்து கொள்ளலாம். கடவுளால் ஏற்பட்ட காற்று மனிதருக்கும் மற்ற ஜீவப்பிராணிகளுக்கும் எவ்வளவு பிரயோசனமானதென்று அறிந்தோம்.

V. பூமி சாஸ்திர சம்பந்த ஆராய்ச்சி — ஆகாயம் பூமியைச் சுற்றிலும் ஏறக்குறைய 200 மைல் தூரத்திற்கு விரிந்துள்ள ஒரு ஆகாய சமுத்திரமென்று சொல்லலாம். ஓரிடத்தின் ஆகாய சீதோஷ்ணம்: ஆகாய சீதோஷ்ணம் பின்வரும் மூன்று விஷயங்களைப் பொறுத்துளது.

1. சூரியரேகை. 2. பகலின் அளவு. 3. கடல் மட்டத்திற்குமேலே ஓரிடமிருக்கும் உயரம்.

(1) சூரியரேகை — (பூமியில் தைக்கும் நிலை) சாய்வு நிலையாய் ஆகாயத்தினூடே சென்று பூமிக்கு வந்தால் அதிக சூடாகாது. சூரியரேகைகள் செங்குத்தாய் ஆகாயத்தினூடே சென்றால் ஆகாயம் அதிக சூடாகும். திருஷ்டாந்தம் — வெயிற்காலம், குளிர்காலம்.

(2) பகலின் அளவு — நீண்ட பகலாயிருந்தால் (மே மாதம்) ஆகாயம் அதிக சூடாகும். பகல் குறைந்து இரவு நீண்டால் ஆகாயம் அவ்வளவு உஷ்ணப்படாது (டிசம்பர் மாதம்.)

(3) கடல் மட்டத்திற்கு மேலே ஓரிடமிருக்கும் உயரம். நீர் மட்டத்திற்குமேலே உயரமாயிருக்கும் இடங்களிலுள்ள ஆகாயம் அவ்வளவு சூடாயிராது. ஆனால் நீர் மட்டத்திற்குத் தாழ்ந்த இடங்களிலுள்ள ஆகாயம் அதிக சூடாயிருக்கும்.

பூமியில் காற்று உண்டாகும் விதம் — நிரட்சரேகைக்குச் சமீபத்திலுள்ள பூபாகத்தின் மேலுள்ள ஆகாயம் உஷ்ணமாவதினால் லேசாகி உயர எழும்ப பக்கங்களிலுள்ள கனமான குளிர்ந்த ஆகாயம் அதனிடத்தை நிரப்ப நிரட்சரேகையை நோக்கிச் செல்லுகிறது. இப்படிச் செல்லும்போது பூமியும் மேற்கேயிருந்து கிழக்கே சுற்றுவதினால் இரு துருவங்களினின்று அடிக்கும் காற்று நேரே தெற்கேயிருந்தும் வடக்கேயிருந்தும் வாராமல் வடகிழக்கு தென்கிழக்கு திசையாய் மாறி வீசுகிறது. இவ்விரண்டு திசைகளிலும் அடிக்கும் வடகிழக்கு தென்கிழக்கு காற்றுகளே உலகத்திலுள்ள காற்றுகளிலெல்லாம் விசேஷித்தவை. இந்தியாவில் தென்மேற்குக் காற்று என்னும் ஒரு பருவக் காற்று ஏப்-



ரல் மாதமுதல் செப்டெம்பர் மாதம் வரையிலும், வடகிழக்கு பருவக் காற்று அக்டோபர் மாதமுதல் மார்ச்சு மாதம் வரையிலும் அடிக்கிறது. இவைகளில் வடகிழக்குக் காற்று பூமியின் வட துருவத்தினின்றும் வீசும் காற்றுதான். திரும்பத் தென்மேற்கு திசையாய் வீசுவதினால் உண்டாகிற காற்றே தென் மேற்குக் காற்று என்கிறார்கள்.

காற்றுகளின் வகை — பல காரியங்களைக் கவனித்துக் காற்றுகளுக்குப் பெயரிடலாம்.

1. காற்றின் திசை — வடகிழக்கு, தென்கிழக்கு, தென் மேற்குக் காற்றுகள் என்றும், இந்தியாவின் வடக்கிலிருந்து வரும் காற்றுக்கு வாடை என்றும், தெற்கிலிருந்து வரும் காற்றுக்குத் தென்றல் என்றும், மேற்கிலிருந்து வரும் காற்றுக்கு மேல் காற்று என்றும் சொல்லுகிறோம்.

2. காற்றின் பலம் — அதிக வேகமாய் அடிக்கும் காற்றுக்குப் புசல் அல்லது சுழல்காற்று என்று பெயர்.

3. ஒழுங்காய் வீசும் காற்றுகள் — இந்தியாவின் பருவக்காற்றாகிய வடகிழக்கு, தென்மேற்கு முதலிய காற்றுகளும் திசைமாறாமல் ஒழுங்காய் வீசும் வடகிழக்கு தென்கிழக்கு காற்றுகளும் காலந்தவறாமலும் திசைமாறாமலும் வீசுகின்றன.

4. காற்றினுடைய சீதோஷ்ணம் — குளிர்ச்சியான காற்றுக்குக் குளிர்காற்று என்றும் சூடான காற்றுக்கு உஷ்ணகாற்று என்றும் பெயர். ஆப்பிரிக்கா கண்டத்தினின்று ஐரோப்பாவின் தென்தேசங்களுக்கு உஷ்ணகாற்று அடிக்கிறது. இப்படி இத்தாலியாவில் வீசும் உஷ்ணகாற்றுக்கு சீராக்கோ என்றும் ஸ்பெயின் தேசத்தில் வீசும் உஷ்ணகாற்றுக்கு சொலானோ என்றும் பெயர்.

5. கடலினின்றும் வீசும் காற்றுக்குக் கடற்காற்று என்றும் தரையினின்று வீசும் காற்றுக்குத் தரைக்காற்று என்றும் பெயர்.

ஆகாயத்தைப்பற்றி சவிஸ்தாரமாய் அறிந்த நாம் இதை வகுப்புகளுக்கு ஏற்றவிதமாக கூட்டியும் குறைத்தும் போதிப்பது உசிதம்.

ஏ. ஆசீர்வாதம்,
தலைமை உபாத்தியாயர்,
லூத்தரன் மிஷன் ஸ்கூல், பாண்டூர்.

# STORY TELLING

## கதை சொல்லல்

### மகா சூரன்

வட இந்தியாவில் சிறப்பு வாய்ந்த நகரத்தை ஆண்ட மன்னவன் ஒருவன் இருந்தான். அவனுக்குச் சகல சம்பத்துகளும் இருந்தும் புத்திரப்பேறு இல்லாக் குறை ஒன்றே பெருங்குறையாயிருந்தது. அவன் தவச் சிரேஷ்டர்களையும் முனிபுங்கவர்களையும் வணங்கி அவர்களைத் தனக்குப் புத்திரப்பேறு உண்டாம்வண்ணம் கடவுளைப் பிரார்த்திக்குமாறு வேண்டினான். அரசன் வேண்டுகோளுக்கு இணங்கி, அவர்களும் ஈசனை நோக்கி அநேக நாள் பிரார்த்தித்தார்கள். நாள் பல செல்ல அவனுக்கு ஒரு குமாரன் பிறந்தனன். புத்திரன் பிறந்ததும் அரசனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. ஆலயங்களில் ஈசுவரனுக்குப் பூஜை முதலியவை முட்டின்றி நடைபெறுமாறு அளவில்லாத திரவியங்கள் கொடுத்தான். ஏழைகட்கும் எண்ணிறந்த பரிசுகள் பரிந்து அளித்தனன். மன்னவனுக்கு ஆண் மகவு பிறந்ததைக் கேட்டு, அந் நகரமாந்தர்கள் எல்லோரும் திருவிழாக் கொண்டாடினார்கள்.

2. புத்திரோற்சவம் முடிந்த வுடன் அரசன் ஜோசியர்களை வரவழைத்து, தன்னுடைய குமாரனின் ஜாதகத்தை கணிக்குமாறு விரும்பினான். சோதிட நூல் வல்லார் பலர்கூடி அரசிளங் குமரனின் ஜாதகத்தைக் கணித்து, 'இவன் வாழ்நாளில் சகல நன்மைகளை யடையப் பெறுவான்' என்றும், 'பற்பல தேசங்கட்குச் சென்று அநேக அரசர்களைப் போரில்வென்று தன் கீழ்ப் படுத்துவான்' என்றும் பகர்ந்தனர். இதுவேயன்றி இவன் மகா பலாட்டியனாகவும் இருப்பன் என்றும் இவனைப் பகைவர்கள் வெல்வது அருமை என்றும் சொன்னார்கள். இத்தகைய நன்மைகள் எல்லாம் இவன் அடைவதற்கு முக்கியமான சாதனம் ஒன்று உண்டென்றும் அது இவ்வரசிளங் குமாரன் தனக்கு பதினான்கு வயது வருமளவும் சூரியனைப் பார்க்கக் கூடாதென்றும் அதுவரையில் இக்குமரனை ஏழுஅடி கனமுள்ள இரும்புச் சுவர்களால் அமைக்கப்பட்ட கோட்டையில் வளரும்படி செய்தால் யாதொரு குறையும் நேரிடா தென்றும் கூறினர். சோதிடம்



வல்லார் கூறியபடியே அரசனும் தனது அருமந்த புதல்வனுக்கு இருப்புக் கோட்டை ஒன்று கட்டி அதில் அவனை அன்புடன் வளர்த்து வந்தான். இவன் மகா பலாட்டியனாக இருப்பான் என்று சோதிட நூல் வல்லார் பகர்ந்தமையின் அரசன் இவனுக்கு மகா சூரன் என்று பெயரிட்டனன்.

3. மகா சூரனுக்கு வயது பதினான்காயிற்று. ஒருநாள் அவன் தான் வசிக்கும் கோட்டையின் மதிலை ஒரு உதை உதைத்தான். மதில் கீழே விழுந்து விட்டது. உடனே காவலாளர்கள் ஓடோடியும் சென்று இருப்புக் கோட்டை இடிந்து விழுந்ததை மன்னவனுக்கு அறிவித்தார்கள். இடிந்து விழும்படி செய்த மகாசூரனின் அற்புதச் செய்கை நகரமெங்கும் பரவிற்று. மன்னவனும் சோதிடம் வல்லார் பகர்ந்தது மெய்யாக நேர்ந்ததைப்பற்றி அளவிலா மகிழ்ச்சி யடைந்தான். கோட்டையை இடித்துத் தள்ளின புதல்வன் அரசனை யடைந்து வணங்கி நின்றான். மன்னனும் மைந்தனை மார்புறத் தழுவி உச்சி மோந்து சகல நன்மையும் உண்டாவதாக என ஆசீர்வதித்தான். அரச குமாரனும் அரண்மனையில் காலங்கழித்து வந்தான்.

4. நாள் பல சென்றன. மகா சூரனுக்கு உலகமெங்கும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. அவ்வெண்ணத்தை நிறைவேற்ற தந்தையிடம் விடை பெற்றுக்கொண்டு அவன் கீழ்த்திசையை நோக்கிச் சென்றான். செல்லும்போது அதிக திட தேகமுடையவன் ஒருவன் ஒரு பெரிய மலையை மண்வெட்டியினால் வெட்டிக்கொண் டிருப்பதைப் பார்த்தான். மகா சூரன் அவனருகே சென்று 'நண்பனே நீ என்ன செய்கின்றாய்? இந்தப் பெரிய மலையை மண்வெட்டியினால் வெட்டி எடுக்கத் துணிந்தனை என்றால், நீ மிகவும் ஆற்றலுள்ளவன் என்றே சொல்லவேண்டும்' என்றான். வேலை செய்துகொண்டிருப்பவன், 'இளைஞனே, நான் எங்கள் வகுப்பினர்கட்குள் மிகவும் ஆற்றலுள்ளவனென்றே மதிக்கப்பட் டிருக்கிறேன். எங்களுடைய அரசனுக்கு ஒரு குமாரர் பிறந்திருக்கின்றனராம். அவர் ஏழு அடி கனமுள்ள இருப்புக் கோட்டையை ஒரே உதையில் கீழே வீழ்த்திவிட்டனராம். ஆகையால் அவர் என்னைவிட பலசாலியல்லவா. அவர் ஒருவருக்கே நான் அஞ்சவேண்டும்' என்றான். இவைகளைக் கேட்ட பார்த்திபன் புதல்வன், 'நான்தான் அந்த அரச குமாரன்' என்றான். உடனே மலையை வெட்டிக்கொண்

டிருந்தவன் மகாசூரனை நமஸ்கரித்து, 'ஐயனே, இனி யான் தங்கள் அடிமை. தாங்கள் எவ்வாறு கட்டளை இடுகின்றீர்களோ அவ்வாறு நடக்கச் சித்தமாயிருக்கின்றேன். என் பெயர் பராக்கிரம கேது' என்றான். மகா சூரன் பராக்கிரம கேதுவைத் துணையாக அழைத்துக்கொண்டு மேலே செல்லத் தொடங்கினான்.

5. மகா சூரனும், பராக்கிரம கேதுவும் சில நாள் பிரயாணம் செய்துகொண்டே போனார்கள். ஒருநாள் நடுப் பகலில் ஒரு பெரிய பாலைவனத்தைக் கடக்க நேர்ந்தது. அவர்கள் அவ்வனத்தில் வருத்தத்துடன் செல்லும்போது ஒருவன் அவ்வனத்தின் மத்தியில் நின்று கொண்டு, 'அம்பு உங்கள்மேல் தாக்கப் போகின்றது, ஜாக்கிரதை! ஜாக்கிரதை! ஒரு பக்கமாய்ச் செல்லுங்கள்' என்று சொல்வதைக் கேட்டார்கள். மகாசூரனுக்கு இதன் பொருள் விளங்கவில்லை. உடனே அவனை நோக்கி, 'ஏன் இவ்வாறு பிதற்றுகின்றாய்?' என்றான். அதற்கு அவன், 'ஐய, யான் கொள்ளிக்கண்ணன் என்னும் பெயரினேன். பதினான்கு வருடங்கட்கு முன் மேலே காணப்படும் நக்ஷத்திரங்களில் ஒன்றைக் குறி பார்த்து ஒரு அம்பு எய்தேன். அது இப்போதுதான் திரும்பி வருகின்றது. அது உங்கள்பேரில் எங்கே வீழ்ந்து காயப்படுத்தி விடுமோ என்னும் பயத்தினால்தான் அவ்வாறு கூவினேன்' என்றான். மன்னவன் மகனும் அவன் நண்பனாகிய பராக்கிரம கேதுவும் தங்களாலானவரையில் அந்த அம்பைப் பார்க்க முயன்றார்கள். அவர்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை. அது எவ்வாறு முடியும் என்பதைப் பார்க்க அங்கே சிறிதுநேரம் தங்கினார்கள். இரண்டுமணிநேரங் கழித்துக் கொள்ளிக்கண்ணன் எய்த அம்பும் அவன் குறிவைத்த நக்ஷத்திரமும் மிகுந்த வேகத்துடன் தரையில் வீழ்ந்து பூமியில் நெடுந்தூரம் ஊடுருவிச் சென்றதைக் கண்டார்கள். அதைப் பார்த்ததும் மகாசூரன், கொள்ளிக்கண்ணனை நோக்கி 'நண்பனே இவ்வளவுதூரம் அம்பெய்வதற்கு உன்னிடம் மிகுந்த பராக்கிரம் இருப்பதோடு அவ்வம்பு எவ்வளவுதூரம் சென்றது என்பதைக் கண்டறிவதற்கு உன்னுடைய கண்ணும் கூர்மையான பார்வையை உடையதாயிருக்க வேண்டும்' என்றான். அதற்குக் கொள்ளிக்கண்ணன், 'ஐயனே, சிறிதுகாலம் வரையில் நான்தான் மிகுந்த பலசாலி என்று இறுமாப்படைந்திருந்தேன். ஆனால் சமீபகாலத்தில் எங்களுடைய அரசகுமாரன் ஏழு அடி கனமுள்ள இருப்புக்கோட்டையை ஒரு



உதையில் கீழே தள்ளிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அன்று முதல் அவரே என்னிலும் பராக்கிரமசாலி என்று எண்ணிக்கொண்டேன்' என்றான். இதைக்கேட்ட புரவலன் புதல்வன், தான்தான் அந்த அரசகுமாரன் என்று கொள்ளிக்கண்ணனுக்கு அறிவித்தான். உடனே கொள்ளிக்கண்ணன் மன்னவன் மகனை நமஸ்கரித்து, 'ஐயனே இன்றுமுதல் யான் உங்கள் அடிமை' என்றான். அரசகுமாரன் அவனையும் தனக்குத் துணையாக அழைத்துக் கொண்டு பிரயாணஞ் சென்றான்.

6. மூவரும் நெடுந்தூரம் சென்றார்கள். வழியில் இவர்கட்கு யாதொரு விநோதமும் புலப்படவில்லை. மேன்மேல் செல்ல பலவகை மரங்கள் நிறைந்துள்ள சிங்காரத்தோப்பு ஒன்று இவர்கள் கண்ணுக்குப் புலப்பட்டது. அதில் புகுந்து சென்று பார்த்து களிப்படைந்தார்கள். மரங்களில் எல்லாம் குலைகுலையாய்ப் பழங்கள் பழுத்துத் தொங்கிக்கொண் டிருந்தன. அத்தோப்பின் மத்தியில் உயர்ந்த மேடை ஒன்று கட்டப்பட் டிருந்தது. அம் மேடையின்மீது பலசாலியான ஆண்மகன் ஒருவன் ஏதோ ஒரு பெரிய ஆலோசனையில் அமிழ்ந்திருப்பதைப்போல் உட்கார்ந்து கொண்டிருக்கப் பார்த்தார்கள். அரசன்மகன் இரண்டு துணைவர்களுடன் மேடையினருகே வருவதைக்கண்ட அந்த ஆடவன், 'என்னிடம் பழம் யாசகம் கேட்கவா வருகின்றீர்கள்? என்னைப் பட்டினியாய் இருக்கும்படி செய்யவா பார்க்கின்றீர்கள். ஐயோ நான் ஒரு பழங்கூடக் கொடுக்கமாட்டேன். பட்டினியாக இருந்து வருந்தும் என்னை ஏன் மேல்மேல் வருத்தப் பார்க்கிறீர்கள்' என்றான்.

இவ்வாறு கூறியதைக் கேட்ட புரவலன் புதல்வன் வெகு ஆச்சரியத்துடன் 'ஐயா, நாங்கள் பழம் யாசகம்செய்ய வரவில்லை. எங்கட்கு இப்போது பசியும் இல்லை. குலைகுலையாய்க் காய்த்துத் தொங்கும் பழங்களை எல்லாம் என்ன செய்யப் போகின்றீர்கள் என்பதை மாத்திரம் விளங்கச் சொல்ல வேண்டுகிறேன். விற்கலாம் என்றாலோ அருகே ஊர் ஒன்றும் காணப்படவில்லையே. உங்களுடன் இருந்து உண்பதற்கு அதிதி ஒருவரும் இல்லையே.' என்றான். தோட்டத்தில் வசிக்கும் ஆடவன், 'ஐய, தாங்கள் பேசும் மாதிரியினாலேயே தாங்கள் நற்குணம் வாய்ந்த கனவானாக இருக்கவேண்டும் என்று எனக்குப் புலப்படுகின்றது. நான் சொல்வதைக் கேட்பீர்களாயின் உங்கட்கு ஆச்சரியமாகவே

பிருக்கும். யான் பெரும்பசியன் என்னும் பெயரினேன். இத்தோப்பில் காணப்படும் மரங்கள் எல்லாம் பதினான்கு வருடங்கட்குமுன் யான் நட்டு பயிராக்கினவை. அவைகள் இப்போது தான் பலன் கொடுக்கத் தொடங்கின. இவைகளை எல்லாம் உண்ணும் பொருட்டு ஒரு காலம் குறித்து வைத்திருக்கின்றேன் அதுவும் சமீபித்து விட்டது. அக்காலம் குறுகினதும் இப்பழங்களையே யன்றி மரத்தையும் அடியோடே பக்ஷித்து விடுவேன். சிறிதுநேரம் இங்கே தங்கிப் பார்த்தால் தெரியவரும்' என்றான். அரசகுமாரனும் அவனுடைய நண்பர்கள் இருவரும் சிறிதுநேரம் அங்கேயே தங்கி யிருந்தார்கள். குறித்தகாலங் கிட்டியது. பெரும்பசியன் திடீரென்று பழங்களின்மீது விழுந்து எல்லாவற்றையும் புசித்துவிட்டு, மரங்களையும் ஒருநாழிகைப் பொழுதில் சாப்பிட்டுவிட்டான். அந்தத் தோப்பில் ஒரு சிறு பூண்டும் கிடைப்பது அருமையாய்ப் போயிற்று. இந்த அற்புதச் செய்கையைக் கண்ட பார்த்திபன் புதல்வன் பெரும்பசியனை நோக்கி- 'நண்பனே, நீ எல்லாரினும் சிறந்த பலசாலி யல்லவா' என்றான். பெரும்பசியன், 'ஐயா, நான் பெரிய பலசாலி என்பதை ஒப்புக்கொள்ள மாட்டேன். எங்கள் அரசகுமாரன், ஏழு அடி கனமுள்ள இருப்புக்கோட்டையை ஒரே உதையில் இடித்துத் தள்ளி யிருக்கின்றான். அவனே என்னிலுஞ் சிறந்த பலசாலி' என்றான். மகாசூரன், 'நான்தான் அந்த அரசகுமாரன்' என்றான். பெரும்பசியன் உடனே வணங்கி 'யான் இனி, தங்கள் அடிமை' என்றான். பிறகு மகாசூரன் அவனையும் அழைத்துக்கொண்டு நால்வருமாகப் பிரயாணஞ் செய்வாராயினர்.

7. வெகுதூரம் சென்றபிறகு, இவர்கள் கண்ணுக்கு ஒரு குளம் புலப்பட்டது. அக் குளக்கரையில் ஒரு மனிதன் உட்கார்ந்துகொண்டு அக் குளத்திலுள்ள நீரை வெகு கவனமாய்ப் பார்த்துக்கொண் டிருப்பதைக் கண்டார்கள். மன்னவன் மகனும் அவன் மூன்று நண்பர்களும் அவனருகே சென்று 'என் ஐயா இந்தக் கரையில் உட்கார்ந்துகொண்டு தண்ணீரை வெகு கவனமாய்ப் பார்த்துக்கொண் டிருக்கிறீர்கள்' என்றான். அதற்கு அவன், 'ஐயா, நான் இந்தக் குளத்தைப் பதினான்கு வருடங்கட்கு முந்தி வெட்டினேன். அது முதல் இந்தத் தடாகம் எப்போது நிரம்பப் போகின்றது என்று எதிர் பார்த்துக்கொண்டு இக்



கரையில் உட்கார்ந்துகொண் டிருக்கிறேன். இன்றுதான் நிரம்பிற்று. அவ்வளவு நீரையும் நான் இப்போது அருந்தப் போகின்றேன். நீங்கள் வேண்டுமானாலும், யான் சொல்வது பொய்யோ மெய்யோ என்பதை அறிந்துகொள்ளச் சற்றுநேரம் தாமதித்தால் உண்மையைத் தெரிந்துகொள்ளலாம். என்னுடைய பெயர் பெருவயிறன் என்று சொல்வார்கள்' என்று சொல்லி, சிறிது நேரத்திற்கெல்லாம் அத் தடாகத்திலுள்ள நீரை எல்லாம் பருகினான். செயற்கருஞ் செய்கையைக் கண்ட அரச குமாரன், 'ஐயா, இந்தப் பெரிய தடாகத்திலுள்ள நீரை எல்லாம் ஒரு கணப்பொழுதில் பருகினமையின், நீரே மனிதர்களில் மிக்க பலமுடையவன் அல்லவா' என்றான். பெருவயிறன், 'ஐயா, நான் அல்ல மிக்க பலசாலி. எங்கள் மன்னவன் மகன் ஏழு அடி கனமுள்ள மதிலாற் சூழப்பட்ட இருப்புக் கோட்டையை ஒரே உதையில் உதைத்துத் தள்ளி யிருக்கிறான், அவனே மிக்க பலவான்' என்றான். மகாசூரன் தான்தான் அந்த அரச குமாரன் என்று அவனுக்குத் தெரிவித்தான். பெருவயிறன் அரசகுமாரனை, தனக்கு எஜமானாக ஏற்றுக்கொண்டு அவனுடன் செல்லத் தொடங்கினான்.

(இன்னும் வரும்)

ஒரு தமிழ்ப் புலவர்.

# NOTICE

## அறிவிப்பு

சில அசந்தர்ப்பங்களினால் சில மாதங்களாக நமது பத்திரிகை காலந்தவறி வெளியாயிற்று. அடுத்த சஞ்சிகை முதலாக நந்தம் தமிழ்பாஷையின் உற்பத்தி, வளர்ச்சி, பண்டைத்தமிழ் ஆசிரியர்கள், நூல்கள் முதலியவற்றை விவரமாகத் தெரிவிக்கும் விஷயங்கள் வெளிவரும். ஆதலின் ஆசிரிய நேசர்கள் இடையறாது பெற்று நற்பயன் அடைய வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்.

162014

# VERNACULAR ATLAS GEOGRAPHY SERIES

BOOK I

MADRAS PRESIDENCY

By

K. DORAISAWMY IYENGAR

## படங்களை ஒட்டின பூகோள சாஸ்திரம்

முதற் புத்தகம்

## சென்னை இராஜதானி

இது

சென்னை வித்தியா இலாகா இன்ஸ்பெக்டர் எச். ஏ. ஹார்ட் துரையவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரால் முகவுரை எழுதப்பெற்றது.

இச்சென்னை இராஜதானி பூகோள சாஸ்திரம் எளிய நடையில் அனுபவத்தை ஒட்டி, காரணகாரிய சம்பந்த முறையில் எழுதப்பட்டுள்ளது. பூகோளமும் அதற்குதவியான படங்களும் சேர்ந்து அமைக்கப்பட்டு இருப்பதனால், அடிக்கடி படங்களைக் கவனித்து, பூகோள சாஸ்திர விஷயங்களை பிள்ளைகள் பிரீதியுடன் ஸுலபமாய்த் தெரிந்துகொள்வது ஸாத்தியமாகின்றது. படங்களைப் படித்து இயற்கைக் காரணங்களை ஊகித்து, அவற்றினால் உண்டாகும் பலனை கவனிப்பது பிள்ளைகளுக்கு மிக்க உத்ஸாகத்தை ஊட்டுகின்றது. காரணம் தெரியாமல் விஷயங்களைப் பதித்து வைக்கும் பொக்கிஷமாகப் பிள்ளைகளைக் கருதாமல், அவர்கள் தம்தம் மனப் பயிற்சியால் விஷயங்களைக் கண்டுகொள்ளுதலே மேலான போதனை பத்ததி.

இந்நூலாசிரியர் பல வருடங்கள் இப்பாட போதகராய் இருந்தனினாலும், இராஜதானி முழுவதும் பிரயாணஞ் செய்து அவ்வவ்விடத்து அந்தந்த கால நிலைமைகளைக் கவனித்துத் தெரிந்துகொண்டாராகையாலும், இப் பூகோள விஷயங்களைப் பாலர் மனப் பயிற்சிக் கேற்ப, கடினமானவற்றை நீக்கி, பிள்ளைகள் அனுபவத்தில் வருபவற்றுடன் சேர்த்து, தக்கவாறு பிள்ளைகள் அறியுமாறு இப்புத்தகத்தை எழுதியிருக்கிறார். ஆங்காங்கு தகுதியான அப்பியாசக் கேள்விகளும் சேர்க்கப்பட்டு இருக்கின்றன.

பிரதம வித்தியா பாடசாலை உபாத்தியாயர்களும் மாணவர்களும் பூகோள சாஸ்திர விஷயங்களைக் கவனித்து நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதே இந்நூலாசிரியரின் முக்கிய நோக்கமாகையால் அந்நோக்கம் சித்திபெறுமாயின் இப்புத்தகம் எழுதினதின் பலன் பன்முறையும் அடைந்ததாக எண்ணுவதற்கு இடமுண்டு. (விலை 8 அணா.)

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
35, சின்னதம்பித் தெரு, சென்னை.

JL
Tm21, N08
N05:12-13